மகிமையின் நம்பிக்கை வெளியீடு

வாழ்க்கையில் வீசும் காற்றுகள்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

வாழ்க்கையில்
வீசும் காற்றுகள்

சகோதரி **கீதா ஜெயசேகரன்**

இது ஒரு மகிமையின் நம்பிக்கை வெளியீடு

முதற்பதிப்பு : தமிழில் 1000 – பிப்ரவரி 2010

நன்றி !

இப்புத்தகம் இவ்வளவு மகிமையாய் வெளிவர
உதவியாயிருந்த "கிறிஸ்துவின் மகிமை" பத்திரிகை
இணை ஆசிரியர் சகோ. M. செல்வராஜ்,
பாஸ்டர் N. அருண், & பாஸ்டர் D. டேவிட்
ஆகியோருக்கும் மற்றும் US கிராபிக்ஸ்,
மெய்ப்பொருள் அச்சகம் நிறுவனங்களுக்கும்
நன்றிகள் உரித்தாகுக !

எழுத்துக் கோர்வை :
U.S. கிராபிக்ஸ்
போன் : 2489 2661

அச்சிட்டோர் :
மெய்ப்பொருள் அச்சகம்
278, கொன்னூர் ஹைரோடு,
அயனாவரம், சென்னை – 600 023.
போன் : (044) 2674 1526

Rev. Dr. J. டேனியல் மோசஸ்,
"இயேசுவின் தழும்புகளால்" ஊழியங்கள்
Joy to the World Studios Prayer Centre
43/13, IIIrd Main Road, Gandhi Nagar,
Adyar, Chennai - 600 020.

அணிந்துரை

நம் அருமை ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்து தம் சீடர்களை நோக்கி கடலின் "அக்கரைக்குப் போவோம் வாருங்கள்" என்று ஒரு அழைப்புக் கொடுத்தார் (மாற். 4:35; லூக். 8:22). சீடர்கள் இயேசுவின் அழைப்புக்குக் கீழ்ப்படிந்து படகில் இயேசுவோடு கூட 'அக்கரையை' நோக்கிச் சென்றார்கள். இயேசுவோ நித்திரையாயிருந்தார். அப்போது பலத்த சுழல்காற்று உண்டாகி, அவர்கள் மோசமடையத்தக்கதாய்ப் படவு தண்ணீரால் நிரம்பியது. சீடர்கள் கலங்கினார்கள். பெருங்காற்றையும் கொந்தளிப்பையும் கண்டு திகைத்தார்கள். 'ஆண்டவரே, நாங்கள் மடிந்து போகிறோம். எங்களை இரட்சியும்' என்று பயந்து அலறி, இயேசுவை எழுப்பினார்கள்; இயேசு எழுந்தார். அவர்களிடத்தில் காணப்பட்ட அவிசுவாசத்தையும், பயத்தையும் கடிந்து கொண்டு, காற்றையும் கடலின் கொந்தளிப்பையும் அதட்டினார். உடனே காற்று நின்றுபோய், மிகுந்த அமைதலுண்டாயிற்று. சீடர்கள் மிகுந்த ஆச்சரியத்துடன் 'இவர் எப்படிப்பட்டவரோ, காற்றும் கடலும் இவருக்குக் கீழ்ப்படிகிறதே' என்று ஒருவரோடொருவர் சொல்லிக் கொண்டார்கள்.

நாம் இவ்வுலகமாகிய 'இக்கரையில்' இருக்கிறோம். நமக்காக ஆயத்தப்படுத்தப்பட்டுள்ள 'அக்கரை' ஒன்று உண்டு. அதுதான் நாம் நித்திய நித்திய காலமாக இயேசுவோடு ஜீவிக்கப்போகிற பரலோக ராஜ்யம். அந்த பரலோக ராஜ்யமாகிய 'அக்கரையை' நோக்கி வாழ்க்கையாகிய கடலில், விசுவாசமாகிய படகில் இயேசுவோடு கூட நாம் பயணம் செய்கிறோம்.

நாம் அமிழ்ந்து போகத்தக்கதாக, நம் விசுவாசப்படகு மூழ்கிப் போகத் தக்கதாக அநேக சுழல்காற்றுகளும், பெருங் காற்றுகளும், புயல்காற்றுகளும், கொந்தளிப்புகளும் நம்மைத் தாக்குகிறது. ஆனால் கலங்க வேண்டாம். இயேசு நம்மோடு எப்போதும் இருக்கிறார். நாம் அவரோடு இணைந்து நிற்கும் போது எந்த புயல்காற்றும் நம்மைச் சேதப்படுத்துவதில்லை. நாம் இயேசுவின் கரங்களை பற்றிக்கொண்டு நிற்கும் போது எத்தகைய காற்றையும், சீறுகிற கொந்தளிப்பையும் மேற் கொள்ளுவோம்! அல்லேலூயா!!

வேதத்தில் நாம் சந்திக்கும் அநேக பரிசுத்தவான்களின் வாழ்க்கையில் புயல் வீசிற்று. சுழல்காற்றுகளையும், பெருங்காற்று களையும், அனல்காற்றுகளையும், அழிவை உண்டாக்கும் பலவித மான தீயக்காற்றுகளையும் அவர்கள் தங்கள் விசுவாசத்தினால் மேற் கொண்டார்கள்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை நாம் விசுவாசித்து, அவருடைய பரிசுத்த கரத்தில் நம்மையும், நம் வாழ்க்கை யையும் பரிபூரணமாக ஒப்புக் கொடுக்கும்பொழுது அவர் நம் வாழ்க்கையை பொறுப்பெடுத்துக் கொள்ளுகிறார். நம் வாழ்க்கை யில் புயல்காற்று வீசும்பொழுது அவர் நம்மோடு இணைந்து நிற்கிறார். காற்றையும் கொந்தளிப்பையும் அதட்டி, நம் வாழ்க்கையில் பெரும் அமைதலைக் கட்டளையிடுகிறார். இந்த சத்தியத்தை உணர்த்தும் வகையில் எழுதப்பட்ட புத்தகம் தான் உங்கள் கரங்களில் இப்பொழுது தவழும் **'வாழ்க்கையில் வீசும் காற்றுகள்'** என்கிற புத்தகம்.

அன்று அநேக தேவ மனிதர்களைத் தாக்கிய அதே தீயக் காற்றுகள் இன்றும் அநேக கர்த்தரின் பிள்ளைகளைத் தாக்கு கிறது. காற்றைக் கண்டு கலங்க வேண்டாம். காற்றை உண்டாக்கிய கர்த்தர் நம்மோடு கூட இருக்கிறார். கர்த்தரின் கரம்பற்றி காற்றை மேற் கொள்ளுவோம். பாய்மரமாகிய இயேசுவை நம் வாழ்க்கையில் விசுவாசப்படகில் உயர்த்தி

நிறுத்தும்போது, அவர் நம்மைத் தாக்க வரும் புயல்காற்றை, நம்மை 'அக்கரைக்குக்' கொண்டு சேர்க்கும் சாதகக் காற்றாக மாற்றி விடுகிறார்! அல்லேலூயா!!

இப்புத்தகத்தை ஜெபத்தோடும் தியாகத்தோடும் எழுதிய அன்பு சகோதரி கீதா ஜெயசேகரனுக்கும், அன்னாருக்கு ஊக்கத்தையும் ஒத்துழைப்பையும் கொடுத்த கணவர் சகோதரர் ஜெயசேகரனுக்கும், பிள்ளைகள் பிளஸ்ஸி மற்றும் பிரீத்திக்கும் என் அன்பு வாழ்த்துதல் களையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன். இக்குடும்பத்திற்காக கர்த்தரை ஸ்தோத்தரிக் கிறேன். கர்த்தர் தாமே இக்குடும்பத்தை சீயோனிலிருந்து ஆசீர்வதிப்பாராக. இப்புத்தகத்தின் மூலம் கர்த்தரின் நாமம் மகிமை அடைகிறபடியால் கர்த்தரைத் துதிக்கிறேன்.

இப்புத்தகத்தை ஜெபத்தோடு திறந்த மனதோடு வாசித்து தியானியுங்கள். இந்த புத்தகத்தின் மூலமாக கர்த்தர் உங்களோடு கூட பேசுவார், ஆசீர்வதிப்பார், ஆழ்ந்த அர்ப்பணிப்பிற்குள் வழிநடத்துவார். எல்லாத் துதியும் கனமும் புகழ்ச்சியும் மீட்பர் இயேசுவுக்கே உண்டாவதாக! ஆமென்!! அல்லேலூயா!!!

கிறிஸ்துவின் பணியில்,

Rev. Dr.J. டேனியல் மோசஸ்

பாஸ்டர் D. டேனி

மகிமையின் நம்பிக்கை கிளை சபை
கபிலர் தெரு, பெரம்பூர்,
சென்னை – 600 011.

வாழ்த்துரை

ஆண்டவரும் அருமை இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே இந்த புத்தகத்திற்கு வாழ்த்துரை எழுதுவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்!

நோவாவின் காலத்தில் நாற்பது நாள் இரவும், பகலும் பூமியின் மேல் பெருமழை பெய்தபோது மலைகளுக்கு மேலாய் பதினைந்து முழம் உயரத்திற்கு ஜலம் பெருகிற்று. (பெருகின போது) மனுஷர் முதல், நாசியில் சுவாசமுள்ளவைகள் எல்லாம் மாண்டு போயின. தேவன் நோவாவையும், அவனோடே பேழையிலிருந்த சகல காட்டு மிருகங்களையும், நாட்டு மிருகங்களையும் நினைத்தருளினார்; அப்பொழுது பூமியின் மேல் 'காற்றை' வீசப்பண்ணினார், அப்பொழுது ஜலம் அமர்ந்தது. அவர்கள் காக்கப் பட்டார்கள். (ஆதி. 7:12; 8:1).

தேவனாகிய கர்த்தர் மனுஷனை பூமியின் மண்ணினாலே உருவாக்கி ஜீவ சுவாசத்தை (காற்றை) அவன் நாசியிலே ஊதினார். மனுஷன் ஜீவாத்துமாவானான் (ஆதி. 2:7). மனுஷன் இந்த உலகத்தில் வாழ்வதற்கு காற்று எப்படி மிகவும் அவசியமாயிருக்கிறதோ அதேபோல் இந்த புத்தகத்தைப் படிக்கிற ஒவ்வொருவருக்கும் தம்முடைய ஜீவ சுவாசமாகிய காற்றை வீசப்பண்ணி உங்கள் ஒவ்வொருவரையும் ஆண்டவர் ஆசீர்வதிப்பார்.

இந்த புத்தகத்தை எழுதின சகோதரி கீதா ஜெயசேகரன் அவர்களை கடந்த எட்டு வருடங்களாக எனக்குத் தெரியும். இவர் நன்றாக ஜெபிக்கிற ஒரு சகோதரி. அப்படி ஒருமுறை ஜெபிக்கிற வேளையில்தானே ஆண்டவர் அவரோடு பேசி "நீ எனக்காக எதையாகிலும் செய்" என்று கூறினபடியால் "ஜெபம் செய்வது எப்படி?" என்கிற தலைப்பிலே ஒரு புத்தகத்தை எழுதினார்கள். அந்தப் புத்தகம் ஏராளமான மக்களுடைய வாழ்க்கையிலே ஆசீர்வாதமாய் இருந்தது. அநேகர் ஜெப ஆவியினால் நிரப்பப்பட்டார்கள். இப்பொழும் கூட "வாழ்க்கையில் வீசும் காற்றுகள்" என்ற இந்த புத்தகமும் அநேகருடைய வாழ்க்கையிலே, குடும்பத்திலே, சபைகளிலே ஆசீர்வதத்தை கொண்டு வரும் என்பதில் எந்தவித ஐயப்பாடும் இல்லை.

இப்படிப்பட்ட ஆவிக்குரிய பல நூல்களை சகோதரி எழுதும்படியாய் ஆண்டவர் அருள்புரிவாராக என்று பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே வாழ்த்துகிறேன்!

கிறிஸ்துவின் பணியில்,

பாஸ்டர் D. டேனி

பாஸ்டர் S. ஜோசப்
M.A., M.Ed., M.Phil.

மகிமையின் நம்பிக்கை ஊழியங்கள்
எண்கள் 27 & 28 ஜெய்நகர்,
கொரட்டூர், சென்னை – 600 076.

வாழ்த்துரை

சகோதரி கீதா ஜெயசேகரன் அவர்களின் சீரிய முயற்சியால் "**வாழ்க்கையில் வீசும் காற்றுகள்**" என்ற தலைப்பு கொண்ட புத்தகம் கிறிஸ்து கூறும் நல் உலகில் படைக்கப்படுவது மிக்க மகிழ்ச்சியை எனக்கு அளிக்கிறது. வேதத்தில் தேவன் பயன்படுத்தும் பாத்திரங்கள் மிகவும் ஆச்சரியமானது மாத்திரமல்ல. தன் ஜனத்தை உணர்த்துவிக்கும்படியும், ஊக்குவிக்கும்படியும் அநேக வேளைகளில் மிருக ஜீவன்களை, பட்சிகளை, செடி கொடிகளை, ஏன் கல்லையும், மண்ணையும், விண்வெளியில் உலாவி வரும் சூரிய, சந்திர, நட்சத்திரங்களையும் பயன்படுத்தும் விதம், மிகவும் ஆச்சரியமானது. அவற்றில் 'காற்றும்' ஒன்று. காற்று பலவகையானது. தேவன் அந்த காற்றுகளைக் கொண்டு, தேவ ஜனங்களோடு எப்படி இடைப்படுகிறார் என்பதை விளக்குகிறார் சகோதரி கீதா ஜெயசேகரன் அவர்கள்.

மகிமையின் நம்பிக்கை சபையில் அநேகருக்கு ஆசீர்வாதமாகவும், வல்லமையாகவும் பயன்படுத்தப்படும் சகோதரி கீதா ஜெயசேகரன் அவர்கள், ஏற்கனவே "ஜெபம் செய்வது எப்படி?" என்ற புத்தகத்தை எழுதியுள்ளார். இது அநேக தேவ பிள்ளைகளின் ஜெப ஜீவியத்திற்கு தூண்டுகோலாய் அமைந்தது. அதுபோலவே, இப்புத்தகத்திலும், அருமை சகோதரி, வேத வசனங்களினால்,

ஒவ்வொருவர் வாழ்விலும் வீசும் காற்றுகளை எப்படி எதிர் கொள்வது, எப்படி மேற்கொள்வது என்று விளக்கிக்காட்டி யிருக்கிறார்.

இப்புத்தகம் நிச்சயமாக, தேவ பிள்ளைகள் ஒவ்வொரு வருக்கும் ஆசீர்வாதமாக இருக்கும். அநேகருடைய வாழ்க்கையில் வீசும் காற்றுகளிலிருந்து தேவனுடைய கிருபையைக் கொண்டு, ஜெயமாகவும், மகிமையாகவும், வாழ முடியும் என்ற நம்பிக்கையை ஊட்டும் புத்தகமாக இது உள்ளது.

நிச்சயமாக ஒவ்வொருவருடைய இல்லங்களிலும், உள்ளங் களிலும், கைகளிலும் தவழ வேண்டிய அருமையான பொக்கிஷம் இது. அன்பு சகோதரியைக் கொண்டு, இக்கட்டான இந்தச் சூழ்நிலையில் தேவ ஜனத்திற்கு சிறந்த வழிகாட்டியாகத் திகழ இப்புத்தகம் வெளியிடப்படுவது உச்சிதமானது. சகோதரி கீதா ஜெயசேகரன் அவர்களின் முயற்சிக்கும், அயராத உழைப்பிற்கும் எனது பாராட்டுக்கள். கர்த்தர் அவரையும், அவரது குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக. ஆண்டவருடைய நாமம் மகிமைப்படுவதாக.

கிறிஸ்துவின் பணியில்,

பாஸ்டர் S. ஜோசப்

என்னுரை

கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு மகிமை உண்டாவதாக! முதன், முதலாக ''ஜெபம் செய்வது எப்படி?'' என்று ஜெபத்தைக் குறித்த ஒரு புத்தகத்தை எழுதி வெளியிட கர்த்தர் கிருபை கொடுத்தார். இப்போதும் இரண்டாவதாக **''வாழ்க்கையில் வீசும் காற்றுகள்''** என்ற தலைப்பில் இந்த புத்தகத்தை வடிவமைத்து மகிமையாக அச்சிட்டு வெளியிட கிருபையளித்த மகிமையின் தேவனைத் துதிக்கிறேன்.

எந்த ஒரு காரியத்தைச் செய்தாலும், அதை ஊக்குவிப்பதற்கும், உற்சாகப்படுத்து-வதற்கும் பின்னணியில் சிலர் இருப்பார்கள். ஓட்டப்பந்தயத்தில் ஒருவன் ஓடுகிறான் என்றால் பின்னணியில் இருந்து, அவனை உற்சாகப்படுத்தி ஓடு, ஓடு, நன்றாக ஓடு. இன்னும் ஓடு, ஓடு என்று சொல்லும்போது அவனுக்குள்ளாக ஒரு புது உற்சாகம் வருகிறது. அவன் தன் முழுப் பலத்தையும், முழு திறமையையும் காட்ட நன்றாக ஓடுவான். ஆனாலும், அவனுக்குப் பின் வரும் குரலைக் கேட்கும்போது, புது உற்சாகம் வருகிறது. இன்னும் நாம் நன்றாக ஓடமுடியும் என்கிற ஒரு நம்பிக்கையும் வருகிறது. ஓடி பரிசையும் தட்டிச் செல்கிறான். எண்ணிறந்த சந்தோஷம் அடைகிறான். அவ்வண்ணமே என்னைப் பார்க்கும்போதெல்லாம் Sister அடுத்த புத்தகம் எழுதிவிட்டீர்களா! என்ன தலைப்பில் எழுதப் போகிறீர்கள்? முதல் புத்தகமும் மகிமையாக இருந்தது. படிக்க எளிமையாக இருக்கிறது. ஜனங்களுக்கு எளிதாக புரியும்படி எழுதி இருக்கிறீர்கள். அடுத்த புத்தகமும் சீக்கிரம் எழுதுங்கள் என்று என்னை உற்சாகப்படுத்தி, ஊக்குவித்த மதிப்புக்கும், மரியாதைக்குமுரிய நம் அன்புப் போதகர் **Rev.Dr. K. கலைமணி** அவர்களுக்கும், **Uncle Rev. Dr.J. டேனியல் மோசஸ்** அவர்களுக்கும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் என் உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றி

கூறிக்கொள்கிறேன். அடுத்து என் கணவர், பிள்ளைகளுக்காக கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன். எனக்கு சகல காரியங்களிலும் உறுதுணையாக, ஒத்தாசையாக இருந்து என்னை உற்சாகப்படுத்தி, ஊக்குவித்த என் கணவருக்காக, பிள்ளைகள் பிளஸ்ஸி, பிரீத்திக்காக கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன். என்னை ஜெபத்தினால் தாங்கியவர்களுக்கும் நன்றி சொல்கிறேன். இந்த புத்தகம் இவ்வளவு மகிமையாய் வெளிவர உதவிய கிறிஸ்துவின் மகிமை பத்திரிகை இணை ஆசிரியர் **சகோ. M. செல்வராஜ், பாஸ்டர் N. அருண், பாஸ்டர் D. டேவிட்** ஆகியோருக்காகவும் கர்த்தரைத் துதிக்கிறேன்.

முதல் புத்தகத்தை எழுதி முடித்தவுடன் இரண்டாவது புத்தகம் என்ன தலைப்பில் எழுதுவது என்று ஜெபத்துடன் சிந்தித்துக் கொண்டிருக்கும்போது, பலவிதமான காற்றுகள் பற்றி என் சிந்தனையில் ஒரு உந்துதல் வந்தது. உடனே வேதத்தை எடுத்து அலசி, ஆராய்ந்து காற்றின் வகைகள், என்னென்ன காற்றுகள், யார் யாருடைய வாழ்க்கையில் வீசினது? எதற்காக வீசியது? தேவ மனிதர்கள் தேவ ஒத்தாசையுடன் எப்படி மேற்கொண்டார்கள்? என்பதை கர்த்தர் வெளிப்படுத்தினார்.

இன்றைய நாட்களில் மனிதர்களுடைய வாழ்க்கையில் ஒரு சிறு காற்று வீசினாலே, அதை சகிக்க முடியாமல் குடும்பங்களில் பிரச்சனை. கணவன், மனைவி இடையே விரிசல். பெற்றோர், பிள்ளைகளிடத்திலே சண்டைகள். சபைகளிலே குழப்பங்கள். சமுதாயத்தில் பிரச்சனைகள் ஏற்படுகிறது. எத்தனையோ குடும்பங்கள் உடைபட்டுப் போகிறது. காற்றை எப்படி எதிர்கொள்வது என்று தெரியாமல் காற்று அடிக்கும் திசையை நோக்கியே செல்கின்றனர். விழுந்து போகின்றனர். இதை மனதில் கொண்டு தான், இந்த புத்தகத்தைப் படிக்கும் போதாவது, தேவதாசர்களுடைய வாழ்க்கையில் எவ்வளவு காற்றுகள் வீசினபோதும் எப்படி உறுதியாய் அசையாமல், வளைந்து கொடுக்காமல், கர்த்தரை சார்ந்து கொண்டு ஜெயம் பெற்றார்கள், என்ற நம்பிக்கை வரும், தைரியம் வரும். ஒரு புதுபெலன் வரும் என்கிற நிச்சயத்தில் தான் **"வாழ்க்கையில் வீசும் காற்றுகள்"** என்ற தலைப்பில் இந்த புத்தகத்தை எழுதியுள்ளேன். இந்த புத்தகத்தைப் படித்து நம் வாழ்க்கையில் வீசும் சோதனைக் காற்றுகளை சாதனைக் காற்றுகளாக மாற்றுவோம்!

சகோதரி கீதா ஜெயசேகரன்
ஆக்கியோன்

மகிமையின் நம்பிக்கை ஊழியங்கள்

HOPE OF GLORY MINISTRIES

- ★ அற்புத நற்செய்தி கூட்டங்கள்
- ★ அக்கினி முகாம்கள்
- ★ ஆசீர்வாத உபவாச கூட்டங்கள்
- ★ மகிமையின் நம்பிக்கை சபைகள் ஸ்தாபித்தல்
- ★ கிறிஸ்துவின் மகிமை பத்திரிகை
- ★ சுவிசேஷ வேன் ஊழியம்
- ★ தொலைக்காட்சி ஊழியம்
- ★ மகிமையின் நம்பிக்கை மிஷனரி இயக்கம்
- ★ தொலைபேசி / கடிதம் ஆலோசனை ஊழியம்
- ★ ஒலி / ஒளிநாடா ஊழியம்
- ★ வேலை வாய்ப்பு / திருமண தகவல் உதவி திட்டம்

ஜெப உதவிக்கு :

மகிமையின் நம்பிக்கை ஊழியங்கள்
HOPE OF GLORY MINISTRIES
எண்கள் 27 & 28, ஜெய் நகர், கொரட்டூர்,
சென்னை - 600 076. (தென் இந்தியா)
Phone : (044) 2651 2404, 2650 0727
E-mail : hogministry@gmail.com

வாழ்க்கையில் வீசும் காற்றுகள்

ஒரு இரயில் வண்டியோ அல்லது பேருந்தோ குறிப்பிட்ட ஒரு தூரத்தை ஓடி முடித்த பிறகு அது பல விதங்களில் சோதிக்கப்படுகிறது. அதனுடைய இயந்திர பாகங்களெல்லாம் சரியாக இயங்கும் நிலையில் இருக்கிறதா என்று கவனிக்கப்பட்டு, சரி செய்யப்பட வேண்டிய பகுதிகள் பழுது பார்க்கப்பட்டு, சீர் செய்யப்படுகின்றன. நீண்ட தூரம் ஓடி வந்திருக்கின்ற நிலையில் வாகனத்தில் படிந்துள்ள அழுக்குகள் கழுவி அகற்றப்பட்டு, சுத்தமாக்கப்படுகிறது. இப்போது அது அடுத்தகட்ட ஓட்டத்திற்கு நன்கு ஆயத்த மாக்கப்படுகிறது.

கர்த்தருடைய பெரிதான கிருபையால் "**ஜெபம் செய்வது எப்படி?**" என்ற ஒரு புத்தகத்தை முதலில் எழுதி வெளியிட கிருபை செய்தார். அது அநேகருக்கு ஆசீர்வாத மாய் இருந்திருக்கும் என்று கர்த்தருக்குள் நம்புகிறேன். விசுவாசிக்கிறேன். இப்போது "**வாழ்க்கையில் வீசும் காற்றுகள்**" என்ற தலைப்பிலே இரண்டாவது புத்தகத்தை எழுத கர்த்தர் கிருபை கொடுத்தார், ஞானம் கொடுத்தார், அபிஷேகம் கொடுத்தார், வார்த்தைகள் கொடுத்தார், நேரம் கொடுத்தார். ஒரு புதிய அடுத்த கட்ட வாழ்க்கைப் பயணத் திற்கு ஆயத்தமாகும் விதமாக, நம்முடைய பாவ அழுக்கு களைக் களைந்துபோட்டு, பரிசுத்தத்தோடு, தெய்வ பயத்தோடு, நடுக்கத்தோடு, இந்த புத்தகத்தைப் படிப்போம். வாழ்க்கை மதுரமானதாக மாறும். நிறைவான ஆசீர்வாதங் களைப் பெற்றுக்கொள்வோம்.

கர்த்தர் நம்மோடிருந்தால் கர்த்தர் நமக்கு பல நிலைகளில் நல்லவராக இருந்ததை உணர்ந்திருக்க முடியும். கர்த்தர் நம்மோடிருந்தால் கர்த்தருடைய சமாதானம் நம்மோடிருந்திருக்கும். கர்த்தர் நம்மோடிருந்தால் கர்த்தரின் சத்தம் நம்முடைய ஆத்துமாவில் தொனித்ததை நாம் உணர்ந்திருப்போம். கர்த்தர் நம்மோடிருந்தால் கர்த்தருக்கு பிரியமற்ற காரியங்களை வெறுக்கவும், விலக்கவும் நாம் பெரிதும் பிரயாசப்பட்டிருப்போம். இவ்வித விஷயங்களில் நாம் குறைந்து போயிருந்தாலோ, குன்றிப் போயிருந்தாலோ நாம் கர்த்தரோடிருக்க போதிய அளவு கவனமாயிருக்கவில்லை என்று தான் அர்த்தம். அதுவே நம்முடைய பல சோர்வுகளுக்கும், அமைதிக்குறைவுகளுக்கும், நம்பிக்கை இழப்புகளுக்கும், சோதனைகளுக்கும், பலவித உபத்திரவங்களுக்கும், கஷ்டங்களுக்கும், நஷ்டங்களுக்கும், பாடுகளுக்கும் காரணமாயிருக்க முடியும். இப்போது அணி வகுத்து நிற்கும் வாழ்க்கைப் பிரச்சனைகளையே சிந்தித்துக் கொண்டிராமல், ஒரு புதிய தீர்மானத்துடன், கர்த்தரோடு வலிமையான உறவு கொள்ள இந்த புத்தகத்தைக் கருத்தாய், ஜெபத்தோடு படிக்க ஆயத்தமாகுங்கள். நாளை நமக்காக கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார்.

"**வாழ்க்கையில் வீசும் காற்றுகள்**" என்ற தலைப்பிலே இந்த புத்தகத்தை எழுத விரும்புகிறேன். வேதத்திலே தேவனுடைய அபிஷேகத்திற்குப் பல அடையாளங்கள் ஒப்புமையாய் சொல்லப்பட்டிருக்கிறது. "**எண்ணெய்**" ஒரு அடையாளம் (சங். 23:5); "**தைலம்**" ஒரு அடையாளம் (லூக். 12:49);

"**ஜீவநதி**" ஒரு அடையாளம் (வெளி. 22:1); "**நீரூற்று**" ஒரு அடையாளம் (யோவா. 4:14); "**சால்வை**" ஒரு அடையாளம் (II இரா. 2:14); "**வான்புறா**" ஒரு அடையாளம் (மத். 3:16); "**சுவாசம்**" ஒரு அடையாளம் (யோவா. 20:22); "**அச்சாரம்**" ஒரு அடையாளம் (II கொரி. 5:5); "**முத்திரை**" ஒரு அடையாளம் (எபேசி. 1:13,14); "**பனித்துளி**" ஒரு அடையாளம் (ஓசியா 14:5); "**மேகம்**" ஒரு அடையாளம் (யாத். 16:10); "**பின்மாரி**" ஒரு அடையாளம் (யோவே. 2:23); "**காற்று**" ஒரு அடையாளம் (அப். 2:2). இப்படி சொல்லிக் கொண்டே போகலாம்.

அதுபோல காற்றிலே பலவிதமான காற்றுகள் உண்டு. இன்றைக்கு அநேகருடைய வாழ்க்கையிலும் கூட பலவித மான காற்றுகள் வீசுகிறது. இந்த உலக வாழ்க்கை யாருக்கும் சுகமானதோ, நீண்ட கால சொகுசான வாழ்க்கையோ அல்ல. கற்றவன், கல்லாதவன், ஏழை, பணக்காரன், உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற வேறுபாடின்றி சோதனைகளும், கஷ்டங் களும், பாடுகளும், சோர்வுகளும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு காற்றுகளாக குடும்பங்களில் வீசுகிறது. இந்த காற்றை பணத்தைக் கொண்டும், செல்வாக்கைக் கொண்டும், ஆள்பலத்தைக் கொண்டும் விரட்ட முடியாது. (கர்த்தரை மட்டும் சார்ந்து கொண்டால் தான் இப்படிப்பட்ட காற்றை விரட்ட முடியும்). கிறிஸ்துவைப் பின்பற்றுபவர் வாழ்க்கை யிலும் கூட பலவித காற்றுகள் வீசுவது போன்ற சூழ்நிலை கள் வந்தாலும், அவைகளை நாம் சந்திக்க நேரிட்டாலும், தேவ ஐக்கியத்தாலும், தேவ வல்லமையாலும் அந்த காற்றை நாம் ஜெயிக்க முடியும். காரணம் கர்த்தர் நம்மோடிருக்கிறார்.

நாம் கர்த்தரை சார்ந்திருக்கிறோம். பரிசுத்த ஆவியானவர் என்றென்றும் நம்மோடிருந்து நம்மை நடத்துவார். இந்த தேவன் என்றென்றுமுள்ள சதாகாலமும் நம்மோடுகூட இருந்து மரண பரியந்தம் நம்மை வழிநடத்துவார்.

ஒருவிசை சீஷர்கள் படவில் பிரயாணம் பண்ணும் போது காற்று அவர்களுக்கு எதிராயிருந்தபடியினால் அவர்கள் தண்டு வலிக்கிறதில் மிகவும் வருத்தப்பட்டார் கள். மிகவும் பயந்தார்கள். சீஷர்கள் வருத்தப்படுகிறதை இயேசு *"கண்டு"* இராத்திரியில் நாலாம் ஜாமத்தில் கடலின் மேல் நடந்து சீஷர்கள் இருந்த படவில் ஏறினார். அப்பொழுது காற்று அமர்ந்தது. சீஷர்கள் மிகவும் பிரமித்து ஆச்சரியப் பட்டார்கள்.

உங்களுடைய வாழ்க்கைப் படகிலும் காற்று அடிக்கிறதா ? பயம் வருகிறதா ? இயேசு காண்கிறார். காற்றினால் இங்கும், அங்குமாக அலைசடிப்பட்டு பயந்து நடுங்குகிறீர்களா ? இயேசு ஏறுகிறதற்கு இடம் கொடுங்கள். இயேசு உங்கள் வாழ்க்கைப் படகில் ஏறும்போது சோதனைக் காற்றுகளை, சாதனைக் காற்றுகளாக மாற்றிப்போடுவார்.

சில மரங்கள் காற்றினால் அதிகமாக அசைக்கப்பட, அசைக்கப்பட அங்கு மரங்களின் வேர்கள் அதிக வலிமை யோடு பூமிக்குள் ஆழமாக ஊடுருவிச் செல்கிறது. பேரசைவு கள், பெருங்காற்றுகள் அந்த மரங்களை பலவீனப்படுத் தாமல், மென்மேலும் பலப்படுத்துகின்றது என்பது தான் உண்மை. கர்த்தருக்குப் பயந்து அவருடைய பாதையில் உண்மையாய், உத்தமமாய் நடக்கின்றவர்களின் நிலைமை யும் இதுவே. துன்பங்களையும், பாடுகளையும், மீண்டும்

மீண்டும் அனுபவிக்க நேரிடும்போது அவர்களின் அஸ்தி பாரம் கிறிஸ்துவில் அதிக வலிமையாகிறதேயன்றி, வலிமை குன்றிப்போவதில்லை. ஒவ்வொரு போராட்டமும், ஒவ்வொரு துன்பமும் காற்றுகளாய் வீசும்போது அவர்களின் விசுவாச வேர் கிறிஸ்துவுக்குள் ஆழமாக ஊடுருவி, பலப்பட வழி வகுக்கிறதேயன்றி அவர்களை பலவீனப்படுத்துவதில்லை.

தாவீது துன்பங்களை தொடர்ந்து சந்தித்தவன். துன்பங்கள் தாவீதை பலவீனப்படுத்தி விடுகிறதைப் போல வேகமாக வந்தபோதிலும், ஒவ்வொரு துன்பமும் தேவனோடு அவனை அதிகமாக பிணைக்கவும், இணைக்கவும் செய்தது. ஒரு கால கட்டத்தில் அவனுக்கு துணையாக நின்ற அனைவரும் அவனை விட்டு விலகிப் போகும் சூழ்நிலை ஏற்பட்டது. ஆனாலும் தாவீது விழுந்து போகவில்லை; அசைந்து போகவில்லை; தொய்ந்து போகவில்லை. அந்த துயரச் சூழ்நிலை தாவீதை இன்னும் ஒருபடி ஆழமாக கர்த்தருக்குள் வேரூன்றச் செய்தது. அவன் கர்த்தருக்குள் தன்னைத் திடப்படுத்திக் கொண்டான் (1 சாமு. 30:6) என்று வேதம் சொல்லுகிறது. ஆம், உண்மையான தேவ பிள்ளை கள் சந்திக்க நேரிடுகின்ற தொடர் துன்பங்கள், பிறருடைய பார்வையில் அவர்களைப் பலவீனப்படுத்தி விடுகிறதைப் போல தோன்றினாலும் தேவனுடைய பார்வையில் அவைகள் அவர்களுக்கு மேலும் வலிமை சேர்க்கின்றனவையே. ஏனென்றால் ஒவ்வொரு துன்பமும், நெருக்கமும் தேவனை விசுவாசிக்கின்றவர்களை கர்த்தருக்குள் மேலும், மேலும் உறுதிப்படவும், அவர்களோடுள்ள தொடர்பு நிலைகளில் பலப்படவுமே வழிவகுக்கும்.

ஒரு குறிப்பிட்ட விசுவாச குடும்பத்தார் தொடர்ந்து சில சோதனைகளையும், வேதனைகளையும் சந்திக்க நேர்ந்தது. இதை கவனித்துக் கொண்டிருந்த தேவ ஊழியர் இவர்கள் ஆண்டவர் மீது வைத்திருந்த விசுவாசத்தை விட்டு வழி விலகிப் போய்விடுவார்களோ என அச்சப்பட்டார். ஆனால் ஒரு நாள் இந்த விசுவாச குடும்பத்தார் போதகரைப் பார்த்து : ஐயா. இந்த கஷ்டங்கள் பிரச்சனைகள் யாவும் கிறிஸ்து விடம் எங்களை அதிகமாக நெருங்கச் செய்கிறதேயன்றி, வழிவிலகிப் போகச் செய்யவில்லை என்று அவர்கள் சாட்சியாகச் சொன்னார்கள். அதைக் கேட்ட தேவ ஊழியர் மிகவும் ஆச்சரியப்பட்டார். இதுதான் கிறிஸ்தவ வாழ்க்கை.

வேதத்திலே பலவிதமான நேரங்களில் பரிசுத்த வான்களுடைய வாழ்க்கையிலும் கூட, பலவிதமான காற்றுகள் வீசியது.

காற்றின் வகைகள்

1. **கீழ்காற்று** **(யாத். 10:13)**
2. **மேல்காற்று** **(யாத். 10:19)**
3. **பெருங்காற்று** **(யோபு 1:19)**
4. **எதிர்காற்று** **(அப். 27:4)**
5. **கடுங்காற்று** **(அப். 27:14)**
6. **பலத்த காற்று** **(அப். 2:1,2,3)**
7. **பலத்த சுழல்காற்று** **(மாற்கு 4:37)**
8. **தீக்காற்று** **(எரே. 4:11)**

9. **கோராவாரிக் காற்று** (எரே. 30:23)

10. **கொண்டல் காற்று** (எரே. 18:17)

11. **வனாந்தரக் காற்று** (எரே. 13:24)

12. **கொடிய புசல் காற்று** (எசேக். 13:13)

13. **சூறைக் காற்று** (ஓசியா 8:7)

14. **வடகாற்று** (யோபு 37:9)

15. **பலவித காற்று** (எபேசி. 4:14)

யார், யாருடைய வாழ்க்கையிலே, என்னென்ன காற்றுகள் வீசியது? எதற்காக வீசியது? எப்படி அந்த காற்றை மேற்கொண்டார்கள் என்று சற்று ஆழமாக பார்ப்போம்.

1. கீழ்காற்று

அப்படியே மோசே தன் கோலை எகிப்து தேசத்தின் மேல் நீட்டினான்; அப்பொழுது கர்த்தர் அன்று பகல் முழுவதும், அன்று இராமுழுவதும் கீழ்காற்றைத் தேசத்தின்மேல் வீசப்பண்ணினார்; விடியற்காலத்திலே கீழ்காற்று வெட்டுக்கிளிகளைக் கொண்டுவந்தது.

(யாத். 10:13)

பார்வோன் இஸ்ரவேல் ஜனங்களை எகிப்திலே அடிமைகளாக வைத்திருந்தான். கர்த்தர் மோசேயையும், ஆரோனையும் தெரிந்துகொண்டு, நீங்கள் பார்வோ–னிடத்தில் போய் என் ஜனங்களை, என் சமுகத்தில் ஆராதனைசெய்ய அனுப்பிவிடு என்று சொல்லுங்கள் என்றார். என் ஜனங்களை போகவிட மாட்டேன் என்பாயாகில், நான் நாளைக்கு உன் எல்லைகளுக்குள்ளே வெட்டுக்கிளி களை வரப்பண்ணுவேன் என்று சொல்லச் சொன்னார்.

மோசேயும், ஆரோனும் பார்வோனிடத்தில் வந்து: உன்னைத் தாழ்த்த நீ எதுவரைக்கும் மனதில்லாதிருப்பாய்? என் சமுகத்தில், எனக்கு ஆராதனைசெய்ய, என் ஜனங் களை விட்டுவிடு என்றார்கள். பார்வோன் விடவில்லை, கர்த்தருடைய கரம் பார்வோனுக்கு விரோதமாய் எழும்பி வந்தது. கர்த்தர் மோசேயிடம் உன் கோலை எகிப்து தேசத்தின் மேல் நீட்டு என்றார். அப்படியே மோசே கோலை நீட்டின மாத்திரத்திலே கர்த்தர் எகிப்து தேசத்தின் மேல்

கீழ்காற்றை வீசப்பண்ணினார். கீழ்காற்று வெட்டுக்கிளி களைக் கொண்டு வந்தது. வெட்டுக்கிளிகள் தேசமெங்கும் பரவினது. அப்படிப்பட்ட வெட்டுக்கிளிகள் அதற்குமுன்னும், அதற்குப்பின்னும் இருந்ததில்லை. வெட்டுக்கிளிகள் தேசத்தை மூடிற்று; நிலத்தின் பயிர் வகைகள், மரங்களின் கனிகள் யாவையும் பட்சித்துப்போட்டது. தேசம் எங்குமுள்ள பயிர்வகைகளிலும், மரங்களிலும் ஒரு பச்சிலையும் மீதியா -யிருக்கவில்லை.

அப்பொழுது பார்வோன் மோசேயையும், ஆரோனையும் தீவிரமாய் அழைத்து: "உங்கள் தேவனாகிய கர்த்தருக்கும், உங்களுக்கும் விரோதமாகப் பாவம் செய்தேன். இந்த ஒருமுறை மாத்திரம் நீ என் பாவத்தை மன்னிக்க வேண்டும்; நீங்கள் உங்கள் கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணுங்கள்" என்றான். மோசேயும், ஆரோனும் கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணினார்கள். அப்பொழுது கர்த்தர் மகா பலத்த மேல்காற்றை வீசும்படி செய்தார்; அது வெட்டுக்கிளிகளை அடித்துக்கொண்டுபோய்ச் செங்-கடலிலே போட்டது.

கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை பாதுகாத்து வருகிறார். இஸ்ரவேல் ஜனங்களை பகலில் மேகஸ்தம்பத் தினாலும், இரவில் அக்கினி ஸ்தம்பத்தினாலும் பாதுகாத்து வந்தார். வானத்து மன்னாவால் அவர்களைப் போஷித்தார். கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுக்கு தீங்குசெய்ய நினைப்பவர்கள் மேல் கீழ்காற்றை வீசும்படி செய்கிறார்.

கர்த்தருடைய கரம் பகைஞனை நொறுக்குகிற கரம் (யாத். 15:6). தம்முடைய பிள்ளைகளுக்கு விரோதமாய் எழும்புகிற வர்கள் மேல் கீழ்காற்றை அனுப்பி வாதிப்பார். கர்த்தருக்குப் பயந்து நடக்கிறவர்களுக்கு விரோதமாய் எழும்பும் எந்த ஆயுதமும் வாய்க்காதே போகும். உன் பக்கத்தில் ஆயிரம் பேரும், உன் வலதுபுறத்தில் பதினாயிரம் பேரும் விழுந்தாலும், அது உன்னை அணுகாது. உன் கண்களால் மாத்திரம் நீ அதைப் பார்த்து, துன்மார்க்கருக்கு வரும் பலனைக் காண்பாய். (சங். 91:7,8).

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்திலிருந்து வெளியே புறப் பட்டபோது, ஒரு பயங்கரமான பயம் அவர்களை ஆட் கொண்டது. காரணம், முன்னால் சிவந்த சமுத்திரம்; பின்னால் பார்வோனுடைய சேனைகளும், இரதங்களும், குதிரைகளும்; இருபுறமும் உயரமான மலை, எல்லாப் பக்கங்களிலும் நெருக்கம். முன் சென்றால் கடலில் விழுந்து மரிக்கவேண்டும். பின்னால் திரும்பினால் பார்வோனின் பட்டயத்திற்கு இரையாகவேண்டும். எங்கே போவது? எப்படிப் போவது?

ஆனால் தேவனுடைய மனுஷனாகிய மோசே சற்றும் பயப்படவில்லை; கலங்க வைக்கும் சூழ்நிலைகள் மத்தி-யிலும், கர்த்தர் அற்புதங்களைச் செய்வார் என்று மோசே அறிந்திருந்தான். மோசே ஜனங்களை நோக்கி: பயப்படா திருங்கள்; நீங்கள் நின்றுகொண்டு இன்றைக்குக் கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்;

இன்றைக்கு நீங்கள் காண்கிற எகிப்தியரை இனி என்றைக்கும் காணமாட்டீர்கள். கர்த்தர் உங்களுக்காக யுத்தம்பண்ணுவார்; நீங்கள் சும்மாயிருப்பீர்கள் என்றான் (யாத். 13:13,14).

அப்படியே கர்த்தர் இராமுழுவதும் பலத்த கீழ்காற்றை உண்டு பண்ணி சமுத்திரம் ஒதுங்கி, வலதுபுறத்திலும் இடது புறத்திலும் ஜலம் அவர்களுக்கு மதிலாக நின்றது. இஸ்ரவேல் புத்திரர் சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந் தரையில் நடந்து போனார்கள்; அப்பொழுது எகிப்தியர் இஸ்ரவேலை விட்டு ஓடிப்போவோம். கர்த்தர் அவர்களுக்குத் துணை நின்று, எகிப்தியருக்கு விரோதமாய் யுத்தம் பண்ணுகிறார் என்றார்கள் (யாத். 15:25).

சிறுமையானவனுடைய கூக்குரலைக் கேட்கிறவர் (யோபு 34:27). இஸ்ரவேல் புத்திரர் அடிமைத்தனத்தினால் தவித்து, முறையிட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்கள் அடிமைத்தனத்திலிருந்து முறையிடும் சத்தம் தேவ சந்நிதி யில் எட்டியது. தேவன் அவர்கள் பெருமூச்சைக் கேட்டார். தேவன் அவர்களை கண்ணோக்கினார். அவர்களை நினைத் தருளினார். அவர்கள் இடுகிற கூக்குரலைக் கேட்டார். அவர்கள் படுகிற வேதனைகளை அறிந்திருந்தார். அவர்களை விடுவித்து பாலும், தேனும் ஓடுகிற செழிப்பான கானானுக் குள் கொண்டு வந்து சேர்க்க கர்த்தர் மோசேயைத் தெரிந்து கொண்டார்.

உங்களுக்கு விரோதமாய் தீயமக்கள் எழும்பி

வருகிறார்களா ? நீங்கள் பயப்படவும் வேண்டாம், கலங்கவும் வேண்டாம். நீங்கள் செய்ய வேண்டிய ஒரே ஒரு காரியம் என்ன தெரியுமா ? கர்த்தருடைய பாதத்திற்கு ஓடிப்போங்க. அவருடைய பாதத்தில் போய் உட்கார்ந்து, அவருடைய முகத்தை நோக்கிப் பார்த்து முறையிடுங்கள். உங்கள் முறையிடுதலின் சத்தம் தேவனுடைய கரத்தை அசைக்கும். உங்கள் முறையிடுதலின் சத்தம் தேவனுடைய காதுகளில் தொனிக்கும். அவர் உங்களுக்காக யுத்தம் செய்வார். உங்களோடு போராடினவர்களைத் தேடியும் காண மாட்டீர்கள். ஒருவழியாய் வருவார்கள். ஏழு வழியாய் ஓடிப் போவார்கள். கர்த்தர் கீழ்காற்றை அவர்கள் மீது வீசுவார். அவர்களை காற்று அடித்துக்கொண்டுபோகும்; என்ன இடத்துக்கு காற்று அடித்துக்கொண்டுபோகும் என்று அவர்களுக்கே தெரியாது. காற்று அவர்களை வாரிக் கொண்டு போய் விடும். கர்த்தர் நமக்கு ஜெயத்தைக் கட்டளையிடுவார்.

தாவீது அப்சலோமின் கைக்குத் தப்பி பட்டணத்தை விட்டு ஓடிப்போனபோது, சீமேயி தாவீதை பயங்கரமான தூஷண வார்த்தைகளால் தூஷித்தான். அவனுக்கு எதிராக கற்களை வீசி எறிந்து, மண்ணை வாரி தூற்றிக் கொண்டே நடந்து வந்தான். அதைப் பார்த்த தாவீதின் உள்ளம் உடைந்திருக்கும். ஆனால் தாவீது செய்தது என்ன தெரியுமா ? கர்த்தர் இந்த நிந்தைகளையெல்லாம் நன்மையாக மாறப் பண்ணுவார் என்று எல்லா நிந்தைகளையும், அவமானங் களையும், பரிகாசங்களையும், தூஷணங்களையும், கர்த்தர்

மேல் வைத்துவிட்டான். கர்த்தர் எல்லா நிந்தைகளையும் மாற்றிப் போட்டார்.

கர்த்தருக்குப் பயந்த ஒரு குடும்பம். அவர்கள் குடும்ப மாக காலையிலும், மாலையிலும் தேவனைத் துதித்துப் பாடி, வேதம் வாசித்து, ஜெபித்து தான் எல்லா காரியங்களையும் செய்வார்கள். இங்கு பாடல் பாடி, ஜெபிக்கிற சத்தம் கேட்ட வுடன் பக்கத்து வீட்டிலுள்ள ஒரு பொல்லாத பெண்மணி இவர்களைப் பார்த்து பயங்கரமாக கேலி செய்து தூஷிப்பாள். அங்கு "அல்லேலூயா" என்று சொல்லுகிற சத்தம் கேட்டாலே இந்த பெண்மணிக்கு ஆத்திரம்தான் வரும். அங்கு அவர்கள் இயேசுவைப் பற்றிய பாடல்களைப் பாடினால், இங்கு இந்த பெண்மணி வேண்டுமென்றே சத்தமாக சினிமாப் பாடல்களைப் பாடுவாள். ஆனால் கர்த்தருக்குப் பயந்த இந்த கிறிஸ்தவ குடும்பம் அத்தனை நிந்தைகளை யும் பரிகாசங்களையும் பொறுமையோடு சகித்துக் கொண்டு, கர்த்தர் எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருக்கிறார். எல்லா நிந்தைகளையும் நன்மையாக மாறப்பண்ணுவார் என்று அமைதியாக இருந்துவிட்டனர். ஒருசில நாட்கள் தான் ஆகியிருக்கும். அதற்குள் அந்த குடும்பத்தில் ஒரு கீழ்காற்று வீசியது. இவர்களைத் தூஷித்த அந்த பெண்மணியை இதயநோய் பலமாகத் தாக்கியது. டாக்டர் அந்தப் பெண்மணியைப் பார்த்து: நீங்கள் சத்தமாகப் பேசக்கூடாது; அமைதியாக இருக்கவேண்டும். சத்தமாக, கத்திப் பேசினால் இதயத்திற்கு ஆபத்து; நீங்கள் மோசமான நிலையில்

இருக்கின்றீர்கள் என்று கூறிவிட்டார். அதுமுதல் அவர்களுடைய வாய்ப்பேச்சு ஒடுங்கிப்போனது. மட்டுமல்ல, அந்தக் குடும்பத்துக்கு முன்னிலையில் கர்த்தர் இந்தக் குடும்பத்தை பல மடங்கு உயர்த்தி ஆசீர்வதித்தார். இவர்களுடைய வியாபாரத்தில் ஒரு செழிப்பு. பிள்ளைகள் படித்து முன்னேறினார்கள். குடும்பத்தில் சமாதானம்; ஒவ்வொரு நிந்தையையும், கர்த்தர் இவர்களுக்கு நன்மையாக மாறப் பண்ணினார்.

இன்று நிந்தைகளைச் சுமந்து கொண்டிருக்கிற தேவ பிள்ளைகளே, அவமானங்களுக்குள்ளும், பாடுகளுக்குள்ளும் கடந்து சென்றுகொண்டிருக்கிற விசுவாசிகளே, உங்கள் இருதயம் கலங்கவேண்டாம். கர்த்தர் மேல் பாரத்தை வைத்துவிடுங்கள். கர்த்தரிடத்தில் முறையிடுங்கள்; கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார். கீழ்காற்றை அனுப்பி சத்துருக்களை நொறுக்கிப் போடுவார்.

2. மேல்காற்று

அப்பொழுது கர்த்தர் மகா பலத்த மேல்காற்றை வீசும்படி செய்தார்; அது வெட்டுக்கிளிகளை அடித்துக் கொண்டுபோய்ச் செங்கடலிலே போட்டது.

(யாத். 10:19)

பார்வோனுக்கு விரோதமாய் கர்த்தர் கீழ்காற்றை அனுப்பி வெட்டுக்கிளிகளை வரும்படி செய்தார். தேச மெங்கும் போய் வெட்டுக்கிளிகள் பயிர் வகைகள், மரங் களின் கனிகள், பச்சிலைகள் எல்லாவற்றையும் பட்சித்துப் போட்டது. பார்வோன் மிகப்பெரிய அரசன். ஆனாலும் பார்வோனாலும், அவன் தேசத்து மக்களாலும் அந்த வெட்டுக்கிளிகளை ஒன்றும் செய்யமுடியவில்லை. பார்வோன் மோசேயைப் பார்த்து முறையிடுகிறான். இந்த ஒருவிசை மாத்திரம் என் பாவத்தை மன்னிக்கவேண்டும். இந்த வெட்டுக்கிளிகள் என் தேசத்தை விட்டு அகலும்படி யாக, நீர் கர்த்தரை நோக்கி முறையிடும் என்று வேண்டிக் கொண்டான். மோசே கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணினான் (யாத். 10:18). அப்பொழுது கர்த்தர்: கர்த்த ருக்குப் பயந்த மோசேயின் ஜெபத்தைக் கேட்டார். அவன் விண்ணப்பத்துக்கு உடன் பதில் வந்தது. கர்த்தர் மோசேயின் சொல்படி செய்தார் (யாத். 8:13). உடனே மகா பலத்த மேல்காற்றை வீசும்படி செய்தார். அந்தக் காற்று வெட்டுக்கிளிகளை அடித்துக்கொண்டுபோய்ச் செங் கடலிலே போட்டது.

இந்த இடத்தில் பார்க்கும்போது கர்த்தர் மோசேயின் விண்ணப்பத்தைக் கேட்டு எதற்காக மேல் காற்றை வீசும்படி செய்தார் தெரியுமா?

ரோமர் 12:14,17ம் வசனம் சொல்லுகிறது. உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களை ஆசீர்வதியுங்கள்; ஆசீர்வதிக்க வேண்டியதேயன்றிச் சபியாதிருங்கள். ஒருவனுக்கும் தீமைக்குத் தீமைசெய்யாதிருங்கள்.

நம்மைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காக நாம் ஜெபிக்கும்போது, கர்த்தர் அவர்களுக்கு அற்புதம் செய்வார். மட்டுமல்ல, கர்த்தர் நம்மோடிருக்கிறார் என்பதை அவர்கள் காணும்படியாக கர்த்தர் அற்புதம் செய்வார். மோசேயோடு கூட தேவன் இருக்கிறார், அவன் விண்ணப் பத்தைக் கேட்கிறார், அவன் சொல்படி செய்கிறார் என்பதை பார்வோன் கண்டுகொண்டான்.

நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். உங்கள் சத்துருக் களைச் சிநேகியுங்கள். உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள். உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள். உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும், உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்.

இந்த உலகம் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது. எங்கு பார்த்தாலும் கொலை, கொள்ளை, தீவிரவாதங்கள், வன்முறை கள் நடந்துகொண்டிருக்கிறது. ஒருபுறம் இயற்கை சீற்றங் கள் மூலமாக எத்தனையோ பேரழிவுகள், நாம் இதற்காக

என்ன செய்துகொண்டிருக்கிறோம். இஸ்ரவேல் ஜனங்களைக் காப்பாற்றும்படியாக அன்று கர்த்தர் மோசேயைத் தெரிந்துகொண்டார். இன்று நம் இந்திய தேசத்து மக்களைக் காப்பாற்ற, கர்த்தர் நம் ஒவ்வொருவரையும் தெரிந்தெடுத்திருக்கிறார். நாம் இவர்களுக்காக தேவனை நோக்கி விண்ணப்பம் பண்ணும்போது: கர்த்தர் தேசத்தை அழிக்காதபடி ஒரு மேல்காற்றை வீசும்படிசெய்து, தம்முடைய பிள்ளைகளைப் பாதுகாப்பார்.

நான் மழையில்லாதபடிக்கு வானத்தை அடைத்து, அல்லது தேசத்தை அழிக்க வெட்டுக்கிளிகளுக்குக் கட்டளையிட்டு, அல்லது என் ஜனத்திற்குள் கொள்ளை நோயை அனுப்பும்போது, என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம்பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு க்ஷேமத்தைக் கொடுப்பேன். (II நாளா. 7:13,14).

லூக்கா 10:3 ஓநாய்களுக்கு நடுவில் தான் கர்த்தர் நம்மை ஆடுகளாக தெரிந்துகொண்டிருக்கிறார். முரண்பாடுகளின் நடுவில் தான் நேர்மையாயிருக்க நம்மை அவர் அழைத்திருக்கிறார். அசுத்த சூழ்நிலைகளின் மத்தியில் தான் பரிசுத்தமாய் வாழ்ந்து காட்டிட அவர் நமக்குப் போதித்திருக்கின்றார். இருளின் நடுவில் தான் வெளிச்சங்களாக விளங்கும்படி நம்மை நியமித்திருக்கின்றார். அப்படி

வாழ்வதற்கான வல்லமையைத் தருவதற்கு, அவர் ஆயத்த மாயிருப்பதனால் தான் அவ்விதம் நம்மை அழைத்துள்ளார்.

நல்ல சமாரியன் உவமையில் காயம் அடைந்து உயிருக்குப் போராடும் மனிதனைக் கண்ட ஆசாரியனும், லேவியனும் பக்கவழியாய் விலகிப்போய்விடுகிறார்கள். அவர்கள் பாவிகள் அல்ல. மிகுந்த பக்தி ஒழுங்குடன் வாழு கின்றவர்கள். சுயநலனை மட்டுமே நோக்கமாகக் கொண்ட வர்கள். பிறருக்கு உதவாத குறுகிய இதயமுடையவர்கள். ஆனால் ஆன்மீகத்தோடு சம்பந்தப்படாத ஒரு சமாரியனிடம், தேவன் எதிர்பார்க்கும் மேன்மையான குணங்கள் இருந்தது. ஆனால் ஆன்மீகம் பேசுகின்ற ஆசாரியனிடத்திலும், லேவியனிடத்திலும் அவைகள் இல்லை. கள்ளர் கையில் அகப்பட்டு குற்றுயிராய்க் கிடந்த அவனிடத்தில் வந்து, அவனுடைய காயங்களில் எண்ணெயும், திராட்சரசமும் வார்த்து, காயங்களைக் கட்டி, அவனைத் தன் சுயவாகனத் தின்மேல் ஏற்றி, சத்திரத்துக்கு கொண்டுபோய், அவனைப் பராமரித்தான்.

இதற்காகவே கர்த்தர் நம்மை அழைத்திருக்கிறார். இதற்காகவே நம்மை ஓநாய்களுக்குள்ளே அனுப்புகிறார். பிறருடைய காயங்களைக் கட்டும்படியாக, பிறருக்கு உதவி செய்யும்படியாக, நம்மைத் தெரிந்தெடுத்திருக்கிறார். இயேசு கிறிஸ்துவும் கூட இந்த உலகத்தில் நன்மை செய்கிறவராக சுற்றித்திரிந்தார் என்று அப். 10:38 வசனம் சொல்லுகிறது.

சிறுமைப்பட்டவர்களுக்கு சுவிசேஷம் அறிவிக்க, இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயங்கட்டவும், சிறைப்பட்டவர்களை விடுவிக்கவும், கட்டுண்டவர்களை கட்டவிழ்க்கவும், துயரப்பட்ட அனைவருக்கும் ஆறுதல் செய்யவும், அவர்களை சீர்படுத்தவும், சாம்பலுக்குப் பதிலாக சிங்காரத்தையும், துயரத்துக்குப் பதிலாக ஆனந்த தைலத்தையும், ஒடுங்கின ஆவிக்குப் பதிலாக துதியின் உடையை கொடுக்கவும் என்னை அனுப்பினார் (ஏசா. 61:1–3).

நீங்களோ கர்த்தரின் ஆசாரியரென்று சொல்லப் படுவீர்கள்; உங்களை நமது தேவனுடைய பணி விடைக்காரரென்பார்கள். (ஏசா. 61:6A)

ஒருவிசை எலியா சகல ஜனங்களுக்கு முன்பாக ஒரு பெரிய சவால் விட்டான். கர்த்தர் தெய்வமா ? பாகால் தெய்வமா ? என்று. நீங்கள் உங்கள் தேவனை நோக்கிக் கூப்பிடுங்கள். நானும் எங்கள் தேவனை நோக்கிக் கூப்பிடு கிறேன். எந்த தேவன் இறங்கி வருகிறாரோ அவர் தான் உண்மையான தெய்வம். பாகாலின் ஜனங்கள் அவர்கள் தெய்வங்களை நோக்கிக் கூப்பிட்டார்கள். ஒரு சத்தமும் இல்லை. மறு உத்தரவும் இல்லை. அந்திப்பலி செலுத்துகிற நேரத்திலே எலியா தேவனை நோக்கிக் கூப்பிட்டான். அப்பொழுது கர்த்தரிடத்திலிருந்து அக்கினி இறங்கி வந்து, அந்த சர்வாங்க தகனபலி, விறகுகள், கற்கள், மண்ணையும் பட்சித்து, வாய்க்காலிலிருந்த தண்ணீரை நக்கிப்போட்டது. ஜனங்களெல்லாரும் இதைக் கண்டபோது, முகங்குப்புற

விழுந்து: கர்த்தரே தெய்வம், கர்த்தரே தெய்வம் என்றார்கள் (1 இரா. 18:21–40). கர்த்தர் தம்முடைய பிள்ளைகள் மூலமாக தம்முடைய வல்லமையை விளங்கப் பண்ணுவார்.

தம்மைப்பற்றி உத்தம இருதயத்தோடிருக்கிறவர்களுக்குத் தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணும்படி, கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக் கொண்டிருக்கிறது (II நாளா. 16:9)

தாவீது தேவ நன்மைகளைப்பெற்று, உயர்ந்த நிலைக்கு வந்தபோது, தனக்கு எதிராக பல தீமைகளைச் செய்த சவுலின் குடும்பத்தாருக்கு நன்மை செய்யத் தயங்கவில்லை. நமக்கு நன்மை செய்தவர்களுக்கு நாமும் நன்மை செய்வது மனித நீதி. நன்மை செய்யாதோருக்கு நன்மை செய்வதே தேவநீதி. ஒருவர் உதவி பெறத் தகுதியாக இருக்கின்றாரோ என்பதையல்ல, உதவி பெறவேண்டிய தேவையில் இருக்கிறாரா என்பதையே பார்க்க வேண்டும். நாம் தேவனால் நன்மை பெற்றது உண்மையானால், ஒருவர் நமக்கு என்ன செய்திருக்கிறார் என்று பாராமல், நாம் அவருக்கு என்ன செய்யலாம் என்றே சிந்திக்கவேண்டும். தேவனை விசுவாசியாமல் தீமை செய்கின்றவர்களுக்கும் அவர் மழையைப் பெய்யச் செய்யும்போது, நாம் ஏன் நமக்கு நன்மை செய்யாதவர்களுக்கு நன்மை செய்து, தேவனை கனப்படுத்தக்கூடாது.

அப்படியே மோசே பார்வோனுக்காக தேவனிடம் மன்றாடினான். கர்த்தர் மனமிரங்கி மேல்காற்றை தேசத்தின்

மேல் வீசச்செய்தார். அது வெட்டுக்கிளிகளை அடித்துக் கொண்டு போய் செங்கடலிலே போட்டது. இயேசுவை சிலுவையில் அறைந்தபோது, வலப்பக்கத்தில் ஒரு கள்ளனும், இடப்பக்கத்தில் ஒரு கள்ளனுமாக சிலுவையில் அறைந்தார்கள். ஒரு கள்ளன் மனந்திரும்பி, ஆண்டவரிடம் தன்னை முழுவதுமாக அர்ப்பணித்தான். அந்த நேரத்திலும் ஆண்டவர் அவனை மன்னித்து மோட்சபாக்கியத்தைக் கொடுத்தார். நாமும் இயேசுவைப் போல சத்துருக்களை நேசிப்போம். பிறர் செய்த தவறுகளை மன்னித்து, மோட்ச பாக்கியத்தை பெற்றுக்கொள்வோம்.

3. பெருங்காற்று

வனாந்தர வழியாய்ப் பெருங்காற்று வந்து, அந்த வீட்டின் நாலு மூலையிலும் அடிக்க, அது பிள்ளைகளின் மேல் விழுந்ததினால் அவர்கள் இறந்துபோனார்கள்; நான் ஒருவன்மாத்திரம் தப்பி, அதை உமக்கு அறிவிக்கும்படி வந்தேன் என்றான். (யோபு 1:19)

உத்தமனாய், சன்மார்க்கனாய், தேவனுக்குப் பயந்து, பொல்லாப்புக்கு விலகி நடக்கிறவனுமாயிருந்தான் யோபு. கிழக்கத்திப் புத்திரர் எல்லாரிலும் பெரியவனாயிருந்தான். தன் பிள்ளைகள், தங்கள் இருதயத்திலே தேவனைத் தூஷித்திருப்பார்கள் என்று, அவர்களை அழைத்தனுப்பி, அவர்கள் பரிசுத்தப்படுத்தும்படியாக சர்வாங்க தகனபலிகளைச் செய்து வந்தான். அவனைப் போலப் பூமியில் ஒருவனும் இல்லை என்று யோபுவைக் குறித்து தேவனே சாட்சி கொடுத்தார். அப்படிப்பட்ட யோபுவுடைய வாழ்க்கையிலே ஒரு காற்று வீசியது. அது என்ன காற்று தெரியுமா? சாதாரண காற்று அல்ல. தென்றல் காற்று அல்ல, பெருங்காற்று.

பெருங்காற்று வீட்டின் நாலு மூலையிலும் அடிக்க, அது பிள்ளைகளின் மேல் விழுந்ததினால் பத்து பிள்ளைகளும் மரித்துப்போனார்கள். யோபு கர்த்தரைத் தூஷிக்கவில்லை. நிந்திக்கவில்லை. முறுமுறுக்கவில்லை. மாறாக தன் வாயினால் கர்த்தரை ஸ்தோத்தரித்தான்.

நிர்வாணியாய் என் தாயின் கர்ப்பத்திலிருந்து வந்தேன்; நிர்வாணியாய் அவ்விடத்துக்குத் திரும்புவேன்; கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார்; கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம் என்றான். இவையெல்லாவற்றிலும் யோபு பாவஞ்செய்யவுமில்லை, தேவனைப்பற்றிக் குறைசொல்லவுமில்லை (யோபு 1:21,22).

நமக்கு ஒரு சின்ன கஷ்டம் வந்தால்போதும் முறுமுறுக்கிறோம், குறை சொல்லுகிறோம், இஸ்ரவேல் ஜனங்களுக்கு ஆண்டவர் எத்தனையோ அற்புத, அதிசயங்களைச் செய்த பிறகும் கூட, வழியில் எல்லாம் முறுமுறுத்தார்கள். ஆனால் யோபுவைப் பாருங்கள். தனக்கு ஒரு குழந்தை கூட மீந்திருக்கவில்லை. பத்துப் பிள்ளைகளும் ஒரே நேரத்தில் மரித்துப் போனார்கள். அந்த வேதனையான, இழப்பின் சூழ்நிலையிலும் யோபு கர்த்தரை ஸ்தோத்தரித்தான் என்று பார்க்கிறோம். நாம் ஜெபிக்கிறோம், ஆண்டவரே, என் ஜெபத்திற்கு உங்கள் கண்கள் காண்கிறவைகளும், உங்கள் செவிகள் கேட்கிறவைகளுமாயிருக்கிறது என்று ஜெபிப்போம். ஆனால் நமக்கு ஒரு சின்ன கஷ்டம் வந்தால் போதும்; ஆண்டவரே நான் படுகிற கஷ்டம் உங்களுக்குத் தெரியவில்லையா ? உங்களுக்கு கண் இல்லையா ? காது கேட்காதா ? என்று வாயில் வந்தபடி பேசுகிறோம். முறுமுறுக்கிறோம். ஆனால் யோபு நமக்கு ஒரு முன்மாதிரி. யோபுவைப் பாருங்க இழப்பின் மத்தியிலும் கர்த்தரை ஸ்தோத்தரித்தான். வேதனை மத்தியிலும் கர்த்தரை உயர்த்தினான்.

அதுமாத்திரமல்ல சோதனை, உபத்திரவம், யோபுவை யும் விட்டுவைக்கவில்லை. யோபுவின் உள்ளங்கால் தொடங்கி, அவன் உச்சந்தலை மட்டும் கொடிய பருக்கள். அவன் ஒரு ஓட்டை எடுத்து, தன்னை சுரண்டிக் கொண்டு சாம்பலில் உட்கார்ந்தான். யோபுவின் மனைவி அவனைப் பார்த்து நீர் இன்னும் உத்தமத்தில் உறுதியாய் நிற்கிறீரோ ? தேவனைத் தூஷித்து ஜீவனை விடும் என்றாள் (யோபு 2:9). அந்த நேரத்திலும் யோபு, தன் மனைவி சொல்லைக் கேட்காமல், நீ பயித்தியக்காரி பேசுவதுபோலப் பேசுகிறாய்; தேவன் கையிலே நன்மையைப் பெற்ற நாம், தீமையைப் பெற வேண்டாமா ? என்று சொல்லி, தன் உதடுகளினால் பாவம் செய்யாதபடி உத்தமத்திலே உறுதியாய் நின்றான்.

கிறிஸ்தவ வாழ்க்கை என்பது ஏற்றம் இறக்கமான வாழ்க்கை; உயர்வு, தாழ்வான வாழ்க்கை; மேடு பள்ளமான வாழ்க்கை; நன்மை தீமையான வாழ்க்கை; ஆகவே தான் யோபு சொன்னான்: தேவன் கையிலே நன்மையைப் பெற்ற நாம் தீமையைப் பெறவேண்டாமோ என்று.

ஒரு மனிதனுடைய வாழ்க்கையிலே இரண்டு விதமான நபர்கள் மூலமாக பெருங்காற்றுகள் வீசுகிறது. ஒன்று பிசாசின் மூலம், மற்றொன்று இயேசு கிறிஸ்து மூலம்.

நாம் ஆண்டவர் மீது அசைக்க முடியாத அன்பு வைத்திருக்கும்போது, கர்த்தருக்குப் பயந்து, உண்மையாய் நடக்கும்போது, அவருடைய வார்த்தைகளிலே நிலைத்திருக்கும்போது, அவரை அதிகமாக துதிக்கும்போது **பிசாசு**

ஆண்டவருடைய அன்பை விட்டு நம்மைப் பிரிக்கும் படியாக ஒரு பெருங்காற்றை வரவிடுகிறான். யோபு பக்தனுடைய வாழ்க்கையிலும் கூட அவ்விதமாகத் தான் ஒரு பெருங் காற்று வீசியது. ஆண்டவரைத் துதிக்க விடாதபடி, தடை செய்யும்படியாக பெருங்காற்று வீசியது. யோபு அந்த சோதனை நேரத்திலும் செய்த ஒரே காரியம் கர்த்தரை மறுதலிக்காமல், கர்த்தரை விட்டுப் பின்வாங்காமல், கர்த்தரை அதிகமாக ஸ்தோத்தரித்தான். கர்த்தர் கொடுத்தார்; கர்த்தர் எடுத்தார்; கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம்.

நாம் ஆண்டவருடைய சத்தத்துக்கு கீழ்ப்படியாமல் தேவ சமூகத்தை விட்டு வழிவிலகிப் போகும்போது **கர்த்தர்** நமக்கு ஒரு பெருங்காற்றை வரவிடுகிறார்.

எதற்கு இந்த பெருங்காற்று?

நம்மை ஆண்டவரண்டை திரும்பும்படியாக, அவருடைய சமுகத்தில் நிற்கும்படியாக, அவருடைய அன்பிலே நிலைத்திருக்கும்படியாக, தேவ சித்தத்துக்கு ஒப்புக் கொடுத்து நாம் வாழ்ந்து, தேவ ஆசீர்வாதங்களைப் பெறும் படியாக இந்த காற்றை தேவன் நம் வாழ்க்கையில் அனுமதித்திருக்கிறார்.

பக்தியுள்ள இளைஞன் ஒருவன் குறிப்பிட்ட ஒரு பெண்ணை விரும்பி, அவளைத் தான் திருமணம் செய்து கொள்வேன் என்று ஒற்றைக்காலில் நின்றான். அவள் அவனுக்குத் தகுந்த துணை அல்ல என்று அவனுடைய பெற்றோர், உறவினர்கள் சொன்னார்கள். அவன் யார்

சொன்ன பேச்சையும் மதிக்கவில்லை. இவளைத்தான் திருமணம் செய்து கொள்வேன் என்றான். ஒருநாள் அவனுடைய வாழ்க்கையிலே ஒரு பெருங்காற்று வீசியது. திடீரென்று ஒருநாள் அவன் செய்து வந்த நல்ல வேலையி லிருந்து நீக்கப்பட்டான். வேலையின்றி நின்ற அவனை விட்டு அந்தப் பெண் கொஞ்சம், கொஞ்சமாக பின் வாங்கினாள். ஒருபுறம் வேலையிழப்பு, மறுபுறம் அந்தப் பெண்ணின் பின்வாங்குதல். இரண்டும் சேர்ந்து அவனை மிகுந்த மனவேதனைக்குள்ளாக்கியது; மனஉளைச்சல் அடைந்தான். ஒருநாள் மீண்டும் அவனுக்கு நல்ல ஒரு வேலை கிடைத்தது. வேறு இடத்தில் திருமணமும் ஆனது. நல்ல பக்தியுள்ள ஒரு மகள். கர்த்தருக்குப் பயப்படுகிற ஒரு மகள். மிகுந்த அன்பு கொண்ட ஒரு மகள். அப்போது தான் தெரிந்துகொண்டான்; முதலில் விரும்பிய பெண் நல்ல வசதி, நல்ல வேலை இருந்தவுடன் என்னை விரும்பினாள். கஷ்டம் வந்தவுடன், வேலை இல்லாதவுடன் என்னை விட்டு பின்வாங்கிவிட்டாள். வளமையுள்ளவர்களை வட்டமிடு கிறவள் என்ற உண்மை அவனுக்குத் தெரிந்தது. பெருங் காற்று அவனுடைய தவறான பாதையில் தேவன் செய்த குறுக்கீடு என்பதை புரிந்துக் கொண்டு கர்த்தருக்கு நன்றி செலுத்தினான்.

தம்முடைய பிள்ளைகளின் வாழ்க்கையில் தேவன் விசேஷ கரிசனையுடையவர். அவர்கள் தெரிந்து கொள்ளும் பாதை தவறாகயிருந்தால், அவர் கண்டுகொள்ளாம லிருப்பதில்லை. அந்தப் பாதையின் முடிவு அழிவு என்பதை

அவர் அறிந்திருப்பதால்; அவர் அவர்களுடைய வாழ்க்கை யில் குறுக்கிட்டு பெருங்காற்றை வரவிடுகிறார். அந்த குறுக்கீடுகள் மிகுந்த கசப்பானவையாகவும், மன விசனம் தருகிறவையாகவும் இருக்கும். ஆனாலும் அவைகள் நாம் அழிந்து போகாமலிருக்க தேவன் வரவிடும் நன்மைக்கேது வான காற்றுகளாகும்.

யோனா நினிவேக்குப் போகாமல் தர்ஷீசுக்குப் போக கப்பல் ஏறினான். யோனாவின் பாதை தவறானது என்பதைக் கண்ட தேவன், பார்த்துக் கொண்டு சும்மாயிருக்கவில்லை. பெருங்காற்றை அனுப்பி குறுக்கிட்டார். கர்த்தர் சமுத்தி ரத்தின் மேல் பெருங்காற்றை வரவிட்டார். அதினால் கடலிலே கப்பல் உடையுமென்று நினைக்கத்தக்க பெரிய கொந்தளிப்பு உண்டாயிற்று (யோனா 1:4). யோனா கசப்பான அனுபவங்களைக்காண நேர்ந்தது. ஆயினும் தேவசித்தத் திற்கு எதிராகப்போய் அழிந்து போகாமலிருக்க அது அவசியமாயிருந்தது.

ஒருவேளை நாம் சந்திக்கும் தடைகள் தேவனின் குறுக்கீடுகளாக இருக்கலாம். அந்த நேரம் நாம் நம்முடைய பாதையை ஆராய்ந்து பார்க்க வேண்டும். யோனா தேவனு டைய வார்த்தையை நிறைவேற்றாமல், அவருடைய சமுகத்தை விட்டு விலகி, தன் வழியேப் போனான். ஆனால் அவன் பயணம் செய்த கப்பல் அவனுடைய கீழ்ப்படியாமை யினிமித்தம் பெருங்காற்றினால் பாதிக்கப்பட்டது. நடக் கின்றக் காரியங்களைக் கண்டு உணர்ந்தான் யோனா.

அதனை தேவனுடைய தண்டனை என உணர்ந்தான். அங்கே அவன் அந்த தண்டனையை தன்னுடைய தவறினிமித்தம் வந்தது என்பதை ஒத்துக் கொண்டு மரிக்கத் தயாரானான். ஆயினும் தான் மனந்திரும்புவதற்கான ஒரு சூழ்நிலையை தேவன் உருவாக்கியுள்ளார் என்பதை அறியாமல் போனான்.

தேவனுடைய வார்த்தைகளுக்கும், ஆலோசனைகளுக்கும் உரிய மரியாதை செலுத்தாமல், நம்முடைய மனம் போதித்த வழியில் செல்லும்போது, சில காற்றுகளையும், பெருங்காற்றுகளையும் சந்திக்க வேண்டிய நிலை ஏற்படலாம். ஆயினும் அவைகள் தேவனுடைய தண்டனைகள் என்பதை விட நாம் மனந்திரும்புவதற்காக தேவன் ஏற்படுத்திய சூழ்நிலைகள் என்பதே சரியாகும். சில நெருக்கடியான விஷயங்களை அனுமதித்து, அதன் மூலம் நாம் நம்முடைய தவறுகளை உணர்ந்து மனந்திரும்புவதற்கான ஒரு சூழ்நிலையை உருவாக்குவது தேவனுடைய வழியாயிருக்கிறது. நாம் நம்முடைய தவறுகளின் பலனாக அழிந்து போகவேண்டும் என்பது தேவனுடைய சித்தமல்ல. ஆனால் அவர் அனுமதிக்கும் இக்கட்டான நிலைகளை உணர்ந்து, மனந்திரும்பி, அவருடைய ஆசீர்வாதங்களைப் பெறவேண்டும் என்பது அவருடைய சித்தமாயிருக்கிறது. காற்றுகளும், பெருங்காற்றுகளும் நம்மை வந்து தாக்கும் போது ஒரு வேளை எதிலிருந்தாவது நாம் மனந்திரும்பி அவரிடம் வர தேவன் அந்த சூழ்நிலையை உருவாக்குகிறார் என்று நாம் அறிந்துகொள்ளவேண்டும்.

மரங்களின் வலிமை பெருங்காற்று வீசும்போது தான்

தெரியும். அதுபோல குணநிலையில் கேடானவர்களோடு சம்பந்தப்பட வேண்டிய நிர்ப்பந்தநிலை வரும்போதுதான், நாம் நற்சுபாவ நிலையில் எந்த அளவு உறுதியாயிருக் கிறோம், வலிமையாயிருக்கிறோம் என்பது தெரியும். நாம் சில நேரம் கனி கொடுப்பதிலே மிகவும் குன்றியிருப்போம்; ஆனால் நாம் அதை உணர்வதில்லை. எனவே சில நேரங் களில் நம்மை நாம் அறிவதற்கும், சீர் செய்வதற்கும், வலிமை அடைவதற்கும் ஏதுவாக குணநிலையில் மோசமானவர் களை நம் பாதையில் வரவிடுகிறார். அது நமக்கு நல்லதே; அது நம்மை நற்குணங்களுக்கு நேராக வழிநடத்திச் செல்லும்.

சில மரங்களை பெருங்காற்றுகள் அதிகமாகத் தாக்கும்போது அவைகளின் வேர்கள் ஆழமாக பூமிக்குள் போய் உறுதிப்படுகின்றன. ஒவ்வொரு அசைவுகளும், அந்த மரங்களை பலவீனப்படுத்துவதற்குப் பதிலாக, அவைகள் மேலும் ஆழமாக வேரூன்றி பலப்படவே உதவி செய் கின்றன. நீதிமான் கேதுரு மரத்தைப்போல் வளருவான் என்று வேதம் சொல்கிறது (சங். 92:12). அவன் கர்த்தரால் நாட்டப்பட்டவன்; ஆனாலும் அவனுடைய வாழ்க்கையில் அவனை அசைக்கும்படி, அநேகம் உபத்திரவங்கள் வர வாய்ப்புகளுண்டு. அதே வேளையில் அங்கே அந்த அசைவுகள் அவனைப் பலவீனப்படுத்தி சாய்க்கமுடியாது; மாறாக கர்த்தருக்கள் அவனுடைய வேர்கள் ஆழமாகி அவன் எதையும் தாங்கிக்கொண்டு, ஓங்கி வளருகிற மரமாகி விடுகிறான்.

என்னுடைய வாழ்க்கையிலும்கூட எத்தனையோ பெருங்காற்றுகள் மோதியடித்தது. என்னை சாய்த்து விடும்படியாக என்னை வெட்கப்படுத்தி தலைகுனிய வைக்கும்படியாக, எத்தனை, எத்தனையோ கஷ்டங்கள், சோதனைகள், பாடுகள், நிந்தைகள், அவமானங்கள், போராட்டங்கள், சஞ்சலங்கள், வேதனைகள், வியாதிகள், கடன்தொல்லைகள் வந்தது. ஒருபக்கம் பிசாசின் மூலமாக வந்தது. மறுபக்கம் தீய மக்கள் மூலமாக வந்தது. ஆனாலும் ஒவ்வொரு நெருக்கங்களும், பாடுகளும், கஷ்டங்களும் தேவன் மீது வைத்திருக்கிற அன்பைவிட்டு பிரிக்க முடியவில்லை. பவுல் அடிகள் சொன்னது போல: கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ, மரணமோ, ஜீவனோ, தேவதூதர்களோ, அதிகாரங்களோ, வல்லமைகளோ, நிகழ்காரியங்களோ, வருங்காரியங்களோ, உயர்வோ, தாழ்வோ, வேறெந்த சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமுடியாது என்று நிச்சயித்திருக்கிறேன் என்றான். (ரோமர் **8:36,37,38**). மாறாக இன்னும் அவரை அதிகமாக அண்டிக்கொள்ளவும், அவருக்குப் பிரியமாக நடக்கவும் தூண்டப்பட்டேன். ஒவ்வொரு சோதனைகளும் கிறிஸ்துவண்டை என்னை நெருங்கச்செய்தது. அவரில் ஆழமாக வேரூன்றச்செய்தது. என்னைச் சீர்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி, நிலைநிறுத்தச்செய்தது.

கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மைத் தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராயிருக்கிற சகல கிருபையும் பொருந்திய தேவன்தாமே கொஞ்சக்காலம் பாடநுபவிக்கிற உங்களைச் சீர்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி நிலைநிறுத்துவாராக. (1 பேதுரு 5:10)

எனக்கன்பான சகோதர, சகோதரிகளே, தேவஜனமே உங்கள் வாழ்க்கையிலும் பல உபத்திரவங்கள், சோதனைகள் உங்களை அசைக்கும்படி வரலாம். சிலவேளை பிறரின் கொடியவார்த்தைகள், எரிச்சல் கலந்த விமரிசனங்கள், பலவித தோல்விகள், எதிர்பாராத ஏமாற்றங்கள் போன்றவை உங்கள் மேல் பெருங்காற்றுகளாய் மோதியடிக்கலாம்; ஆனாலும் உங்கள் வாழ்க்கை, கர்த்தருடன் ஐக்கியப்பட்டிருக்குமென்றால் இந்த அசைவுகள் உங்களை வீழ்த்த முடியாது. அதனால் கிறிஸ்துவுக்குள் உங்களின் வேர்கள் ஆழமாக இறங்கிக் கொண்டேயிருக்கும். பின்னாட்களில் அதனால் உருவாகிய அசைக்கப்பட முடியாத உறுதியையும், பலத்தையும் நீங்கள் காண்பீர்கள். யோசேப்பை துன்பங்கள் தொடர்ந்து வந்து அசைத்தன, தாவீதை சவுலின் கொடிய தாக்குதல்கள் அசைத்தன, முடிவு என்ன ? அவர்களுடைய வேர்கள் ஆழமாக தேவனுக்குள் சென்றன. ஒவ்வொரு அசைவிலும் ஒருபடி அதிகமாக உயர்ந்து பலப்பட்டார்கள். உண்மையான இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்றுக் கொண்டவர்கள் சோதனைகளை சந்திக்கநேரிடும் போதெல்லாம் தேவனை விட்டுத் தூரமாவதற்குப் பதிலாக, தேவனோடு அதிகமாக கிட்டிச் சேர்ந்துகொண்டிருப்பார்கள். உங்களுக்கும் அதுவே நிகழும்.

ஒரு வீட்டில் அருமையான பச்சைக்கிளி ஒன்றை ஒரு கூண்டில் போட்டு வளர்த்துவந்தார்கள். வீட்டில் உள்ள அனைவருக்கும் அதன் மீது அலாதி பிரியம். எல்லோரும் அதற்கு மாற்றி, மாற்றி உணவு கொடுப்பார்கள். தூக்கி வைத்துக் கொஞ்சுவார்கள், அதனுடன் பேசுவார்கள். கிளியும் அவர்களின் பெயர்களை எல்லாம் சொல்லி அழைக்கும். ஒருநாள் அது வழக்கம்போல வீட்டு முற்றத்தில் இருந்த தனது கூண்டில் இருந்தது. அப்போது அந்தப்பக்கமாகச் சென்று கொண்டிருந்த காகம் ஒன்று கூண்டை நெருங்கியது.

"கிளியே ஏன் கூண்டிற்குள் இருக்கிறாய் ?" என்று கேட்டது. "இதுதான் என்னுடைய வீடு" என்றது கிளி. "ஐயோ பாவம் உன்னை நினைத்து மிகவும் பரிதாபப்படுகிறேன்" என்றது, காகம். "ஏன் ? எதற்கு ?" என்று கேட்டது கிளி. "பின்னே, சுதந்தரம் இல்லாத வாழ்க்கை ஒரு வாழ்க்கையா ? வெளியே உலகம் எவ்வளவு பெரியதென்று நீ பார்த்திருக்கிறாயா ? நான் உல்லாசமாக சுற்றித் திரிகிறேன். நினைத்த இடத்தில் சாப்பிடுவேன். நினைத்த இடத்தில் உட்காருவேன். மேகம் வரை பறப்பேன், சந்தோஷமாக, ஜாலியாக இருப்பேன்" என்றது காகம். "நானும் சந்தோஷமாகத்தான் இருக்கிறேன்" என்றது கிளி. என்ன பெரிய சந்தோஷம் ? இந்த மனிதர்கள் தங்களின் சுயநலத்திற்காக உன்னை வளர்க்கிறார்கள்; ஒரு அடிமையைப் போல் உன்னை நடத்துகிறார்கள், உனக்கு அது புரியவில்லை. சரி எப்படியோ போ, எனக்கென்ன ? என்ற காகம் பறந்து விட்டது.

அன்று முதல் கிளியின் போக்கே மாறிவிட்டது. காகம் சொன்ன ஒவ்வொரு வார்த்தையும் கிளியின் மனதில் ஒலித்துக்கொண்டேயிருந்தது. கிளி சரியாகச் சாப்பிடுவதில்லை, யாரிடமும் பேசுவதில்லை தன்னைத் தானே நொந்து கொண்டது. இதனால் அதன் உடல்நிலை மோசம் அடைந்து கூண்டில் சுருண்டுப்படுத்தது. கிளியின் நிலைமையைப் பார்த்த எஜமானர் கிளியை மருத்துவரிடம் காட்டினார். மருத்துவரும் கிளியைப் பார்த்துவிட்டு இதற்கு ஒன்றுமே இல்லை, சற்று சோர்வாகக் காணப்படுகிறது. போகப்போக சரியாகி விடும் என்று சொல்லி அனுப்பிவிட்டார்கள்.

கிளி கூண்டில் சோகமாகவே இருந்தது. அங்கே வழக்கமாக வருகிற ஒரு அணில் இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்தது. ஒருநாள் அணில் கிளியை நெருங்கியது. "ஏய் கிளியே, உனக்கு என்ன ஆச்சு? ஏன் இப்படி சோர்வாக இருக்கிறாய்?" என்று அணில் கேட்டது. கிளி நடந்ததைச் சொன்னதும் அணில் சிரித்தது. 'எதுக்கு சிரிக்கிறே?' என்று கோபத்தோடு கேட்டது கிளி. "உன் பைத்தியக்காரச் செயலை நினைச்சா சிரிப்பு தான் வருது. உனக்கு சுதந்தரம் இல்லாதது நிஜம் தான். ஆனா உன் மேலே மனுஷர்கள் எவ்வளவு அன்பு காட்டுகிறாங்க, உனக்கு நேரத்துக்கு நேரம் ஆகாரம் தருகிறாங்க, உன்னோடு பேசுகிறாங்க, உனக்கு முடியவில்லை என்றதும் எவ்வளவு கரிசனையோடு உன்னை மருத்துவரிடம் அழைத்துச் செல்லுகிறாங்க. என்னையோ அல்லது அந்த காக்கையையோ முடியவில்லை என்றால் யாராவது

கவனிப்பார்களா? எங்களிடம் அன்புகாட்ட யாருமே இல்லை. உன்னை எவ்வளவாய் நேசிக்கிறார்கள். உனக்கு அழகான நிறமும், நல்ல குரலும் இருக்கு. ஆனா அந்த காகமோ கருப்பு, கட்டைக்குரல், சிலபேர் நம்மகிட்ட உள்ள குறைகளையே சுட்டிக்காட்டி கேலிசெய்வாங்க. அதைக் கேட்டு நாம் சோர்ந்து விடக்கூடாது; நம்மகிட்ட இருக்கிற நிறைவுகளை நினைச்சு சந்தோஷப்படணும், நம்ம மகிழ்ச்சியைக் கெடுக்கவே காகம் மாதிரி சிலபேர் இருப்பாங்க, அவங்க பேச்சை எல்லாம் சட்டையே செய்யக்கூடாது என்றது அணில்.

கிளிக்கு உண்மை புரிந்தது; அது வருத்தத்தை விட்டு மீண்டும் சந்தோஷமாக மாறியது. காகம் வெட்கப்பட்டுப் போனது.

நாமும் கர்த்தருக்காய் எழும்பும்போது, கர்த்தர் மீது அசைக்கமுடியாத நம்பிக்கை வைக்கும்போது, நம் குடும்பத்திலுள்ள குறைவுகளைப் பார்த்துப் பிசாசு சொல்லுவான்: நீ கர்த்தருக்காய் ஓடுகிறாயே? ஆலயம், ஆலயம், ஜெபக் கூட்டங்கள் என்று வேதத்தைத் தூக்கிக்கொண்டு ஓடுகிறாயே? ஒழுங்காக காணிக்கை கொடுக்கிறாயே? கர்த்தரை மனதாரத் துதிக்கிறாயே? உன் வீட்டில் உள்ள நிலைமையைப் பார்; உன் வீட்டில் எவ்வளவு கஷ்டம் என்று நம் குடும்பத்தில் உள்ள குறைவுகளைச் சொல்லி நமக்கு சோர்வைக் கொண்டு வருவான். இது பிசாசின் தந்திரம். ஆனால் ஆண்டவர் நம்மை அதிகமாக நேசிக்கிறார்

என்பதை மறந்து சிலநேரம் சோர்ந்து போகிறோம்; திரும்பவும் வேத வசனங்களைக் கேட்கும்போது நமக்குள்ளே தைரியம் வருகிறது. பிசாசின் தந்திரங் களோடு எதிர்த்து நின்று கர்த்தரை முழுமனதோடு ஆராதிப்போம். எப்பொழுதும் நம் வாயினால் கர்த்தரை ஸ்தோத்தரிப்போம். காகத்தைப் போல பிசாசு வெட்கப்பட்டுப் போவான்.

யோபுவும் இழப்புகள் மத்தியிலும் கர்த்தரை ஸ்தோத் தரித்தான். கர்த்தரை விட்டு பின்வாங்கவில்லை. கர்த்தரை விட்டு பின்வாங்கும்படியாய், அவனுடைய உத்தமத்தை அசைக்கும்படியாய், கர்த்தரை ஸ்தோத்தரிக்காதபடி, துதிக் காதபடி யோபுவுடைய வாழ்க்கையிலே பெருங்காற்றுகள் வீசியது. பெருங்காற்றுகள் மத்தியிலும் கர்த்தரை விட்டு பின்வாங்கவில்லை, கர்த்தரை முறுமுறுக்கவில்லை, கர்த்தரை குறை சொல்லவில்லை, மாறாக அதிகமாக ஸ்தோத்தரித்தான்; உத்தமத்தில் உறுதியாய் நின்றான். இதுதான் கிறிஸ்தவ வாழ்க்கை; சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளங்கின பின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம்பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான் (யாக். 1:12). யோபு சோதனைகளைச் சகித்தான்; உத்தம னென்று விளங்கினான். கர்த்தர் அவனை அப்படியே விட்டுவிடவில்லை. எதை, எதையெல்லாம் இழந்து போனானோ, அதையெல்லாம் இரண்டு மடங்காகத் திரும்பக் கொடுத்தார். அவன் முன்னிலைமையைப்

பார்க்கிலும், அவன் பின்னிலைமையை ஆசீர்வதித்தார் (யோபு 42:10,12). யோபு நெடுநாளிலிருந்து, பூரண வயதுள்ளவனாய் மரித்தான் (யோபு 42:17).

நாமும் பெருங்காற்று போன்ற சோதனைகள் மத்தியிலும், இழப்புகள் மத்தியிலும் கர்த்தரை அதிகமாகத் துதிப்போம்; இரட்டிப்பான ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வோமாக.

4. எதிர்காற்று

அவ்விடம்விட்டு நாங்கள் புறப்பட்டு, எதிர்காற்றா யிருந்தபடியினால், சீப்புரு தீவின் ஒதுக்கிலே ஓடினோம். (அப். 27:4)

பவுலும், அவனைச் சேர்ந்தவர்களும் ஆண்டவ–ருடைய ஊழியத்தைச் செய்யும்படியாய் “அதிரமித்தியம்” ஊர் கப்பலில் ஏறி, இத்தாலியா தேசத்துக்குப் போகும் படியாய் புறப்பட்டார்கள். கப்பலிலே பிரயாணப்பட்டுப் போகும்போது எதிர்காற்று பலமாய் வீசியதால், மாலுமிக்கு கப்பல் ஓட்டுவதற்கு கடினமாயிருந்தது. மேலும் பிரயா ணத்தை தொடர்ந்து செல்ல காற்று இவர்களுக்கு தடையா யிருந்தது. (அப். 27:7) கப்பல் மெதுவாய் சென்றது. எல்லோரும் கிரேத்தா தீவிலே கரை ஒதுங்கினார்கள்.

இதற்கு முன் ஒரு காரியத்தைப் பார்த்தோம். யோபு வுடைய வாழ்க்கையிலே ஆண்டவரைத் துதிக்கவிடாதபடி, அவன் கர்த்தர் மீது வைத்த நம்பிக்கையை அசைக்கும் படியாய் ஒரு பெருங்காற்று வீசியது. யோபுவை பெருங் காற்று அசைக்கமுடியவில்லை. இந்த இடத்திலே பார்க் கிறோம்; யார் வாழ்க்கையிலே காற்று வீசியது தெரியுமா? பவுல் வாழ்க்கையிலே; என்ன காற்று தெரியுமா? எதிர் காற்று. எதற்காக எதிர்காற்று வீசியது தெரியுமா? ஆண்டவ ருடைய ஊழியத்தைச் செய்யவிடாதபடி அவனைத் தடுத்து நிறுத்தும்படியாக எதிர்காற்று வீசியது.

மீன் தண்ணீரில் எதிர் நீச்சல் போட்டு முன்னேறுவதுப் போல், பவுலும் வாழ்க்கையில் ஏற்பட்ட, ஊழியத்தில் ஏற்பட்ட எதிர்காற்றோடு எதிர்நீச்சல் போடுகிறான். இதுதான் கிறிஸ்தவ வாழ்க்கை. கிறிஸ்தவ வாழ்க்கை என்பது எதிர் நீச்சல் போடுவதுதான். மீன் ஒரு நாளும் எதிரிட்டு வரும் தண்ணீரில் தோற்றுப் போவதேஇல்லை; முன்னோக்கிச் செல்லும், செத்த மீன்கள் தான் எதிரிட்டு வரும் தண்ணீரில் அடித்துச்செல்லப்படும். அதுபோல தான் நமக்கு வரும் எதிர்காற்றைப் போன்ற பிரச்சனைகளைப் பார்த்து நாம் பின் வாங்கிப் போகக்கூடாது. அந்தப் பிரச்சனைகளோடு எதிர் நீச்சல் போட்டு வெற்றிபெறவேண்டும்.

இந்த உலகத்தில் 3½ வருட காலமாய் மக்களின் கண்ணீரைத் துடைத்து, மரித்தோரை உயிரோடெழுப்பி, குருடருக்குப் பார்வைகொடுத்து, சப்பாணியை நடக்கச் செய்து, குஷ்டரோகிகளைச் சொஸ்தமாக்கி, பேச முடியாத ஊமையனை பேச வைத்து, படுக்கையிலிருந்த திமிர்வாதக் காரனை நடக்க வைத்து, பிசாசு பிடித்த மக்களுக்கு பிசாசை விரட்டி, பசியோடு இருந்த மக்களின் பசியை ஆற்றி, பாவக்குழிக்குள் கிடந்த மக்களை தூக்கியெடுத்து நன்மை செய்த இயேசுவுடைய வாழ்க்கையிலும் கூட ஒரு எதிர் காற்று வீசியது. இவரை இப்படியே விட்டுவிட்டால் எல்லா மக்களும் இவர்பின் சென்றுவிடுவார்கள். இவரைப் பிடித்து கொலைசெய்ய வேண்டும் என்று திட்டம் தீட்டினார்கள். இயேசுவைப் பிடித்து, அடித்து சிலுவையில் அறைந்தார்கள். இயேசு மரித்தார், மரித்த இயேசு யூதராஜ சிங்கமாக

மூன்றாம் நாள் உயிரோடு எழுந்தார். எதிர்காற்று அவரை வீழ்த்த முடியவில்லை. மாறாக எதிர்காற்றோடு போராடி ஜெயம் எடுத்தார். மரித்த இயேசு உயிர்த்து விட்டார், மன்னன் இயேசு இன்றும் ஜீவிக்கிறார், மரணம் அவரைத் தடுத்து நிறுத்த முடியவில்லை; யூதராஜ சிங்கம் வெற்றி பெற்றார். எதிர்காற்றோடு போராடி சோர்ந்துபோன மகனே, மகளே நீ துள்ளிப் பாடிடு. இயேசு உயிரோடிருக்கிறார், இயேசு உன்னோடிருக்கிறார், இயேசு உன் பக்கத்தில் உனக்குத் துணையாக இருக்கிறார். எதிர்காற்றைப் போன்ற பிரச்சனைகளைக் கண்டு பயப்படாதே.

ஒரு ஆவிக்குரிய கிறிஸ்தவ குடும்பத்தினர் தங்கள் அண்டை வீட்டில் நல்ல பண்பும், அன்பும் உள்ள ஒரு குடும்பத்தினர் வந்து குடியேற வேண்டும் என ஆசைப்பட்டனர். அதற்கு மிகுதியாக ஜெபிக்கவும் செய்தனர். ஆனால் அந்த வீட்டில் குடியிருக்க வந்த குடும்பத்தினரோ எளிதாக கோபமடைகிறவர்களாகவும், பொறாமை உணர்வு மிகுந்தவர்களாகவும், காரணமில்லாமல் பிறருக்கு கஷ்டம் கொடுக்கும் சிந்தையுடையவர்களாகவும் இருந்தனர். தாங்கள் எதிர்பார்த்ததற்கு எதிராக சண்டைக் கோழிகளான ஒரு குடும்பத்தார் குடியிருக்க வந்ததில் அவர்களுக்கு மிகுந்த மனவேதனை உண்டு.

அவர்களோடு பிரச்சனையோ, சண்டையோ, மனக்கசப்போ, ஏற்படாமலிருக்க அவர்கள் மிகுந்த பிரயாசம் எடுக்க வேண்டியதாயிருந்தது. ஆயினும் தங்களுடைய கிறிஸ்தவ சாட்சி கெட்டுப் போய்விடக்கூடாது என்ற

ஆர்வத்தில் அவர்கள் ஒவ்வொரு நாளும் மிகுந்த பொறுமையோடும், தாழ்மையோடும், சாந்தத்தோடும் நடந்துக் கொண்டனர். காலப்போக்கில் இது அவர்களுக்கு மன திருப்தி தரக்கூடிய நல்ல அனுபவமாக மாறிவிட்டது. ஒரு எதிர்மாறான குணம் படைத்த அண்டை வீட்டாரை தேவன் அனுமதித்ததின் விளைவாக, தங்களின் ஆவிக்குரிய பண்புநிலைகள், குணநிலைக்ள் நாளுக்கு நாள் வளர்ந்ததை அவர்களால் உணர முடிந்தது.

மரங்களின் வலிமை பெருங்காற்று வீசும்போது தான் தெரியும். எதிர்காற்றுகள் வேகமாக வீசும்போது தான் கப்பலின் எதிர்கொள்ளும் சக்தி எவ்வளவு என்பது தெரியும். குணநிலையில் கேடானவர்களோடு சம்மந்தப்பட வேண்டிய நிர்ப்பந்த நிலைகள் வரும்போதுதான் நாம், நற்சுபாவ நிலையில் எவ்வளவு வலிமையாயிருக்கின்றோம் என்பது வெளியே தெரிய முடியும். சில நேரம் நாம் தாழ்மை, சாந்தம், மனபக்குவம், பொறுமை ஆகிய குணநிலைகளில் நாம் மிகவும் குன்றியிருப்போம். ஆனால் அதை நாம் உணர்வ தில்லை. எனவே சில நேரங்களில் நம்மை நாம் அறிவதற்கும், சீர் செய்வதற்கும், வலிமை அடைவதற்கும் ஏதுவாகக் குண நிலையில் மோசமானவர்களை நம் பாதையில் தேவன் வர விடுகிறார். அது நமக்கு நல்லதே; சோதனைகளை ஜெயிக்கப் பழகவும், நற்குணங்களுக்காக ஒரு ஆவிக்குரிய போராட் டத்தைப் போராடவும் அது நமக்கு உதவி செய்யும். சில எதிர்காற்று போன்ற சூழ்நிலைகளை தேவன் நம் வாழ்க்கை யில் அனுமதிக்கிறார். தேவனைச் சார்ந்துநிற்க பழகிக்

கொண்டவனை எதிர்காற்றுகள் சோர்ந்துபோகவோ, பின் வாங்கிப் போகவோ செய்யமுடியாது.

நாம் உண்மையிலே தேவனுடைய பிள்ளைகளாயிருந் தால், மனிதர்களால் வரும் எதிர்காற்று போன்ற பிரச்சனை கள் தேவனுடைய அதிக ஆதரவைப்பெறவே வழி வகுக்கும். மனிதர்களால் நமக்கு ஏற்படும் தாழ்வுகள், தேவனால் நமக்கு உயர்வுகள் வருவதற்கே வழி வகுக்கும். மனிதர்களால் வரும் இடையூறுகள் தேவன் நம்முடைய வாழ்க்கையில் அதிகமாக இடைபடுவதற்கே காரணமாகும்.

இதுவே யோசேப்பின் வாழ்வில் நிகழ்ந்தது. அவனு டைய சகோதரர்கள் பொறாமையினாலும், எரிச்சலினாலும் சொந்த தகப்பனை விட்டும், வாழ்ந்த ஊரை விட்டும் அப்புறப்படுத்தினார்கள். ஆனால் அதன் விளைவாக அவன் தேவனுக்கு மிகவும் அருகில் வரவும், தேவனால் பக்குவப் படவும் நல்லவழிஏற்பட்டது. அவனுடைய சகோதரர்களால் அவன் துரத்தப்பட்டப்போதிலும், தேவ னுடைய ஆசீர்வாதத் திட்டத்திற்கு நேராக அவன் நெருங்கி வரவே அது வழிவகுத்தது. மனிதர்களின் சதியினால் அவன் சிறைவாசம் அடைந்தான். ஆனால் அந்த சிறைவாசத்தை உபயோகித்து தான் தேவன் அவனை உயர்ந்த ஒரு பதவிக்கு கொண்டு வந்தார்.

மொத்தத்தில் யோசேப்புக்கு எதிராக எழும்பிய எதிர் காற்றுகளின் வழியாகத்தான், தேவன் அவனுடைய வாழ்க்கையை, அவர் தீர்மானித்திருந்த திட்டத்திற்கு

நேராகக் கொண்டு சென்றார். ஆம், தேவன் மேல் நம்முடைய அன்பு உறுதியாயிருந்தால், மனிதர்கள் நம்மேல் காண்பிக் கின்ற வெறுப்புகளாலும், செய்கின்ற தீவினைகளாலும், நாம் நஷ்டப்படுவதற்குப் பதிலாக, தேவனால் மிகுந்த ஆதாயங் களையும் அடைவோம். சில நேரங்களில் நமக்கு சாதகமாக வீசுகின்ற காற்றுகள் நம்மை தவறான திசைகளுக்கு நேராகக் கொண்டுபோய்விடுகிறது. எனவே தேவன் பல வேளைகளில் நமக்கு எதிராக வீசுகின்ற காற்றுகளை தடை செய்வதில்லை. ஆனால் அவைகளைக் கொண்டு நம்மை அவர் விரும்பும் திசைகளுக்கு நேராக போகவைக்கின்றார். இதுதான் உண்மை.

தாவீதின் வாழ்க்கையில் கோலியாத்தை வீழ்த்தி வெற்றி கண்ட பிறகு எதிர்காற்றுகள் வீச ஆரம்பித்தது. சவுலின் கோபமும், பொறாமையும், எரிச்சலும் எதிர்காற்றுகளாக வீசி அவனுடைய வாழ்க்கையை எங்கேயோ கொண்டுசென்றது. சவுலின் நடவடிக்கைகளை தேவன் தடைசெய்து தாவீ துக்கு உடனடியாக ஒரு சுமூக சூழ்நிலையைக் கொடுக்க வில்லை. தாவீதுக்கு அந்த எதிர்காற்றுகள் தேவையா யிருந்ததை தேவன் கண்டார். ஒருவேளை சவுல் தாவீதிடம் சுமூகமாக போயிருந்தால் அவன் ஒரு தளபதி நிலைக்கு வரமுடியுமேயன்றி, தேவ திட்டத்தின்படியாக ராஜா என்ற நிலைக்கு வரமுடியாது. தேவ அன்பின் அனலில் வாழப் பழகினவனை உலகத்தின் எதிர்காற்றுகள் ஒன்றும் செய்வ தில்லை. தாவீது உன்னத நிலைக்கு உயர்த்தப்பட்டான்.

எதிர்காற்று போன்ற பிரச்சனைகள் நம் வாழ்க்கையில் வரும்போது நமக்கு முதலாவது வருவது பயம். "நான் பயந்த காரியம் எனக்கு நேரிட்டது; நான் அஞ்சினது எனக்கு வந்தது" (யோபு 3:25) என்று யோபு சொல்லுகிறான்.

"பயம்" என்பது சாத்தான் நம்மைத் தாக்கும் ஒரு பயங்கரமான ஆயுதம். சாத்தான் பயத்தை உண்டாக்கி, கலக்கத்தை ஏற்படுத்துவான். நாம் கர்த்தருடைய நாமத்தினால் அதட்டினால் ஓடிப்போவான். நாம் பயங்களினால் தவிப்போம் என்றால் அவன் பெருமிதம்கொண்டு, தான் செய்ய நினைக்கிற காரியத்தைச் செய்ய ஆரம்பிப்பான்; இன்னும் அதிகமான பயத்தை உண்டாக்குவான்.

வல்லமையாய் ஊழியம் செய்கிற தேவனுடைய ஊழியர் ஒருவர் இருந்தார். திடீரென்று அவருக்கு எதிர்பாராதவிதமாக வியாதியும், போராட்டமும் வந்தது; மரண இருள் சூழ்ந்து கொண்டது. கர்த்தருக்காய் வைராக்கியமாய் ஊழியம் செய்தவர்; தன்னுடைய வியாதியைக் கண்டு அஞ்சவில்லை. மரண போராட்டத்தைக் கண்டு கொஞ்சங்கூட கலங்கவில்லை, சோர்ந்துபோகவில்லை. மரணத்தோடு போராடிக் கொண்டிருக்கிற அந்த இரவில் திடீரென்று தரிசனம் ஒன்றைக் கண்டார்.

ஒரு பயங்கரமான பள்ளத்தாக்கை அவர் கடக்க வேண்டியிருந்தது. அந்த பள்ளத்தாக்கிற்குள் பயங்கரமான கறுத்த உருவமுள்ள பிசாசுகள் அலறிக் கொண்டு இருந்தன. அவர் அந்த இடத்தின் அருகில் வந்தவுடன் வா, வா, உள்ளே

வா; உன்னுடைய இரத்தத்தைக் குடிக்க வேண்டும். நீ எனக்குச் சேர வேண்டிய அநேக மக்களை பரலோகத்திற்கு கொண்டுபோய்விட்டாய். உன்னைப் பழி வாங்காமல் விடமாட்டேன் என்று சொல்லி பிசாசுகள் அலறிக் கொண்டே இருந்தன. அந்த பாதாள பள்ளத்தாக்கையும். அதிலிருந்த கறுத்த உருவத்தையுடைய பயங்கரமான அசுத்த ஆவி களையும் கண்டபோது, அந்த பக்தனுடைய உள்ளம் சற்று தடுமாறியது. ஆனால் அந்த நேரத்தில் பிரகாசமான ஆணி பாய்ந்த பெரியகரம் இரண்டு பள்ளத்தாக்குகளுக்கும் இடையே பலமாக வந்து அமர்ந்தது. அந்த கரத்தின் மேல் அந்த பக்தன் மகிழ்ச்சியோடு ஏறி நடந்து பள்ளத்தாக்கை கடந்தார்.

முடிவில் கர்த்தர் அவரோடு பேசி நீ எதைக் கண்டும் பயப்படாதே. சூழ்நிலைகளைப் பார்த்து, வியாதியைப் பார்த்து, மரண இருளைப் பார்த்து, பிசாசைப் பார்த்து பயப் படாதே. என்கரம் உன்னோடு கூட எப்போதும் இருக்கும். நீ முன்னோக்கி, முன்னேறிச் செல்; பின்னிட்டுப் பாராதே, மறுநிமிடம் அந்த தரிசனம் மறைந்தது. அந்தப் பக்தன் பூரண சுகத்தைப் பெற்றுக்கொண்டார். மறுபடியுமாக கர்த்தருக் காக ஊழியம் செய்தார். கணக்கற்ற மக்களை கிறிஸ்து வுக்குள் வழிநடத்தினார். பிசாசின் எதிர்ப்புகள் அவரை வீழ்த்த முடியவில்லை.

தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார். (2 தீமோத். 1:7)

நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகை யாதே, நான் உன் தேவன்; நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம்பண்ணுவேன்; என் நீதியின் வலது கரத்தினால் உன்னைத் தாங்குவேன். (ஏசா. 41:10)

உன் தேவனாயிருக்கிற கர்த்தராகிய நான் உன் வலது கையைப் பிடித்து : பயப்படாதே, நான் உனக்குத் துணை நிற்கிறேன் என்று சொல்லுகிறேன் (ஏசா. 41:13) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பவுலின் கப்பல் பிரயாணத்தில் ஏற்பட்ட எதிர்காற்றைப் பார்த்து பவுல், ஆண்டவருடைய ஊழியத்தை இனி செய்ய மாட்டேன் என்று பின்வாங்கிப் போகவில்லை. எந்த எதிர் காற்றும் அவனைத் தடுத்து நிறுத்தமுடியவில்லை. அவன் கலக்கமடையவுமில்லை. கலக்கங்கள் மத்தியில் கர்த்தர் அற்புதங்களைச் செய்வார் என பவுலுக்குத் தெரியும். கலக்கங்கள் தேவனுடைய வல்லமை வெளிப்படுவதற்கு வாய்க்காலாக அமையும் என்பதை பவுல் அறிந்திருந்தான்.

உன் வாழ்க்கையில் ஏதோ ஒரு கலக்கம் வந்து நீ கலங்கிக் கொண்டிருக்கிறாயென்றால், கர்த்தர் நிச்சய மாகவே ஒரு மகிமையான காரியத்தை உன்னில் செய்யப் போகிறார் என்பதுதான் அர்த்தம். எனவே, உங்களை கலக்கிக்கொண்டிருக்கின்ற எதிர்காற்றுகளைப் பார்த்து கலங்காதேயுங்கள், திடன்கொள்ளுங்கள்.

எருசலேமிலே பெதஸ்தா என்னப்பட்ட ஒரு குளம் ஆட்டு வாசலின் அருகே இருந்தது. அவைகளில்

குருடர், சப்பாணிகள், சூம்பின உறுப்புடையவர்கள் முதலான வியாதிக்காரர் அநேகர் படுத்திருந்து, தண்ணீர் எப்பொழுது கலங்கும் என்று காத்துக் கொண்டிருப்பார்கள். (யோவா. 5:2)

நன்றாய் கவனியுங்கள். தண்ணீர் கலங்காதா என்று காத்துக்கொண்டிருப்பார்களாம். பொதுவாக கலங்குகிற தண்ணீரை யாரும் விரும்புவதில்லை. கலங்கிப் போய் இருக்கிற தண்ணீரை ஆடு, மாடுகள் கூட பருகவராது. ஆனால் பெதஸ்தா குளத்தண்டை வியாதியாய்ப் படுத் திருந்த வியாதியஸ்தருக்கு தண்ணீர் கலங்கும்போது ஒரு பெரிய சந்தோஷம்! ஒரு பெரிய ஆனந்தம்! ஒரு பெரிய எதிர் பார்ப்பு! ஒரு பெரிய நம்பிக்கை! காரணம், அற்புதம் நிகழப் போகிறது என்பதை உடனே அவர்கள் அறிந்துகொள்வார் கள். "தண்ணீர் கலங்கும் போது முதலில் இறங்குகிறவன் எப்பேர்ப்பட்ட வியாதியஸ்தனாயிருந்தாலும் அவன் சொஸ்தமாவான்." (யோவா. 5:4)

இதுதான் வேதம் நமக்குக் கற்றுத்தரும் ஒரு பெரிய ஆவிக்குரிய இரகசியம். கலக்கத்தின் மத்தியில் கர்த்தரின் வல்லமை, வெளிப்படுகிறது. கலக்கத்தின் மத்தியில் கர்த்தரின் கரம் இறங்கி வந்து அற்புதம் செய்கிறது. அல்லேலூயா!

பழைய ஏற்பாட்டில் ஒரு சம்பவத்தை வாசித்துப் பாருங்கள். இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்திலிருந்து வெளியே புறப்பட்டபோது ஒரு பயங்கரமான கலக்கம் அவர்களை ஆட்

கொண்டது. காரணம், முன்னால் சிவந்த சமுத்திரம், பின்னால், பார்வோனுடைய சேனைகளும், இரதங்களும், குதிரைகளும், இருபுறமும் உயரமான மலை, எல்லாப் பக்கங்களும் நெருக்கம். முன் சென்றால் கடலில் விழுந்து மரிக்க வேண்டும். பின்னால் திரும்பினால் பார்வோனின் பட்டயத்திற்கு இரையாக வேண்டும். எங்கே செல்வார்கள்? எவ்வளவு கலங்கியிருப்பார்கள் என்று சிந்தித்துப் பாருங்கள்.

ஆனால் மோசே கலங்கவில்லை. கலங்க வைக்கும் சூழ்நிலைகள், பயமுறுத்தும் சூழ்நிலைகள் மத்தியிலும் கர்த்தர் ஒரு அற்புதத்தைச் செய்வார் என்று அவன் அறிந்திருந்தான். ஆகவே மோசே ஜனங்களை நோக்கி: "பயப்படாதிருங்கள்; நீங்கள் நின்றுகொண்டு இன்றைக்குக் கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்; இன்றைக்கு நீங்கள் காண்கிற எகிப்தியரை இனி என்றைக்கும் காணமாட்டீர்கள். கர்த்தர் உங்களுக்காக யுத்தம்பண்ணுவார்; நீங்கள் சும்மாயிருப்பீர்கள்" என்றான். (யாத். 14:13,14)

அப்படியே கர்த்தர் இஸ்ரவேலருக்காக யுத்தம் செய்து பார்வோனையும், அவன் சேனைகளையும், சிவந்த சமுத்திரத்திலே தள்ளிப் போட்டார்.

கர்த்தர் நம்முடைய வாழ்க்கையில் சில சோதனைகளையும், போராட்டங்களையும் அனுமதிக்கிறாரென்றால் அவைகள் மூலம் நம்மைப் பலப்படுத்தத்தானேயன்றி, நம்மை பலவீனப்படுத்த அல்ல. சில எதிர்மாறான காற்றுகள் நமக்கு எதிராக வீசும்போது தான் தேவபலத்தை அதிகமாகத் தேடி,

நம்மை பலப்படுத்திக் கொள்ளும் விழிப்புணர்வை நாம் அடையமுடியும். அப்பொழுது தான் நம்முடைய இறை நம்பிக்கை, விசுவாசம், தேவ ஐக்கியம், ஜெபம் ஆகியவை வலுவடைந்து எந்தச் சூழ்நிலையையும் தைரியமாக சந்திக்கத்தக்க ஆயத்தத்தோடு செயல்படமுடிகின்றது. தாவீது எந்த அளவிற்கு சோதனைகளால் சூழப்பட்டிருந் தானோ, அந்த அளவிற்கு அவன் பலத்தின் மேல் பலமடை கிறவனாக மாறினான். சோதனைகளின் பெருக்கம் தேவ உறவின் நிலையையும் பெருகச்செய்து, அவனை மிகுந்த பலமுடையவனாக மாற்றியது.

அருமையான தேவபிள்ளைகளே, சூழ்நிலைகளைப் பார்த்து கலங்காதேயுங்கள். கலக்கத்தை மாற்றுகிற கர்த்தர் உன்னோடு கூட இருக்கிறார். "உனக்கு விரோதமாக உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதே போகும்". உனக்கு விரோதமாய் ஒரு வழியாய் வருகிறவர்கள், ஏழு வழியாய் ஓடிப்போவார்கள். உங்கள் உள்ளம் கலங்காமல் கர்த்தரையே சார்ந்து கொள்ளட்டும்.

5. கடுங்காற்று

கொஞ்சநேரத்துக்குள்ளே யூரோக்கிலிதோன் என்னுங் கடுங்காற்று அதில் மோதிற்று. (அப். 27:14)

பவுலின் வாழ்க்கையிலே முதலாவது ஒரு எதிர்காற்று வீசினது. இப்போது ஒரு காற்று வீசுகிறது. அது என்ன காற்று தெரியுமா ? கடுங்காற்று. இந்த கடுங்காற்றின் பெயர் என்ன தெரியுமா ? யுரோக்கிலிதோன்.

2004–ம் ஆண்டு டிசம்பர் 26–ம் தேதி ஒரு பெரிய கடல் அலை வீசியது. அதில் கணநேரத்தில் லட்சக்கணக் கானோர் அழிந்துபோனார்கள். அந்த இராட்சத அலைக்கு "சுனாமி" என்று பெயர் வைத்தார்கள். அதுபோல பவுல் வாழ்க்கையில் ஏற்பட்ட கடுங்காற்றுக்கு "யூரோக்கிலிதோன்" என்று பெயர்.

சில நேரங்களில் 'பட்ட காலிலே படும்; கெட்ட குடியே கெடும்' என்ற ரீதியாகக் காரியங்கள் நடக்கலாம். திரும்பத் திரும்ப துன்பப்புயல்கள் தாக்கி வாழ்க்கையை நிலை குலையச் செய்யலாம். ஆனால் அவைகளுக்குப் பின்னரும் ஒரு இளந்தென்றல் வீசும் சூழ்நிலை வராமல் போய் விடுவதில்லை.

ரோமாபுரியை நோக்கி பவுல் பிரயாணம் செய்த கப்பல் தொடர்ந்து பல நாட்கள் எதிர்காற்றுகளால் தாக்கப்பட்டும், தடுக்கப்பட்டும் போராடிக்கொண்டேசென்றது. சில

நாட்களுக்குப் பிறகு பெருங்காற்றுகள் தென்றலாய் மாறி வீசவே, மீண்டும் பயணம் சுகமாய் தொடர்ந்தது. ஆபத்துகள் அகன்றுவிட்டது. இனி சுகமாய்ப் பயணிக்கலாம் என எல்லோரும் நிம்மதியாய் பெருமூச்சுவிட்டனர். ஆனால் அவர்களின் நம்பிக்கையாவும் தவிடு பொடியாகத்தக்க தாக, கொஞ்சநேரத்திற்குள், முன்னரை விட பயங்கரமான யூரோக்கிலிதோன் என்னுங் கடுங்காற்று அவர்களைத் திக்குமுக்காடச்செய்தது.

வாழ்க்கையிலும் சிலவேளை இப்படிதான் நிகழுகிறது. நீண்டகால கஷ்டங்கள், நஷ்டங்களுக்குப் பின்னால் சற்று சவுகரியமான ஒரு சூழ்நிலை அமையும். சற்று மன நிம்மதியோடு இனி வருவது நல்ல நாட்களே என்று முன்னே றும்போது, மீண்டும் ஏதோ ஒரு வடிவத்தில் சோதனைக் காற்றுகள் தாக்கி நம்பிக்கைகளை நாசமாக்கிவிடுகிறது. மனமோ இனி ஏது எதிர்காலம் என்று சோர்ந்துபோய் சலிப்படைகிறது. ஆனால் புயல், அமைதி, புயல் அமைதி என சில விஷயங்கள் திரும்பத் திரும்ப தொடர்ந்து வருவதால் இனி நலமான ஒரு சூழ்நிலை அமையாது என எண்ணி விடக்கூடாது. அடங்கி அகன்ற புயல் மறுபடியும் வந்து விட்டதால் இனி இளைப்பாறுதல் இல்லை என்று நினைத்து விடக்கூடாது. தேவன் மேல் உறுதியான விசுவாசமும், உண்மையும், பரிசுத்தமுமான வாழ்க்கையும் இருக்கு மானால் நிச்சயம் நலமான நாட்கள் மீண்டும் வரவே செய்யும்.

சகோதரர்களின் துரோகத்தால், அன்னிய தேசத்தில் அடிமையாகி அநேக இன்னல்களைச் சந்தித்த யோசேப்புக்கு,

போத்திபாரின் வீடு இளைப்பாறுதலின் இடமாக மாறியது. ஆனால் சில நாட்களில் முன்னரைவிடக்கொடிய துயர்கள் அவனைப் பரிதாப நிலையில் தள்ளியது. ஆனால் உண்மையும், தேவபக்தியையும் விடாத அவன், ஒருநாள் எதிர்பாராத அளவிற்கு மிகுந்த உன்னத நிலைக்கு உயர்த்தப்பட்டான்.

பவுல் கப்பலில் பிரயாணப்பட்டுப் போகும்போது கூடவே ஜனங்களும் பிரயாணப்பட்டுச் செல்லுகிறார்கள். கப்பலில் போகும்போது அநேக நாளாய், பெருங்காற்றும், மழையும் அடித்துக்கொண்டிருந்தபடியினால் கப்பலை காற்று அடித்துச் செல்கிறது. எங்கு கப்பல் செல்கிறது என்று தெரியவில்லை. கப்பலில் இருந்த ஜனங்களுக்கு தப்பிப் பிழைப்போம் என்கிற நம்பிக்கை அற்றுப் போயிற்று. கப்பலில் இருந்த சரக்குகளை எல்லாம் கடலிலே தூக்கி எறிந்தார்கள். காற்று அடிக்கிற திசையிலே கப்பல் போய்க்கொண்டிருக்கிறது. ஜனங்கள் எல்லாரும் உயிர்பிழைப்போம் என்கிற நம்பிக்கை அற்ற நிலையில் இருக்கிறார்கள். ஜனங்கள் சாப்பிட்டு அநேக நாள் ஆயிற்று. ஆனால் அந்த நேரத்திலும் பவுலின் தைரியத்தைப் பாருங்கள். பவுல் அவர்கள் நடுவிலே நின்று: நீங்கள் திடமனதாயிருங்கள்; நான் உங்களுக்குத் தைரியஞ்சொல்லுகிறேன், கப்பல் சேதம் வரும், ஆனால் உங்களில் ஒருவனுக்கும் உயிர்சேதம் வராது என்றான். காரணம் என்னவென்றால், அந்த காரணம்; அவரை ருசித்த அவருடைய அன்பை ருசிபார்த்த எனக்குதான் தெரியும். என்னை ஆட்கொண்டவரும், நான் சேவிக்கிறவருமான கர்த்தருடைய தூதன் இந்த ராத்திரியில் என்னிடத்தில்

வந்து: "பவுலே", என்று கூப்பிட்டு என்னிடத்தில் என்ன சொன்னார் தெரியுமா? பவுலே, நீ பயப்படாதே, நீ போகிற இடம் தெரியும். நீ இராயனுக்கு முன்பாக போய்நிற்க வேண்டும். உன்னோடு கூட யாத்திரைபண்ணுகிற யாவரையும் தேவன் உனக்குத் தயவுபண்ணுவார். "ஆனபடியினால் மனுஷரே, திடமனதாயிருங் கள்" (அப். 27:23–25). எனக்குச் சொல்லப்பட்ட பிரகாரம் நடக்கும். என் தேவன் இல்லாதவை களை இருப்பவைகளைப்போல மாற்றுகிறவர். நடக்காத வைகளை நடக்க வைப்பவர். "நடக்கும்" என்று தேவனி டத்தில், அவருடைய வார்த்தையின் மீது நம்பிக்கை வைத்தான்.

கப்பலில் இருந்த மக்கள் யார் மீது நம்பிக்கை வைத் தார்கள் தெரியுமா?

கப்பல் மாலுமியையும், கப்பல் எஜமானையும் அதிகமாய் நம்பினார்கள். (அப். 27:11)

நாசியிலே சுவாசமுள்ள மனுஷனை நம்பாதே. மனுஷன் மேல் நம்பிக்கைவைத்து, கர்த்தரை விட்டு விலகுகிற இருதயமுள்ள மனுஷன் சபிக்கப்பட்டவன் (எரே. 17:5) என்று வசனம் சொல்லுகிறது.

பவுல் ஜனங்களைப் பார்த்து: நீங்கள் போஜனம் பண்ணுங்கள். நீங்கள் பதினாலுநாளாய் ஒன்றும் சாப்பிடா மல் பட்டினியாய் இருக்கிறீர்கள். நீங்கள் தப்பிப் பிழைப் பதற்கு அது உதவியாயிருக்கும். உங்கள் தலையிலிருந்து

ஒரு மயிரும் விழாது என்றான். பவுல் அப்பத்தை எடுத்து, தேவனை ஸ்தோத்தரித்து, அதைப் பிட்டுப் புசிக்கத் தொடங்கினான். எல்லோரும் திடமனப்பட்டுப் புசித்தார்கள். கப்பலில் இருநூற்றெழுபத்தாறு பேர் இருந்தார்கள். திருப்தி யாக எல்லோரும் அப்பத்தைப் புசித்தார்கள். பொழுது விடிந்த பின்பு ஒரு துறைமுகம் அவர்களுக்குத் தென்பட்டது. இருபுறமும் கடல் மோதிய ஒரு இடத்திலே கப்பலைத் தட்ட வைத்தார்கள்; முன்னணியம் ஊன்றி அசையாமலிருந்தது, பின்னணியம் அலைகளுடைய பலத்தினால் உடைந்து போயிற்று. நீந்தத்தக்கவர்கள் முந்திக் கடலில் விழுந்து கரைசேர்ந்தார்கள். மற்றவர்களில் சிலர் பலகைகள் மேலும், சிலர் கப்பல் துண்டுகள் மேலும் போய்க் கரையேறவும் செய் தார்கள். இவ்விதமாய் எல்லாரும் தப்பிக் கரைசேர்ந்தார்கள் (அப். 27:44).

பவுலுடைய வாழ்க்கையிலே இந்த யூரோக்கிலிதோன் என்கிறதான கடுங்காற்று எதற்காக வீசியது தெரியுமா? அவன் கர்த்தர் மீது வைத்திருக்கிற நம்பிக்கையை அற்றுப் போகப்பண்ணும்படியாக வீசியது. பவுல் வாழ்க்கையிலே எப்படிப்பட்ட காற்று வீசினாலும்; ஆண்டவர் மீது அவன் வைத்திருக்கிற நம்பிக்கையை பிரிக்கமுடியாது. ஆகவே தான் அவன் சவால் விட்டுச் சொல்லுகிறான். கிறிஸ்துவின் அன்பைவிட்டு என்னைப் பிரிப்பவன் யார்? எது என் வாழ்க்கையில் வந்தாலும், வராவிட்டாலும், நடந்தாலும், நடக்காவிட்டாலும், என் ஜீவனே போனாலும் கிறிஸ்துவை விட்டு என்னைப் பிரிக்கமுடியாது.

பவுல் கர்த்தர் மீது அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருந்தான். கர்த்தருக்காய் எழும்பி பிரகாசித்தான். ஆகவே தான் பவுல் சொல்லுகிறான்; நான் அதிகமாய் பிரயாசப் பட்டவன், அதிகமாய் அடிபட்டவன், அதிகமாய் காவல்களில் வைக்கப்பட்டவன், அநேகந்தரம் மரண அவதியில் அகப் பட்டவன். யூதர்களால் ஒன்று குறைய நாற்பதடியாக ஐந்து தரம் அடிபட்டேன்; மூன்று தரம் மிலாறுகளால் அடிபட்டேன், ஒருதரம் கல்லெறியுண்டேன். மூன்று தரம் கப்பற்சேதத்தில் இருந்தேன், கடலிலே ஒரு இராப்பகல் முழுவதும் போக்கி னேன். அநேகந்தரம் பிரயாணம்பண்ணினேன்; ஆறுகளால் வந்த மோசங்களிலும், கள்ளரால் வந்த மோசங்களிலும், என் சுயஜனங்களால் வந்த மோசங்களிலும், பட்டணங்களில் உண்டான மோசங்களிலும், வனாந்தரத்தில் உண்டான மோசங்களிலும், சமுத்திரத்தில் உண்டான மோசங்களிலும், கள்ளச்சகோதரரிடத்தில் உண்டான மோசங்களிலும், பிரயாசத்திலும், வருத்தத்திலும் அநேகமுறை கண்விழிப்பு களிலும், பசியிலும் தாகத்திலும், அநேகமுறை உபவாசங் களிலும், குளிரிலும், நிர்வாணத்திலும் இருந்தேன் (2 கொரி. 11:23-27). நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவுமானவர் நான் பொய் சொல்லுகிறதில்லை என்று அறிவார்.

இப்படிப்பட்ட கடுங்காற்று போன்ற பிரச்சனைகள் நம் வாழ்க்கையிலும் கூட சில நேரங்களில் வீசுகிறது. நாம் கிறிஸ்துவின் மீது வைத்திருக்கிற தைரியத்தை, வைராக் கியத்தை, நம்பிக்கையை சோதிக்கும்படியாக வீசுகிறது.

கொடூரமான மக்களின் சீற்றங்கள், கொடூரமான பிசாசின் சீற்றங்கள், கொடூரமான நோய்களின் சீற்றங்கள், கொடூரமான பணக்கஷ்டங்கள், கொடூரமான துன்பங்கள் பெரு வெள்ளத்தைப் போல் நம்மைச் சூழ்ந்து கொள்ளும்போது அவர் நமக்கு எப்படி இருக்கிறார் தெரியுமா? ஏழை, எளிய மக்களாகிய நமக்கு அவர் பெலனாக, அரணாக, கோட்டை யாக, நிழலாக, அடைக்கலமாக, அனுகூலமான துணையாக, உயர்ந்த அடைக்கலமாக, கேடகமாக, இரட்சண்யக் கொம் பாக இருந்து, அவருடைய செட்டைகளின் நிழலுக்குள் வைத்து நம்மை பாதுகாக்கிறார்.

வெள்ளம்போல் சத்துரு வரும்போது, கர்த்தருடைய ஆவியானவர் அவனுக்கு விரோதமாகக் கொடியேற்றுவார். (ஏசா. 59:19)

கிறிஸ்தவ வியாபாரிகள் ஐக்கியக் கூடுகை ஒன்று நடந்தது. அதில் கலந்து கொண்டவர்களில் ஒருவர் சகோதரர் தங்கமணி, அவரும் ஒரு வியாபாரி. சாட்சி நேரம் வந்தபோது காணிக்கைகள் கொடுத்து வியாபாரத்தில் உயர்ந்தவர்களும், பல ஆசீர்வாதங்களைப் பெற்றவர்களும், தங்களின் ஆசீர்வாத அனுபவங்களைப் பரவசத்தோடு, மிகுந்த சந்தோஷத்தோடு பகிர்ந்து கொண்டார்கள். ஆனால் சகோதரர் தங்கமணி சாட்சி சொல்ல தனக்கு எதுவுமில்லை என உணர்ந்தார். ஏனென்றால் அவர் மிகத் தாராளமாக கர்த்தருடைய ஊழியங்களுக்கு கொடுக்கிறவராயிருந்தும்,

சமீபகாலமாக வியாபாரத்தில் மிகுந்த தொய்வுகளையேக் கண்டுகொண்டிருந்தார். ஆனாலும் தன்னுடைய நம்பிக்கையை கர்த்தர் மீது வைத்திருந்தார்.

கர்த்தர் தங்களை மிகுதியாக ஆசீர்வதித்திருப்பதை சாட்சியாக பலர் சொல்லும்போது, தனக்கு அவ்விதம் சொல்ல எதுவும் இல்லையே என்ற வருத்தம் அவருக்கு ஏற்படவே செய்தது. ஆனால் சற்று சிந்தித்தபோது அவரால் தனக்குள் ஆறுதல் அடைய முடிந்தது. தன்னுடைய வியாபாரத் தொய்வுகளால் ஏற்பட்ட வருத்தமான சூழ்நிலைகள் மத்தியிலும் கற்றுக் கொண்ட பாடங்கள் விலையேறப் பெற்றவை. அடைந்த அனுபவங்கள் மேலானவை. அந்த சூழ்நிலைகளின் மத்தியில் தன்னைத் தாழ்த்திக்கொள்ளவும், தேவனை முற்றிலும் சார்ந்துகொள்ளவும், அவர் மீது அதிகமான நம்பிக்கை வைக்கவும், தேவன் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்ளுவார் என்ற விசுவாசத்தோடு பொறுமையாயிருக்கவும், மனதில் ஏற்பட்ட பக்குவங்கள் சாதாரணமானவைகள் அல்ல. இந்த வருத்தமான சூழ்நிலைகள் அவரை தேவனைவிட்டு விலகிச் செல்ல வழிவகுக்காமல், இன்னும் அவரண்டை கிட்டிச் சேரவும், அவர் மீது அதிகமாக நம்பிக்கை வைக்கவும் வழிவகுத்திருக்கிறது. இவைகளை எண்ணிப் பார்த்தபோது, அவருக்கு மனதிற்குள் மிகுந்த உற்சாகமும், உத்வேகமும் ஏற்பட்டது.

ஆம், வாழ்ந்திருந்தால் மட்டும் தான் கர்த்தருக்கு சாட்சி சொல்ல முடியும் என்று இல்லை. தாழ்ந்திருக்கும்

சூழ்நிலைகளிலும், கர்த்தரை சார்ந்திருக்கும் மக்களுக்கு கர்த்தர் தங்களுக்கு நல்லவராகவும், போதுமானவராகவும் இருந்தார் என்று சாட்சி சொல்ல பல காரணங்கள் இருக்கும். சூழ்நிலையை மாற்ற தேவன் வல்லவர். ஒருவேளை சூழ்நிலை மாறாவிடில், சூழ்நிலைகளை சந்திக்கும்படியாக நம்மை மாற்றுவதற்கு தேவன் வல்லவராயிருக்கிறார். இதுதான் வாழ்ந்திருக்கவும் தெரியும், தாழ்ந்திருக்கவும் தெரியும் என்று அப்போஸ்தலனாகிய பவுல் நம்பிக்கையோடு பேசியதின் பின்னால் உள்ள ரகசியம். ஆம், வளர்வதும், உயர்வதும் மட்டுமே தேவ ஆசீர்வாதங்கள் அல்ல. தாழ்ந்து நிற்கிற சூழ்நிலைகள் மத்தியிலும் கர்த்தர் மீது நம்பிக்கை வைத்து, கர்த்தர் நம்மை வழிநடத்துகிற பாதையில் நாம் கற்றுக்கொள்ளும் பாடங்கள், அனுபவங்கள், ஏற்படும் மாற்றங்கள் எல்லாம் நமக்கு நன்மைக்கேதுவாக இருக்கும்.

அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப் பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர் களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம் . (ரோமர் 8:28)

கர்த்தருக்குப் பயந்து, கர்த்தருடைய கட்டளைகள், கற்பனைகளைக் கைக்கொண்டு, அவைகளின்படி நடந்து, அவர் மீது அசைக்க முடியாத நம்பிக்கை வைத்து, அவரே தஞ்சம் என்று அவரைச் சார்ந்துகொண்டு, அவரை உத்தம மாய் பின்பற்றி, அவரோடு சஞ்சரித்து, அவர் மீது அன்பு வைத்து வாழுகிற தேவனுடைய பிள்ளைகளுடைய

வாழ்க்கையில் வீசுகிற கடுங்காற்று போன்ற பிரச்சனைகள் எல்லாம் அவர்களுடைய வாழ்க்கையிலே நன்மைக்கு ஏதுவாகத்தான் நடக்கிறது என்று தேவனுடைய பிள்ளைகள் அறிந்துகொள்ளவேண்டும்.

சாலொமோன் ராஜா மிக சவுகரியமான ஒரு வாழ்க்கை சூழ்நிலையில் இருந்தபோது, பல விஷயங்கள் அவனுக்கு மாயையும், மனதுக்கு சஞ்சலமுமாகவே இருந்தது. நல்ல சூழ்நிலைகள் நல்ல மகிழ்ச்சியைத் தந்து விடும் என்ற எண்ணம் இல்லாததைப் பார்க்கின்றோம். ஆபகூக் தீர்க்கதரிசி பலவித சோர்வுக்குரிய தோல்வியின் சூழ்நிலைகளைக் கூறுகிறான். அத்திமரம் துளிர்விடாமற் போனாலும், திராட்சச்செடிகளில் பழம் உண்டாகாமற் போனாலும், ஒலிவமரத்தின் பலன் அற்றுப்போனாலும், வயல்கள் தானியத்தை விளைவியாமற்போனாலும், கிடையில் ஆட்டுமந்தைகள்முதலற்றுப்போனாலும், தொழுவத்திலே மாடுஇல்லாமற்போனாலும், நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன், என் இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூருவேன். (ஆபகூக் 3:17,18). கர்த்தராகிய ஆண்டவரே என் பெலன்; அவரே என் நம்பிக்கை; நான் அவரையே சார்ந்துகொள்ளுவேன் என்று நம்பிக்கையோடு சொல்லுகிறதைப் பார்க்கிறோம். ஏனென்றால் தோல்விமிகுந்த, ஏமாற்றமான சூழ்நிலைகளுக்கு நடுவில் இருந்தாலும், கர்த்தரிடம் தனக்காக எப்போதும் சந்தோஷம் ஆயத்தமாயிருக்கிறது என்ற நிச்சயம் அவனுக்கிருந்தது. கர்த்தரோடு

தனக்குள்ள ஐக்கியம் எப்போதும் அந்த மகிழ்ச்சியை தனக்கு அளிக்கும் என்ற உணர்வோடு தான் அவ்விதம் சொன்னான்.

நம்முடைய தவறான எண்ணங்களும், தப்பான அபிப்பிராயங்களுமே நமது மகிழ்ச்சியின்மைக்கு காரணம். பவுல் அப்போஸ்தலனின் பாதையில் அவன் சந்தித்த பிரச்சனைகள், துன்பங்கள், பெருங்காற்றுகள் கொஞ்சமல்ல; ஆனாலும் அவன் அமைதியிழந்த, பின்வாங்கிப்போன, சோர்ந்து போன அனுபவங்களே இல்லை. கிறிஸ்துவை அண்டிக் கொள்ளுகிற யாரும் எந்த சூழ்நிலையிலும் அமைதியையும், சந்தோஷத்தையும் அனுபவிக்க முடியும் என்பதை நாம் விசுவாசிக்கவேண்டும்.

இஸ்ரவேல் ஜனங்கள் உண்மையான தேவன் யார் என்பதையும், அவருடைய வல்லமை எவ்வளவு பெரியது என்பதையும் நன்கு அறிந்திருந்தார்கள். ஆயினும் அவர்கள் தங்கள் வாழ்க்கைநிலை உயர்வுகளுக்காக உயிரற்ற விக்கிரக தெய்வங்களை நாடிச் சென்றார்கள். தேவன் மேல் வைக்கவேண்டிய நம்பிக்கையை விக்கிரகங்கள் மேல் வைத்த அவர்களின் செயல் பெரியபாவமானது. அதுவே அவர்களை அவ்வப்போது மிகுந்த கஷ்டங்களுக்குள் தள்ளியது. நாம் இஸ்ரவேலர்களைப்போல இயேசுவை விட்டு விக்கிரக வழிபாட்டிற்கு செல்லமாட்டோம்; ஆனாலும் தேவன்மேல் மட்டும் வைக்கவேண்டிய நம்பிக்கையை, வேறு எதன் மேலாவது வைத்து விட்டோமானால் வேதத் தின்படி

நாம் விக்கிரக வழிபாடு செய்ததாக ஆகிவிடும். பணம் அதிகம் சேர்த்தால் தான் எதிர்காலம் பாதுகாப்பா யிருக்கும் என எண்ணும்போதும், உலகப்பிரகாரமான சில வழிகளை கடைப்பிடித்தால் தான் முன்னுக்கு வரமுடியும் என்று எண்ணும்போதும், சில மனிதர்களின் தயவு அவசியம் தேவை என்று நம்பி, சத்தியத்துக்கு புறம்பாக வளைந்து நெளிந்து செயல்படும் போதும், நம்முடைய திறமைகள் மேல் அதிக சார்வு கொள்ளும் போதும், நாம் தேவன் மேல் வைக்க வேண்டிய நம்பிக்கையை வேறெங்கேயோ வைத்து விட்டோம் என்பதுதான் பொருள். அது தேவனுடைய பார்வையில், தேவ நம்பிக்கைக்கு புறம்பான விக்கிரக வழிபாடே ஆகும்.

கர்த்தர் மேல் நாம் வைக்கும் நம்பிக்கை மட்டுமே மாறுகின்ற சூழ்நிலைகளிலும், மேடுபள்ளமான வாழ்க்கைப் பாதைகளிலும் நம்மைத்தாங்கி நிறுத்தவல்லவை. யோபு வின் வாழ்க்கையில் திரண்ட செல்வமும், மிகுந்த ஆஸ்தி யும், பெரும் செல்வாக்கும் இருந்தபோதும் அவனுடைய நம்பிக்கையோ கர்த்தர் மேல் மட்டுமே இருந்தது. எனவே அனைத்தையும் இழக்க நேரிட்ட வேளையிலும், அவன் கர்த்தர் மீது வைத்த நம்பிக்கை அவனை கீழே விழாதபடி தாங்கிப்பிடித்தது. நாமும் நம்முடைய நம்பிக்கையை தேவன் மேலும், அவருடைய வார்த்தையின் மேலும் உறுதியாக வைக்க கவனமாயிருக்கவேண்டும்.

ஆபிரகாம் செல்வ சீமானாயிருந்தும் அவன் அவை களை அனுபவிப்பதிலும், அவைகளை பராமரிப்பதிலுமே

கவனம் செலுத்திக்கொண்டிருக்கவில்லை. அதற்குப் பதிலாக அவன் தேவஉறவில் வளர்வதிலும், தேவன் மேல் அதிகமாக நம்பிக்கை வைப்பதிலும், அவரைச் சார்ந்து கொள்வதிலுமே அதிக கவனமாயிருந்தான். அவன் வசதிமிக்க ஒரு வாழ்க்கையை வாழ்வதற்கு வாய்ப்புடைய வனாயிருந்தும், கூடாரங்களில் தங்கிக்கொண்டு, தேவ னுடைய நித்திய வீட்டிற்காகவே ஆவலோடே காத்திருந்தான். கடவுள் மீது நம்பிக்கை வைத்தால் உலகத்தில் உன் நம்பிக்கைகள் வீண் போவதில்லை.

நாசியிலே சுவாசமுள்ள மனுஷனை நம்புவதை விட்டு விடுங்கள்; எண்ணப்படுவதற்கு அவன் எம்மாத்திரம். (ஏசா. 2:22).

சகாயமடையும்படி இஸ்ரவேலுடைய பரிசுத்தரை நோக்காமலும், கர்த்தரைத்தேடாமலும், எகிப்துக்குப் போய், குதிரைகள்மேல் நம்பிக்கைவைத்து, இரதங்கள் அநேகமாயிருப்பதினால் அவைகளை நாடி, குதிரைவீரர் மகா பெலசாலிகளாயிருப்பதினால் அவர்களை நம்பிக் கொண்டிருக்கிறவர்களுக்கு ஐயோ! (ஏசா. 31:1)

நாமும் பவுலைப் போல கர்த்தர் மேல் முழு நம்பிக்கை வைப்போம். சோதனைகளும், பாடுகளும் நமக்கு மகிமையையே கொண்டுவரும். அப்போஸ்தலனாகிய பவுல் எபேசியருக்கு எழுதுகையில், "உங்கள் நிமித்தம் நான் அநுபவிக்கிற உபத்திரவங்களினால் நீங்கள் சோர்ந்து போகாதிருக்க வேண்டிக்கொள்ளுகிறேன்; அவைகள்

உங்களுக்கு மகிமையாயிருக்கிறதே''. (எபேசி. 3:13). நாம் இந்த உலகத்தில் பாடுகளை அனுபவித்தோமானால், அவரோடுகூட ஆளுகையும் செய்வோம் (2 தீமோத். 2:12).

பவுல் கர்த்தர் மீது அதிகவைராக்கியம், நம்பிக்கை வைத்ததின்பேரில் அநேக சவால்களைக் கொடுக்கிறதைக் காணலாம். நான்கு முறை யார் ? யார் ? யார் ? யார் ? என்று அவர் சவாலோடு கேட்கிறார். நமக்கு விரோதமாயிருப்பவன் யார் ? குற்றஞ்சாட்டுகிறவன் யார் ? ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார் ? கிறிஸ்துவின் அன்பைவிட்டுப் பிரிப்பவன் யார் ? (ரோமர் 8:31,33,34,36) கிறிஸ்துவின் நாமத்தினாலே, கிறிஸ்துவின் பெலத்தினாலே, கிறிஸ்துவின் மீது வைத்திருக்கிற நம்பிக்கையினாலே நான் நிற்கிறபடியினால் யார் எங்களுக்கு எதிர்த்து நிற்கமுடியும். கர்த்தர் எங்களோடு இருந்து, எங்களுக்காக வழக்காடி, யுத்தம் செய்து, யாவையும் செய்துமுடிக்கிறபடியால், யார் எங்களை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கமுடியும் ? மட்டுமல்ல அப்போஸ்தலனாகிய பவுல் உபத்திரவங்களைப் பார்த்து சவால்கொடுக்கிறார். வியாகுலங்களைப் பார்த்து சவால்விடுகிறார்.

தமிழ்நாட்டில் அரசியல் கட்சிகள் தேர்தல் நேரங்களில் ஒன்றுக்கொன்று சவால்விட்டுக் கொண்டிருப்பதைக் காணலாம். நான் ஆட்சிக்கு வந்துவிட்டால் இதைச் செய்வேன், அதைச்செய்வேன் என்று சவால்விடுவார்கள். உடனே அடுத்த கட்சி நீ இதைச்செய்தால், இதற்கு மேலாக நான் அதைச்செய்வேன். உன்னை விட பெரிய, பெரிய

காரியங்களை மக்களுக்குச் செய்வேன் என்று சவால் விடுவார்கள். தமிழ்நாட்டில் இப்படிப்பட்ட வறட்டு சவால் களுக்குப் பஞ்சமே இல்லை.

ஆனால் கர்த்தர் நமக்கு முன்பாக ஒரு சவாலான வாழ்க்கையை வைத்திருக்கிறார். இதில் வெற்றியுள்ளவர் களாகவும், பரிசுத்தமுள்ளவர்களாகவும், எப்பொழுதும் ஜெயமுள்ளவர்களாகவும் விளங்கவேண்டுமென்று எதிர் பார்க்கிறார். நாம் சாத்தானைப் பார்த்து சவால் விடுகிறோம். சாத்தானே, உன்னால் எங்களைத்தொடமுடியாது, அழிக்க முடியாது. நாங்கள் கிறிஸ்துவின் இரத்தத்திற்குள் இருக் கிறோம். மரணமே! உன் கூர் எங்கே ? என்று கேட்கிறோம். பாதாளத்தின் முதுகெலும்பைத்தட்டி பாதாளமே! உன் ஜெயம் எங்கே ? என்று கேட்கிறோம் ?

இயேசு கிறிஸ்து தன்னைச்சூழ நின்றவர்களைப் பார்த்து சவால்விட்டு "என்னில் பாவம் உண்டென்று உங்களில் யார் என்னைக் குற்றப்படுத்தக்கூடும் ?" என்று கேட்டார். அவர் அவ்வளவு பரிசுத்தமுள்ளவராய் வாழ்ந்தார்; கறை திரை ஒன்றும் அவரை அணுகமுடியவில்லை. அவரது வாழ்க்கை நோய்க்கும், வியாதிக்கும், மரணத்துக்கும், சோதனைக்கும் சவால்விடுகிற வாழ்க்கையாகவே இருந்தது.

தேவபிள்ளைகளே, உங்களுக்கு விரோதமாய் பல விதங்களில் சாத்தான் எதிர்ப்புகளையும், பிரச்சனை களையும் சவாலாகக்கொண்டுவருவான். பயப்படாதிருங்

கள், கலங்காதிருங்கள், பார்வோன் கொண்டுவந்த சவால் களை இஸ்ரவேலர் ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலே முறியடித்தார்கள். சிவந்த சமுத்திரம் கொண்டுவந்த சவால் களை, வசனமாகிய கோலை நீட்டி மோசே முறியடித்தார். யோர்தானின் சவால்களை ஆசாரியர்கள் கால்பட்டதும் பின்னிட்டு திரும்பச்செய்தார்கள். எரிகோவின் சவால்கள் துதியின் சத்தத்தால் முறிந்துவிழுந்தது. தாவீதுக்கு விரோத மாய் வந்த சவால்களை இயேசுவின் நாமத்தினால் முறியடித்துப்போட்டான். அதுபோல பவுலுக்கு விரோதமாய் வந்த சவால்களை கர்த்தர் மீது நம்பிக்கை வைத்து, கர்த்தரையே சார்ந்து நின்றுமுறியடித்தான். தேவ பிள்ளை களே, கடுங்காற்று போன்ற சவாலான பிரச்சனைகள் வரும்போது கர்த்தரையே சார்ந்துகொள்வோம். கர்த்தர் மீது அசைக்கமுடியாத நம்பிக்கைவைப்போம். கர்த்தர் நமக்கு ஜெயத்தைக் கட்டளையிடுவார்.

6. பலத்த காற்று

பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு, ஓரிடத்திலே வந்திருந்தார்கள். அப்பொழுது பலத்தகாற்று அடிக்கிற முழக்கம் போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. (அப். 2:1,2)

பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு, இந்த இடத்திலே ஒருமனம் என்பது மிக முக்கியமான ஒருகாரியம். ஆகவே தான் வசனம் சொல்லுகிறது இரண்டுபேராவது, மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார் (மத். 18:20). அவர்கள் ஒருமனப்பட்டு ஓரிடத்திலே வந்தபோதுதான் பலத்தகாற்று அடிக்கிற முழக்கம்போல பரிசுத்தஆவியானவர் அவர்கள் மத்தியிலே கடந்துவந்து ஒவ்வொருவரையும் தம்முடைய அளவற்ற அபிஷேகத்தால், வல்லமையினால் நிரப்பினார்.

அடுப்பில் விறகு கட்டைகள் பல ஒன்றாக ஜுவாலித்து எரிகின்றது. எந்தக் கட்டையில் நெருப்பினால், தூண்டப்பட்டு, எந்தக்கட்டை எரிகின்றது என்று சொல்லமுடியாது. எல்லாம் ஒன்றாக சேர்ந்து எரிந்துகொண்டிருக்கின்றன. இப்போது அதில் ஒரு கட்டையை தனியே எடுத்து வெளியே

போடுங்கள். என்ன நடக்கும்? கொஞ்சநேரத்தில் அந்த கட்டையில் இருந்த நெருப்பு கொஞ்சம், கொஞ்சமாக அனலிழந்து அணைந்துபோகும்.

கிறிஸ்தவ ஐக்கியம் என்பதும் இது போன்றதே. ஒன்றாக, ஒருமனமாக இணைந்திருந்தால் எல்லோருடைய ஆவிக்குரிய அனுபவங்களும் ஜுவாலிக்கும். ஆனால் ஐக்கியமில்லாமல், ஒருமனமில்லாமல் ஒருவர் தனியே போகும்போது அவருடைய ஆவிக்குரிய அனுபவம் ஒருநாள் அனலிழந்து போகிறது. விசுவாசிகளுக்கிடையில் ஒருமனம் மிகவும் அவசியம். அப்போது தான் ஒருவரால் ஒருவர் தூண்டப்பட்டு, ஒருவரால் ஒருவர் புத்தி சொல்லப்பட்டு எல்லோரும் கிறிஸ்துவுக்காக, வல்லமையாக எரிந்து பிரகாசிக்க முடியும். ஒருவரையொருவர் தாங்கி, ஒருவரை யொருவர் தேற்றி, ஒருவரையொருவர் உற்சாகப்படுத்தி எல்லோரும் கூட்டாக வளர்வதற்கு ஒருமனம் தேவை.

அவர்களெல்லாரும் ஒருமனதோடு, ஒரே இடத்தில் கூடி வந்திருந்தார்கள். அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, அந்நியபாஷைகளில் பேசி னார்கள். இதைக் கேட்டுக்கொண்டிருந்த மக்கள் கலக்க மடைந்தார்கள். இவர்கள் தேவனுடைய மகத்துவங்களைப் பேசுகிறார்கள் என்று ஒரு கூட்டம் ஜனங்கள் பேசிக் கொண்டார்கள். வேறு ஒரு கூட்டம் ஜனங்கள், இவர்கள் மது பானத்தினால் நிறைந்திருந்தார்கள் என்று பரியாசம் பண்ணினார்கள். ஆனால் பேதுரு அந்த ஜனங்களைப் பார்த்து: நீங்கள் நினைக்கிறபடி இவர்கள், வெறி

கொண்டவர்களல்ல. பொழுது விடிந்து மூன்றாம்மணி வேளையாயிருக்கிறது. கடைசி நாட்களில் நான் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன் என்று யோவேல் தீர்க்கதரிசியால் உரைக்கப்பட்ட தீர்க்கதரிசனம் நடந்தேறுகிறது என்றார்.

பலத்த காற்று போன்ற அபிஷேகம் எதற்கு?

a) நாம் இந்த உலகத்தில் பெலனாய் வாழ்வதற்கு. பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, (அப். 1:8) முதலாவது அபிஷேகம் நமக்குள் வரும்போது ஒரு பெலன் இறங்கிவருகிறது. ஆகவே தான் சங்கீதக்காரனாகிய தாவீது சொல்லுகிறான்: என் கொம்பைக் காண்டாமிருகத்தின் கொம்பைப்போல உயர்த்துவீர்; புது எண்ணெயால் அபிஷேகம் பண்ணப்படுகிறேன் (சங். 92:10). புது எண்ணெயாகிய அபிஷேகம் இறங்கிவரும்போது சாதாரண பெலன் அல்ல, காண்டா மிருகத்துக்கு ஒத்தபெலன். இந்த பெலத்தின் மூலம் தான் தாவீது ஆடு மேய்த்துக் கொண்டிருக்கும்போது, ஆட்டைப் பிடிக்கும்படி ஒருவிசை சிங்கமும், ஒருவிசை கரடியும் வந்தது. தாவீது தொடர்ந்து போய் அதின் மேல் பாய்ந்து, அதின் தாடியைப் பிடித்து அதை அடித்துக் கொன்றுபோட்டான். அது மாத்திரமல்ல, இஸ்ரவேலுக்கு விரோதமாய் எழும்பி வந்த கோலியாத்தை, ஒரே ஒரு கல்லினாலே வீழ்த்தி, அவனைக் கொன்றுபோட்டான்.

இஸ்ரவேலைப் பெலிஸ்தரின் கைக்கு நீங்கலாக்கி ரட்சிக்கும்படி தேவன் சிம்சோனைத் தெரிந்துகொண்டார்.

அவனுக்குள்ளாகவும் கர்த்தருடைய ஆவி இறங்கிவரும் போது; கையில் ஒன்றும் இல்லாதிருந்தும் தனக்கு முன் எதிர்பட்ட பாலசிங்கத்தைப் பிடித்து, அதை ஒரு ஆட்டுக் குட்டியைக் கிழித்துப்போடுவது போல் கிழித்துப்போட்டான். ஒருவிசை பெலிஸ்தர், சிம்சோனுக்கு விரோதமாய் எழும்பி, அவனைப் பிடித்து புதுக்கயிறுகளால் கட்டி, கொண்டு போனார்கள். அந்த நேரத்திலும் கர்த்தருடைய ஆவி அவனுக் குள் பலமாய் இறங்கி வந்ததினால், அவன் புயங்களில் கட்டியிருந்த கயிறுகள் நெருப்புப்பட்ட நூல் போலாகி, அவன் கட்டுகள் அவன் கைகளை விட்டு அறுந்துபோயிற்று. அந்த நேரத்தில் அவன் ஒரு கழுதையின் பச்சைத் தாடை எலும்பை எடுத்து, ஆயிரம் பேரைக் கொன்றுபோட்டான். எங்கிருந்து இந்த பெலன் வருகிறது? அபிஷேகத்தின் மூலம் வருகிறது. இந்த அபிஷேகத்திற்காக, நாம் ஆண்டவ ருடைய பாதத்தில் காத்திருக்கவேண்டும். ஆண்டவர் சீஷர்களைப் பார்த்து சொன்னார்: "நீங்களோ உன்னதத்திலி ருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்வரைக்கும் எருச லேம் நகரத்தில் இருங்கள்" (லூக். 24:49). கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகு களைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள். நடந்தாலும் சோர்ந்துபோகார்கள் (ஏசா. 40:31).

b) பலத்த காற்று போன்ற அபிஷேகம் எதற்கு?

அபிஷேகம் நுகங்களை முறிக்கும் (ஏசா. 10:27). பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல,

என்னுடைய ஆவியினாலே ஆகும் என்று சேனை களின் கர்த்தர் சொல்லுகிறார் (சகரி. 4:6). கர்த்தரே ஆவியானவர்; கர்த்தருடைய ஆவி எங்கேயோ, அங்கே விடுதலையுமுண்டு (2 கொரி. 3:17).

நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்தஆவியி னாலும், வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார்; தேவன் அவருடனேகூட இருந்தபடியினாலே அவர் நன்மைசெய்கிறவராகவும், பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித் திரிந்தார். (அப். 10:38).

தேவனால் அனுப்பப்பட்டவர் தேவனுடைய வார்த்தை களைப் பேசுகிறார்; தேவன் அவருக்குத் தமது ஆவியை அளவில்லாமல் கொடுத்திருக்கிறார். (யோவா. 3:34).

அவர்கள் ஜெபம்பண்ணினபோது அவர்கள் கூடி யிருந்த இடம் அசைந்தது, அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, தேவவசனத்தை தைரிய மாய்ச் சொன்னார்கள் (அப். 4:31).

பேதுருவும், யோவானும் படிப்பறிவில்லாத பேதையர் களாகக் காணப்பட்டார்கள். ஆனால் அவர்கள் பேசுகிற தைரியத்தைக் கண்டு, ஜனங்கள் ஆச்சரியப்பட்டு, இவர்கள் இயேசுவுடன் கூட இருந்தவர்கள் என்று கண்டுகொண்டார் கள் (அப். 4:13). பேதைமையாய் இருந்த, படிப்பறிவில்லாத பேதுருவுக்கும், யோவானுக்கும் எங்கிருந்து இந்த தைரியம் வந்தது. பரிசுத்தஆவியினால் நிரப்பப்பட்டபோது தைரியம்

வந்தது. பேதுரு பரிசுத்தஆவியால் நிரப்பப்பட்டபோது ஜனத்தின் அதிகாரிகள், இஸ்ரவேலின் மூப்பர்கள் முன் தைரியமாய்ப் பேசினான். பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்ட மக்கள் ஒரே நாளில் மூவாயிரம், ஐயாயிரம் என கர்த்தர் மேல் விசுவாசம் வைத்தார்கள் (அப். 4:8). பிணியாளிகளைப் படுக்கைகளின் மேலும், கட்டில்களின் மேலும் கிடத்தி, பேதுரு நடந்துபோகையில் அவனுடைய நிழலாகிலும், அவர்களில் சிலர்மேல் படும்படிக்கு, அவர்களை வெளியே வீதிகளில் கொண்டுவந்து வைத்தார்கள் (அப். 5:15). சுற்றுப் பட்டணங்களிலிலுமிருந்து திரளான ஜனங்கள், பிணியாளிகளையும், அசுத்த ஆவிகளால் வாதிக்கப்பட்டவர்களையும் எருசலேமுக்குக் கொண்டுவந்தார்கள். அவர்களெல்லாரும் குணமாக்கப்பட்டார்கள். அபிஷேகம் பாவம் என்னும் நுகத்தை, பிசாசு என்னும் நுகத்தை, வியாதி என்னும் நுகத்தை, பயம் என்னும் நுகத்தை, மரண இருள் என்னும் நுகத்தை, சாபம் என்னும் நுகத்தை முறித்துப்போடும்.

பவுல் என்பவன் சவுலாக இருக்கும்போது கிறிஸ்தவர்களை அதிகமாக துன்புறுத்தி, கொலை செய்து, சபைகளை இடித்து கிறிஸ்தவர்களுக்கு விரோதமாய் செயல்பட்டவன். ஒருநாள் தமஸ்குவிற்கு செல்லும்வழியில் கர்த்தர் அவனுக்குத் தரிசனமாகி சவுலே, சவுலே நீ ஏன் என்னைத் துன்பப்படுத்துகிறாய் என்று தன்னுடனே பேசுகிற ஒரு சத்தத்தைக் கேட்டான். அதற்கு அவன்; ஆண்டவரே, நீர் யார், என்றான். அதற்குக் கர்த்தர்: "நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே" என்றார். அவன் நடுங்கித் திகைத்து:

ஆண்டவரே, நான் என்னசெய்யச் சித்தமாயிருக்கிறீர் என்று கேட்டான். அதற்குக் கர்த்தர்; நீ எழுந்து, பட்டணத்துக் குள்ளே போ, நீ செய்யவேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும் என்றார். பின் அனனியா மூலம் அபிஷேகத்தை பெற்றுக் கொண்டான். ஞானஸ்நானமும் பெற்றான்.

தாமதமின்றி கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று ஆலயங்களிலே பிரசங்கித்தான். கேட்டவர்கள் ஆச்சரியப் பட்டார்கள். யூதர்கள் அவனைக் கொலைசெய்யும்படி வகை தேடினார்கள். ஆனால் பவுல் இயேசுவின் நாமத்தினால் தைரியமாய்ப் பிரசங்கித்தான். (அப். 9:20)

பவுல் மற்றவர்கள்மேல் கைகளை வைத்தபோது, அவர்களும் அபிஷேகத்தைப் பெற்றுக்கொண்டார்கள். அந்நியபாஷைகள் பேசினார்கள். தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள். பவுலின் கைகளினாலே தேவன் விசேஷித்த அற்புதங்களைச் செய்தருளினார். அவனுடைய சரீரத்திலிருந்து உறுமால்களையும், கச்சைகளையும் கொண்டுவந்து, வியாதிக்காரர்மேல் போட வியாதிகள் அவர்களை விட்டு நீங்கிப்போயின; பொல்லாத ஆவிகளும் அவர்களை விட்டுப் புறப்பட்டன (அப். 19:11,12). பவுல் சொன்னான் : எருசலேமில் நான் கர்த்தராகிய இயேசுவின் நாமத்திற்காக கட்டப்படுவதற்கு மாத்திரமல்ல, மரிப்பதற்கும் ஆயத்தமாயிருக்கிறேன் என்று தைரியமாய்ப் பேசினான்.

c) பலத்த காற்று போன்ற அபிஷேகம் எதற்கு?

பலத்த காற்று போன்ற அபிஷேகம் நமக்குள் வரும்போது சோதனைகளை நாம் பொறுமையோடு சகிப்போம்.

காரணம்? நமக்கு அருளப்பட்ட பரிசுத்தஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால், அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது (ரோமர் 5:5). பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறது. ஆகவே தான் சோதனைகளை பொறுமையோடு சகிக்க இந்த அபிஷேகம் நமக்கு உதவி செய்கிறது.

ஒரு குடும்பத்தில் ஒரு பெற்றோருக்கு இரண்டு ஆண் பிள்ளைகள். மூத்த மகன் ஆண்டவரை ஏற்றுக்கொள்ளாமல், முரட்டாட்டமாய் தன் நண்பர்களோடு வாழ்ந்து வந்தான். இளைய மகன் கர்த்தரை தன் வாலிப வயதில் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு, வீட்டிலும் தன் பெற்றோரை பிரியப்படுத்துகிற மகனாகக் காணப்பட்டான். அண்ணன், தம்பிகளுக்கிடையே அடிக்கடி வாக்குவாதங்களும், கருத்து வேறுபாடு சார்ந்த பிரச்சனைகளும் ஏற்படும். அண்ணன், தம்பியிடம் சண்டை போட்டுக் கொண்டே இருப்பான். இளையவன் எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டு, அண்ணன் பேசுகிற கடுமையான வார்த்தைகளையெல்லாம் தன் தகப்பனிடம் கூறுவான். தகப்பனும் மகனே நீ ஆண்டவரை உண்மையாய் நேசிப் பவன். நீ பொறுமையாய் நடந்துகொள் என்று ஆலோசனை கூறுவார். அவனும் தகப்பனின் ஆலோசனையைக் கேட்டு அண்ணனிடம் பாசமாக நடந்து கொள்வான். ஒருநாள் அண்ணன், தம்பியை மிகவும் கேவலமாகப் பேசினான். ஆனால் தம்பி பதிலே பேசவில்லை. அண்ணனுக்கு ஆச்சரியமாக

இருந்தது. உட்கார்ந்து சிந்தித்தான். நான் எவ்வளவு கேவலமாகப் பேசினேன். ஆனால் தம்பி பதிலே பேசவில்லை என்று தன் உள்ளத்தில் குத்தப்பட்டவனாக தம்பியிடம் போய் பேசினான். தம்பி, உன்னை நான் எவ்வளவு கேவலமாகப் பேசினேன். நீ ஒன்றுமே பதில் பேசவில்லை. காரணம் என்ன ? உனக்குக் கோபமே வராதா என்று கேட்டான். தம்பி, அண்ணனிடம் பேச இதுதான் நல்ல தருணம் என நினைத்து இயேசுவைப் பற்றி சொன்னான். அவருடைய பொறுமையைப் பற்றிச் சொன்னான். அவரு டைய மனதுருக்கத்தைப் பற்றிச் சொன்னான். அவருடைய அன்பை, அவருடைய தாழ்மையை, அவருடைய சகிப்புத் தன்மையைப் பற்றிச் சொன்னான். இந்த இயேசு எனக்குள் இருக்கிறார். இந்த இயேசுவின் அன்பு எனக்குள் ஊற்றப் பட்டிருக்கிறது. அவருடைய அபிஷேகம் எனக்குள் இருக் கிறது. எனவே தான் எனக்கு கோபமே வரவில்லை என்று சொன்னான். உடனே அண்ணன், தம்பியிடம் மன்னிப்பு கேட்டு அவனும் இயேசுவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டான். அவனுடைய வாழ்க்கை அன்று முதல் தலைகீழாய் மாறியது. பழைய கோபம், பழைய எரிச்சல், பழைய மூர்க்கத்தனம் இல்லை. புது சிருஷ்டியாக, புது மனித னாக மாறினான். இயேசுவின் அன்பு அவனுக்குள் பொங்கினது. அவனுடைய வீட்டில் என்ன ஒரு சந்தோஷம். அன்று முதல் அந்த வீடு ஒரு குட்டிப் பரலோகமாக மாறியது. காரணம் ? இயேசுவின் அன்பு. அபிஷேகம் தேவ அன்பாக ஒரு மனிதனுக்குள் ஊற்றப்படும்போது அவனுடைய

வாழ்க்கையே தலைகீழாக மாறிவிடுகிறது. அவனுடைய பழைய குணங்கள் மறைந்து போகிறது. புதிய அன்பால், புதிய குணங்களால் நிரப்பப்படுகிறான்.

வேதத்திலும் ஏராளமான பரிசுத்தவான்கள் வாழ்க்கையிலும் கூட பல உபத்திரவங்கள், பிரச்சனைகள், பாடுகள், கஷ்டங்கள் வந்தது. ஆனாலும் கூட அவர்கள் எல்லாவற்றையும் பொறுமையோடு சகித்தார்கள். காரணம் அவர்கள் உள்ளத்தில் தேவ அன்பு ஊற்றப்பட்டிருந்தது. எனவே சோதனைகளை பொறுமையோடு சகித்தார்கள். ஜெயத்தை பெற்றுக்கொண்டார்கள்.

7. பலத்த சுழல்காற்று

அப்பொழுது பலத்த சுழல்காற்று உண்டாகி படவு நிரம்பத்தக்கதாக, அலைகள் அதின்மேல் மோதிற்று.

(மாற்கு 4:37)

இங்கு ஒரு சம்பவத்தைப் பார்க்கிறோம். இயேசு கிறிஸ்துவின் சீடர்களுடைய வாழ்க்கையிலே ஒரு காற்று வீசியது. அது என்ன காற்று தெரியுமா? சாதாரண சுழல் காற்று அல்ல. பலத்த சுழல்காற்று.

இயேசுவும், சீடர்களும் படவிலே பிரயாணப்பட்டுப் போகும்போது, பலத்த சுழல்காற்று உண்டாகி படவு நிரம்பத் தக்கதாக அலைகள் வந்து படவின்மேல் மோதியது. ஆனால் இயேசு கப்பலின் பின்னணியத்தில் தலையணையை வைத்து தூங்கிக்கொண்டிருந்தார். சீஷர்கள் அவரை எழுப்பி, போதகரே, நாங்கள் மடிந்து போகிறது (நாங்கள் சாகிறது) உமக்குக் கவலையில்லையா? என்று கேட்கிறார்கள். ஆனால் இயேசு எழுந்து, காற்றை அதட்டி, கடலைப் பார்த்துப் பேசுகிறார். 'இரையாதே, அமைதலாயிரு' என்றார். அப்பொழுது காற்று நின்றுபோய், மிகுந்த அமைதல் உண்டாயிற்று. ஆனால் இயேசு சீஷர்களை நோக்கி: ஏன் இப்படிப் பயப்பட்டீர்கள்? ஏன் உங்களுக்கு விசுவாசம் இல்லாமற்போயிற்று என்றார். சீஷர்கள் மிகவும் பயந்து: இவர் யாரோ? காற்றும், கடலும் இவருக்குக் கீழ்ப்படிகிறதே என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள்.

காற்றையும், கடலையும் தான் சீஷர்கள் பார்த்தார்கள். சூழநிலைகளைப் பார்த்தார்கள். காற்றையும், கடலையும் உண்டாக்கினவர் நம்மோடுகூட இருக்கிறார் என்பதை மறந்து போனார்கள். காற்றையும், கடலையும் பார்த்து பயந்து நடுங்கினார்கள். நாம் செத்துமடியப்போகிறோம் என்று கலங்கினார்கள்.

சீஷர்கள் வாழ்க்கையிலே எதற்கு இப்படிப்பட்ட சுழல் காற்று வீசியது தெரியுமா ? அவர்களுடைய விசுவாசத்தை சோதிக்கும்படியாக, அவர்களுடைய பயத்தை நீக்கும்படி யாக காற்று வீசியது. இயேசு அவர்களைப் பார்த்து கேட்டார் : "ஏன் பயப்பட்டீர்கள் ? ஏன் விசுவாசம் இல்லாமற்போயிற்று ?" இயேசு கூட இருக்கும்போதே சீஷர்களுக்குள்ளே பயம், அவிசுவாசம்.

நம்முடைய வாழ்க்கையிலும்கூட இப்படிப்பட்ட காற்றுகள் வீசும்போது நம்முடைய வாழ்க்கைப் படவுகளும் அசைகிறது. பலத்த சுழல்காற்றுகள் வாழ்க்கைப் படவிலே மோதி அடிக்கும்போது பயம் வருகிறது. விசுவாசம் போய் அவிசுவாசம் வந்துவிடுகிறது.

சீடர்களின் படவில் இயேசு இருந்தார். கடல் கொந்தளித்தது. படகு அலசலடிப்பட்டபோதும், சீடர்கள் அதைக் கண்டு கூக்குரலிட்டபோதும், அவர் உடனே எழுந்து வரவில்லை. அவருடைய செயல்படா நிலையைக் கண்ட சீஷர்கள் நாங்கள் மடிந்து போகிறது உமக்குக் கவலை யில்லையா ? என்றனர். தாம் சீடர்களின் படகில்

இருக்கையில், கொந்தளிப்புகள் ஏற்பட்டாலும் அவர்கள் பயப்படாமல் இருக்க பழகவேண்டுமென்பது அவருடைய எதிர்பார்ப்பா யிருந்தது. அந்த எதிர்பார்ப்பு பின்னாட்களில் சீடர்களின் வாழ்க்கையில் முழுமையாக நிறைவேறியது. தங்களோடு இயேசு கிறிஸ்து இருக்கிறார் என்ற நிச்சயத்தைப் பெற்ற அவர்கள், தங்களுக்கு முன்னால் வந்த அனைத்து சோதனை யான சூழ்நிலைகளையும் பயப்படாமல் தைரியமாக சாதித்தார்கள். ஆம் அவருடைய அமைதி, அல்லது மவுனம் நம்முடைய பிரச்சனைக்ளில் அவர் கரிசனையாயிருக்கவில்லை என்பதன் அடையாளமல்ல, அவரை மீறி எந்த கொந்தளிப்பும் நம்மை பாதிக்கமுடியாது என்ற விசுவாசத்தில் நாம் தேறிடவே அந்த மவுனம்.

தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டு, தேவ ஐக்கியத் தைப் பெற்றிருந்த தாவீதுக்கு சுமுகமான சூழ்நிலை உடனே அமையவில்லை. தேவன் அவனோடிருக்கும்போதே, பலவித உபத்திரவங்களின் காற்று அவனுக்கு எதிராக வீசியது. தேவன் உன்னோடிருந்தால் உனக்கு ஏன் இவ்வித மானக் காரியங்கள் நடைபெறுகிறது? என்று கேட்கத்தக்க விதமான சோதனைகள் அவனுக்கு வந்தது. ஆனால் அந்த சோதனை அனுபவங்கள் தேவன் தன்னோடு இருந்து தனக் காக வல்லமையாக கிரியை செய்வதை கண்டுகொள்ளவே உதவியது. அங்கே தேவனோடுள்ள உறவும், அவரைச் சார்ந்த தைரியமும் பெருகியதேயன்றி விசுவாசம் குன்றிப் போகவில்லை.

ஆபிரகாமுடைய வாழ்க்கையிலே ஒரு விசுவாசப்

பரீட்சை வந்தது. கர்த்தர் ஆபிரகாமைப் பார்த்து சொன்னார்: "உன் புத்திரனும், உன் ஏகசுதனும், உன் நேசகுமாரனுமாகிய ஈசாக்கை மோரியா தேசத்துக்கு மலையிலே கொண்டு போய் தகனபலியிடு' என்றார். உடனே ஆபிரகாம் அதிகாலையில் எழுந்து தன் கழுதையின்மேல் சேணங் கட்டி, தன் வேலைக்காரரில் இரண்டுபேரையும், தன் குமாரன் ஈசாக்கையும் அழைத்துக் கொண்டுபோனான். போகிற வழியிலே ஈசாக்கு தன் தகப்பனைப் பார்த்து, "என் தகப்பனே, நெருப்பும், கட்டையும் இருக்கிறது. தகனபலிக்கு ஆட்டுக்குட்டி எங்கே" என்றான். அந்த நேரத்தில் கூட ஆபிரகாம் பின்வாங்கிப் போகவில்லை. விசுவாசத்தில் உறுதியாயிருந்தார். ஆபிரகாம் பலிபீடத்தை உண்டாக்கி கட்டைகளை அடுக்கி, தன் மகன் ஈசாக்கை கட்டி, அந்த அடுக்கிய கட்டைகளின்மேல் அவனைக் கிடத்தினான். பின்பு ஆபிரகாம் தன் குமாரனை வெட்டும்படிக்குத் தன் கையை நீட்டி கத்தியை எடுத்தான். அப்பொழுது வானத் திலிருந்து ஒரு சத்தமுண்டாகி "ஆபிரகாமே, ஆபிரகாமே" என்று கூப்பிட்டது; அதற்கு ஆபிரகாம்: "இதோ, அடியேன்" என்றான். அப்பொழுது அவர் "பிள்ளையாண்டான் மேல் உன் கையைப் போடாதே, அவனுக்கு ஒன்றும் செய்யாதே; நீ அவனை உன் புத்திரன் என்றும், உன் ஏகசுதன் என்றும் பாராமல் எனக்காக ஒப்புக்கொடுத்தபடியினால் நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந் திருக்கிறேன்' என்றார். ஆபிரகாம் தன் கண்களை ஏறெடுத்துப் பார்த்தபோது, பின்னாகப் புதரிலே தன் கொம்புகள் சிக்கிக் கொண்டிருந்த ஒரு ஆட்டுக்கடாவைக் கண்டான்.

அப்பொழுது ஆபிரகாம் அந்த ஆட்டுக்கடாவைப் பிடித்து, தன் மகனுக்குப் பதிலாக அதை தகனபலியிட்டான்.

இந்த இடத்திலும் ஆண்டவரின் மவுனத்தைப் பார்க்கிறோம். ஆபிரகாமைப் பார்த்து ஆண்டவர் சொன்னார் : 'உன் குமாரனை தகனபலியிடு' என்று. ஆபிரகாம் ஆண்டவரின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து உடனே தன் மகனை அழைத்துக் கொண்டு மோரியா மலைக்குப் போகிறார். அந்த நேரத்திலும் ஆண்டவர் மவுனமாயிருக்கிறார். போகிற வழியிலெல்லாம் ஈசாக்கு தகப்பனைப் பார்த்து கேட்கிறான். அப்பா தகனபலிக்கான ஆட்டுக்குட்டி எங்கே என்று? அப்போதும் தேவன் மவுனமாயிருக்கிறார். ஆபிரகாம் மோரியா மலையில் போய் பலிபீடத்தைக் கட்டி, கட்டைகளை அடுக்கி, தன் குமாரனைக் கட்டி கட்டைகளின் மேல் வைக்கிறான். அப்போதும் ஆண்டவர் மவுனமாயிருக்கிறார். கடைசியாக ஆபிரகாம் தன் மகனை வெட்டும்படிக்கு கத்தியை எடுத்து ஓங்கும்போது தான் கர்த்தர் பேசுகிறார். அதுவரை மவுனமாயிருந்த ஆண்டவர் வாயைத் திறந்து பேசுவதைப் பார்க்கிறோம். பிள்ளையாண்டான் மேல் கையைப் போடாதே என்று. ஆபிரகாமின் விசுவாசம் சோதிக்கப்பட்டது. ஆபிரகாம் விசுவாசத்தில் வல்லவனானான். விசுவாசிகளின் தகப்பனாக மாறினான். சோதனை நேரத்திலும், இக்கட்டான நேரத்திலும் ஆபிரகாமின் விசுவாசம் கடுகளவு கூட குறைந்து போகவில்லை. தன் மகன் மரித்தாலும் பரவாயில்லை, ஆண்டவர் மீது வைத்திருக்கும் விசுவாசம் குறையக்கூடாது என்று நினைத்திருந்தான்.

ஒரு குறிப்பிட்ட தொழிலதிபர் தேவ ஊழியர்களுக்கு தாராளமாக நிதி உதவி செய்யும் பழக்கமுடையவர். இதனை கேள்விப்பட்ட வெளியூர் தேவ ஊழியர் ஒருவர் அவரை சந்தித்து ஒரு ஆலயத்தைக் கட்டுவதற்கு நிதி உதவி கேட்டார். ஆனாலும் அவரால் அந்த தொழிலதிபரிடம் நிதி உதவி பெற முடியவில்லை. உங்களை எனக்கு யார் என்று தெரியாத நிலையில் நான் எப்படி உதவி செய்ய முடியும்? என அவர் கூறிவிட்டார். பெருத்த ஏமாற்றத்தோடு, அந்த ஊழியர் ஊர் திரும்பினார்.

அந்த தொழிலதிபரின் தாராள குணத்தைக் குறித்த விசுவாசம் சரியானதே. ஆயினும் இருவருக்கும் இடையில் ஒரு தொடர்பு நிலை இல்லாததால், அந்த விசுவாசம் பலன் தரவில்லை. இதுபோலவே நமக்கு பெரிய நன்மைகள் செய்வார் தேவன் என்ற நம்முடைய விசுவாசம் சரியானதே. அதே வேளையில் நமக்கும், தேவனுக்கும் இடையில் ஒரு உறவு ஏற்படவேண்டியது அவசியமாகின்றது. ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான். அந்த விசுவாசம் தேவ உறவை சார்ந்ததாக இருந்தது. ஆபிரகாமுக்கும், தேவனுக்குமிடை யில் தொடர்ந்து நெருக்கமான உறவும், ஐக்கியமும் இருந்தது. அந்த உறவின் பின்னணியில் தான் ஆபிரகாமின் விசுவாசம் மிகுந்த பலன்களைத் தந்தது. அநேகர் தேவன் வல்லவர், அற்புதம் செய்கின்றவர், மனதுருகுகின்றவர் என்ற பொதுவான அறிவின் அடிப்படையை மட்டும் சார்ந்து அதிகமாக நம்புவதற்கு முன்வருகின்றனர். ஆயினும் தேவனோடு ஒரு தொடர்பு ஏற்பட வேண்டியது அவசியம்

என்றும், அந்த தொடர்பு அவர் மீது அதிக விசுவாசத்தை நமக்கு கொண்டு வரும் என்றும் அறியாதிருக்கின்றர். இந்த உறவு என்னும் அஸ்திபாரத்தின் மேல் நின்று நாம் பெரிய காரியங்களுக்காக தேவனை விசுவாசித்தால் அந்த விசுவாசம் தேவனால் கனப்படும்.

யோர்தானை இஸ்ரவேலர் விசுவாசத்தால் கடந்தார்கள் என்ற சம்பவத்தை முன்னுதாரணமாக வைத்து சிலர் தாங்களும் ஒரு ஆற்றைக் கடக்க முடியும் என விசுவாசித்து கடக்க முயற்சித்தார்களாம். ஆனால் அவர்களின் விசுவாசம் அவர்களுக்கு கை கொடுக்கவில்லை. அவர்கள் ஆற்றோடு போக நேரிட்டதாம். யோர்தான் பிரிந்ததென்றால் அங்கே ஒரு தேவையும், தேவனுடைய திட்டமும் இருந்தது. அதனைப் பார்த்து எல்லோரும் ஆறுகளை கடக்க முயற் சிப்பது வீண்வேலையே.

கிரியைகளில்லாத விசுவாசம் செத்தது என்று (யாக். 2:26) வசனம் கூறுகிறது. நம்முடைய பிதாவாகிய ஆபிரகாம் தன் குமாரன் ஈசாக்கைப் பலிபீடத்தின் மேல் செலுத்தின போது கிரியைகளினாலே அல்லவோ நீதிமானாக்கப் பட்டான் (யாக். 2:21).

ஆபிரகாமுடைய விசுவாசம் கிரியைகளினாலே பூரணப் பட்டது. விசுவாசம் என்றால் தேவனை சார்ந்து செயல்படுதல் என்று அர்த்தம் கொள்ளலாம். தேவனை சார்ந்து கொண்டி ருக்கின்ற அனுபவம், நம்மால் சாதர்ரணமாக கூடாத காரி யங்களை, கூடும்படியாகச் செய்கின்றன. ஆனால் அநேகர்

விசுவாசம் என்றால் புலியாக இருப்பார்கள். ஆனால் செயல் பாட்டிலே ஒரு சாதாரண பூனை அளவிற்கும் இருக்க மாட்டார்கள். வேறு சிலருக்கு தேவசார்பு நிலையின் தேவையைக் குறித்த கவலையே கிடையாது. அவர்கள் பல நற்காரியங்களை, அது குணநிலையாயிருந்தாலும் சரி, செயல் நிலைகளாயிருந்தாலும் சரி தங்களின் சொந்த பலத்தில் செயல்படுத்துவார்கள். வேதம் கிறிஸ்தவ நெறி களையும், ஒழுங்குகளையும், கடைப்பிடிப்பதைக் குறித்து மட்டுமே பேசவில்லை. கிறிஸ்துவின் மேல் விசுவாசம் வைத்தல், அவரோடு ஐக்கியமடைதல், அவரின் அன்பை உணர்தல், அவரால் வழிநடத்தப்படுதல், அவரால் உருமாற்றப் படுதல் என பல படிநிலைகளைக் குறித்தும் பேசுகிறது. தேவ சார்பு நிலையின் விளைவாக ஆவியினால் விசுவாசம் இருதயத்தில் உருவாகிறது.

விரலுக்கேத்த வீக்கம் என்னும் ஒரு பழமொழி உண்டு. விரலின் அளவுக்கேற்றபடியே அது வீங்க முடியும். தோளின் வலுவுக்கேற்றபடியே அது சுமையைத் தாங்கமுடியும். ஒரு மனிதனுடைய ஆவிக்குரிய பலத்திற்கேற்றபடியே அவனிடம் விசுவாசம் தங்கமுடியும். அந்த விசுவாச ஆற்றலுக்கேற் பவே அவனுடைய வாழ்க்கையில் வெற்றிகள் பெருக முடியும். சிலவேளை நம்முடைய நம்பிக்கைகளும், விசுவாசங் களும் மிகவும் பெரியதாக இருக்கின்றன. ஆனாலும் வாழ்க்கையில் உண்மையான வெற்றிகளும் இலக்குகளை அடைகின்ற அனுபவங்களும் இல்லை. ஏனென்றால் அந்த நம்பிக்கைகளும், விசுவாசங்களும் நம்முடைய மாம்சத்தில்

தோன்றி வருகிறதேயன்றி ஆவியில் அஸ்திபாரமிடப்பட்டு அது வலுவடைவதில்லை. எனவே எதிர்மாறான சூழ்நிலைகளை சந்திக்கும்போது, பலத்த சுழல்காற்று போன்ற பிரச்சனைகளை சந்திக்கும்போது நம்முடைய விசுவாசம் காற்றில் பறக்கும் பதர்களைப் போல அவைகள் எங்கோ போய் விடுகின்றன.

இன்று பெரும்பாலான ஊழியர்கள் விசுவாசிகளை பெரிய அளவில் விசுவாசிக்கத் தூண்டி அவர்களது ஆசைகளை பலூன்களைப் போல உப்பி விடச்செய்கிறார்கள். ஆனால் அந்த விசுவாசங்கள் வலுவாக நிற்கத் தேவையான ஆவிக்குரிய அஸ்திபாரங்களைக் குறித்து எதையும் சொல்லாமல் போய்விடுகிறார்கள். பெரிய வேலை, வசதியான வீடு, வசதியான கார், வசதியான வாழ்க்கை என்று பெரிய விசுவாசக் கனவுகள் மட்டும் போதாது. தேவனோடு நமக்குள்ள உறவுகளும், பழக்கங்களும் பெருகி, அதனால் இதயத்தில் பெரிய அளவில் விசுவாசம் வளமடையும்போது தான் வாழ்க்கையில் உண்மையான வெற்றிகள் பெருக முடியும்.

மாபெரும் ராட்சதனாகிய கோலியாத்தை தன்னால் எளிதாக வீழ்த்த முடியும் என்று தாவீது தன் உள்ளத்தில் உறுதியாக விசுவாசித்தான். அந்த அளவிற்கு அவன் தேவனோடு பழகி, தேவனையே சார்ந்து, தேவன் மேல் நம்பிக்கை வைத்து விசுவாசத்தில் பலமுடையவனாக விளங்கினான். அதுமட்டுமின்றி தன்னுடைய நம்பிக்கையை கோலியாத்திற்கு முன்பாக பயமின்றி விசுவாசத்தோடு

அறிக்கையிட்டான். அது வெறுமனே வாயின் வார்த்தைகளைக் கொண்டு உருவாக்கிய விசுவாச அறிக்கையல்ல. தேவனோடு தாவீதுக்கு இருந்த ஒரு வலிமையான, நிச்சயமான உறவின் பிரதிபலிப்பாகவே அவனுடைய விசுவாச அறிக்கை வெளிப்பட்டது. அநேகர் வாயினால் விசுவாசமான அறிக்கைகளைப் பேசி அறிக்கையிடுவார்கள். ஆனால் வாழ்க்கையில் ஒரு கஷ்டம், சோதனை வரும்போது சீடர்களைப் போல விசுவாசம் காற்றில் பறந்து போய்விடும். பயம் வந்து விடுகிறது. ஆனால் தாவீதுக்கோ, கோலியாத்தைப் பார்த்து கொஞ்சம் கூட பயம் வரவில்லை. பயந்து நடுங்கவில்லை. பயந்து பின்வாங்கிப் போகவில்லை. மாறாக விசுவாசத்தோடு எதிர்த்து நின்றான். வெற்றி பெற்றான். அநேகர் வாயினால் விசுவாசமான வார்த்தைகளைப் பேசி அறிக்கையிட்டால், அப்படியே காரியங்கள் நடந்துவிடும் என நினைப்பதுண்டு. ஆனால் வாயிலிருந்து வரும் விசுவாச வார்த்தைகளுக்கு, ஒரு அடிப்படையான தேவ உறவு சார்ந்த நிச்சயம் வேண்டும்.

முதலாவது சீஷர்களுடைய வாழ்க்கையிலே ஆண்டவர் கூட இருந்தும் பலத்த சுழல்காற்று வந்தபோது, ஆண்டவர் நம்மை காப்பாற்றுவார் என்ற விசுவாசம் இல்லாமற் போயிற்று. இரண்டாவது மிகவும் பயந்தார்கள்.

நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே, நான் உன் தேவன்; நான் உன்னைப் பலப்படுத்தி உனக்கு சகாயம் பண்ணுவேன்; என் நீதியின் வலது கரத்தினால் உன்னைத் தாங்குவேன் என்று (ஏசா. 41:10)

வசனம் சொல்லுகிறது. ஆனாலும் சீஷர்கள் பயந்து நடுங்கினார்கள்.

"பயப்படாதே" என்கிற வார்த்தை வேதத்திலே 366 தடவை வருகிறது. ஒவ்வொரு நாளும் நாம் காலையிலே எழுந்ததும் ஆண்டவரே நான் எதற்கும் பயப்படமாட்டேன். நீர் என்னோடு கூட இருக்கிறீர். எவ்வளவு பலத்த சுழல் காற்றுகள் எங்கள் வாழ்க்கையில் வீசினாலும் நாங்கள் பயப்படமாட்டோம் என்று நாம் வாயினால் அறிக்கை செய்ய வேண்டும். தந்தை பெர்க்மான்ஸ் அவர்கள் அருமையான பாடல் ஒன்று பாடினார்கள்.

பயப்படமாட்டேன் நான் பயப்பட மாட்டேன்
பயப்படமாட்டேன் நான் பயப்பட மாட்டேன்
இயேசு என்னோடு இருப்பதனால்.

காற்று வீசட்டும், கடல் பொங்கட்டும்
எனது நங்கூரம் இயேசு இருக்கிறார்
எனது நங்கூரம் இயேசு இருக்கிறார்

காற்று வீசினாலும், கடல் அலை பொங்கி மோதியடித்தாலும், இயேசு நங்கூரமாக என்னோடு கூட இருக்கிறார். ஆகவே நான்பயப்பட மாட்டேன். இந்த உலகத்திலிருக்கிறவனிலும், நமக்குள் இருப்பவர் பெரியவர். எனவே நாம் பயப்பட வேண்டாம். தாவீது சொல்லுகிறான் : கர்த்தர் என் பட்சத்தில் இருக்கிறார் நான் பயப்படேன்; மனுஷன் எனக்கு என்ன செய்வான் ? (சங். 118:6).

கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன்; அவர் என் வலதுபாரிசத்தில் இருக்கிறபடியால் நான் அசைக்கப்படுவதில்லை. (சங். 16:8)

நான் பயப்படுகிற நாளில் உம்மை நம்புவேன் (சங். 56:3).

ஆண்டவர் யோவானைப் பார்த்து கூறினார் : நீ பயப்படாதே, நான் முந்தினவரும் பிந்தினவரும், உயிருள்ளவருமாயிருக்கிறேன். (வெளி. 1:17).

மோசே இஸ்ரவேல் ஜனங்களை வழிநடத்திச் சென்றான். மோசே மரித்த பின், இஸ்ரவேல் ஜனங்களை வழிநடத்திச் செல்ல கர்த்தர் யோசுவாவைத் தெரிந்து கொண்டார். ஆனால் யோசுவா மிகவும் பயந்து நடுங்கினான். காரணம், ஐயோ, இந்த ஜனங்களை நான் எப்படி வழி நடத்துவது ? மோசேயின் மூலம் கர்த்தர் எத்தனையோ, அற்புத அடையாளங்களைச் செய்தார். சிவந்த சமுத்திரத்தை இரண்டாகப் பிளந்து இஸ்ரவேல் ஜனங்களை வழிநடத்தினார். இறைச்சியைக் கேட்டால் இறைச்சியைக் கொடுத்தார் தண்ணீர் கேட்டால் தண்ணீரும், பகலில் மேகஸ்தம்பமாகவும், இரவில் அக்கினிஸ்தம்பமாகவும் இப்படி மோசேயின் மூலமாக கர்த்தர் எத்தனையோ அற்புத அடையாளங்களைச் செய்த மோசேயை ஜனங்கள் கொல்லப் பார்த்தார்கள். அப்படிப்பட்ட இந்த ஜனங்களை நான் எப்படி வழிநடத்துவது என்று பயந்தான். ஆனால் ஆண்டவர் யோசுவாவைப் பார்த்து சொன்னார் : நீ உயிரோடிருக்கும்

நாளெல்லாம் ஒருவனும் உனக்கு முன்பாக எதிர்த்து நிற்பதில்லை; நான் மோசேயோடே இருந்ததுபோல, உன்னோடும் இருப்பேன்; நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை (யோசு. 1:5).

கர்த்தர் தாமே உனக்கு முன்பாகப் போகிறவர். அவர் உன்னோடே இருப்பார்; அவர் உன்னைவிட்டு விலகுவது மில்லை. உன்னைக் கைவிடுவதுமில்லை; நீ பயப்படவும் கலங்கவும் வேண்டாம் என்றார் (உபா. 31:8).

கர்த்தர் மோசேயோடு இருந்தது போல யோசுவாவோடும் கூட இருந்து, பெரிய காரியங்களைச் செய்தார். யோசுவா பயப்படும் சூழ்நிலைகள் வரும்போதெல்லாம் கர்த்தர் யோசுவாவைப் பார்த்து நீ பயப்படாமலும், கலங்காமலும் இரு என்று தைரியப்படுத்தினார். கர்த்தர் யோசுவாவோடு கூட இருந்ததினால் அவன் கீர்த்தி தேசமெங்கும் பரம்பிற்று. (யோசு. 6:27). அதுமாத்திரமல்ல யோசுவாவின் சொல்படி கர்த்தர் செய்தார். ஒருவிசை எமோரியர் இஸ்ரவேலருக்கு விரோதமாக வந்தபோது யோசுவா கர்த்தரை நோக்கிப் பேசி சூரியனே, நீ கிபியோன்மேலும், சந்திரனே நீ ஆயலோன் பள்ளத்தாக்கின்மேலும் தரித்து நில்லுங்கள் என்றான். சூரியனும், சந்திரனும் தரித்து நின்றது. சூரியன் அஸ்தமிக்கத் தீவிரிக்காமல், ஒரு பகல்முழுவதும் நடுவானத்தில் நின்றது.

இப்படிக் கர்த்தர் ஒரு மனிதனுடைய சொல் கேட்ட அந்நாளையொத்தநாள் அதற்கு முன்னுமில்லை அதற்குப்

பின்னுமில்லை (யோசு. 10:14). இப்படியாகக் கர்த்தர் யோசுவாவோடுகூட இருந்து கிரகிக்கமுடியாத பெரிய காரியங்களைச் செய்தார்.

பல நேரங்களில் தேவன் நம்மோடிருக்கிறார் என்ற விசுவாசம் நமக்கிருந்தாலும், நாம் நம்மை தனியாக நினைத்தே காரியங்களை அணுகுகின்றோம். கர்த்தரை நம்மோடு இணைத்துப் பார்த்து, இருவரும் சேர்ந்த பலத்தோடு காரியங்களைப் பார்க்கத் தவறுகின்றோம். எந்த ஒரு செயலைக் குறித்தும், சிந்திக்கும்போதும் நம்முடைய ஆற்றலையும், திறமையுமே கணக்கிடுகிறோம். கானானை வேவு பார்க்கச் சென்றவர்கள் தங்களுடைய சக்திக்கு அப்பாற்பட்ட ஒரு சூழ்நிலையை சந்திக்க வேண்டிய தேவையைக் கண்டனர். அங்கே அவர்கள் தங்களுடைய பலத்தை மட்டுமே கணக்கிட்டு அது கூடாத காரியம் என முடிவு செய்தனர். அவர்கள் தங்களுடன் வரும் தேவனோடு தங்களை இணைத்து, அந்த சூழ்நிலைகளைப் பார்த்திருந்தால் அது மேற்கொள்ளத்தக்க ஒன்றாக இருந்திருக்கும். அந்த விசுவாசப்பார்வை யோசுவாவுக்கும், காலேப்பிற்கும் இருந்தது. எனவே அவர்கள் "கர்த்தர் நம்மோடே இருக்கிறார். அவர்களுக்குப் பயப்படவேண்டாம்" என்றனர். (எண். 14:9)

இதேவிதமாக தேவனைச் சார்ந்து, சூழ்நிலைகளைப் பார்க்கும் பார்வை தாவீதுக்கும் இருந்தது. எனவே சவுலால் சாதிக்க முடியாததை தாவீது சாதித்தான். எலிசாவின் வேலைக்காரன் சீரிய படையைப் பார்த்ததும் தங்களை தனியாகப் பார்த்து பயந்து நடுங்கினான். ஐயோ, என்

ஆண்டவனே என்ன செய்வோம் என்றான். ஆனால் எலிசாவோ, தன்னைத் தேவனோடு இணைத்துப் பார்த்து சீரிய படையைக் குறித்து எந்த பீதியும் இல்லாதிருந்தான். ஆகவே தான் எலிசா சொன்னான்: பயப்படாதே; அவர் களோடிருக்கிறவர்களைப் பார்க்கிலும் நம்மோடிருக்கிற வர்கள் அதிகம் என்றான். (II இரா. 6:16).

ஆம், உங்கள் வாழ்க்கை சூழ்நிலைகள் ஒருவேளை கோலியாத்தைப் போல, நெடிய ஏனாக்கியர்களைப் போலவும், சீரிய சேனையைப் போலவும், உங்கள் சக்திக்கு அப்பாற்பட்ட தாக இருக்கலாம். ஆகவே உங்களைத் தனியாக பார்க்கா திருங்கள். தேவனோடு இணைத்துப் பாருங்கள். அப்போது எல்லாவற்றையும் வெற்றியாக சந்தித்து கடந்து செல்லும் விசுவாச பலம் வந்துவிடும். நமக்குள் இருப்பவர் இந்த உலகத்தில் இருக்கிறவனைப் பார்க்கிலும் பெரியவர். "துன்ப அலை தொடர்ந்து வந்தாலும் பயப்படாதே. அன்பரோடு இணைந்து நின்றால் ஆபத்தில்லை" என்பதை மறந்து விடாதிருங்கள்.

கர்த்தருடைய வழி சுழல்காற்றிலும், பெருங்காற்றிலும் இருக்கிறது; மேகங்கள் அவருடைய பாதத்தூளா யிருக்கிறது (நாகூம் 1:3).

தேவனுடைய ஊழியர் ஒருவர் மரண இருளின் பாதையில் கடந்து செல்ல நேரிட்டது. அப்போது அவர், "நான் ஆண்டவருக்காய் உண்மையாய் உழைத்தேனே, எனக்கு ஏன் இந்த உபத்திரவம், கண்ணீர் என்று

ஆண்டவரை நோக்கிக் கதறினார். ஒருநாள் ஆண்டவர் அவருக்கு ஒரு தரிசனத்தைக் காண்பித்தார். அந்த தரிசனத்தில், வெகு தூரம் போய்க்கொண்டிருந்த ஒரு பெரிய சாலை திடீரென்று முற்றுப் பெறுகிறது. அதன் பிறகு பெரிய பள்ளத்தாக்கு. அதையடுத்து கொஞ்சதூரத்தில் அந்த சாலை திரும்பவும் தொடருகிறது. அந்த சாலையில் நடந்து போய்க் கொண்டிருந்த இந்த தேவ ஊழியர் சாலை முற்றுப் பெற்றதும் இந்த பள்ளத்தாக்கை எப்படி தாண்டிச் செல்வது ? என்று யோசித்துக் கொண்டிருக்கும்பொழுது, மேலேயிருந்து ஒரு பெரிய கரம் வந்தது. அந்த நேரத்தில் ஒரு இனிமையான குரல், "இந்த கரத்தில் நீ ஏறிக்கொள்" என்று ஒலிக்க, அவர் மகிழ்ச்சியோடு அந்த கரத்தில் ஏறிக் கொண்டார். அந்த கரம் அவரை மறுகரைக்கு தூக்கிச் சென்றது. அந்த பள்ளத்தாக்கினுள்ளிருந்த கரிய உருவங்கள் அவரை எப்படியாவது பள்ளத்தாக்கிற்குள் இழுத்துவிடவேண்டும் என்று எட்டி, எட்டி குதித்தன. அவை எவ்வளவு உயரமாய் குதித்து எழுந்தனவோ, அவ்வளவுக் கதிகமாய் அந்த நேசக்கரம் அவரை மேலாக உயர்த்தி, மறுகரைக்கு பத்திரமாய் கொண்டு போய்ச் சேர்த்தது. மீண்டும் அதே குரல் "தொடர்ந்து செல், பின்னிட்டுப் பாராதே" என்று ஒலித்தது. ஆண்டவர் அற்புத விதமாக அந்த தேவ மனிதனை மரண இருளிலிருந்து வெளியே கொண்டு வந்தார்.

நமக்கு சோதனைகள் வரும்போது நாம் கலங்கித் தவிக்கிறோம். எனக்கு உதவி செய்ய யாருமில்லையே, என்

கஷ்டத்திலிருந்து என்னைத் தூக்கிவிட ஒருவரும் இல்லையே என்று தவிக்கின்றோம். ஆனால் ஆண்டவர் நம் கூட நிழலாக நம்மைத் தொடர்ந்து வருகிறார். நம் நினைவாகவே அவர் இருக்கிறார். தன் நாச்சியாராகிய சாராயை விட்டு வனாந்தரத்தில் ஓடி அலைந்து திரிந்தபோது ஆகாரை தேவன் பார்த்துக் கொண்டே இருந்தார். ஆகவே தான் ஆகார் தேவனுக்கு ஒரு பெயர் வைத்தாள். என்னைக் காண்பவரை நானும் இவ்விடத்தில் கண்டேன் அல்லவா என்று சொல்லி, தன்னோடே பேசின கர்த்தருக்கு, "நீர் என்னைக் காண்கிற தேவன் என்று பேரிட்டாள்." (ஆதி. 16:13) நாம் செய்கிற காரியங்கள், மனதின் நினைவுகள் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டே இருக்கிறார். மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன். மனுஷன் முகத்தைப் பார்க்கிறான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார் (1 சாமு. 16:7).

ஆவிக்குரிய சகோதரர் ஒருவர் நல்ல பக்தியுள்ளவராகவும், நல்ல அன்புள்ளவராகவும், பழகின ஒருவரோடு நல்ல உறவு கொண்டு நெருக்கமான ஒரு ஐக்கியத்தை வைத்திருந்தார். ஆனால் சில காலம் சென்றபின் அந்த மனிதர் உள்ளொன்றாகவும், வெளியொன்றாகவும் இருப்பதை அறிய நேர்ந்தது. அவருடைய உண்மையான மனநிலை அறியாமல் ஆழ்ந்த ஐக்கியம் வைத்ததின் விளைவாக அவர் பல கஷ்டங்களைக் காண நேர்ந்தது. இந்த சகோதரருடைய ஒரு அங்கலாய்ப்பு என்னவென்றால் அந்த நபரோடு தொடர்பு வைத்து, சில கஷ்டங்களைக் காணும்வரை, கர்த்தர் ஏன் அவ்வித உறவு ஏற்படாமல் தடுக்கவில்லை என்பதாகும்.

சிலநேரங்களில் தேவன் தம்முடைய பிள்ளைகள் தவறான பாதையில் செல்லும்போது தடுக்காமலிருந்து விடுகிறார். சில தவறான முடிவுகளை எடுக்கும்போது தவறு என்று உணர்த்தாமலிருந்து விடுகிறார். சில தவறான மனிதர் களோடு உறவு கொள்ள நேரிடுகின்றபோது தடை செய்யா மலிருந்து விடுகிறார். ஏனென்றால் சில தவறுகள் வழியாகக் கூட நமக்கு சில பாடங்களைக் கற்றுத் தருவது அவருடைய சித்தமாயிருக்கிறது. சில தவறான உறவு, மற்றும் பாதை களின் விளைவுகளை நாமாகக் கண்டு அதை உணர்ந்து, ஒரு ஜாக்கிரதை உணர்வை ஏற்படுத்திக்கொள்ள அவர் அனுமதிக்கிறார். அவ்வித பாடங்களைக் கற்றுக் கொள்வதின் மூலம் பின்னாட்களில் பல தவறுகளை தவிர்க்கவும், மிகுந்த ஜாக்கிரதையுணர்வுடன் சரியாக சிந்தித்து செயல்படவும் வழி ஏற்படுகின்றது.

ஆபிரகாம் கானானில் பஞ்சம் வந்தபோது எகிப்தை நோக்கிச் சென்றான். அது ஒரு தவறான பாதை. ஆயினும் தேவன் தடுக்கவில்லை. அங்கே அவனுக்கு பலவித மன வியாகுலங்கள் நேரிட்டது. அதன்மூலம் சுய ஆலோசனை யின்படி பாதைகளை தெரிந்து கொள்ளுதல் எவ்வளவு தவறானது என்பதை உணர்ந்து ஜாக்கிரதையோடு செயல் பட வழி ஏற்பட்டது. எவ்வளவு நெருக்கங்கள் ஏற்பட்டாலும் தேவ வழி நடத்துதலுக்காக காத்திருக்க வேண்டியது எவ்வளவு அவசியம் என்பதை அனுபவப்பூர்வமாக உணர முடிந்தது.

சில தவறான முடிவுகளை நாம் எடுத்து அதன் விளைவாக பல கஷ்டங்களை அடைய நேரிடும்போதுதான், பின்னாட்களில் எச்சரிக்கையோடு நல்ல முடிவுகளை எடுப்பதற்கான விழிப்புணர்வு கிடைக்கின்றது. சில தவறான மனிதர்களின் உறவால் கஷ்டப்பட நேரிடும்போதுதான் பின்னாட்களில் மனிதர்களோடுள்ள உறவுநிலைகளில் மிகுந்த ஜாக்கிரதையுடன் செயல்பட வழி ஏற்படுகின்றது. ஒருவேளை அவ்விதமான ஒரு கசப்பான அனுபவத்தின் வழியாக கடந்து செல்ல தேவன் அனுமதியாதிருந்தால், அவ்வித பாடங்களை நாம் கற்கும் வாய்ப்பில்லாமல் போய், பின்னர் பெரிய குழியில் விழுந்து, வியாகுலப்பட நேரிடும்.

ஆகவே சோதனைகளைக் கண்டு துவள வேண்டாம். மனம் சோர்ந்து போக வேண்டாம். ஆண்டவர் நம்மோடு கூட இருக்கிறார். எத்தனை பெரிய பலத்த சுழல்காற்று போன்ற பிரச்சனைகள் வந்தாலும் விசுவாசத்தில் உறுதியாயிருப்போம். பயப்பட வேண்டாம். அந்த சந்தர்ப்பங்களில் தம்மை விசுவாசிப்பவர்களின் வழியாக தம்முடைய மகிமையை வெளிப்படச் செய்கின்றார்.

8. தீக்காற்று

வனாந்தரத்திலுள்ள உயர் நிலங்களிலிருந்து, ஒரு தீக்காற்று என் ஜனமாகிய குமாரத்திக்கு நேராக அடிக்கும். (எரே. 4:11)

இங்கு ஒரு காற்றைப் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. அது என்ன காற்று தெரியுமா ? தீக்காற்று.

இந்த காற்று எங்கிருந்து வருகிறது தெரியுமா? வனாந்தரத்திலிருந்து. வனாந்தரத்திலிருந்து வருகிற காற்று தீக்காற்றாகத்தான் இருக்கும்; காரணம் வனாந்தரம் எப்படி இருக்கும். மரம், செடி, கொடிகள், நீரூற்றுகள் இல்லாமல் வறட்சி யாக, வறண்டு போய் இருக்கும்; காய்ந்து போய் இருக்கும். அப்படிப்பட்ட இடத்திலிருந்து வருகிற காற்று சூடாகத்தான் இருக்கும். இந்த காற்றை யாரும் விரும்ப மாட்டார்கள். இந்த காற்றினால் யாருக்கும் ஒரு நன்மையும் இல்லை. ஒரு பிரயோஜனமுமில்லை.

இந்த காற்று எதைக் குறிக்கிறது தெரியுமா?

யாக். 3:6 – நாவு நெருப்பு. நாவைக் குறிக்கிறது. மனிதர்களின் வாயினால் பேசப்படும் நெருப்பைப் போன்ற தீய வார்த்தைகளைக் குறிக்கிறது.

ஒரு கல்லூரியில், ஒரு நல்ல மனிதர் விரிவுரையாள ராக பணிபுரிந்து வந்தார். அவருக்கு மிகவும் அழகுள்ள மனைவி இருந்தாள். ஒருநாள் மதியம் இவர் சாப்பிட வீட்டிற்கு வந்தபோது, மனைவி தனது உடலில்

மண்ணெண்ணெயை ஊற்றிக் கொண்டு நிற்பதைக் கண்டு மனம் பதைத்துப் போனார். "ஏன் இப்படி நிற்கிறாய் ?" என்று கேட்டதும், உங்கள் தாயின் கடின வார்த்தைகளை என்னால் தாங்கமுடிய வில்லை. தினமும் நெருப்பைப்போல என் மீது எரிந்து விழுகிறார்கள். அவர்களின் வார்த்தைகள் அக்கினியைப் போல என்மீது கொந்தளித்து வருகிறது. இனி இந்த உலகில் என்னால் வாழமுடியாது. ஆகவே தான் மண்ணெண்ணையை ஊற்றிக்கொண்டு அக்கினி யினாலே என்னை அழித்துக் கொள்ளப்போகிறேன் என்று மனம்நொந்து கூறினார். கணவனுக்கு என்ன செய்வ தென்றே தெரியவில்லை. ஒருபக்கம் அன்பு மனைவி, மறுபக்கம் தன் மனைவியை வெறுக்கும் தன் பாசமிகு தாய். சில வினாடிகளுக்குள் தான் சொன்னபடியே அவரது மனைவி தன் உடலில் தீ வைத்துக் கொண்டாள். பதறிய படியே கணவன், அவளைக் காப்பாற்ற ஓடோடி வந்தார். அந்தோ, பரிதாபமாக அவர் கண் முன்னாலேயே துடிதுடித்து மாண்டுபோனார். இப்படி தீக்காற்றைப் போல பேசுகிற வர்களின் வார்த்தைகளினால், எரிந்து சாம்பலாகும் குடும்பங்கள் தான் இன்று எத்தனை, எத்தனை!

ஆம், அவரது தாயின் நிந்தையான, நொறுக்குதலான தீக்காற்றைப் போன்ற வார்த்தைகள் அவர் மனைவியின் உள்ளத்தை உடைத்தது. உயிரையே மாய்த்துக் கொள்ளும் படி செய்தது. வஞ்சக வார்த்தைகள் காற்றுக்கு சமான மானவை (நீதி. 25:14); அவைகள் தீக்காற்று (எரே. 4:11); எரிகிற அக்கினி (நீதி. 16:27); தீயை இறைக்கிறது போன்றவை.

இவை தாம் நம் குடும்பத்தின்மேல் காற்றைப்போல வீசி அழித்துப் போடுகின்றன.

அப்போஸ்தலனாகிய யாக்கோபு நாவைப் பற்றி யாக்கோபு நிருபத்தில் எழுதும்போது நாவை நெருப்புக்கு ஒப்பிட்டு எழுதுகிறார். நாவும் நெருப்புத்தான் (யாக். 3:6), அது அநீதி நிறைந்த உலகம்; நம்முடைய அவயவங்களில் நாவானது முழுச்சரீரத்தையும் கறைப்படுத்தி, ஆயுள் சக்கரத்தைக் கொளுத்திவிடுகிறதாயும், நரக அக்கினி யால் கொளுத்தப்படுகிறதாயும் இருக்கிறது. நாவை அடக்க ஒரு மனுஷனாலும் கூடாது. அது அடங்காத பொல்லாங் குள்ளதும், சாவுக்கேதுவான விஷம் நிறைந்தது மாயிருக்கிறது. இந்த நாவாலே பிதாவாகிய தேவனைத் துதிக் கிறோம். தேவனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனுஷரை அதினாலேயே சபிக்கிறோம். துதித்தலும், சபித்தலும் ஒரே வாயிலிருந்து புறப்படுகிறது.

ஒரு கிராமம் ஒன்றில் ஒரு கணவனும், மனைவியும் வசித்து வந்தார்கள். அவர்களுக்கு குழந்தைகளில்லை. மனைவி எப்பொழுதும் கணவனிடம் சண்டைபோட்டுக் கொண்டேயிருப்பாள். கணவரோ வாயைத் திறக்கமாட்டார். எதிர்த்துப் பேசினால் பயங்கர சண்டை வரும் என்று மனைவி பேசுகிற வார்த்தைகளெல்லாம் பொறுமையாக கேட்டுக்கொண்டேயிருப்பார். காலையில் வேலைக்குச் செல்லும் முன்பும் சண்டைதான். மாலையில் வேலையி லிருந்து எப்பொழுது திரும்பி வருவார், சண்டை போடலாம் என்று வெளியில் வீட்டுத் திண்ணையில் காத்துக்

கொண்டேயிருப்பாள். திடீரென்று ஒருநாள் அவள் வீட்டின் முன்பு கார் ஒன்று வந்து நின்றது. காரினுள்ளிருந்து நான்கு பேர் சேர்ந்து அவளுடைய கணவனை தூக்கிக் கொண்டு வந்து அவள் முன் வைத்துவிட்டு அம்மா, இவருக்கு திடீரென்று மாரடைப்பு வந்து, உடனே இவர் உயிர் போய் விட்டது என்று கண்ணீர் வடித்தார்கள். அவள் உள்ளம் குமுறி, அந்தப் பிணத்தின் மீது விழுந்து, கூச்சலிட்டு, அழுது புரண்டாள். அக்கம், பக்கத்திலிருந்தவர்கள் ஓடி வந்தார்கள். இறந்த கணவருக்காகப் பரிதாபப்பட்டார்கள். ஆனால் இவளையோ வாய்க்கு வந்தபடி திட்டினார்கள். கணவன் உயிரோடு இருக்கும்போது ஒருநாள் கூட அவரை நிம்மதியாக இருக்கவிடவில்லை. ஓயாமல் திட்டி அவரிடம் சண்டை போட்டுக் கொண்டேயிருப்பாள். தீய வார்த்தைகளால் கடுமையாகப் பேசுவாள். இப்போது அவர் நிம்மதியாகப் போய்விட்டார். இவள் எதற்கு அழுகிறாள் என்று கேவலமாகப் பேசினார்கள்.

இன்று இப்படிப்பட்ட மனிதர்கள் பேசும் தீயவார்த்தைகளால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் ஏராளம், ஏராளம். திருக்குறளில் திருவள்ளுவர் கூட மிகவும் அழகாக அறத்துப்பால், அடக்கம்உடைமை 129ம் குறளில் பாடியுள்ளார்.

"தீயினால் சுட்டபுண் உள்ஆறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு"

தீயினால் சுடுகின்ற புண்கூட நாளடைவில் புண் ஆறி,

இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிடும். ஆனால் மனிதர்கள் நாவினால் பேசுகின்ற தீய வார்த்தைகள், கொடிய வார்த்தைகள் தீக்காற்றைப் போல நம் உள்ளத்தில் வீசி, ஆறாத புண்களாய் மாறிவிடுகிறது.

சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு ஊரில் பெரிய நகை வியாபாரி ஒருவர் தனது மனைவி மற்றும் ஆறு குழந்தை களுடன் தற்கொலை செய்துகொண்டார். தற்கொலைக்கு முன்பதாக அவர் காவல்துறையினருக்கு பின்வருமாறு கடிதம் ஒன்றை எழுதியிருந்தார். “ஐயா, நான் ஒரு மனிதரி டம் என் வியாபாரத்திற்காக ரூபாய் பத்து லட்சம் கடன் வாங்கியிருந்தேன். அதை சரியான நேரத்தில் என்னால் திருப்பிக் கொடுக்க முடியாததால், அந்த மனிதன் தினமும், காலையிலும், மாலையிலும் என் வீட்டின் முன்பு வந்து தீய வார்த்தைகளால் திட்டுவான். இன்று காலையிலும் கூட ஒரு கும்பல் ரவுடிகளைக் கூட்டிக்கொண்டுவந்து என்னை திட்டியதோடு மட்டுமல்ல என் மனைவி, பிள்ளைகளையும் வேண்டாத கொடிய வார்த்தைகளால் திட்டி விட்டுச் சென்றான். நாங்கள் கவுரவமாக, யாருக்கும் எந்த கெடுதலும் செய்யாமல் வாழ்ந்தவர்கள். இப்படிப்பட்ட வார்த்தைகளை நாங்கள் எங்கள் வாழ்க்கையில் கேட்டதே இல்லை. இந்த வார்த்தைகளை கேட்டுவிட்டு நாங்கள் இந்த உலகத்தில் இனி வாழ்ந்து பிரயோஜனமில்லை. அவமானம் தாங்க முடியவில்லை. அவர்கள் பேசின கடினவார்த்தைகள் எங்களுடைய உள்ளத்தை கொந்தளிக்கச் செய்துவிட்டன; உடைந்து போனோம். இனிமேல் நாங்கள் வாழ்ந்து என்ன

பயன் என முடிவு செய்து, குடும்பமாய் தற்கொலை செய்து கொள்கிறோம். காவல்துறை அதிகாரி அவர்களே, தயவு செய்து, இந்த வீட்டை விற்று அந்த மனிதரின் கடனை அடைத்துவிடுங்கள்.

இப்படி தான், மனிதனின் தீய வார்த்தைகள் தீக்காற்றைப் போல வீசி குடும்பங்களை கண்ணீரில் மூழ்கும்படி செய்துவிடுகிறது.

நாவு எப்படிப்பட்டது என்று வேதத்தில் எழுதப்பட்டிருப் பதைப் பார்ப்போம் :

1. நாவு தீட்டப்பட்ட சவரகன் கத்தியைப்போல் இருக்கிறது (சங். 52:2).
2. நாவு கருக்கான பட்டயமுமாயிருக்கிறது (சங். 57:4).
3. சர்ப்பத்தைப் போல் தங்கள் நாவைக் கூர்மையாக்கு கிறார்கள். அவர்கள் உதடுகளின்கீழ் விரியன் பாம்பின் விஷம் இருக்கிறது (சங். 140:3).
4. மரணமும், ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கிறது (நீதி. 18:21).
5. நாவு கூர்மையாக்கப்பட்ட அம்பு, அது கபடம் பேசுகிறது (எரே. 9:8).
6. நாவானது சிறிய அவயவமாயிருந்தும் பெருமையான வைகளைப் பேசுகிறது (யாக். 3:5).
7. நாவு நெருப்பு, அது அநீதி நிறைந்த உலகம். (யாக். 3:6)
8. நாவு அடங்காதது, பொல்லாங்குள்ளது, சாவுக்கேது வான விஷம் நிறைந்தது (யாக். 3:8).

9. நாவினால் மனுஷரை சபிக்கிறோம் (யாக். 3:9).
10. பொய் நாவு ஒரு நிமிஷ மாத்திரம் இருக்கும் (நீதி. 12:19).
11. நாவின் மாறுபாடு ஆவியை நொறுக்குகிறது (நீதி. 15:4).
12. நாவு பூமியெங்கும் உலாவுகிறது (சங். 73:9).

நீதிமானுடைய நாவு எப்படிப்பட்டது தெரியுமா?

1. நீதிமானுடைய நாவு சுத்த வெள்ளி (நீதி. 10:20).
2. நீதிமானுடைய வாய் ஞானத்தை வெளிப்படுத்தும் (நீதி. 10:31).
3. நீதிமானுடைய சத்திய உதடு என்றும் நிலைத் திருக்கும் (நீதி. 12:19).
4. ஞானமுள்ளவர்களுடைய நாவோ ஒளஷதம் (நீதி. 12:18).
5. ஞானிகளின் நாவு அறிவை உபயோகப்படுத்தும் (நீதி. 15:2).
6. ஆரோக்கியமுள்ள நாவு ஜீவவிருட்சம் (நீதி. 15:4).
7. நீதிமானின் நாவு விரைவாய் எழுதுகிறவனுடைய எழுத்தாணி (சங். 45:1).

யோபு என்கிற பக்தனுடைய வாழ்க்கையிலும் ஒரு பெருங்காற்று வீசி அவன் பிள்ளைகள், மிருக ஜீவன்கள் எல்லாவற்றையும் ஒரேநாளில் இழந்துபோனான். துக்கத்தின் மேல் துக்கம் அவனை வாட்டி வதைத்தபொழுது, யோபின் மூன்று உயிர் நண்பர்கள் ஓடிவந்து அவனோடு கூட ஏழு நாட்கள் அழுது புலம்பினார்கள் (யோபு 2:13). அதன்பின் அவர்கள் வேதனையான வார்த்தைகளைக் கூறி, அவன்

உள்ளத்தை உடைத்தார்கள். அப்பொழுது யோபு தன் நண்பர்களைப் பார்த்து உங்கள் வார்த்தைகள் வெறும் காற்றைப் போன்ற வார்த்தைகள். எந்தமட்டும் உங்கள் வார்த்தைகளினால் என்னை நொறுக்குவீர்கள். காற்றைப் போன்ற வார்த்தைகளுக்கு முடிவிராதோ என்று அங்கலாய்த்து புலம்பினான் (யோபு 19:2; 16:3). பட்டயக்குத்துகள்போல் பேசுகிறவர்களும் உண்டு (நீதி. 12:18).

சொற்களின் மிகுதியில் பாவமில்லாமற்போகாது; தன் உதடுகளை அடக்குகிறவனோ புத்திமான் (நீதி. 10:19).

எனவே தான் தாவீது சொல்லுகிறான் : கர்த்தாவே, என் வாய்க்குக் காவல் வையும்; என் உதடுகளின் வாசலைக் காத்துக்கொள்ளும் (சங். 141:3).

ஒரு மனுஷனுடைய நாவை திருப்பி விட்டால் அவனுடைய வாழ்க்கையின் திசையை திருப்பி விடலாம் என்பது கர்த்தருக்குத் தெரியும். குதிரைக்கு கடிவாளம் இருக்கிறது போல, கப்பல்களுக்கு சுக்கான் இருக்கிறது போல, கார்களுக்கு ஸ்டியரிங் இருப்பது போல, மனிதனுக்கு நாவு இருக்கிறது. ஒரு மனிதன் கிறிஸ்துவுக்குள் வரும்போது, அபிஷேகத்தைப் பெறும்போது, கர்த்தர் முதலாவது அவன் நாவைத் தொடுகிறார். நாவின் மூலமாக அந்நிய பாஷைகளைப் பேசுகிறான். பரலோக பாஷையைப் பேசுகிறான். அல்லாமலும், அக்கினிமயமான நாவுகள் போல பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது. (அப். 2:3) பரிசுத்த ஆவியின் அக்கினி உங்களுக்குள் வரும்போது, அவர் நாவைத் தொட்டு தீய

வார்த்தைகள், வஞ்சக வார்த்தைகள், பெருமையான பேச்சு களைப் பேசாதபடி நாவை அந்த அக்கினி சுத்தப்படுத்துகிறது. சுட்டெரிப்பின் ஆவியினால் அசுத்தமான நம் நாவைத் தொட்டு சுத்திகரிக்கிறார்.

ஏசாயா ஒரு தரிசனம் கண்டபோது ஐயோ, நான் அதமானேன். நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன். அசுத்த உதடுகளுள்ள ஜனங்களின் நடுவில் வாசமாயிருக்கிறவன். சேனைகளின் கர்த்தராகிய ராஜாவை என் கண்கள் கண்டதே என்றார். அந்த நேரத்தில் ஒருவன் பலிபீடத்தி லிருந்து பறந்து வந்து தன் கையை பிடித்த குறட்டால் ஒரு நெருப்புத்தழலை எடுத்து அவனிடத்தில் வந்து, அவன் வாயைத் தொட்டு, இதோ, உன் உதடுகளைத் தொட்ட தினால், உன் அக்கிரமம் நீங்கி, உன் பாவம் நிவிர்த்தியானது என்றான். கர்த்தர் நம் நாவைத் தொடும்போது நாவு பரிசுத்தமாக்கப்படுகிறது. நாவினால் பரலோக பாஷை களைப் பேசுகிறோம். நாவினால் கர்த்தரைத் துதிக்கிறோம். சங்கீதக் காரனாகிய தாவீது, கர்த்தரை நான் எக்காலத் திலும் ஸ்தோத்தரிப்பேன். அவர் துதி எப்போதும் என் வாயி லிருக்கும் என்று சொன்னது போல, நாமும் நம் நாவினால் வேண்டாத வார்த்தைகள் பேசாதபடி, பிறர்மனது புண் படும்படியான கொடிய வார்த்தைகளால் காயப்படுத்தாதபடி, நம் வாயினால் எப்பொழுதும் எந்நேரமும், இடைவிடாமல் கர்த்தரைத் துதித்துக் கொண்டேயிருப்போம்.

வம்பும், புத்தியீனமான பேச்சும், பரியாசமும் தகாதவை கள்; ஸ்தோத்திரஞ்செய்தலே தகும். (எபேசி. 5:4)

ஒரு மனிதருடைய வீடு தனியாக காட்டுப்பகுதிக்குள் இருந்தது. ஒருமுறை அவர் தன் வீட்டிற்கு வரும்போது வழியில் கொடிய நாகப்பாம்பு ஒன்றைக் கண்டார். உடனே அந்தப் பாம்பை அடித்துக் கொன்றுபோட்டுவிட்டு தன் வீட்டிற்கு போய்விட்டார். அந்த இரவு அவர் தூங்கிக் கொண்டிருக்கும்போது யாரோ கதவைத் தட்டுகிற சத்தம் கேட்டது. அவர் எழுந்து, ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தார். அங்கே ஒரு பயங்கரமான கருநாகப்பாம்பு சீறிக்கொண்டு கதவைக் கொத்திக் கொண்டே இருந்தது. இந்த மனிதர் சுதாரித்துக் கொண்டு, தான் மாலை நேரத்தில் அடித்துப் போட்ட பாம்பை சுட்டெரிக்காமல் வந்ததினாலே, இந்த பாம்பு பழி வாங்கும்படி மோப்பம் பிடித்துக் கொண்டு வந்துவிட்டது என்பதை உணர்ந்து கொண்டார். ஆகவே தன் துப்பாக்கியினால் அந்தப் பாம்பை சுட்டுக் கொன்று தீவைத்து கொளுத்தினார். ஆம், பாம்பை அடித்தால் மட்டும் போதாது, சுட்டெரிக்கவும் வேண்டும்.

அதுபோல நம் நாவை அடக்கினால் மட்டும் போதாது. அக்கினியினால் சுட ஒப்புக்கொடுக்கவேண்டும். கர்த்தருடைய சமுகத்தில் நம் நாவை சுட ஒப்புக்கொடுக்கும்போது, அவர் பரிசுத்த அக்கினியை நம் நாவில் போட்டு தீக்காற்றைப் போன்ற வார்த்தைகள் பேசாதபடி சுட்டெரிக்கிறார். அப்போது நம் நாவு பரிசுத்தமாக்கப்படுகிறது. அந்த பரிசுத்த நாவினால் எப்போதுமே விசுவாச வார்த்தைகளையும், பரிசுத்த வார்த்தைகளையும், கர்த்தருக்குப் பிரியமான வார்த்தைகளையும், வாக்குத்தத்த வார்த்தைகளை

யும் பேசுவோம். வேதம் சொல்லுகிறது : மரணமும், ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கும்; அதில் பிரியப்படுகிறவர்கள் அதின் கனியைப் புசிப்பார்கள் (நீதி. 18:21). நம் நாவை ஆவியானவரிடத்தில் அர்ப்பணிப்போம். எவ்வளவுக்கெவ்வளவு அந்நிய பாஷைகளைப் பேசுவோமோ, அவ்வளவுக்கெவ்வளவு தேவனுடைய மகத்துவங்களைப் பேசுவோம். தேவனைப் புகழ்ந்து பேசுவோம். நம்முடைய நாவின் வார்த்தைகளை, பயனுள்ளவைகளாயிருக்கும்படி உபயோகிப்போம். கர்த்தருக்கு ஊழியஞ்செய்து ஆத்துமாக்களை சம்பாதிப்போம். கர்த்தருடைய வார்த்தைகளினால் குடும்பங்களை கட்டி எழுப்புவோம். துதித்து, ஸ்தோத்தரித்து, கர்த்தரை மகிமைப்படுத்துவோம். கர்த்தருடைய சுவிசேஷத்தை அறிவிப்போம். கர்த்தர் நம்மை அளவில்லாமல் ஆசீர்வதிப்பார்.

9. கோராவாரிக் காற்று

இதோ, கோராவாரிக் காற்றாகிய கர்த்தருடைய பெருங்காற்று உக்கிரமாயெழும்பி, அடித்து, துன்மார்க் கருடைய தலையின்மேல் மோதும். (எரே. 30:23)

இந்தக் காற்றின் பெயர் கோராவாரிக் காற்று. இந்தக் காற்று கர்த்தருடைய கோபமாகிய காற்று. இந்த காற்று யார் மேல் வீசுகிறது என்றால் துன்மார்க்கருடைய தலையின் மேல் மோதி அடிக்கிறது.

யார் **துன்மார்க்கன்?**

1. தேவனைத் தேடாதவன்;. தேவன் இல்லை என்று சொல்லுகிறவன். (சங். 10:4).
2. தேவனை அசட்டை பண்ணுகிறவன் (சங். 10:13).
3. தெய்வ பயம் இல்லாதவன் (சங். 36:1).
4. படுக்கையின் மேல் அக்கிரமத்தை யோசிப்பவன் (சங். 36:4).
5. நீதியின் வழியைப் புரட்டி, பரிதானம் வாங்குபவன் (நீதி. 17:23).
6. கொந்தளிக்கும் கடலைப் போலிருப்பவர்கள். (ஏசா. 57:20).
7. சர்வ வல்லவரை நாம் சேவிக்க அவர் யார்? அவரை நோக்கி ஜெபம் பண்ணுவதினால் நமக்குப் பிரயோஜனம் என்ன என்று சொல்லுகிறவர்கள். (யோபு 21:15).
8. பொல்லாப்புச் செய்ய விரும்புகிறவன் (நீதி. 21:10).
9. நீதிமானுக்கு விரோதமாய்த் தீங்கு நினைக்கிறவன். (சங். 37:12).

10. நீதிமானைக் கொல்ல வகை தேடுகிறவன் (சங். 37:32).

துன்மார்க்கர் எப்படி இருக்கிறார்கள்?

1. துன்மார்க்கர் ஆபத்துநாளுக்கென்று வைக்கப்படுகிறார்கள் (யோபு 21:30).
2. துன்மார்க்கருடைய விளக்கு அணைந்துபோம் (யோபு 18:5).
3. துன்மார்க்கனின் கெம்பீரம் குறுகினது (யோபு 20:4).
4. துன்மார்க்கர் கொந்தளிக்கும் கடலைப் போலிருக்கிறார்கள் (ஏசா. 57:20).
5. துன்மார்க்கருக்குச் சமாதானம் இல்லை (ஏசா. 57:21).
6. துன்மார்க்கருடைய கண்கள் பூத்துப்போம் (யோபு 11:20).
7. துன்மார்க்கருடைய நம்பிக்கை சாகிறவன் சுவாசம் போல் இருக்கும் (யோபு 11:20).
8. துன்மார்க்கன் சுழல்காற்று கடந்துபோவதுபோல் கடந்துபோவான் (நீதி. 10:25).
9. துன்மார்க்கனை அவனுடைய அக்கிரமங்களே பிடித்துக்கொள்ளும் (நீதி. 5:22).
10. துன்மார்க்கன் பயப்படும் காரியம் அவனுக்கு வந்து நேரிடும் (நீதி. 10:24).
11. துன்மார்க்கருடைய வருஷங்கள் குறுகிப்போம் (நீதி. 10:27).
12. துன்மார்க்கர் பூமியில் வசிப்பதில்லை (நீதி. 10:30).
13. துன்மார்க்கன் தன் துன்மார்க்கத்தினால் விழுவான் (நீதி. 11:5).

14. துன்மார்க்கன் அழிந்தால் கெம்பீரம் உண்டாகும் (நீதி. 11:10).

15. துன்மார்க்கனுடைய நம்பிக்கையோ கோபாக்கினை யாய் முடியும் (நீதி. 11:23).

16. துன்மார்க்கர் கவிழ்க்கப்பட்டு ஒழிந்துபோவார்கள் (நீதி. 12:7).

17. துன்மார்க்கரின் தீபம் அணைந்துபோகும் (நீதி. 13:9).

18. துன்மார்க்கனுடைய வீடு அழியும் (நீதி. 14:11).

19. துன்மார்க்கனுடைய வருமானத்தில் துன்பமுண்டு (நீதி. 15:6).

20. துன்மார்க்கனுடைய பலி கர்த்தருக்கு அருவருப் பானது (நீதி. 15:8).

21. துன்மார்க்கனுடைய வழி கர்த்தருக்கு அருவருப் பானது (நீதி. 15:9).

22. துன்மார்க்கனுடைய நினைவுகள் கர்த்தருக்கு அருவருப்பானவைகள் (நீதி. 15:26).

23. துன்மார்க்கனுடைய வாய் தீமைகளைக் கொப்பளிக் கும் (நீதி. 15:28).

24. துன்மார்க்கனுக்குக் கர்த்தர் தூரமாயிருக்கிறார் (நீதி. 15:29).

25. துன்மார்க்கனுக்கு அநேக வேதனைகளுண்டு (சங். 32:10).

26. துன்மார்க்கன் அழிந்து போவான் (சங். 37:20).

27. துன்மார்க்கருடைய புயங்கள் முறியும் (சங். 37:17).

28. துன்மார்க்கருடைய வீட்டில் கர்த்தரின் சாபம் இருக்கிறது (நீதி. 3:33).

ஒரு குறிப்பிட்ட நகரில் செல்வந்தர் ஒருவர் தன் மனைவி, பிள்ளைகளோடு வாழ்ந்து வந்தார். தீராத குஷ்ட ரோக வியாதி அவரைத் தாக்கியது. வியாதியைக் குறித்த கவலை அவரை வாட்டியது. தன் மனைவி, பிள்ளைகளும் கொஞ்சம், கொஞ்சமாய் அவரை விட்டு விலகினார்கள். தனிமையில், கைவிடப்பட்ட சூழ்நிலை. தனிமை வாட்டியது. அவரிடம் ஏராளமாய் பணம் இருந்தபோதிலும், யாரும் அவரைக் கவனிக்கவில்லை. உறவினர்களில் ஒருவர் கூட அவரைத்தேடி வரவில்லை. அவரது வியாதியின் மும்முரத் தினால் பலநாட்கள் மயக்கநிலையில் கிடந்தார். அவருக்கு உதவி செய்ய அவ்வப்போது ஒரு தேவனுடைய மனுஷர் வந்து செல்வார். அந்த மனுஷருக்குள், இனிமேல் அவர் பிழைக்கமாட்டார் என்று தெரிந்ததும் செல்வந்தரின் சொத்துக்களையெல்லாம் ஒருவருக்கும் தெரியாமல் நமது பெயருக்கு மாற்றிக்கொண்டால் என்ன? என்ற குறுக்கு எண்ணம் தோன்றியது. உடனே மயங்கிய நிலையில் படுத் திருந்த அந்த மனிதரின் கைரேகையை ஒரு ஸ்டாம்ப் பேப்பரில் பதித்து, ஒரு வழக்கறிஞரின் உதவியோடு அவரது சொத்துக்களையெல்லாம் தன் பெயரில் எழுதிக் கொண் டார். மயங்கிய நிலையில் இருந்த செல்வந்தர் இறந்த பின்பு, அவரது பிள்ளைகள், சொத்துக்களின் விவரங்களையெல் லாம் தெரிந்துகொள்ள முயற்சித்தபோது, இந்த தேவ மனிதன் பெயருக்கு சொத்துக்கள் மாற்றப்பட்டிருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்தார்கள்.

இந்த தேவ மனிதரின் வீட்டிலோ செல்வம் கொழிக்க

ஆரம்பித்தது. பணம் கையிலே புரண்டது. வருமானம் பெருகியது. ஆனால் அந்த மரித்த மனிதனுடைய வீட்டிலோ வறுமை. மனைவி, பிள்ளைகள் சாப்பாட்டிற்கு கூட வழி யில்லாமல் மிகவும் கஷ்டப்பட்டார்கள். கண்ணீர் வடித்தார் கள். ஆனால் இந்த தேவமனிதரால் மனநிம்மதியோடு வாழ முடியவில்லை. தினந்தோறும் காலையில் ஒரு குறிப்பிட்ட நேரத்தில், அவரது வீட்டில் இறந்துபோன அந்த மனிதர், உயிரோடிருக்கும்போது கால்களில் பூட்ஸை அணிந்து கொண்டு எப்படி நடப்பாரோ அதே போல் டக், டக் என நடக்கும் சத்தம், இந்த தேவமனிதரின் காதுகளில் கேட்கும். உடனே அவர் "ஐயோ" என் கழுத்தை யாரோ நெரிக்கிறார் கள் என்று கூச்சலிடுவார். பல தேவதாசர்கள் வந்து ஜெபித் தும், அந்த பிசாசைத் துரத்த முடியவில்லை. இவருடைய வீட்டில் அந்த மனிதருடைய அத்தனை சொத்துக்களின் ஆதாரங்களும் இருக்கின்றன என்பதும், இதனால் தேவ னுடைய சாபம் இந்த வீட்டில் குடிகொண்டிருக்கிறது என்பதும் அந்த வீட்டிலுள்ளவர்களுக்கும், மற்ற ஊழியர் களுக்கும் தெரியாது. இந்த தேவமனிதரால் நிம்மதியாக தூங்க முடியவில்லை; சாப்பிட முடியவில்லை, நடமாட முடியவில்லை, சாபம் இவரை தொடர்ந்து பிடித்தது. அந்த மரித்த மனிதனுடைய மனைவி, பிள்ளைகளுடைய கண்ணீர் சாபமாக மாறியது. தேவமனிதர் மனநிம்மதியை இழந்தார். வழக்கம் போல ஒருநாள் மீண்டும் அந்த சத்தம் காதுகளில் தொனித்தது. அந்தோ, துடி, துடித்து பரிதாப மாய் மாண்டுபோனார்.

தேவன் நீதியுள்ள நியாயாதிபதி; அவர் நாள்தோறும் பாவியின் மேல் சினங்கொள்ளுகிற தேவன். அவன் மனந் திரும்பாவிட்டால் அவர் தம்முடைய பட்டயத்தைக் கருக்காக்குவார் (சங். 7:11,12).

இந்த மனிதன் அபகரித்த, ஏமாற்றின சொத்துக்களை யெல்லாம் திரும்ப கொடுத்திருக்கலாம். ஆண்டவரும் மன்னித்திருப்பார். ஆனால் அந்த தேவ மனிதன் அதற்கு இடங்கொடுக்கவில்லை. ஆண்டவர் தமது பட்டயத்தை கருக்காக்கினார். அவன் செத்துமாண்டுபோனான். துன்மார்க்கனை அவனுடைய அக்கிரமங்களே பிடித்துக் கொள்ளும் (நீதி. 5:22).

கெட்ட குமாரனுடைய வாழ்க்கையிலும் கூட அவன் தன் தகப்பனை விட்டு தூரமாய், துன்மார்க்கனாய் அலைந்து திரிந்தான். தன் நண்பர்களோடு துன்மார்க்கமாய் வாழ்ந் தான். கண்களின் இச்சையிலும், மனம்போனபோக்கிலும் நடந்தான். தனக்குரிய எல்லாவற்றையும் சேர்த்துக் கொண்டு, தூரதேசத்துக்குப் புறப்பட்டுப்போய், அங்கே துன்மார்க்கமாய் ஜீவனம்பண்ணி, தன் ஆஸ்தியை அழித்துப்போட்டான் (லூக். 15:13). துன்மார்க்கமாய் வாழ்ந்த அவனுடைய வாழ்க்கை குறைவுபடத்தொடங்கியது. கீழான நிலைக்குத் தள்ளப்பட்டான். பன்றிகளை மேய்த்தான் பன்றிகள் தின்கிற தவிட்டினாலே தன் வயிற்றை நிரப்ப ஆசைப்பட்டான். அந்த தவிடு கூட கிடைக்கவில்லை.

அந்த நேரத்தில் அவன் புத்தியில் ஒரு தெளிவு வந்தது

எழுந்தான், புறப்பட்டான். எங்கு ? தன் தகப்பனிடத்திற்கு. தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும், உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன் என்று தன் தவற்றை ஒத்துக் கொண்டான். மனந்திருந்தினான். "தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்;. அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்" (நீதி. 28:13). தன் பாவங்களை அறிக்கையிட்டான். தன் தகப்பனிடத்தில் இரக்கத்தைப் பெற்றுக்கொண்டான். தகப்பன் உயர்ந்த வஸ்திரத்தினால் தன் மகனை அலங்கரித்தான். இவன் மரித்தான், திரும்பவும் உயிர்த்தான்; காணாமற் போனான், திரும்பவும் காணப்பட்டான். அவர்கள் சந்தோஷப் படத் தொடங்கினார்கள் (லூக். 15:24).

ஒரு குறிப்பிட்ட சகோதரர் ஒருவர் நல்ல ஆவிக்குரிய ஈடுபாடும், வாஞ்சையும் உடையவராயிருந்தார். ஆனால் திருமணமான பின் அவருடைய வாழ்க்கையில் பல முட்களால் காயப்பட நேர்ந்தது. அவருடைய ஆவிக்குரிய வாஞ்சைக்கு மனைவி பலவிதங்களில் தடையாக இருந்தார். மனைவியின் குடும்பத்தாருடைய நடவடிக்கைகள் யாவும் தேவனை அறியாதவர்களுக்கு உரியதாக இருந்தது. தன்னுடைய ஆவிக்குரிய வாழ்க்கைக்கு ஏற்ற ஒரு மனைவியைத் தேடாமல், பணம், பொருள், அழகு, படிப்பு என்ற ரீதியாக வாழ்க்கை தேடியதின் விளைவு அது.

சோதோமின் ஜனங்கள் மகாபாவிகளாயிருந்தார்கள். ஆனால் அதன் நடுவில் வாழ்ந்த லோத்து ஒரு பாவியாயிருக்கவில்லை. அந்த மக்களின் மிகுந்த அக்கிரமச்

செயல்களைக் கண்டு நாள்தோறும் மனதில் பாதிப்படைந்த ஒரு நீதிமான் அவன். சோதோமில் வாழ்ந்த மக்களின் துன்மார்க்கமான வாழ்க்கையை பொறுத்துக் கொள்ள இயலாமல் தவித்த சன்மார்க்கன் தான் லோத்து. ஆனால் நீதிமானாகிய அவன் தனக்கேற்ற இடத்தை தெரிந்து கொள்ளாமல், துன்மார்க்கர் வாழும் பகுதியை தெரிந்து கொண்டது அவனுடைய தவறு தான். அக்கிரமங்களை வெறுக்கும் அவன் அதற்குரியவர்களோடு ஐக்கியம் கொள்ளாமல், ஆகாதவர்களின் நடுவில் போய் வாழ்ந்தது அவன் செய்த தவறுதான். அவன் உள்ளத்தில் நீதிமானா யிருந்தும், தவறானத் தேர்வுகளால் வேதனைகளையே விளைவாகப் பெற்றான். நாம் நல்லவர்களாயிருக்கலாம்; ஆயினும் அதற்கேற்றபடியான ஐக்கியத்தையும், பிணைப்பு களையுமே நாம் தெரிந்துகொள்ளவேண்டும். தேவனுடைய வழியில் வாழ்வதற்கு தடைசெய்கின்ற தகுதியற்ற வேலை கள், வியாபாரங்கள், உறவுகள் ஆகியவற்றில் தங்களை பிணைத்துக்கொண்டு, தங்களின் ஆவிக்குரிய உயர் வாழ்க்கையை இழந்துபோவோர் அநேகர். தேவனைத் தங்களின் இதயத்தில் ஏற்காத வாழ்க்கைத் துணைகளை தெரிந்துகொண்டு தங்களைத் தாங்களே விசனப்படுத்து கின்றவர்கள் பலர். பொருளாசை தான் லோத்துவை நீதி மானாகிய ஆபிரகாமிடமிருந்து பிரித்து, துன்மார்க்கர் களாகிய சோதோமியர்களின் நடுவே கொண்டுசென்றது. இதுபோல ஏதாவது ஒரு ஆசை இயேசுவிடமிருந்து நம்மை பிரித்து; துன்மார்க்கரோடு பங்காளிகளாகும்படி நம்மைத் தூண்டும். விழித்திருக்காவிடில் முடிவுகள் வேதனையானவை. வேதம் சொல்லுகிறது: துன்மார்க்கருடைய ஆலோசனையில்

நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும் (சங். 1:1) என்றும், துன்மார்க்கரின் வழியை கர்த்தர் கவிழ்த்துப்போடுவார் (சங். 146:9). துன்மார்க்கர் யாவரையும் அழிப்பார் (சங். 145:20) என்றும் சொல்லுகிறது.

துன்மார்க்கமாய் வாழுகிற, மனம் போன போக்கிலே, கால் போன போக்கிலே, கண் போன போக்கிலே வாழுகிற தேவ பிள்ளைகளே. இன்றைக்கு, இப்பொழுதே உன் வாழ்க்கையை ஆண்டவருடைய கரத்திலே ஒப்புக்கொடு. அநியாயஞ்செய்கிறவன் இன்னும் அநியாயம்செய்யட்டும். அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும் (வெளி. 22:11).

உன் இளமையிலே சந்தோஷப்படு, உன் வாலிப நாட்களிலே உன் இருதயம் உன்னைப் பூரிப்பாக்கட்டும்; உன் நெஞ்சின் வழிகளிலும், உன் கண்ணின் காட்சிகளிலும் நட. ஆனாலும், (ஆனாலும்) என்கிற வார்த்தையை மறந்துவிடாதே. இவையெல்லாவற்றினிமித்தமும், தேவன் உன்னை ஒருநாள் நியாயத்திலே கொண்டு வந்து நிறுத்துவார் என்று அறிந்துகொள் (பிர. 11:9).

அவனவனுடைய கிரியைகளின்படி, அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது (வெளி. 22:12).

நாம் செய்கிற செயல்கள் எல்லாவற்றையும் தேவன் பார்த்துக் கொண்டிருக்கிறார். அவருக்கு முன்பாக

மறைவானது ஒன்றுமில்லை. எல்லாம் நிர்வாணமும், வெளியரங்கமுமாயிருக்கிறது. மகனே, மகளே, தம்பி, தங்கச்சி, வாலிப பிள்ளைகளே, பெரியோர்களே, நீங்கள் யாராயிருந்தாலும் பரவாயில்லை. உன் அந்தரங்க பாவத்தை விட்டு வெளியே வா. உன் மறைமுக பாவத்தை விட்டு வெளியே வா. குடிப்பழக்கத்தை விட்டு வெளியே வா. போதைப் பழக்கத்திற்கு அடிமைப்பட்டிருக்கிறாயா? வெளியே வா. விபச்சார பாவத்திற்கு அடிமைப்பட்டிருக்கிறாயா? வெளியே வா. உன் சொந்த மனைவிக்கு துரோகம் பண்ணுகிறாயா? உன் சொந்த புருஷனுக்கு துரோகம் பண்ணுகிறாயா? உன் பிள்ளைகளுக்கு துரோகம் பண்ணுகிறாயா? பிள்ளைகள் பெற்றோருக்கு துரோகம் பண்ணுகிறீர்களா? வேலை ஸ்தலத்தில், உங்கள் எஜமானுக்கு உண்மையில்லாமல் இருக்கிறீர்களா? கை நிறைய சம்பாதித்தும், லஞ்சம் வாங்கி பிறரை ஏமாற்றுகிறீர்களா? ஏழை விதவைகளை ஏமாற்றுகிறீர்களா? பிறருடைய எல்லைக்குறியை மாற்றுகிறீர் களா? பிறனுடைய சொத்தை அபகரிக்கிறீர்களா?

... தன் வீட்டுக்குப் பொல்லாத ஆதாயத்தைத் தேடுகிறவனுக்கு ஐயோ! (ஆபகூக் 2:9B). துன்மார்க்கனுடைய வீட்டில் சமாதானம் இல்லை. ஆகவே இதை வாசிக்கிற தேவப்பிள்ளைகளே! நீங்கள் இன்றைக்கே, இப்பொழுதே ஆண்டவருடைய கரத்தில் உங்கள் வாழ்க்கையை ஒப்புக் கொடுங்கள். சகேயு சொன்னான்: என் ஆஸ்தியில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன், நான் ஒருவனிடத்தில் எதையாகிலும், அநியாயமாய் வாங்கினதுண்டானால்,

நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன் என்றான். அவன் தன்னை ஒப்புக்கொடுத்த அந்த நேரமே, சகேயுவின் வீட்டிற்கு இரட்சிப்பு வந்தது. சகேயு ஆபிரகாமின் குமாரனாய் மாறிவிட்டான். எத்தனை பெரிய சந்தோஷம்.

நீயும் உன் வாழ்க்கையை ஆண்டவருடைய கரத்தில் ஒப்புக்கொடு. துன்மார்க்கமாய் வாழ்ந்தது போதும். இனியும் காலம் தாழ்த்தாதே. உன் இருதயத்தைக் கடினப் படுத்தாதே. இதோ, இப்பொழுதே அநுக்கிரககாலம், இப்பொழுதே இரட்சணிய நாள் (II கொரி. 6:2). ஒரு பாவி மனந்திரும்புகிறதினிமித்தம் பரலோக ராஜ்யத்தில் மிகுந்த சந்தோஷமுண்டு. உன் நிமித்தம் பரலோகம் சந்தோஷப் படட்டும். களிகூரட்டும்.

துன்மார்க்கன் தன் வழியையும், அக்கிரமக்காரன் தன் நினைவுகளையும் விட்டு, கர்த்தரிடத்தில் திரும்பக்கடவன்; அவர் அவன் மேல் மனதுருகுவார்; நம்முடைய தேவனிடத் திற்கே திரும்பக்கடவன்; அவர் மன்னிக்கிறதற்குத் தயை பெருத்திருக்கிறார். (ஏசா. 55:7).

துன்மார்க்கன் தான் செய்த எல்லாப் பாவங்களையும் விட்டுத் திரும்பி, என் கட்டளைகளையெல்லாம் கைக் கொண்டு, நியாயத்தையும் நீதியையும் செய்வானேயாகில், அவன் பிழைக்கவேப் பிழைப்பான். அவன் சாவதில்லை (எசேக். 18:21).

துன்மார்க்கன் சாகிறது எனக்கு எவ்வளவேனும் பிரியமோ? அவன் தன் வழிகளை விட்டுத் திரும்பிப்

பிழைப்பது அல்லவோ எனக்குப் பிரியம் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார் (எசேக். 18:23).

துன்மார்க்கன் தான் செய்த துன்மார்க்கத்தைவிட்டு விலகி, நியாயத்தையும், நீதியையும் செய்வானேயாகில், அவன் தன் ஆத்துமாவைப் பிழைக்கப்பண்ணுவான் (எசேக். 18:27).

ஆண்டவர் கடைசியாக உனக்கு ஒரு நல்ல தருணத்தைத் தருகிறார். மனந்திரும்பு, அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்; அவைகளின்படி நட, உன்னை பாவத்தி லிருந்து மீட்டெடுக்கும்படியாக, உன்னை இரட்சிக்கும் படியாகத் தான் இயேசு சிலுவையில் தன்னையே ஜீவபலியாக ஒப்புக் கொடுத்தாரே. கடைசி சொட்டு இரத்தம் வரை சிந்தினாரே. நீ சாகிறது அவருக்குப் பிரியமில்லை. நீ பிழைக்க வேண்டும். நீ வாழ்ந்து சுகித்திருக்க வேண்டும். நீ சந்தோஷமாயிருக்க வேண்டும். நீ சமாதானமாயிருக்க வேண்டும். நீ சுகமாயிருக்க வேண்டும். அதுதான் அவருக்குப் பிரியம்.

இதை வாசித்து விட்டு, உன் வாழ்க்கையை ஆண்டவருடைய கரத்தில் ஒப்புக் கொடுக்காவிட்டால், நீ மனந்திரும்பாவிட்டால், அவர் தமது பட்டயத்தைக் கருக்காக்குவார். மட்டுமல்ல, கோராவாரிக் காற்றாகிய பெருங்காற்று உக்கிரமாயெழும்பி, அடித்து, உன் தலையின் மேல் மோதும். சிந்தித்து செயல்படு.

10. கொண்டல் காற்று

கொண்டல்காற்று பறக்கடிக்குமாப்போல் நான் அவர்களை அவர்கள் சத்துருக்களுக்கு முன்பாகப் பறக்கடிப்பேன். அவர்களுடைய ஆபத்தின்நாளிலே என் முகத்தையல்ல, என் முதுகை அவர்களுக்குக் காட்டுவேன் என்று சொல் என்றார். (எரே. 18:17)

இந்தக் காற்றின் பெயர் கொண்டல்காற்று. இது விக்கிரகங்களை வழிபடுகிறவர்களின் மேல் வீசும்.

என் ஜனங்களோ என்னை மறந்து, மாயையான விக்கிரகங்களுக்குத் தூபங்காட்டுகிறார்கள்; செப்பனிடப்படாத பாதைகளிலும், வழியிலும் அவர்கள் நடக்கும்படி, அவைகள் அவர்களைப் பூர்வ பாதைகளாகிய அவர்களுடைய வழிகளிலிருந்து இடறும்படி செய்கிறது. (எரே. 18:15).

விக்கிரகங்களை உருவாக்குகிற யாவரும் வீணர்; அவர்களால் இச்சிக்கப்பட்டவைகள் ஒன்றுக்கும் உதவாது; அவைகள் ஒன்றும் காணாமலும், ஒன்றும் அறியாமலும் இருக்கிறதென்று தங்களுக்கு வெட்கமுண்டாக அவைகளுக்குத் தாங்களே சாட்சிகளாயிருக்கிறார்கள்.

ஒன்றுக்கும் உதவாத தெய்வத்தை உருவாக்கி, விக்கிரகத்தை வார்ப்பிக்கிறவன் எப்படிப்பட்டவன் ? இதோ, அவனுடைய கூட்டாளிகளெல்லாரும் வெட்கமடைவார்கள்; தொழிலாளிகள் நரஜீவன்கள்தானே. அவர்கள் எல்லாரும் கூடிவந்து நிற்கட்டும்; அவர்கள் ஏகமாய்த் திகைத்து வெட்கப்படுவார்கள் (ஏசா. 44:9–11).

ஆண்டவர் நமக்குத் தந்த கட்டளைகளில் ஒன்று என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம். மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின் கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கொப்பான ஒரு சொரூபத்தையாகிலும், யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்கவேண்டாம்; நீ அவைகளை நமஸ்கரிக்கவும், சேவிக்கவும் வேண்டாம். (யாத். 20:3–5)

சிலர் தங்களுடைய வீட்டில் தாய், தகப்பனையோ, பிள்ளைகளையோ அல்லது தனக்கு அன்பானவர்களை இழந்தவர்கள், அவர்களின் புகைப்படங்களை பெரிதாக்கி, வீட்டின் முன்பதாக சுவரில் மாட்டி வைத்து, அதற்கு மாலை போட்டு, விளக்குகள் போட்டு, அதற்கு தூபங்காட்டுகிறார்கள். அப்படியே சிலர் இயேசுவின் படங்களை கூட சுவரில் மாட்டி, அதற்கு மாலை போட்டு, விளக்குகள் போட்டு, அதற்கும் தூபங்காட்டி அந்த படத்திற்கு முன்பு போய் அதை வணங்குகிறவர்களும் இருக்கிறார்கள். ஆனால் ஆண்டவருடைய வார்த்தை சொல்லுகிறது : தூபங்காட்டுதல் எனக்கு அருவருப்பாயிருக்கிறது (ஏசா. 1:13). தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும், உண்மையோடும், அவரைத் தொழுதுகொள்ளவேண்டும். அவர் ஒளி கொடுக்கிற தேவன். உலகத்திற்கே ஒளி கொடுக்க வந்தவர். நாம் அவருக்கு ஒளி ஏற்ற வேண்டிய அவசியமில்லை. இதை விட்டுவிட்டு, விக்கிரகமாக படங்களை மாட்டி அதற்கு முன் விழுந்து, அதைத் தொட்டு நாம் ஏன் வழிபட வேண்டும். இந்த வழிபாட்டை

ஆண்டவர் அருவருக்கிறார். இதில் பிரியப்படுகிறவர் தேவன் அல்ல.

விக்கிரகங்களை உண்டுபண்ணுகிற அனைவரும் வெட்கப்பட்டு இலச்சையடைந்து, ஏகமாய்க் கலங்கிப் போவார்கள் (ஏசா. 45:16).

ஒருவன் ஒரு மரத்தை வெட்டி, அந்த மரத்தில் ஒரு துண்டை எடுத்து, நெருப்பை மூட்டி அப்பம் சுடுகிறான். நெருப்பை மூட்டி குளிர் காய்கிறான். அந்த மரத்தின் மற்றொரு துண்டில் தெய்வத்தையும் உண்டு பண்ணி, அதைப் பணிந்து கொள்கிறான். ஒரு விக்கிரகத்தையும் அதினால் செய்து அதை வணங்குகிறான். ஒரு துண்டினால் இறைச்சியைச் சமைக்கிறான். மறு துண்டினால் ஒரு விக்கிரகத்தைச் செய்து அதற்குமுன் விழுந்து, அதை வணங்கி: நீ என் தெய்வம், என்னை இரட்சிக்க வேண்டும் என்று அதை நோக்கி மன்றாடுகிறான். அறியாமலும், உணராமலும் இருக்கிறார்கள்; காணாதபடிக்கு அவர்கள் கண்களும், உணராதபடிக்கு அவர்கள் இருதயமும் அடைக்கப்பட்டிருக்கிறது. ஒரு துண்டை எரித்து, அப்பத்தைச் சுட்டு, இறைச்சியைப் பொரித்துப் புசித்தேன். மீதியான துண்டை நான் அருவருப்பான விக்கிரகமாக்கலாமா ? ஒரு மரக்கட்டையை வணங்கலாமா ? என்று சொல்ல, தன் மனதில் அவனுக்குத் தோன்றவில்லை. அறிவும், சொரணையும் இல்லை (ஏசா. 44:15–19).

சொரூபங்களை வணங்கி, விக்கிரகளைப்பற்றிப் பெருமை பாராட்டுகிற யாவரும் வெட்கப்பட்டுப் போவார்கள் (சங். 97:7).

விக்கிரகங்கள் வெள்ளியும் பொன்னும், மனுஷரு டைய கைவேலையுமாயிருக்கிறது. அவைகளுக்கு வாயிருந்தும் பேசாது; கண்களிருந்தும் காணாது, காதுகளிருந்தும் கேளாது; மூக்கிருந்தும் முகராது, கைகளிருந்தும் தொடாது; கால்களிருந்தும் நடவாது; தொண்டையால் சத்தமிடவும் மாட்டாது. அவைகளைப் பண்ணுகிறவர்களும், அவைகளை நம்புகிறவர்கள் யாவரும், அவைகளைப் போலவே இருக்கிறார்கள் (சங். 115:4–8).

சகல ஜனங்களுடைய தேவர்களும் விக்கிரகங்கள் தானே; கர்த்தரோ வானங்களை உண்டாக்கினவர் (சங். 96:5).

நம்மை உண்டாக்கினவர் கர்த்தர். வானத்தையும், பூமி யையும் உண்டாக்கினவர் கர்த்தர். நாம் அவர் ஒருவருக்கே ஆராதனை செய்யவேண்டும். நாம் அவருக்கு முன்பாக பணிந்து, குனிந்து, முழங்கால்படியிட வேண்டும். அருமை யான தேவனுடைய பிள்ளைகளே, கர்த்தர் நம்மிடத்திலே நூற்றுக்கு நூறு கீழ்ப்படிதலை எதிர்ப்பார்க்கிறார். பலி யையோ, பலி செலுத்துதலையோ அல்லது காணிக்கை யையோ, சந்தா பணங்களையோ அல்ல. கர்த்தருக்கு எது முக்கியம் ? கர்த்தருடைய வார்த்தைக்கு நாம் கீழ்ப்படிவதே முக்கியம். அவருடைய கட்டளைகளின்படி நடக்க வேண்டும்.

இரண்டகம்பண்ணுதல் பில்லி சூனிய பாவத்திற்கும் முரட்டாட்டம்பண்ணுதல் அவபக்திக்கும், விக்கிரகாராதனைக்கும்

சரியாய் இருக்கிறது; நீர் கர்த்தருடைய வார்த்தையைப் புறக்கணித்தபடியினாலே, அவர் உம்மை ராஜாவா யிராதபடிக்குப் புறக்கணித்துத் தள்ளினார் என்றான் (1 சாமு. 15:22,23).

தேவனுடைய தீர்க்கதரிசி ஈவு இரக்கமில்லாமல் முக முகமாய் தேவனுடைய நியாயத்தீர்ப்பை ராஜாவாகிய சவுலுக்குக் கூறினார். நீர் கர்த்தருடைய வார்த்தையைப் புறக்கணித்தபடியினாலேயே அவர் உம்மை ராஜாவாயிராத படிக்கு புறக்கணித்துத் தள்ளினார் என்றார். எத்தனை பரிதாப மான நிலைமை ஏற்பட்டது பாருங்கள். கர்த்தர் கொடுத்த கட்டளையை நாம் மீறும்போது நிலைமைப் பரிதாபமாய் போய்விடும். கீழ்ப்படியாமையினாலே சவுலை ராஜாவாய் இராதபடிக்குக் கர்த்தர் புறக்கணித்துத் தள்ளினார்.

ஒரு மனிதன் தன் மனைவியைப் புறக்கணித்துத் தள்ளும்போது உள்ள வேதனையைப் பார்க்கிலும், பிள்ளை களைப் பெற்றோர் புறக்கணித்துத் தள்ளும்போது உள்ள வேதனையைப் பார்க்கிலும், சர்வ வல்லமையுள்ள ஆண்டவர் ஒரு மனிதனை புறக்கணித்துத் தள்ளும்போது வரும் வேதனை மகா பெரிய வேதனையாக இருக்கும். ஆண்டவ ரால் புறக்கணிக்கப்பட்ட ஒரு மனிதன் எங்கு போய் ஒதுங்க முடியும்? யாரிடத்தில் அடைக்கலம் தேட முடியும்? எதை நம்பி இனி வாழ முடியும்? நித்திய, நித்தியமாய் அவனுக்கு வேறு பாதுகாப்பே கிடையாது. அவனுடைய வாழ்க்கையே இருளாய் மாறிவிடுகிறது. ஆம், ஆண்டவரால் புறக் கணித்துத் தள்ளப்படுவதைப் பார்க்கிலும், வேதனையான

சம்பவம் வேறு ஒன்றுமே இல்லை. அருமையான தேவனுடைய பிள்ளைகளே, ஆண்டவருடைய கட்டளைகளை அற்பமாய் எண்ணிவிடாதிருங்கள். அவர் அன்புள்ளவர் தானே, மனதுருக்கம் உள்ளவர் தானே, என்னை எப்பொழுதும் மன்னித்துக் கொண்டிருப்பவர் தானே என்று சிந்தித்துக் கொண்டிராதிருங்கள். அவர் அன்புள்ளவராய் இருந்தாலும், பட்சிக்கிற அக்கினியாகவும் இருக்கிறார்.

சில காரியங்களைச் செய் என்பார். உடனே செய்து விட வேண்டும். சில காரியங்களைச் செய்யாதே என்பார். அதைச் செய்யாதபடிக்கு நம்மை விலக்கிக் காத்துக் கொள்ளவேண்டும். நாம் அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளாமல் போகும்போது அவர் தமது பட்டயத்தை கருக்காக்குவார். வில்லை நாணேற்றுவார். அவருடைய சுவாசக்காற்றை கோபக்காற்றாக நம்மீது வீசச்செய்வார்.

விக்கிரகத்தை உண்டாக்காதே, நமஸ்கரியாதே, கும்பிடாதே என்று கர்த்தர் திட்டமும், தெளிவுமாய் சொல்லியிருக்கும்போது, தேவ கட்டளையை நாம் ஏன் மீற வேண்டும். உங்களுடைய வீட்டிலே, உங்களுக்குப் பிடிக்காத காரியங்களை உங்கள் பிள்ளைகள் செய்தால் உங்களுக்குக் கோபம் வருமா? வராதா? அதுபோலவே தேவகட்டளைகளை நாம் மீறும்போது அவர் நம்மை புறக்கணித்துத் தள்ளிவிட வேண்டியது வரும். சிலை வழிபாடுகளையோ மனிதர்களை வழிபடுகிறதையோ கர்த்தர் விரும்புகிறவரல்ல, அதை வெறுக்கிறவர். ஒவ்வொரு சிலைக்குப் பின்னாலும் அசுத்த ஆவிகளும், குட்டிச்சாத்தான்களும்

தான் நின்றுகொண்டிருக்கின்றன. நீங்கள் சிலையை வழிபடும்போது உங்களுடைய வணக்கத்தையும், ஆராதனையையும் சாத்தான் பெற்றுக்கொண்டிருக்கிறான். அப்படிப்பட்டவர்கள்மேல் தேவனுடைய கோபமும், கோபாக்கினையும் பற்றியெரியும். ஆண்டவருக்கு விக்கிரகம் வேண்டாம் என்றால் நமக்கும் வேண்டாம் தான்.

விக்கிரக ஆராதனை என்பது வெறும் விக்கிரகங்களை வைத்து வழிபடுவது விக்கிரக ஆராதனை ஆகிவிடாது. பொருளாசை ஒரு விக்கிரக ஆராதனை (கொலோ. 3:5). விக்கிரகாராதனைக்காரனாகிய பொருளாசைக்காரன் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று எபேசி. 5:5–ல் வாசிக்கிறோம். ஒரு விசுவாசி அல்லது தேவனுடைய மனிதன் பொருளாசையுடையவனாயிருந்தால் அவரோடு சேரவோ, அவரோடு விருந்து உண்ணவோக் கூடாது. இவைகள் பவுல் அப்போஸ்தலன் சபைக்கு எழுதிய கடிதங்களில் வரும் செய்திகள் (1 கொரி. 6:10; 5:11) பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாயிருக்கும்படி இயேசு சீடர்களுக்குக் கட்டளையிட்டார். விபச்சாரம், வேசித்தனம், கொலை, களவு போன்ற கொடிய பாவங்களின் பட்டியலில் இயேசு பொருளாசையையும் சேர்த்துப் பேசினார் (லூக். 12:15; மாற். 7:21,22).

சில பாவங்களை நாம் மிகவும் சீரியஸாக எடுத்துக் கொள்ளும் வேளையில் பொருளாசையை சாதாரணமாக எடுத்துக் கொள்ளும் மனோபாவம் பலரிடம் உள்ளது. ஆனால் பொருளாசை என்பது தேவனால் வெறுக்கப்படும்

கொடிய பாவம் ஆகும். இன்று பொருளாசையை அதிகமாகக் கொண்டிருக்கும் அநேகர், தங்களிடம் ஒரு கொடிய பாவம் உள்ளதை உணராமலேயே இருப்பதைக் காண முடிகிறது. சிலர் விபச்சாரம் போன்ற பாவங்களில் விழாமல் இருப்பதை தங்களின் மாபெரும் வெற்றிகளாக எடுத்துக் கொள்கிறார்கள். அதேவேளையில் பண ஆசையும், பொருளாசையும் தங்களின் வாழ்க்கையை மேலாண்மை செய்வதை அவர்கள் பெரிய விஷயமாக எடுத்துக் கொள்வதில்லை. ஆனால் பொருளாசையை மேற்கொள்ளாத போக்கும், விபச்சாரப் பாவமும், தேவனுடையப் பார்வையில் கடுமையான பாவங்களே.

பொருளாசை மிகுந்த மனிதன் பொருள் சேர்ப்பது தொடர்பான காரியங்களுக்கு கொடுக்கும் முக்கியத் துவத்தை விட அதிக முக்கியத்துவத்தை தேவனுக்கு கொடுக்கமாட்டான். பொருளாசையுடையவன் மகிழ்ச்சி, திருப்தி ஆகியவற்றை தேவனிடம் தேடிப்பெறுவதற்குப் பதிலாக, பணம், செல்வப்பெருக்கம் ஆகியவைகளிலேயே தேடிக்கொண்டிருப்பான். பொருளாசை உடைய மனிதனின் சார்புத்தன்மை தேவன் மேல் இராமல் பொருளின் மேலேயே இருக்கும். பொருளாசை உடைய மனிதன் தேவ உறவை பாதுகாப்பாக எண்ணாமல் பணப்பெருக்கத்தையே தன் பாதுகாப்பாக எண்ணுவான். பொருளாசை உடைய மனிதன் அந்த ஆசை நிறைவேறுதலுக்காக தேவனுடைய நியாயங்களையும், தேவன் விரும்பும் நற்குணங்களையும் எளிதாக விட்டு விலகிப் போவான்.

வீடுகள் கட்டவேண்டும், நிலங்கள் வாங்கி சேர்க்க வேண்டும். வங்கியில் ஏராளமாய் பணம் சேர்க்க வேண்டும். நவநாகரீக பொருட்களை வாங்கி குவிக்க வேண்டும் என்ற எண்ணங்களால் நிறைந்து வாழ்க்கையை பொருள் சேர்க்கும் ஒரு பொருளாசைக்காரனாய் மாறிவிடுகிறான். பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள் என்று இயேசு சொல்வதை லூக்கா 12:15—ல் பார்க்கிறோம். ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல. மனுஷன் உலக முழுவதையும் ஆதாயப்படுத்தினாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன ? பொருளாசையைக் குறித்த ஒரு உவமையை இயேசு சொன்னாா.

ஐசுவரியமுள்ள ஒருவனுடைய நிலம் நன்றாய் விளைந்தது. அப்பொழுது அவன் நான் என்ன செய்வேன் ? என் தானியங்களைச் சேர்த்து வைக்கிறதற்கு இடம் இல்லையே; நான் ஒன்று செய்வேன். என் களஞ்சியங்களை, இடித்து, பெரிதாகக் கட்டி, எனக்கு விளைந்த தானியத்தையும், என் பொருள்களையும் அங்கே சேர்த்து வைத்து, பின்பு : ஆத்துமாவே, உனக்காக அநேக வருஷங்களுக்கு, அநேகம் பொருள்கள் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது. நீ இளைப்பாறி புசித்துக் குடித்து பூரிப்பாயிரு என்று என் ஆத்துமாவோடே சொல்லுவேன் என்று தனக்குள்ளே சிந்தித்து சொல்லிக் கொண்டிருந்தான். தேவன் அவனைப் பார்த்து: நீ பெரிய புத்திசாலி, நீ நினைத்தது சரி என்று அவனைப் பாராட்டவில்லை. மெச்சிக் கொள்ளவுமில்லை.

மாறாக மதிகேடனே! முட்டாளே! உன்னைப் போல பெரிய முட்டாள் ஒருவனுமில்லை. உன் ஆத்துமா உன்னிடத்தி லிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக் கொள்ளப்படும். அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும் என்றார். தேவனிடத்தில் ஐசுவரியவானாயிராமல், தனக்காகவே பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்கிறவன் இப்படியே இருக்கிறான் என்றார். இன்றைக்கு அநேகர் பிறரை ஏமாற்றி, வஞ்சித்து, அபகரித்து பொருளைச் சேர்க்கிறார் கள். தலைமுறை, தலைமுறைகளுக்கென்று சேர்க்கிறார் கள். இப்படி சேர்ப்பவர்களின் நிலைமையும் இதுவே.

பொருளாசை பிடித்த ஒரு புலவன் சிறப்பு மிக்க பாடல் ஒன்றை எழுதினான். அதனைப் பார்த்த அரசனும், அவைப் புலவர்களும் வெகுவாக அவனைப் பாராட்டினார்கள். அந்த புலவனால் எவ்வளவு வெள்ளிக்கட்டிகளை சுமந்து செல்ல இயலுமோ, அவ்வளவு வெள்ளிக்கட்டிகளை பரிசாகக் கொடுக்க அரசன் கட்டளையிட்டான். பேராசை மிக்க அந்தப் புலவன், இதுதான் சரியான வேளை என்று எண்ணி தன்னால் சுமக்க முடியாத அளவிற்கு அதிகமான வெள்ளிக்கட்டிகளை கேட்டு வாங்கி சுமந்து சென்றான். கொஞ்ச தூரம் நடந்து சென்ற பின்பு, அந்த சுமையை சுமக்க இயலாமல் அவன் மிகவும் சிரமப்பட்டான். ஆனாலும் பாரத்தைக் குறைக்க அவனுக்கு மனமில்லை. இறுதியில் சுமை தாங்காமல் விழுந்ததால் அவனுடைய முதுகுத் தண்டும் முறிந்து போனது.

பொருளாசையின் முடிவு இவ்வண்ணமாகவே

இருக்கின்றது. ஆசைகளின் பெருக்கம் நம்மையே இறுக நெருக்கி நம்மை விழுந்துவிடச் செய்கின்றது. பொருள் பெருகப் பெருக ஆசைகளும் பெருகிக் கொண்டே யிருக்கும். சிலர் செல்வ நிலைகளில் பெருகும் போது தான் இன்னும் அதிகமாக வேண்டும் என்ற பேராசைகளில் சிக்கி தங்கள் மனஅமைதியை இழந்துபோகிறார்கள். திருப்தி யாயிருக்கும் ஒரு மனநிலை பக்குவத்தை நாம் பெறா விட்டால் நாம் சேர்க்கும் செல்வங்களே நம்மை நாசமாக்கும் நாசகாரிகளாக மாறி விடுகின்றன.

விசுவாசமும், பக்தியும் உடைய ஒருவர் கடுமையாக உழைத்து உயர்ந்த நிலைகளுக்கு வந்தார். ஆனால் செல்வம் பெருக ஆரம்பித்ததும் வேறு சிலரைப் போல இன்னும் மேலான நிலைக்கு வர அவருடைய மனம் துடித்தது. அதன் விளைவாக அவரது முழு கவனமும் நிலம் வாங்குவதிலும், வீடு கட்டுவதிலும், புதிய தொழில்களைத் துவங்குவதிலுமே சென்றது. காலப் போக்கில் அதிக வேலைகளும், சொத்துக் கள் சம்மந்தமான பிரச்சனைகளும் அவருடைய நல்ல பக்தியையும் அழித்தது. நல்ல பண்பு களையும் அழித்து, இறுதியில் அவரிடம் தெரிந்ததெல்லாம் பண ஆசையும், பொருளாசையும் தான்.

ஆம், கடல்நீரை குடிக்கக் குடிக்க தாகம் பெருகுமே யன்றி தாகம் தணியாது. பண ஆசை பெருகி விட்டால் பெற்றதினால் எந்த நிறைவையும் காண முடியாமல், பெற வேண்டும் என்ற ஆசைகளின் தாக்கம் தீமையான விளைவுகளை ஏற்படுத்தும். சாலொமோன் அரசன் கேளாத

பெருஞ்செல்வத்தை தேவன் அவனுக்குக் கொடுத்தார். ஆனாலும் அவனுடைய ஆசை எல்லைகளைக் கடந்ததாக இருந்தது. அதின் விளைவாக அவன் அதிக வரி விதித்து நாட்டு மக்களை கசக்கிப் பிழிந்தான். அதன் விளைவாக மக்கள் அவன் மேல் அதிருப்தியுற்றனர் (1 இரா. 12:4). இறுதியாக இஸ்ரவேல் சாம்ராஜ்யமே இரண்டாக உடைந்தது. ஆம், பொருளாசை ஒரு விக்கிரக ஆராதனை. அதில் விழுந்தவர்கள் தப்புவது கடினம். நாம் பொருளாசை என்ற நிலையில் எப்படி இருக்கிறோம்? பணம், பொருள் தான் இறைவனின் ஆசீர்வாதம் என எண்ணுகிறவனை, சாத்தான் ஏற்கெனவே ஏமாற்றியிருக்கின்றான்.

போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம் (1 தீமோ. 6:6). உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை. இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டு போவதுமில்லை. ஐசுவரியவான்களாக விரும்பு கிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளில் விழுகிறார்கள். பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது. சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள் (1 தீமோ. 6:9,10).

நீயோ, தேவனுடைய மனுஷனே, இவைகளை விட்டோடி, நீதியையும் தேவ பக்தியையும் விசுவாசத்தையும் அன்பையும் பொறுமையையும் சாந்த குணத்தையும்

அடையும்படி நாடு. நிலையற்ற ஐசுவரியத்தின் மேல் நம்பிக்கை வைக்காமல், நாம் அனுபவிக்கிறவதற்கு சகல வித நன்மைகளையும், நமக்குச் சம்பூரணமாய்க் கொடுக்கிற ஜீவனுள்ள தேவன் மேல் நம்பிக்கை வைப்போம்.

பாபிலோனில் நேபுகாத்நேச்சார் அமைத்த சிலையை வணங்குவதற்கு மறுத்து, அக்கினியில் அழியவும் தயாராக இருந்தனர் சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்ற இளைஞர்கள். பாபிலோனில் உயர்ந்த பதவியை உயர்வாக எண்ணாமல் சிங்கக்கெபிக்குள் விழவும் தயாராக இருந்தான் தானியேல். இவைகள் வெறும் வைராக்கியங்கள் அல்ல. அவர்கள் கர்த்தர் மேல்வைத்திருந்த நம்பிக்கை. அவர்களுடைய ஜெப வாழ்க்கையினால் உருவாகிய மன வலிமைகள். நம்மை கர்த்தரண்டை நிறுத்துவதும், அவருடைய கற்பனைகளின்படி நடக்க வைப்பதும், அவருடைய ஐக்கியத்தை விட்டுவிலகாமல் காப்பதும் ஜெபம் தான்.

கானான் தேசத்திற்கு அழைக்கப்பட்ட இஸ்ரவேல் மக்கள் தேவனால் ஆசீர்வதிக்கப்படுவதற்கு அழைக்கப் பட்டவர்கள் தான். ஆனால் அவர்கள் போராடவும் அழைக்கப் பட்டவர்கள் என்றும் சொல்லலாம். ஏனென்றால் அங்கே தேவன் வெறுக்கின்ற விக்கிரக வழிபாட்டு முறை இருந்தது. பாவமான பலவித பழக்கங்கள் இருந்தது. அசுத்தமான வாழ்க்கை முறைகள் இருந்தன. அவைகளால் அவர்கள் ஆட்கொள்ளப்பட்டு விடாமல் கடுமையாக போராட வேண்டிய தேவை அங்கிருந்தது. அவர்கள் பாவமான சூழ்நிலைக்கு

எதிராகப் போராடி தங்கள் பரிசுத்தத்தைக் காத்துக் கொண்டால் தான் தேவனால் ஆசீர்வதிக்கப்பட முடியும்.

இஸ்ரவேலின் மேல் ராஜாவாயிருந்த ஆகாப் ராஜா கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான். கர்த்தருக்குப் பிரியமில்லாத ஒரு விக்கிரகத் தோப்பை உண்டு பண்ணி பாகாலைச் சேவித்து, அதைப் பணிந்து கொண்டு வந்தான். அந்நாட்களில் எலியா என்கிறதான தீர்க்கதரிசி ஆகாபிடம் வந்து, நீங்கள் எந்தமட்டும் இரண்டு நினைவுகளால் குந்திக்குந்தி நடப்பீர்கள். கர்த்தர் தெய்வ மானால் அவரைப் பின்பற்றுங்கள். பாகால் தெய்வமானால் அவரைப் பின்பற்றுங்கள் என்றான். உண்மையான தேவன் யார் என்பதை ஜனங்கள் அறியும்படியாக, எலியா சவால் ஒன்றை விடுகிறான். கர்த்தரின் தீர்க்கதரிசிகளில் நான் ஒருவன்; பாகாலின் தீர்க்கதரிசிகளோ நானூற்றைம்பது பேர். இரண்டு காளைகளைக் கொண்டுவாருங்கள்; அதைச் சந்துசந்தாகத் துண்டித்து, நெருப்புப் போடாமல் விறகுகளின்மேல் அடுக்கி முதலாவது நீங்கள் உங்கள் தேவனுடைய நாமத்தைச் சொல்லிக் கூப்பிடுங்கள்; அப்பொழுது அக்கினியினால் உத்தரவு அருளும் தெய்வமே உண்மையான தெய்வம் என்றான்.

சகல ஜனங்களுக்குள்ளும் இது நல்ல வார்த்தை யாகத் தெரிந்தது. காளையைத் துண்டித்து விறகுகளின் மேல் அடுக்கி பாகாலே எங்களுக்கு உத்தரவு அருளும் என்று காலைதொடங்கி, மத்தியான மட்டும் பாகாலின் நாமத்தைச் சொல்லிக் கூப்பிட்டார்கள். பலிபீடத்திற்கு

எதிரே குதித்து ஆடினார்கள். இரத்தம் தங்கள் மேல் வடியுமட்டும் கத்திகளாலும், ஈட்டிகளாலும் தங்களைக் கீறிக் கொண் டார்கள். ஒரு சத்தமும் இல்லை, மறு உத்தரவு கொடுப்பாரும் இல்லை. இப்போது எலியாவின் வேளை வந்தது. எலியா முதலாவது பலிபீடத்தை செப்பனிட்டு, காளையைத் துண்டித்து, விறகுகளின்மேல் அடுக்கி வைத்து, அந்திப்பலி செலுத்தும் நேரத்திலே, ஆபிரகாமுக்கும், ஈசாக்குக்கும், யாக்கோபுக்கும் தேவனாகியக் கர்த்தாவே, இஸ்ரவேலிலே நீர் தேவன் என்றும், நான் உம்முடைய ஊழியக்காரன் என்றும், நான் இந்தக் காரியங்களையெல்லாம் உம்முடைய வார்த்தையின்படி செய்தேன் என்றும் இன்றைக்கு விளங்கப் பண்ணும் என்று கர்த்தரை நோக்கி வேண்டுதல் செய்தான். அப்பொழுது கர்த்தரிடத்திலிருந்து அக்கினி இறங்கி, அந்தச் சர்வாங்க தகனபலியையும், விறகுகளையும், கற்களையும், மண்ணையும் பட்சித்து, வாய்க்காலிலிருந்த தண்ணீரையும் நக்கிப் போட்டது. ஜனங்களெல்லாரும் இதைக் கண்டபோது முகங்குப்புற விழுந்து: கர்த்தரே தெய்வம், கர்த்தரே தெய்வம் என்றார்கள். உண்மையான தெய்வம் யார் என்பதை ஜனங்கள் அறிந்து கொண்டார்கள் (1 இரா. 18:39).

ஆண்டவர் நமக்குத் தந்த கட்டளைகளில் ஒன்று, என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம். மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின் கீழ்த்தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கொப்பான ஒரு சொரூபத்தையாகிலும், யாதொரு விக்கிரகத்தையா

கிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம். நீ அவைகளை நமஸ்கரிக்கவும், சேவிக்கவும் வேண்டாம் (யாத். 20:3,4,5). நான் வானத்தையும், பூமியையும் உண்டாக்கின சர்வ வல்லமையுள்ள தேவன். மரித்தேன், ஆனாலும், இதோ, சதா காலமும் உயிரோடிருக்கிற தேவன். நான் மரணத்திற்கும், பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவனாயிருக்கிறேன் (வெளி. 1:18). நான் கர்த்தர், இது என் நாமம்; என் மகிமையை வேறொருவனுக்கும், என் துதியை விக்கிரகங்களுக்கும் கொடேன் (ஏசா. 42:8).

விக்கிரக வழிபாடு கர்த்தருக்கு அருவருப்பானது. கர்த்தர் அதை வெறுக்கிறார். அதை வழிபடுகிறவர்கள் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பதில்லை. கிறிஸ்தவர் என்னப்படும் ஒருவரை சிகரெட் பிடிக்கிறவராகவோ, மது அருந்துகிறவராகவோ பார்க்க நேர்ந்தால் அதிர்ச்சியடைந்து "சே... இவரும் கிறிஸ்தவரா ?" என்று அருவருக்கின்றோம். ஆனால் ஒரு கிறிஸ்தவரை அல்லது ஊழியரை பணஆசை பிடித்தவராகவும், ஆடம்பரவாதியாகவும், உள்ளொன்றும் புறம்பொன்றுமாக பேசுகின்றவராகவும் பார்த்தால் அதனை மிக சாதாரண்மாக எடுத்துக் கொள்கின்றோம். சிகரெட் பிடிக்கிற, மது அருந்துகிற மனிதனை விட பண ஆசையினால் வேடமிடுகிறவனும், பொருளாசை மிகுந்தவனும், கபடமாக பேசுகிறவனும், அன்பற்றவனும் எந்த விதத்திலும் மேன்மையானவர்கள் அல்ல. சிலர் பாலியல் தொடர்பான பாவங்களுக்கு விலகி வாழ்வதால் பொருளாசை, பண ஆசை, பேர், புகழ் பிரஸ்தாப ஆசை

போன்றவை தங்களை எவ்வளவு ஆட்கொண்டாலும், அவைகளைப் பாவமாக எண்ணுவதில்லை. வேதம் மிக அருவருப்பானதாக எண்ணி மிகப்பெரிய பாவங்களாக பண ஆசையையும், பொருளாசையையும், புகழாசையையும் காட்டுகிறது. பணம், பொருள், புகழ் சார்ந்த ஆசைகள் ஒருவரை அதிகமாக பாதித்திருந் தால் அவர் தேவனுடையப் பார்வையில் மிக மிக அருவருப் பாகத் தோன்றுகிறார் என்பது உண்மை. பாவம் சில தவறான பழக்கங்களாக வெளிவரலாம். சில தவறான குணாதிசயங்களாகவும் வெளிவரலாம். எல்லாவற்றையும் சமமாக எண்ணி வெறுக்கும் இதயம் நமக்குத் தேவை. இப்படிப்பட்ட குணங்களை உடையவர்களும் பரலோக இராஜ்யத்தில் பிரவேசிப் பதில்லை.

சாத்தான் ஆசை காட்டி மோசம் போக்குபவன். யோசேப்பின் வாழ்வில் பாலுணர்வு ஆசையின் வடிவத்தில் வந்தான்; யோசேப்பு விழித்திருந்து வென்றான். தாவீதின் வாழ்வில் கவர்ச்சிக் காட்சி வழியாய் வந்தான், தாவீது அசதி யாயிருந்து தோற்றான். சாலொமோன் வாழ்வில் ஆடம்பரப் பிரியம் என்னும் வடிவத்தில் வந்தான், சாலொமோன் விழித் திராமல் விழுந்தான். கேயாசி வாழ்வில் பொருளாசையின் வடிவில் வந்தான், கேயாசி பரிதாபமாய் வீழ்ந்தான். இயேசு வின் வாழ்வில் நல்ல ஆலோசகன் போல் வந்தான், ஆனால் இயேசு விழித்திருந்து ஜெயித்தார். இந்த அக்கிரமக்கார னாகிய பிசாசை கர்த்தர் தம்முடைய வாயின் சுவாசத் தினாலே அழித்து, அவனை நாசம் பண்ணிப்போடுவார்.

சாலொமோனுக்கு கர்த்தர் அவன் கேளாத ஐசுவரியம், கனம், மகிமை எல்லாவற்றையும் அதிகமாகக் கொடுத்திருந்தார். ஞானத்தில் சிறந்தவனாகக் காணப்பட்டான். ஞானத்தையும், புத்தியையும், கடற்கரை மணலத்தனையான மனோ விருத்தியையும் கொடுத்திருந்தார். சகல கிழக்கத்திப் புத்திரரின் ஞானத்தையும், எகிப்தியரின் சகல ஞானத்தைப் பார்க்கிலும் சாலொமோனின் ஞானம் சிறந்ததாயிருந்தது. மூவாயிரம் நீதிமொழிகளைச் சொன்னான். அவனுடைய பாட்டுகள் ஆயிரத்து ஐந்து. அப்படிப்பட்ட சாலொமோன் மோவாபியரும், அம்மோனியரும், ஏதோமியரும், சீதோனியரும், ஏத்தியருமாகிய அந்நிய ஜாதியாரான அநேகம் ஸ்திரீகள் மேல் ஆசை வைத்தான். அவன் வயது சென்ற பின்பு அவனுடைய மனைவிகள், அவன் இருதயத்தை அந்நிய தேவர்களைப் பின்பற்றும்படி சாயப்பண்ணினார்கள். சாலொமோன் சீதோனியரின் தேவியாகிய அஸ்தரோத்தையும், அம்மோனியரின் அருவருப்பாகிய மில்கோமையும் பின்பற்றினான். அதுமாத்திரமல்ல சாலொமோன் கர்த்தருக்குப் பிரியமில்லாத, அருவருக்கிற மோவா பியரின் அருவருப்பாகிய காமோசுக்கும், அம்மோன் புத்திரரின் அருவருப்பாகிய மோளோகுக்கும் மேடையைக் கட்டினான். கர்த்தர் இரண்டுவிசை சாலொமோனுக்குத் தரிசனமாகி எச்சரித்தார். அவன் கர்த்தரின் வார்த்தைக்குச் செவிகொடாத படியினாலே ராஜ்யபாரத்தை கர்த்தர் பிடுங்கிப் போட்டார்.

சாலொமோனுக்கு இருந்த அறிவு கொஞ்சமா? தேவனைப் பற்றியும், நீதிமுறைகளைப் பற்றியும் அவன் எழுதியவை ஆயிரமாயிரம் அறிவாளிகளை உருவாக்கப் போதுமானவை. ஆனால் அவனோ அறிவில் ஆலமரமாய்

இருந்தும், நல்ல அனுபவங்களிலே அசைந்தாடும் நாணலாகவே இருந்தான். "கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்" என்று அவன் கூறிய ஞானமான வாக்கு இன்றும் எத்தனை பெரிய உண்மையாக உள்ளன. அதேவேளையில் அவ்வளவு ஞானமாக எழுதிவைத்த ஞானவானாகிய அவன் கர்த்தருடைய ஆலயத்திற்கு எதிரிலேயே, அந்நிய விக்கிரங்களுக்கு பலியிட பயப்படாமல் போனானே ? காரணம் என்ன ? அவன் இருதயம் கர்த்தரை விட்டு விலகி, அந்நிய ஸ்திரீகள்மேல் போனது. ஆசைகளுக்கும், இச்சைகளுக்கும், சுய உணர்வுகளுக்கும் இடம் கொடுத்தான். விக்கிரகங்களை வணங்க மேடைகட்டினான். கர்த்தருக்குப் பிரியமில்லாத காரியங்களைச் செய்தான். கர்த்தர் தம்முடைய காற்றை அவன் மீது வீசச்செய்தார். முடிவு பரிதாபமாய்ப் போனது.

இதை வாசிக்கிற தேவ பிள்ளைகளே உண்மையான இயேசுவை நோக்கிப்பார்; உன்னை வாழ வைக்க உன்னை உயர்த்த தன்னையே ஜீவபலியாக ஒப்புக்கொடுத்த உண்மையான இயேசுவை நோக்கிப்பார். அவர் ஆவியாயிருக்கிறார், அவர் உயிரோடிருக்கிறார். அவரை உண்மையாய்தொழுதுகொள். இன்றே உன் வாழ்க்கையைக் கர்த்தருடைய கரத்தில் ஒப்புக்கொடு; உலகம் கொடுக்கக்கூடாத சந்தோஷத்தையும், சமாதானத்தையும் தருவார். கர்த்தருடைய கற்பனைகளின்படி நடந்து, அவர் சத்தத்துக்குச் செவி கொடுங்கள்.

செவிகொடாதே போனால் கொண்டல்காற்று பறக்கடிக்குமாப்போல் சத்துருக்களுக்கு முன்பாகப் பறக்கடிப்பார். இன்றே ஒரு தீர்மானம் எடுங்கள்.

11. வனாந்தரக் காற்று

ஆதலால் வனாந்தரக் காற்றால் பறக்கடிக்கப்படும் துரும்பைப்போல அவர்களைச் சிதறடிப்பேன்.

(எரேமியா 13:24)

இந்தக் காற்றின் பெயர் வனாந்தரக் காற்று. இந்தக் காற்று பெருமையுள்ளவர்கள்மேல் வீசும். நீங்கள் செவி கொடுத்துக் கேளுங்கள்; மேட்டிமையாய் இராதேயுங்கள்; கர்த்தர் விளம்பினார் (எரே. 13:15).

எரே. 13:17–ம் வசனம் சொல்லுகிறது: என் ஆத்துமா மறைவிடங்களில் உங்கள் பெருமையினிமித்தம் துக்கித்து, கர்த்தருடைய மந்தை சிறைப்பட்டுப்போனதென்று என் கண் மிகவும் அழுது கண்ணீர் சொரியும்.

நான் யூதாவுடைய பெருமையையும், எருசலேமுடைய மிகுந்த பெருமையையும் கெட்டுப்போகப்பண்ணுவேன் (எரே. 13:9) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இந்த நாட்களில் கர்த்தரை மகிமைப்படுத்துகிறோம் என்று அடிக்கொரு முறை சொல்லிக்கொண்டே, மறைமுகமாக தங்களை உயர்த்தி மகிமைப்படுத்துகிற ஒரு மாய்மாலம் எங்கும் காணப்படுகிறது. தன்னைத் தானே உயர்த்திக் கொள்ளுகிறவன் எவ்வளவுதான் தன்னை உயர்த்திக் காண்பித்தாலும் ஒருநாள் அவன் தாழ்ந்து போகின்ற சூழ்நிலை வந்தே தீரும். தேவனை மகிமைப்படுத்தும் நோக்குடன் செயல்படுவோரை தேவன் ஒருநாள் பலர்

நடுவில் உயர்த்தவே செய்வார். அந்த உயர்வை ஒருவரும் தடுக்கவும் தாழ்ந்து போகச் செய்யவும் முடியாது.

இராட்சதனாகிய கோலியாத்தை தாவீது வீழ்த்தினான். இது ஒரு மாபெரும் சாதனை; இந்த சாதனைக்கு முக்கிய மான ஒரு காரணம் தாவீதின் உயர்ந்த ஒரு நோக்கம் ஆகும். இஸ்ரவேலில் வல்லமையான ஒரு தேவன் உண்டு என்பதை உலகம் அறிய வேண்டுமென்பதே அவனுடைய நோக்கமாய் இருந்தது. அவன் தன்னை ஒரு மாவீரனாகக் காட்ட வேண்டும் என்றோ, தன்னை முன்னிலைப்படுத்தி, பெருமையடைய வேண்டும் என்றோ எண்ணாமல், தேவனை முன்னிலைப் படுத்தி, அவருடைய வல்லமையை வெளிப்படுத்தவே ஆசைப்பட்டான்.

பிறர் நம்மை அறிய வேண்டும் என்றும், நம்முடைய விசேஷங்களை பிறர் காணவேண்டும் என்றும் எண்ணு வதும் இயற்கையே. ஆனால் இந்த சிந்தனை தேவனால் நமக்கு வரவேண்டிய மகிமைக்கு இடையூறாக அமை கின்றது. வாழ்க்கையில் எல்லா நிலைகளிலும், தேவன் பிறர் நடுவில் அறியப்பட வேண்டும் என்றும், தேவன் மகிமைப்பட வேண்டும் என்றும் எண்ணுவதே ஆவிக்குரிய உயர்ந்த நோக்கங்கள் ஆகும். தன்னைத் தாழ்த்தி, தேவனை உயர்த்திப் பிடித்த தாவீதை தேவன் உலகமறிய உயர்த்திக் காண்பித்து மகிமைப்படுத்தாமல் விடவில்லை. நான் சிறுகவும், அவர் பெருகவும் வேண்டும் என்றான் யோவான் ஸ்நானன். அந்த யோவான் ஸ்நானன் எவ்வளவாக கர்த்தரால் உயர்த்திக் காண்பிக்கப்பட்டான் என்பதை நாம் அறிவோம். நம்மை

நாமே பிரபலப்படுத்தி உயர்த்திக் காண்பிக்க விரும்பும் ஆகாத சிந்தையை விட்டொழிவோம். பலவேளைகளில் நம்மை நாமே உயர்த்திக் காண்பித்து, பிறருடைய நல்ல அபிப்பிரா யங்களை பெற விரும்புவதால் தான், தேவனால் உயர்த்தப் படும் வாய்ப்புகளை இழக்க நேரிடுகிறது. தேவன் மகிமைப் படுவதே வாழ்க்கையின் நோக்கமாகக் கொள்வோம். அப்போது அவர் நம்மை எல்லோரும் அறியச் செய்வார்.

"தன்னைத் தானே ஒருவன் உயர்த்திக் கொள்ள முடியும். ஆனால் விழுந்து விடாமல் தன்னைத் தானே காப்பது தான் கடினம்".

சில நேரங்களில் எங்கும், எதிலும் நாம் முன்னணியில் முதல் நபராக நிற்க வேண்டும் என்ற எண்ணமும், மற்றவர் கள் நம்மை முந்திப் போகக்கூடாது என்ற சிந்தையும் தான் நமக்கு மற்றவர்களின் தேவையற்ற போட்டியையும், பொறா மையையும், எதிர்ப்பையும் கொண்டுவருகிறது. இது நம்மு டைய இயற்கையான நல்ல கொள்கையின் பாதையை விட்டுவிலகி போகச் செய்துவிடுகிறது. தாவீதின் முக்கிய தளபதியாகிய யோவாபிற்கு இப்படிப்பட்ட ஒரு குணம் இருந்தது. தன்னை விட பெரியவன் என்ற நிலைமை வேறு யாருக்கும் வந்து விடக்கூடாது என்ற சிந்தை அவனுக்கு இருந்தது. எனவே அவன் அப்னேர், அமாசா ஆகியோரை கொலை செய்தான். ஆனால் இவைகளாலேயே தன்னுடைய மகிமையை இழந்தான். நான் தான் எங்கும், எதிலும் முதல் ஆளாக நிற்க வேண்டும் என்ற பெருமையின் சிந்தை அவனுடைய வேகமான அழிவுக்கு வழிவகுத்தது.

எப்போதும் முந்திப் போகவேண்டும், பிறரை பின்னால் வரச் செய்யவேண்டும் என்ற தவறான சிந்தை, தேவனால் வரவிருக்கும் எல்லா உயர்வுகளுக்கும் நம்மை தகுதி யற்றவர்கள் ஆக்குவதோடு, நம்மை பின் தள்ளுகின்ற காரியங்ளை அனுமதிக்கும்படி தேவனைத் தூண்டவும் செய்து விடுகிறது. தாவீது அரசனாகும்படியான அபிஷேகம் பெற்ற வனாயிருந்தும், அவன் ஒருபோதும் சவுலை முந்திப் போக விரும்பியதில்லை. அவன் தன்னைத் தாழ்த்தி பின்னால் நிற்க ஆயத்தமாயிருந்தான். எனவே தேவன் எல்லா தடை களையும் நீக்கி, அவனை ராஜா என்ற உயர் பதவிக்கு எல்லா மகிமையோடும் கொண்டு வந்தார்.

ஆவிக்குரிய நிலைமையில் தாழ்மை என்பது இரண்டு வகைப்படும். ஒன்று ஒருவர் தன்னுடைய ஆன்மீக நிலைக் காக அல்லது, தேவன் மேல் கொண்டபற்றிற்காக தானே முன் வந்து உருவாக்கிக்கொள்ளும் தாழ்மை. இன்னொன்று தேவன் ஒருவரை பலவித சோதனைகளில் நடத்தி, அனுபவங் கள் மூலமாக ஒருவருக்குள் ஏற்பட செய்கின்ற தாழ்மை. முதல்வகைத் தாழ்மையை ஒரு மனிதன் மாறுகின்ற சூழ்நிலைகளில் விட்டுவிடும் தருணங்கள் வருவதுண்டு. ஆனால் இரண்டாவது வகைத் தாழ்மை ஒரு மனிதனின் இரத்த ஓட்டத்தில் கலந்து இயல்பாகி விடுகிறது. தேவன் தாம் விரும்புகின்ற மக்களை இரண்டாவது வகைத் தாழ்மைக்கு நேராக வழிநடத்துகிறாரென்றால், முதலில் நாம் தாழ்ந்து போகத்தக்க சூழ்நிலைகளை அவர் அனுமதிக் கின்றார். அங்கே நாம் உண்மையிலேயே ஒரு தாழ்வான,

பலவீன நிலையில் இருப்பதை அறியச்செய்கின்றார். நாம் தேவனைத் தேடி, அவரைப் பற்றிக் கொண்டிருக்கவேண்டிய ஒரு தேவை நிலையில் இருப்பதை நாம் உணர்ந்து கொள்ளச் செய்கின்றார்.

தாவீது துவக்க காலத்திலேயே இறைப்பற்றின் விளைவாக தாழ்மையாக வாழ்ந்தவன் தான். கோலியாத்தோடு பேசும்போது, அவன் தேவனை உயர்த்தி தன்னைத் தாழ்த்தினான் (1 சாமு. 17:45). சவுல் ராஜா தன் மகளை அவனுக்கு கொடுக்க முன்வந்தபோது கூட அவன் தாழ்மையுணர்வின் விளைவாக, தான் அதற்கு தகுதியானவன் அல்ல என்றே கூறினான். (1 சாமு. 18:18). ஆயினும் தேவன் அவனை பலவித சோதனையான பாதைகளில் நடத்தி அவனுக்குள் இயல்பான தாழ்மையுணர்வு ஏற்படும்படி செய்துவிட்டார். இயற்கையாகவே ஆற்றல்கள் பலபெற்றிருந்த அவன் சோதனைகளின் விளைவாக கர்த்தர் தனக்காக எதையாகிலும் செய்தாலொழிய, தன்னால் தலைநிமிர்ந்து நிற்க முடியாது என்பதை உண்மையாக உணர்ந்து தன்னைத் தாழ்த்திக்கொள்ளுகின்ற பக்குவத்தை அடைந்தான். சூழ்நிலைகள் மூலமாக தேவன் அவனுக்குள் உருவாக்கிய தாழ்மை உணர்வு தான், கடைசி வரை கர்த்தரின் கிருபையை சார்ந்து நிற்கும்படி அவனை வழிநடத்தியது. சில நேரங்களில் இறைப்பற்றிற்காக நாம் தாழ்மையாக செயல்பட்டாலும் தேவன் ஒரு உண்மையான, வலுவான தாழ்மையை நம்மில் ஏற்படுத்தி நம்மை உயர்த்துவதற்காக, சோதனைகளின் பாதையை அனுமதிக்கிறார். அவைகள் நமக்கு நன்மைகளையே கொண்டுவரும்.

தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்.

(மத். 23:12)

தேவனுக்கு முன்பாக நம்மைத் தாழ்த்திக்கொள்வது மிகவும் எளிது. ஆனால் மனிதர்களுக்கு முன்பாக நம்மைத் தாழ்த்திக்கொள்வது தான் மிகவும் கடினமான ஒரு காரியம். அதிலும் நம் பக்கம் நியாயம் இருக்கும்போது மற்றவர்களுக்கு முன்பாக ஒருபடி இறங்கி வருவது மிக, மிகக் கடினமான காரியம். ஆனால் மனிதர்களுக்கு முன்பாக நம்மைத் தாழ்த்திக்கொள்ளுகிற, விட்டுக் கொடுக்கின்ற ஒரு அனுபவம் தான், தேவனால் வரும் உயர்வுகளுக்கு நேராகக் கொண்டுசெல்லும் ஏணியாக உள்ளது. உண்மையில் மனிதர்களுக்கு முன்பாக நம்முடைய கவுரவமான நிலையிலிருந்து ஒருபடி கீழே இறங்கி வர முன்வரும்போது, தேவனுடைய ஆசீர்வாத ஏணியில் ஒருபடி மேலே ஏறிச்செல்கின்றோம் என்பதே உண்மை. மனிதர்கள் நாம் இறங்கிவிட்டதைப்போல பார்க்கும்போது, தேவன் நாம் உயரே ஏறி வருவதைப்போல பார்க்கின்றார்.

ஆபிரகாம் வயதில் மூத்த நிலையில் இருந்தபோதும், ஒரு காரியத்தை முடிவு செய்யும் தகுதி தனக்கிருந்த போதும், லோத்துவின் முன்னால் தன்னைத் தாழ்த்திக் கொண்டான். லோத்து வலப்பக்கம் போனால், தான் இடப் பக்கம் போக ஆயத்தமாயிருந்தான். மனிதப் பார்வையில் இது சற்று கவுரவக் குறைவான விஷயம் போலத் தோன்றும்.

ஆனால் இந்த ஒரு தாழ்மையின் சிந்தை தான், ஆபிரகாமை தேவனால் வரும் உயர்வுகளின் உச்சத்திற்கு கொண்டு சென்றது.

அநீதி செய்த சவுலை ஒழித்துக் கட்டுவதற்கான நியாயம் தாவீதின் பக்கம் இருந்தது. அதைச் செய்யும் வாய்ப்பும் தாவீதுக்கு கிட்டியது; ஆனால் தாவீது நியாயத் தையும் பயன்படுத்தவில்லை, வாய்ப்பையும் பயன்படுத்த வில்லை. அவன் தேவநீதிக்கே முதல் மரியாதை கொடுத் தான். தன்னுடைய நியாயத்தை அவன் உணர்ந்து தன்னை தாழ்த்திக்கொள்ள ஆயத்தமானான்; எனவேதான் ஏற்ற வேளையில் தேவன் அவனை எல்லாருக்கும் முன்பாக உயர்த்தி கனப்படுத்தினார். தாழ்மை சிந்தைதான் உயர்வுக்கான அஸ்திபாரம் என்பது இயேசுவின் வாழ்க்கை யில் தெளிவாக வெளிப்பட்டது. பிலி. 2:8,9–ம்வசனம் சொல்லுகிறது: அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தன்னைத் தானே தாழ்த்தினார். ஆனால் தேவன் அவரை அப்படியே விட்டு விடவில்லை. தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, எல்லாருடைய முழங்கால்களும் அவருக்கு முன்பாக முடங்கும்படி செய்தார். அவரைப் போல தாழ்த்திக் கொள்ளும் சிந்தையை நாமும் அணிந்து கொள்வோம். இதுதான் உயர்வின் ரகசியம்.

மனமேட்டிமை

அழிவுக்கு முன்னானது அகந்தை; விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை (நீதி. 16:18).

மற்றவர்களைவிட தான் மேன்மையானவன் என்று எண்ணுவதும், பிறர் தன்னை பெரியவன் என்ற நிலையில் பார்க்கவேண்டும் என்று செயல்படுவதும்தான் மன மேட்டிமை. தேவனை விட்டும், தேவனுடைய கிருபைகளை விட்டும் ஒரு மனிதனை வெகுதூரப்படுத்தும் ஒரு குணம் தான் மனமேட்டிமை. கோபுரம் போல உயர்ந்து நின்ற சிலர் இருந்த இடம் தெரியாமல் போனதற்கு இந்த மனமேட்டிமையே முக்கிய காரணமாகும். நேபுகாத்நேச்சார், பாபிலோன் ராஜ்யத்தின் அரமனைமேல் உலாவிக்கொண்டிருக்கும் போது, இது என் வல்லமையின் பராக்கிரமத்தினால், என் மகிமைப்பிரதாபத்துக் கென்று நான் கட்டின மகா பாபிலோன் அல்லவா என்று சொன்னான். அந்த வார்த்தை அவன் வாயிலிருக்கும்போதே கர்த்தர் அவன் மீது வனாந்தரக் காற்றை வீசச் செய்தார். உடனே வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டானது: ராஜாவே, ராஜ்யபாரம் உன்னை விட்டு நீங்கிற்று. அவன் மனுஷரின்று தள்ளப்பட்டு மாடுகளைப்போல புல்லை மேய்ந்தான். அவனுடைய தலைமயிர் கழுகுகளுடைய இறகு களைப்போலவும், அவனுடைய நகங்கள் பட்சிகளுடைய நகங்களைப்போலவும் வளருமட்டும், அவன் சரீரம் ஆகாயத்துப் பனியிலே நனைந்தது. அவனுடைய நிலைமைப் பரிதாப மாய்ப் போனது. காரணம் மனமேட்டிமை (தானி. 4:29–33). ஆனால் சில நாட்கள் சென்ற பின் அவன் தன் கண்களை வானத்துக்கு நேராக ஏறெடுத்துப் பார்த்தான்; அவனுக்கு ஒரு தெளிவான புத்தி வந்தது; தேவனை ஸ்தோத்தரித்தான், தேவனை மகிமைப்படுத்தினான், தேவனைப் புகழ்ந்தான்.

அவருடைய கர்த்தத்துவமே நித்திய கர்த்தத்துவம், அவருடைய ராஜ்யமே தலைமுறை, தலைமுறையாக நிற்கும். அவருடைய கிரியைகளெல்லாம் சத்தியம். அவருடைய வழிகள் நியாயமுமானவைகள். அகந்தையாய் நடக்கிறவர்களைத் தாழ்த்த அவராலே ஆகும் (தானி. 4:37) என்று தன்னுடைய வாழ்க்கை அனுபவத்திலிருந்து எழுதுகிறான்.

மனமேட்டிமையுள்ளவன் எவனும் கர்த்தருக்கு அருவருப்பானவன் என்று நீதி. 16:5 வசனம் சொல்லுகிறது.

நேபுகாத்நேச்சாரின் இருதயம் மேட்டிமையாகி, அவனுடைய ஆவி கர்வத்தினாலே கடினப்பட்டபோது, அவன் சிங்காசனத்திலிருந்து தள்ளப்பட்டான். அவனுடைய மகிமை அவனை விட்டு அகன்றுபோயிற்று. காட்டுக்கழுதை களோடே சஞ்சரித்தான் (தானி. 5:20,21).

ஏரோது தேவனுக்குச் செலுத்த வேண்டிய மகிமையைச் செலுத்தாதபடியினாலே, கர்த்தருடைய தூதன் அவனை அடித்தான்; அவன் புழுப்புழுத்து இறந்தான் (அப். 12:23).

ராஜ ஸ்திரீயாகிய வஸ்தியின் மனமேட்டிமையினிமித்தம் அவளுடைய ராஜமேன்மை அவளை விட்டு எடுபட்டுப் போயிற்று. தாழ்மையான எஸ்தரை கர்த்தர் ராஜஸ்திரீயாக உயர்த்தினார். இப்படி மனமேட்டிமையினிமித்தம் விழுந்து போன அநேக உதாரணங்களைச் சொல்லலாம்.

சிலர் தங்களின் செல்வ நிலையின் அடிப்படையில் எங்கு சென்றாலும் தங்களுக்கு விசேஷகனமும், மரியாதையும்

கிடைக்கவேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள். சிலர் தங்களின் கல்வி நிலைகளை மனதில் கொண்டு, தங்களின் கருத்துக் களை மற்றவர்கள் ஏன், எதற்கு என்ற கேள்வியின்றி ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள். சிலர் தங்களுக் கிருக்கும் ஆன்மீக உயர் பதவி நிலைகளின் அடிப்படையில் தாங்கள் சொல்வதற்கெல்லாம் பிறர் தலையாட்ட வேண்டும் என்றும், தாங்கள் செல்லுமிடமெங்கும் தங்களுக்கு முதன்மை யான இருக்கை போட வேண்டும் என்பதிலும் மிகவும் கருத்தா யிருப்பார்கள். இவை யாவும் தேவன் அருவருக்கும் மன மேட்டிமை என்ற பொல்லாத சுபாவத்தின் பிரதிபலிப்புகளே.

பணம், பொருள், கல்வி, சமூக அந்தஸ்து, திறமைகள், ஆவிக்குரிய வரங்கள் போன்றவை மற்றவர்களை விட அதிகமாக நம்மிடம் இருந்தால் அதற்காக தேவனை ஸ்தோத்தரித்து பயபக்தியுடன் வாழ்வோம். அதற்குப் பதிலாக அவைகளின் அடிப்படையில் பிறருடைய மரியாதையையும், மதிப்பையும், புகழ்ச்சியையும்பெற பிரயாசப்படுவோமானால், தேவனைக் கோபப்படுத்த தயாராகிவிட்டோம் என்பதே பொரு ளாகும். தன்னை உயர்த்திக் காண்பிக்கவேண்டும் என்ற விருப்பமுடையவன் தேவன் விரும்பும் தாழ்மை குணத்தை அவமதிக்கின்றவனாக மாறிவிடுகிறான். அந்த அவமதிப்பின் பாவம் தேவனுடைய கிருபைக்கு நம்மைத் தூரமாக்குவதோடு, தேவகோபத்தை நம் மேல் வரவழைக்கின்றது.

அனைத்து உயர்வுகளுக்கும், மேன்மைகளுக்கும் அதிபதியாகிய இயேசு கிறிஸ்து மனிதர்கள் நடுவில் தெரிந்து கொண்ட கோலம் தாழ்மை ஆகும். (பிலிப். 2:8) அதை

நினைவில்கொண்டு தாழ்மையாயிருக்கக் கற்றுக் கொள்வோம். தேவனால் உயர்ந்த நிலைகளுக்கு வந்த உசியா ராஜாவும், எசேக்கியா ராஜாவும் கண நேரத்தில் தங்கள் மகிமையை இழந்து தேவனுடையப் பார்வையில் மிகவும் சுருங்கிப்போனார்கள். காரணம் என்ன? தங்களை எல்லா ரிலும் மேன்மையானவர்கள் என்று காண்பிக்க விரும்பிய மனமேட்டிமை. ஆம் அழிவுக்கு முன் வருவது அகந்தை. விழுதலுக்கு முன்வருவது மனமேட்டிமை.

பெருமையின் வடிவம்

மாயமான தாழ்மையிலும் ... (கொலே. 2:19)

கிராமம் ஒன்றில் திருவிழா நடந்து கொண்டிருந்தது. அந்த திருவிழாவிற்கு செல்ல தகப்பனிடம் மகன் காசு கேட்டான். தகப்பன் அவனுக்கு முன்பாக ஒரு 1 ரூபாய் நாணயத்தையும், ஒரு 10 ரூபாய் நோட்டையும் வைத்து, இதில் ஏதாவது ஒன்றை நீ எடுத்துக் கொள்ளலாம் என்றார். மகன், அப்பா, இந்த ஒரு ரூபாய் நாணயம் எனக்குப் போதும் என்றான். அதோடு அவன் நின்று விடவில்லை. "அப்பா இந்த நாணயத்தை நான் கையில் எடுத்துச் சென்றால் தொலைத்து விடுவேன். ஆகவே, இந்த நாணயத்தை இந்த தாளில் (பத்து ரூபாய் நோட்டில்) மடித்து பத்திரமாக எடுத்துச் செல்கிறேன் என்று சொல்லி பத்து ரூபாய் நோட்டையும் எடுத்துச் சென்றான். பாருங்கள், இவன் ரொம்ப புத்திசாலியான மகன்.

பிசாசானவன் இந்த புத்திசாலிதனத்தை பல ஆவிக் குரியவர்களிடம் எப்படியாவது செயல்பட வைக்கிறான்.

அவர்கள் தெரிந்துக்கொள்வது தாழ்மை என்னும் குணத்தை ஆனால் அந்த தாழ்மையை பெருமை என்னும் தாளில் பொதிந்து வைக்கிறார்கள். அவர்கள் தெரிந்துகொள்வது எளிமை என்னும் உயர்ந்த குணத்தை; ஆனால் மனமேட்டிமை யாய் அதை மூடிக் கொள்கிறார்கள். சிலருடைய தாழ்மையான செயல்பாடுகளே அவர்களை பெருமைக்காரர்கள் ஆக்கி விடுகிறது. அவர்கள் தங்களின் தாழ்மை நிலையை அதிக மாக பெரிதுபடுத்திக் காண்பிப்பதோடு தங்களின் தாழ்மை யான செயல்களுக்காக பிறர் அதிகமாக தங்களை பாராட்ட வேண்டும் என்றும் எதிர்பார்க்கின்றனர். இது தான் மாயமான தாழ்மை. இவர்கள் மேல் வனாந்தரக்காற்று வீசும் என்று வசனம் சொல்லுகிறது. சில வேளைகளில் அவர்களின் பார்வையில் மற்றவர்கள் யாவரும் பெருமைக்காரர்களாகத் தோன்றி, தங்களுக்குள் தங்களை மிக சிறப்பானவர்களாக உணரச்செய்கிறது.

ஆம், தாழ்மை ஒரு நல்ல குணம். ஆனால் அந்த தாழ்மையை பிறருக்கு பெரிதாகக் காட்டி தங்களை மேன்மைப்படுத்துவது ஒரு பெருமை ஆகும். எளிமையான வாழ்வை தேவன் விரும்புகிறார். ஆனால் அந்த எளிமையை மற்றவர்கள் காணவேண்டுமென்றும், மற்றவர்கள் புகழ வேண்டும் என்றும் நினைப்பது ஒரு மனமேட்டிமை. ஒருவன் தன்னை பெரியவன் என்றும் காட்டிக் கொள்வது மட்டுமல்ல; பெருமை, தன்னைப் பெரிய தாழ்மை நிறைந்தவனாகக் காண்பித்து அதில் ஒரு புகழ்ச்சியை தேடுவதும் பெருமை தான். ஏதாவது நம்மில் உள்ள ஒன்றைக் குறித்து மேன்மை

பாராட்டுவது பெருமையின் விளைவே. நல்ல ஒழுக்கங்கள் நமக்கு அலங்காரத்தைத் தரும். ஆனால் அந்த அலங்காரம் நமக்கு அகங்காரத்தைத் தராதிருக்க கவனமாயிருக்க வேண்டும்.

நான் வானத்துக்கு ஏறுவேன், தேவனுடைய நட்சத்திரங் களுக்கு மேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன்; வட புறங்களிலுள்ள ஆராதனைக் கூட்டத்தின் பர்வதத்திலே வீற்றிருப்பேன் என்றும், நான் மேகங்களுக்கு மேலாக உன்ன தங்களில் ஏறுவேன்; உன்னதமானவருக்கு ஒப்பாவேன் என்று லூசிபர் தன் இருதயத்தில் சொன்னபடியால், அவனுடைய பெருமை அவனை அகாதமான பாதாளத்திலே தள்ளுண்டு போட்டது (ஏசா. 14:13–15). லூசிபரின் உள்ளத் திலே ஒரு அகங்காரம் வந்தது; அந்த அகங்காரம் அவனை பாதாளத்திலே தள்ளிப்போட்டது. பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார்.

இன்றைக்கு உலகத்தில் எதை எதையெல்லாமோ குறித்து மேன்மைபாராட்டுகிறார்கள். சிலர் தங்களுடைய வீட்டைக்குறித்து பெருமைபாராட்டுகிறார்கள். படிப்பைக் குறித்து பெருமைபாராட்டுகிறார்கள். சிலர் தங்களுடைய உயர்ந்த வேலையைக்குறித்து பெருமைபாராட்டுகிறார்கள். சிலர் ஆவிக்குரிய வரங்கள், வல்லமை எனக்கு இருக்கிறது நான் ஜெபித்தால் உடனே அற்புதங்கள் நடக்கிறது என்று ஆண்டவர் கிருபையாய்க் கொடுத்த படிப்பை, வேலையை வல்லமை, வரங்களைக் குறித்து பெருமைபாராட்டுகிறார்கள். சிலர் இரதங்களைக் குறித்தும், சிலர் குதிரைகளைக்

குறித்தும் மேன்மைபாராட்டுகிறார்கள். ஆனால், அப்படி மேன்மைபாராட்டினவர்கள் முறிந்து விழுந்தார்கள். தேவனு டைய நாமத்தைக் குறித்து மேன்மைபாராட்டினவர்களோ எழுந்து நிமிர்ந்து நின்றார்கள். ஆகையால் தான் பவுல் சொல்லு கிறார் : "நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங் குறித்து மேன்மைபாராட்டாதிருப்பேனாக" (கலா. 6:14). இவ்வுலகத்தின் ஞானம் தேவனுக்கு முன்பாகப் பைத்தியமாயிருக்கிறது (1 கொரி. 3:19) இந்நாள் வரைக்கும் உலகத்தின் குப்பையைப் போலவும், எல்லாரும் துடைத்துப் போடுகிற அழுக்கைப் போலவுமானோம் என்று பவுல் தன்னைத் தாழ்த்துகிறான் (1 கொரி. 4:13). நீங்கள் மேன்மை பாராட்டுவது நல்லதல்ல (1 கொரி. 5:6).

ஞானி தன் ஞானத்தைக்குறித்து மேன்மைபாராட்ட வேண்டாம்; பராக்கிரமன் தன் பராக்கிரமத்தைக்குறித்து மேன்மைபாராட்ட வேண்டாம்; ஐசுவரியவான் தன் ஐசுவரி யத்தைக் குறித்து மேன்மைபாராட்டவேண்டாம்; மேன்மை பாராட்டுகிறவன்பூமியிலே கிருபையையும், நியாயத்தையும், நீதியையும் செய்கிறவர் கர்த்தர் என்பதை நினைத்து அவரைக் குறித்தே மேன்மைபாராட்டக்கடவன் என்று கர்த்தர் சொல்லுகிறார் (ஏரே. 9:23,24). பலவான்களை ஆசனங்களி லிருந்து தள்ளி தாழ்மையானவர்களை உயர்த்துகிறார் (லூக். 1:52). மேன்மைபாராட்டின பரிசேயன் செய்த எல்லா நல்ல காரியங்களையும் வைத்து ஆண்டவர் அவனை நீதிமானாய் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் தன்னைத்

தாழ்த்தின ஆயக்காரனின் தாழ்மையை ஆண்டவர் நோக்கிப் பார்த்தார். அவன் நீதிமானாக்கப்பட்டான் என்று வசனம் சொல்லுகிறது. தன்னை உயர்த்துகிறவன் எவனும் தாழ்த்தப் படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் (லூக். 18:14).

காபிரியேல் என்னும் தூதன் மரியாளிடத்தில் தோன்றி: நீ கிருபை பெற்றவள், கர்த்தர் உன்னுடன் இருக்கிறார், நீ ஸ்திரீகளுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவள். நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய், அவருக்கு இயேசு என்று பெயரி டுவாயாக. அவர் பெரியவராயிருப்பார், உன்னதமானவரு டைய குமாரன் என்னப்படுவார்; பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார். அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது. அப்படிப்பட்ட வல்லமையுடைய, மகத்துவமுள்ள இயேசு உன் வயிற்றில் பிறப்பார் என்று சொன்னவுடன் மரியாள் தேவதூதனைப் பார்த்து சொன்ன வார்த்தை என்ன தெரியுமா ? "இதோ, நான்ஆண்டவருக்கு அடிமை" (லூக். 1:38) என்று தன்னை முழுவதும் தாழ்த்தி அர்ப்பணித்தாள். ஆண்டவர் அவள் அடிமையின் தாழ்மையை நோக்கிப் பார்த்தார்.

1 இராஜாக்கள் 3:7–ல் சாலொமோன் தேவனிடம் சொல்லுகிறான் : நானோவென்றால் போக்கு வரவு அறியாத சிறுபிள்ளை என்று சிங்காசனத்தில் வீற்றிருக்கிற ராஜா சொல்லுகிறான். நான் போக்குவரவு அறிாத சிறுபிள்ளை என்று தன்னை தேவனுக்கு முன்பாகதாழ்த்தினான். எவ்வளவு தாழ்மை பார்த்தீர்களா ? தகப்பனின் ஆட்சியில்

அநேக காரியங்களை பார்த்திருந்தாலும், அனுபவம் இருந்தாலும், தனது அனுபவத்தை வைத்து ஒன்றும் செய்ய முடியாது என்பதை அறிந்து உணர்ந்திருந்தான். தாவீதின் வாழ்க்கையில் அவனுக்கு விரோதமாக வந்த பிரச்சனைகளை நினைத்து, எதிரிகளை நினைத்து இவன் உள்ளம் கலங்கியிருக்கலாம்; எனவே முழுவதும் தேவனை சார்ந்து கொண்டான். நீர்தான் என் தகப்பன் ஸ்தானத்தில் என்னை ராஜாவாக்கினீர், நான் சிறுபிள்ளை; எனக்கு ஒன்றும் தெரியாது; எனவே உம்முடைய ஞானம் இருந்தால் தான் முடியும் என்று தன்னைத் தாழ்த்தி, தனது இயலாமையைக் கூறி ஜெபித்தான். இந்தத் தாழ்மையின் ஜெபம் ஆண்டவருடைய சமுகத்தைபோய் எட்டியது. தேவன் தமது பிள்ளைகளிடம் தங்கள் அனுபவத்தையோ, திறமையையோ சார்ந்து கொள்ளாமல், அவற்றின்மீது நம்பிக்கைவைக்காமல், அவற்றைக்கொடுத்த தேவன் மீது நம்பிக்கைவைத்து, அவரை முழுவதும் சார்ந்துகொள்ளவேண்டும் என்று விரும்பு கிறார். நீங்கள் உங்கள் திறமையையோ, அனுபவத்தையோ நம்பாமல் தேவனை நம்பி, அவருக்கு முன்பாக உங்களைத் தாழ்த்தி, அவரை சார்ந்துகொள்ளும்போது, ஆண்டவர் நிறைவாய் நம்மை ஆசீர்வதிப்பது மட்டுமல்ல; புதிய கிருபை களைத் தந்து, நம்மை பலருக்கு முன்பாக உயர்த்தி வைப்பார்.

பிசாசு தேவனுக்கு முன்பாக பெருமை பாராட்டி விழுந்து போனவன்; பெருமை பாராட்டுபவர்கள் விழுந்து போவார்கள். முறிந்து போவார்கள், அவர்கள் வெட்கப்பட்டுப் போவார்கள். பெருமை பாராட்டிக்கொண்டிருக்கிற தேவப்பிள்ளையே,

இன்றே உன் பெருமையை அகங்காரத்தை மனமேட்டிமையை, நான் என்கிற ஆணவத்தை தூக்கி எறிந்து விடு. மரியாளைப் போல தேவ சமுகத்தில் உன்னைத் தாழ்த்தி கர்த்தருடைய கரத்தில் உன் வாழ்க்கையை ஒப்புக்கொடு. பெருமை வேண்டாம், பெருமை பாராட்டினவர்கள் நன்றாக வாழ்ந்ததாக வேதத்தில் எங்கும் படித்ததில்லை. கர்த்தருக்குப் பிரியமான குணம் தாழ்மை. நம்மை தேவனுடைய சமுகத்தில் தாழ்த்த, தாழ்த்த தேவ மகிமையால், தேவ கிருபையால் நிரப்பப் படுவோம். அந்த கிருபை, அந்த மகிமை நம்மை உயர்த்தி, உன்னதநிலைக்குக் கொண்டுபோகும். இந்த வார்த்தை களைப் படித்து விட்டும் உன் பெருமையை விட்டு விடவில்லை என்றால், இன்னும் உன் இருதயத்தை கல்லாக்கிக் கொண்டு கடின இருதயத்தோடு இருந்தால் கர்த்தர் உன்னை சும்மா விடமாட்டார். அவர் தமது பட்டயத்தை கருக்காக்குவார். அவருடைய கோபம் நம்மீது பற்றியெரியும். வனாந்தரக் காற்றை நம்மீது மோதியடிக்கப்பண்ணுவார். அந்தக் காற்று அடித்தால் நாம் துரும்பைப்போல சிதறடிக்கப்பட்டுப் போவோம். இந்த நிர்ப்பந்தமான நிலைவேண்டாம். தேவ சமுகத்தில் தாழ்த்தி, அழுது கெஞ்சுங்கள். தேவ கிருபையை தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

12. கொடிய புசல்காற்று

ஆகையால் என் உக்கிரத்திலே கொடிய புசல்காற்றை எழும்பி அடிக்கப் பண்ணுவேன்; என் கோபத்திலே வெள்ளமாக அடிக்கிற மழையும், என் உக்கிரத்திலே நிர்மூலமாக்கத்தக்க பெருங்கல்மழையும் சொரியும் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

(எசேக். 13:13)

இந்தக் காற்றின் பெயர் கொடிய புசல்காற்று. இது யார் மீது அடிக்கும் தெரியுமா? எசேக்கியேல் 13–ம் அதிகாரம் முழுவதுமாக படிக்கும்போது தெரியும். மதிகெட்ட கள்ளத் தீர்க்கதரிசிகள் மீது அடிக்கும்.

இயேசு ஒலிவமலையின் மேல் உட்கார்ந்திருக்கையில் சீஷர்கள் அவரிடத்தில்வந்து உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன? எங்களுக்குச் சொல்ல வேண்டும் என்று கேட்டார்கள். இயேசு சொன்னார் : "ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில், அநேகர் வந்து, என் நாமத்தைத் தரித்துக்கொண்டு: நானே கிறிஸ்து என்று சொல்லி, அநேகரை வஞ்சிப்பார்கள். இதோ, கிறிஸ்து இங்கே இருக்கிறார், அதோ, அங்கே இருக்கிறார் என்று எவனாகிலும் சொன்னால் நம்பாதேயுங்கள். கள்ளக்கிறிஸ்துக்களும், கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்துக் கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய

அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள் (மத். 24:3,4,5,23,24). இதோ, கிறிஸ்து வனாந்தரத்தில் இருக்கிறார், அறைவீட்டில் இருக்கிறார் என்று சொன்னால் நம்பாதிருங்கள். இயேசுவே, கள்ளத்தீர்க்கதரிசிகளை நமக்கு அடையாளம் காட்டிக்கொடுக்கிறார். நாம் இந்த கடைசி நாட்களில் எச்சரிக்கையாயிருக்கவேண்டும், விழிப்பாயிருக்க வேண்டும்.

இன்றைக்கு அநேக மத தலைவர்கள், சினிமா நடிகர்கள் எங்களைப் பின்பற்றுங்கள் என்று சொல்லுகிறார்கள். பல நாகரீகங்களை வெளிக்காண்பிக்கிறார்கள். பல்வேறு வகை தத்துவ ஞானிகளும், ஜோசியக்காரர்களும், குறிசொல்லுகிறவர்களும், பிசாசின் வல்லமையை தனக்குள் அடக்கி போலியான அற்புதங்களையும், அடையாளங்களையும் காண்பிக்கிறார்கள். நாங்கள் உங்களை வழிநடத்துகிறோம், எங்களை பின்பற்றுங்கள் என்று பலதத்துவங்களைச் சொல்லி மக்களை திசைதிருப்புகிறார்கள். தங்களுடைய சுய லாபத்திற்காக "நாங்கள் உங்களுக்கு வழி காட்டுகிறோம்" என்று அநேக கள்ளப்போதகர்கள், கள்ளத்தீர்க்கதரிசிகள், கள்ள வேலையாட்கள், கள்ள அப்போஸ்தலர்கள் ஆட்டுத் தோலைப் போர்த்திக்கொண்டு வரும் ஓநாய்களாக சுற்றித்திரிகிறார்கள். இவர்கள் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களையும் கூட வஞ்சிக்கத்தக்கதாக கள்ளத்தீர்க்கதரிசனம் உரைத்து, பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் காண்பிப்பார்கள்.

பழைய ஏற்பாட்டில் கர்த்தர் ஒரு தீர்க்கதரிசியிடம், பலி

பீடத்திற்கு முன்பாக தீர்க்கதரிசனம் உரைத்து விட்டு, ஒன்றும் சாப்பிடாமல் திரும்பி வரச்சொன்னார். ஆனால் கிழவனான மற்றொரு தீர்க்கதரிசி அவனுக்கு எதிர்ப்பட்டு தன்னை உணவு அருந்த வற்புறுத்தி போஜனம் பண்ணி, முடிவிலே ஒரு சிங்கம் எதிர்பட்டு அந்த தீர்க்கதரிசியைக் கொன்று போட்டது. சாத்தான் தந்திரமாக ஆதாம், ஏவாளை வழி நடத்துகிறேன் என்று முன்வந்தான்: இதனால் எத்தனை பெரிய வீழ்ச்சி, தேவ மகிமையை தேவ பிரசன்னத்தை இழந்தார்கள், சாபத்துக்குள்ளானார்கள். இஸ்ரவேலின் முதல் ராஜாவாகிய சவுல் அபிஷேகம் பண்ணப்பட்டிருந்தும் கர்த்தரால் வழிநடத்தப்பட தன்னை ஒப்புக்கொடுக்கவில்லை. தன் சொந்த வழிகளிலே நடந்து, தனக்கு பேர் புகழ் தேடி, ஜெப ஸ்தம்பங்களை நாட்டிக் கொண்டிருந்தான். முடிவில் அவனை ஒரு பொல்லாத ஆவி பிடித்து அலைகழித்தது.

லேகியோன் பிசாசு பிடித்த மனிதனை, சாத்தான் எவ்வளவு கொடூரமாய் வழிநடத்தி, தன்னைத்தானே கல்லுகளினாலே கீறிக்கொள்ளவும், குடும்பத்தாரைவிட்டு விலகி கல்லறைகளின் மத்தியிலே கிடக்கவும் நடத்தினான். தன்னை யார் என்று அடையாளம் கண்டுகொள்ள முடியாத அளவுக்கு பிசாசு அவனை வழிநடத்தினான். சிம்சோனைப் போல விபசார ஆவியினால் நடத்தப்பட்டு, உங்கள் அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் நஷ்டப்படுத்திவிடாதபடி, கர்த்தரால் வழிநடத்தப்பட ஒப்புக் கொடுங்கள். உங்களை அழைத்தவர் உண்மையுள்ளவர். நேரான பாதையிலே, செம்மையான பாதையிலே வழிநடத்துவார். நீங்கள் பரிசுத்த ஆவியைப்

பெறும்போது, உன்னதபெலனைப் பெற்றுக்கொள்வீர்கள். வல்லமையால் தரிப்பிக்கப்படுவீர்கள். தேவ கிருபையால் அலங்கரிக்கப்படுவீர்கள். பரிசுத்த ஆவியானவரால் வழி நடத்தப்படும்படி, உங்களை பூரணமாய் ஒப்புக்கொடுங்கள்.

இந்த கடைசி நாட்களிலே, பொல்லாத நாட்களிலே ஒருவரும் உங்களை வஞ்சியாதபடிக்கு ஆவியானவரால் வழி நடத்தப்படும் படி நீங்கள் உங்களை ஒப்புக்கொடுக்கும்போது அவர் உங்களை வழிநடத்திச் செல்வார். தோல்வி என்பதற்கு இடமில்லை, ஒருவரும் உங்களை வஞ்சிக்க மாட்டார்கள்; பிசாசு உங்களை ஏமாற்ற முடியாது. எப்பொழுதும் வெற்றி பூரண பரிசுத்தம் சமாதானம் சந்தோஷம் உண்டு; சாத்தானோ, மந்திரவாதிகளோ கள்ளத்தீர்க்கதரிசிகளோ உங்களைத் தாக்கவோ மேற்கொள்ளவோ முடியாது. எகிப்திலிருந்து வெளியே வந்த இஸ்ரவேலரை வழிநடத்த மேகஸ்தம்பங் களும், அக்கினி ஸ்தம்பங்களும் தேவையாயிருந்தன. அவைகள் ஆவியானவருக்கு அடையாளம்; ஆவியானவர் நம்மையுங்கூட வழிநடத்தும்போது பகலில் மேகஸ்தம்ப மாகவும், இரவில் அக்கினி ஸ்தம்பமாகவும் இருப்பார்.

ஒரு சின்னக்குழந்தை தன்னைத்தானே வழிநடத்திக் கொள்ள முடியாது. பெற்றோரால் வழிநடத்தப்பட்டால்தான் அது பாதுகாப்பாயிருக்கும். அல்லாவிட்டால் பிள்ளைபிடி காரன் பிடித்துக்கொண்டுபோய்விடுவான். அல்லாவிடில் கீழே விழ நேரிடும்; வேறு நபர் அந்தப் பிள்ளையை வழி நடத்தினால், பெற்றோரைப்போல கண்ணுங்கருத்துமாக கவனிக்க

மாட்டார்கள். அதுபோல தெரிந்து கொள்ளப்பட்டவர் களாகிய நம்மையும் ஆவியானவர் வழிநடத்தவேண்டும். வேறு மனிதர் வழிநடத்தினாலோ, அல்லாவிட்டால் சுய இஷ்டத் துக்கு நடந்தாலோ நம்மை பிசாசு வஞ்சித்து விடுவான். மாணவனுக்கு நல்ல ஆசிரியர் தேவை, அலுவலகத்தை நடத்த பொறுப்புள்ள அதிகாரி தேவை. நம்மை வழிநடத்த ஆவியானவர் தேவை; இயேசு கிறிஸ்து எப்பொழுதும் ஆவி யானவரால் வழிநடத்தப்பட்டார். அவர் சிலுவையை சந்தித்த போதும், ஆவியானவரால் நடத்தப்பட ஒப்புக்கொடுத்தார். சுவிசேஷகனாகிய பிலிப்புவை கர்த்தருடைய ஆவியானவர் வழிநடத்தினபடியால் அவன் சமாரியாவுக்குப்போய் பெரும் எழுப்புதலை ஏற்படுத்தினார். அங்கு சீமோன் என்னும் மாய வித்தைக்காரனைச் சந்தித்து அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார்.

தேவபிள்ளைகளே இந்த கடைசி நாட்களில் தேவ கரத்தில் உங்களை ஒப்புக்கொடுங்கள். அவர் உங்களை வழி நடத்திச் செல்வார். கள்ளத்தீர்க்கதரிசிகள் அநேகர் எழும்பி அற்புத அடையாளங்களைச்செய்து, ஜனங்களை தம் பக்கமாக இழுத்துக் கொள்வார்கள். நீங்கள் ஆவியானவரால் வழிநடத்தப்பட அவரோடு ஆழமான ஐக்கியம் தேவை. அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிய வேண்டும், தேவனோடு ஒருமனப்பாடு தேவை; இருள் சூழ்ந்த உலகத்திலே பாதை தெரியாமல் திகைக்கும்போது, கர்த்தருடைய ஆவியானவர் கால்களுக்குத் தீபமாக, பாதைக்கு வெளிச்சமாக வருவார். பாம்பு எங்கே கிடக்கிறது என்றும், கொடிய கருந்தேள் எங்கே

இருக்கிறது என்றும், தீய ஜந்துக்களையும் துஷ்ட மிருகங்களையும் நமக்குக் காண்பித்து விலகிப் போகும்படிச் செய்வார். ஆகவே உங்களுடைய வாழ்க்கைக் காரின் ஸ்டியரிங்கை ஆவியானவரிடம் கொடுத்துவிடுங்கள். அவர் உங்கள் வாழ்க்கையை வழிநடத்திச் செல்லட்டும். நீங்கள் அவர் அருகில் அலசலடிப்படாமல் அமைதியாய் அமர்ந்திருங்கள். அவர் உங்களை வழிநடத்திச் செல்லும்போது, உங்கள் ஐம்புலன்களோ அல்லது பிறருடைய ஆலோசனைகளோ குறுக்கிட வேண்டாம். தேவ ஆவியானவர் நூற்றுக்கு நூறு உங்களை வழி நடத்தட்டும். நீங்கள் ஆவியானவருக்கு நூற்றுக்கு நூறு கீழ்ப்படிந்தால், அவர் தொடர்ந்து உங்களோடு பேசிக் கொண்டிருப்பார். ஆலோசனை தருவார். ஆவியானவர் நடத்துகிற பாதையெல்லாம் நெய்யாய் பொழியும். ஒருபோதும் நீங்கள் தாழ்ச்சியடைவதில்லை.

சத்துரு வெள்ளம் போல திடீரென்று எதிர்பாராத விதத்தில் வருவான். அப்படிதான் அவன் எய்யும் அக்கினி அஸ்திரங்கள் விசுவாசிகளையும், அவிசுவாசிகளையும், பின்மாற்றக்காரர்களையும் கொள்ளை கொண்டுபோகிறது. ஆகவே, எந்த நேரத்திலும் தேவபிள்ளைகள் ஜாக்கிரதையுள்ளவர்களாய் இருக்கவேண்டும். பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப்போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக் கொண்டவர்களாய் நிற்கவேண்டும். பல வேளைகளில் சத்துருவாகிய பிசாசானவன் அசுத்த எண்ணங்களையும் சிந்தைகளையும் வெள்ளம் போல வாரிச்

கொண்டு வந்து, உங்களுடைய சரீரத்தை கெடுக்கக்கூடும். இரவு நேரங்களில் அருவருப்பான, ஆபாசமான சொப்பனங் களைக் கொண்டுவரக்கூடும். களைகளை உங்களுக்குள் விதைத்து உங்களை தேவனை விட்டு வழிவிலகச் செய்ய வேண்டும்; அதுதான் அவன் நோக்கம். வாலிபப் பிள்ளைகள் இந்தக் காரியத்தில் விழிப்பாயிருக்கவேண்டும்.

சில தீர்க்கதரிசிகள் தங்கள் இருதயத்தில் இருக்கிற தையே எடுத்துச் சொல்லிவிட்டு, கர்த்தர் தான் இந்த வார்த் தைகளை சொல்லச்சொன்னார் என்று சொல்லுகிறார்கள். அப்படியே தங்களுடைய ஆவியின் ஒப்புதலால், தங்கள் மனதில் தோன்றுகிறபடி சொல்லுகிற மதிகெட்ட தீர்க்க தரிசிகளுக்கு ஐயோ! என்று வேதம் சொல்லுகிறது. அப்படிப் பட்ட தீர்க்கதரிசிகள் வனாந்தரங்களிலுள்ள நரிகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள். அபத்தமானதைத் தரிசித்து, பொய்க் குறியைச் சொல்லுகிற தீர்க்கதரிசிகளுக்கு என் கை விரோதமாயிருக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

வேதத்திலே சிலர் கர்த்தருடைய வழிகளைவிட்டு விலகிப்போகும்போது, கர்த்தர் அவர்களை எச்சரிக்கும் படியாக, அவர்களை தம்மண்டை இழுத்துக்கொள்ளும்படி யாக, சில தீர்க்கதரிசிகளை எழுப்பி அவர்களிடம் பேச அனுப்புகிறார். அவர்களைக்குறித்து உள்ள காரியங்களை ஆண்டவர் திட்டமும், தெளிவுமாக தீர்க்கதரிசி மூலம் வெளிப் படுத்துகிறார். சில தீர்க்கதரிசிகளுக்கு சில அடையாளங் களைக் காண்பித்து, அதன் மூலமாக காரியங்களை வெளிப்படுத்துகிறார். சிலருக்கு சொப்பனங்கள் மூலமாக

பேசுகிறார். நினிவேயின் மக்கள் கொடிய பாவத்தில் அகப்பட்டிருக்கிறார்கள் என்று கர்த்தர் அறிந்து யோனா தீர்க்கதரிசியை அனுப்பினார். யோனா கர்த்தர் கற்பித்த வார்த்தையை நினிவேக்கு விரோதமாய்ப் பிரசங்கித்து இன்னும் நாற்பது நாளிலே நினிவே கவிழ்க்கப்பட்டுப்போம் என்றான். இந்த வார்த்தைகளைக் கேட்ட நினிவேயின் மக்கள் தேவனை விசுவாசித்து உபவாசித்து தங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பினார்கள். தேவன் அவர்களுடைய கிரியைகளைப் பார்த்து: தாம் அவர்களுக்கு செய்வேன் என்று சொல்லியிருந்த தீங்கைக் குறித்து மனஸ்தாபப்பட்டு அதைச் செய்யாதிருந்தார். இதுதான் உண்மையான ஆண்டவரால் வந்த தீர்க்கதரிசனம்.

இயேசு சொன்னார் : கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்திக்கொண்டு உங்களிடத்தில் வருவார்கள்; உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள். (மத். 7:15).

அப்போஸ்தலனாகிய யோவான் நமக்கு கள்ளத்தீர்க்கதரிசிகளை அடையாளம் காட்டிக் கொடுக்கிறார். பிரியமானவர்களே, உலகத்தில் அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள் (1 யோவா. 4:1). நீங்கள் தேவ ஆவியை எதினால் அறியலாமென்றால், மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கைபண்ணுகிற எந்த ஆவியும் தேவனால் உண்டாயிருக்கிறது.

இன்றைக்கு ஒரு கூட்டத்தார் பிதாவை மட்டும் நம்பு கிறார்கள். யெகோவா அவர்தான் கடவுள் என்று, இயேசு வுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. அபிஷேகத்தை நம்புவதில்லை. மற்றொரு சாரார் அபிஷேகம் மட்டும் இருந்தால் போதும். பிதா, குமாரன் வேண்டாம். அபிஷேகம் இருந்தால் எதையும் சாதிக்கலாம் என்று நம்புகிறார்கள். ஆனால் வசனம் சொல்லுகிறது மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கைபண்ணுகிற எந்த ஆவியும் தேவனால் உண்டானது. இயேசுவை முக்கியப்படுத்தி அவரை அறிக்கை பண்ணவேண்டும். கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத் திலே விசுவாசித் தால் இரட்சிக்கப்படுவாய் (ரோமர் 10:9).

இன்றைக்கு கள்ளத்தீர்க்கதரிசனங்கள் மூலமாக எத்தனையோ குடும்பங்கள் சிதறடிக்கப்பட்டுப் போகின்றன. குடும்பங்களிலே பிரச்சனைகள், குழப்பங்கள் உருவா கின்றன. பாவத்தைக் கண்டித்து உணர்த்துகின்ற தீர்க்க தரிசிகள் இன்றைக்கு குறைந்துபோனார்கள். தாவீது விபச்சார பாவத்தில் விழுந்தபோது நாத்தான் தீர்க்கதரிசி நீ செய்கிறது தவறு என்று பாவத்தைக் கண்டித்து உணர்த்தி னான். தாவீது உடனே ஆண்டவருடைய சமுகத்திலே போய் தான் செய்த பாவத்திற்காக மனஸ்தாபப்பட்டு அழுது, கதறி, திரும்பவுமாக இழந்துபோன இரட்சிப்பின் சந்தோஷத்தை பெற்றுக்கொண்டான். இதுதான் கர்த்தருடைய உண்மை யான தீர்க்கதரிசனம். யோவான் ஸ்நானகன் வனாந்திரத்தில்

வந்து நின்று எச்சரிப்பின் வார்த்தைகளைப் பேசினார். மனந்திரும்புங்கள், பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது. விரியன் பாம்புக் குட்டிகளே! வருங்கோபத்துக்குத் தப்பித்துக் கொள்ள உங்களுக்கு வகை காட்டினவன் யார்? மரங்களின் வேர் அருகே கோடரி வைக்கப்பட்டிருக்கிறது; நல்ல கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப் படும். மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள் (மத். 3:8) என்று யோவான் ஸ்நானன் பிரசங்கம் பண்ணினார். எச்சரிப்பின் வார்த்தைகளைக்கேட்ட எருசலேம் யூதேயா யோர்தான் தேசத்தார் அனைவரும் தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு ஞானஸ்நானம் பெற்றார்கள்.

ஏரோது தன் சகோதரன் பிலிப்புவின் மனைவி ஏரோதியாளை தன் மனைவியாக வைத்துக்கொண்டிருந்தான். இதை அறிந்த யோவான் ஸ்நானகன் ஏரோதுவிடம் உன் சகோதரன் மனைவியை நீர் வைத்துக் கொள்வது நியாயமல்ல என்று சொன்னான்; இதினிமித்தம் ஏரோது யோவானைப் பிடித்து, கட்டிக்காவலில் வைத்திருந்தான். யோவான் ஸ்நானன் கர்த்தருடைய தீர்க்கதரிசி, ஆகையால் பாவத்தைக் கண்டித்து உணர்த்தினான்; உள்ளதை உள்ளபடி சொன்னான். அதன் விளைவாக நடந்த காரியம் யோவான் ஸ்நானனுடைய தலை துண்டிக்கப்பட்டது. ஒரு அரசனுக்கு முன்பாக தைரியமாய் போய் அவன் செய்த தவற்றை சுட்டிக்காட்டினான்; காரணம் கர்த்தருக்கு முன்பாக உண்மையுள்ள தீர்க்கதரிசியாய் இருந்தான். இரட்டை வேடம் போடவில்லை, மாய்மாலம் காட்டவில்லை, தவறை பார்த்துக்கொண்டு தலை ஆட்டிக்

கொண்டுப்போகவில்லை. ஆகவே தான் அவ்வளவு தைரிய மாய் போய்சொன்னான். பின் விளைவுகளைக் கண்டு பயப்படவில்லை. கர்த்தருக்கு முன்பாக உண்மையாயிருக்க வேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாயிருந்தான். இன்றைக்கு ஊழியர்கள், தீர்க்கதரிசிகள் ஜனங்கள் செய்கிற தவறு என்னவென்று நன்றாக அறிந்திருந்தும், அவர்களிடம் போய் எச்சரித்து சொல்லுவதற்கு பயப்படுகிறார்கள்; போய் சொன்னால் ஆலயத்திற்கு வரமாட்டார்கள், காணிக்கை தர மாட்டார்கள் என்கிற பயம். அவர்களிடம் மேற்பூச்சாகப் பூசி அவர்கள் செய்வது சரி என்று நியாயப்படுத்துகிறார்கள். பாவம் செய்கிற ஜனங்களுக்கும் பயம் இல்லாமல் போய்விடுகிறது. இன்னும் துணிகரமாய் பாவம் செய்கிறார்கள்; ஆனால் ஆண்டவர் எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருக்கிறார். தீர்க்கதரிசியினிமித்தம் என் இருதயம், என் உள்ளத்திலே நொறுங்கியிருக்கிறது; என் எலும்புகளெல்லாம் அதிருகிறது (எரே. 23:9A). தீர்க்கதரிசியும், ஆசாரியனும் மாயக்காரனா யிருக்கிறார்கள்; என் ஆலயத்திலும் அவர்களுடைய பொல்லாப்பைக் கண்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் (எரே. 23:11). பொய்ச் சொப்பனங்களைத் தீர்க்கதரிசனமாகச் சொல்லி, அவைகளை விவரித்து, என் ஜனத்தைத் தங்கள் பொய்களினாலும், தங்கள் வீம்புகளினாலும், மோசம் போக்குகிற தீர்க்கதரிசிகளுக்கு நான் விரோதி என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் அவர்களை அனுப்பினதுமில்லை, அவர்களுக்குக் கற்பித்ததுமில்லை (எரே. 23:32). என் வார்த்தையைத் திருட்டுத்தனமாய் எடுக்கிற தீர்க்கதரிசி களுக்கு நான் விரோதி. தங்கள் நாவின் சொல்லையே

வழங்கி, கர்த்தர் அதை உரைத்தார் என்று சொல்லுகிற தீர்க்கதரிசி களுக்கும் கர்த்தர் விரோதி. அவர்கள் உங்களை வீண் பெருமை கொள்ளும்படி செய்கிறார்கள். கர்த்தருடைய வாக்கை அல்ல, தங்கள் யூகித்த தரிசனத்தைச் சொல்லு கிறார்கள். தீர்க்கதரிசிகளை நான் அனுப்பாதிருந்தும் அவர்கள் ஓடுகிறார்கள். அவர்களோடே நான் பேசாதிருந்தும், அவர்கள் தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள். இப்படிப்பட்ட தீர்க்கதரிசிகளின் மேல் பெருங்காற்றாகிய கொடிய புசல் காற்று எழும்பி அவர்களுடைய தலையின் மேல் உக்கிரமாய் மோதும். கடைசி நாட்களில் அதை நன்றாய் உணருவீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பழைய ஏற்பாட்டு காலத்திலே வரப்போகிற காரியங்கள் என்ன என்று கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசிகளுக்கு திட்டமும், தெளிவுமாய் வெளிப்படுத்தினார். அவர் வெளிப் படுத்தின காரியங்கள் அப்படியே நடந்தது. ஆகவே தான் வசனம் சொல்லுகிறது : கர்த்தராகிய ஆண்டவர் தீர்க்கதரிசி களாகிய தம்முடைய ஊழியக்காரருக்குத் தமது இரகசி யத்தை வெளிப்படுத்தாமல் ஒரு காரியத்தையும் செய்ய மாட்டார் (ஆமோஸ் 3:7). நோவா காலத்தில் மனிதர்களின் பாவத்தின் நிமித்தம், நித்தம் பொல்லாததாய் இருந்ததினால் தேவன் படைத்த எல்லாவற்றையும் அழிக்க சித்தம் கொண்டார். ஆனால் அவர் அதை இரகசியமாய் செய்யவில்லை. தேவ னோடு சஞ்சரித்த, நீதிமானாய் உத்தமனாய் வாழ்ந்த நோவாவிடம் கூறினார். அதுபோல ஆபிரகாமுக்கு குழந்தை பாக்கியம் இல்லாதிருந்தபோது இருபத்து ஐந்து வருடம்

கழித்து குழந்தையைத் தருவேன் என்று இருபத்து ஐந்து வருடத்திற்கு முன்னமே கூறினார்; அதுபோல் நடந்தது. அதுபோல எகிப்திலே நடக்கப்போகிற காரியங்களை யோசேப்புக்கு சொப்பனங்கள் மூலமாக முன்கூட்டியே தெரிவித்தார். யாருக்கு அறிவிப்பார்? கர்த்தரோடு நெருங்கி உண்மையாய், உத்தமனாய் நீதிமானாய் இருக்கிற தம்முடைய ஊழியக்காரருக்கு தம்முடைய இரகசியத்தை வெளிப் படுத்துவார்.

தமஸ்கு சாலையிலே, தேவன் பெரிய வெளிச்சத்தோடு, சவுலை சந்தித்தபோது, அந்த மகிமையைத் தாங்கக் கூடாமல், அவருடைய சரீரப்பிரகாரமான கண்கள் குருடாய்ப் போயின. ஆனால், ஆண்டவரே, நீர் யார்? உம்மை அறிய வேண்டிய பிரகாரம் நான் அறியவேண்டும் என்று அவன் ஜெபித்த போது: ஆண்டவர், அவன் மனக்கண்களை பிரகாசிக்கப் பண்ணி, அநேக சத்தியங்களை வெளிப்படுத்தினார். சவுலைப் பவுலாக மாற்றி மிக மிக ஆழமான தேவனுடைய இரகசியங்களை வெளிப்படுத்தினார். பவுலை புறஜாதி களுக்கு அப்போஸ்தலனாய் தெரிந்துக்கொண்டார். பவுல் தன்னைக் குறித்து எழுதும்போது "தேவனுடைய இரகசி யங்களின் உக்கிராணக்காரன்" என்று அறிமுகப்படுத்து கிறார் (I கொரி 4:1). தேவனாகியக் கர்த்தர் அப்.பவுலின் பொறுப்பிலே அத்தனை இரகசியங்களையும் வைத்திருந்தார்; மறைபொருள்களை தெரிவித்திருந்தார். ஆகவே தான் அவனுடைய வார்த்தைகளெல்லாம் அத்தனை ஆழமுள்ள தாகவும், அத்தனை விசேஷமுள்ளதாகவும் விளங்கின.

பவுல் மக்களுக்கு ஆண்டவரின் எச்சரிப்பின் வார்த்தைகளைக் கொடுத்தபோது, புறஜாதி மக்கள் அவனுக்கு விரோதமாய் எழும்பினார்கள். பலபாடுகளினூடே கடந்து சென்றான். பலமுறை கல்லெறியப்பட்டார். மூன்று முறை மிலாறுகளால் அடிக்கப்பட்டார். ஒருமுறை அவரை அடித்து குற்றுயிராய் விட்டுச்சென்றார்கள். முடிவில் ரோம அரசாங்கத்தால் கைது செய்யப்பட்டு, ரோமாபுரி சிறைச் சாலையில் அடைக்கப்பட்டார். புறஜாதியாயிருக்கிற உங்கள் பொருட்டுக்கட்டுண்டவராயிருக்கிறேன் என்றும் (எபேசி. 3:1) சுவிசேஷத்திற்காகச் சங்கிலியால் கட்டப் பட்டிருக்கிற ஸ்தானாபதியாகிய நான் என்றும் (எபேசி 6:19) குறிப்பிடுகிறார். ஒரு பக்கம் சுவிஷேசத்தினிமித்தம் கிறிஸ்துவின் அன்பினால் கட்டப்பட்டிருந்தார். மறுபக்கம் உலகப்பிரகாரமான கட்டுகளையும், பாடு களையும் அனுபவித்தார். அவருடைய உள்ளத் துடிப்பெல்லாம் எப்படியாகிலும் ஜனங்களை கர்த்தரண்டை கொண்டு வரவேண்டும்.

இப்படிப்பட்ட பாரமுள்ள தேவமனுஷர்களை, ஊழியர் களை, தீர்க்கதரிசிகளை கர்த்தர் இன்றைக்குத் தேடு கிறார். அவர்கள் அன்பினால் கட்டப்பட்டிருக்க வேண்டும். தேவசித்தத்தினால், வசனத்தினால் நிறைந்தவர்களா யிருக்க வேண்டும். கிறிஸ்துவோடு இணைந்து செயல்படு கிறவர்களாயிருக்க வேண்டும்.

கர்த்தருடைய ஊழியத்தைச் செய்கிற தேவபிள்ளை களே, தீர்க்கத்தரிசிகளே கர்த்தருடைய எச்சரிப்பின்

வார்த்தையைக் கேட்டிருக்கிறீர்கள். கள்ளத் தீர்க்க தரிசனத்தை விட்டுவிலகுங்கள். தங்களுடைய சுயலாபத் திற்காக அற்புத, அடையாளங்களைச் செய்ததுபோதும். இன்றே ஒப்புக்கொடுத்து மனந்திரும்புங்கள். அல்லா விட்டால் கொடிய புசல்காற்றை நம் மீது மோதி அடிக்கச் செய்வார். அது மோதி அடித்தால் நாம் சிதறடிக்கப்பட்டுப் போய் விடுவோம். சிந்தித்து செயல்படுங்கள்.

13. சூறைக்காற்று

அவர்கள் காற்றை விதைத்து, சூறைக்காற்றை அறுப்பார்கள். (ஓசி. 8:7)

சூறைக்காற்று எதைக் குறிக்கிறது என்றால் சாபத்தைக் குறிக்கிறது.

சாபம் எப்படி வருகிறது?

ஆதாம், ஏவாள் ஆசீர்வாதமாய் மகிமையாய் சுபிட்சமாய், செல்வ செழிப்பாய், சமாதானமாய், சந்தோஷமாய் வாழ உருவாக்கப்பட்டவர்கள். ஆனால் எப்போது தேவ பிரசன்னத்தை விட்டுவிலகி, தேவ வார்த்தையை விட்டு விலகி, பிசாசின் சத்தத்துக்கு செவிகொடுத்தார்களோ சாபம் வந்தது; கர்த்தர் அவர்களை சபித்தார். ஆசீர்வாதமாய் வாழவேண்டியவர்கள், சபிக்கப்பட்டவர்களாய் மாறினார்கள். அவர்கள் மூலமாய் மனுக்குலம் முழுமைக்கும் சாபம் வந்தது.

இன்று நான் உனக்கு விதிக்கிற உன் தேவனாகிய கர்த்தருடைய எல்லாக் கற்பனைகளின்படியும் கட்டளைகளின்படியும் நடக்கக் கவனமாயிருக்கிறதற்கு, அவர் சத்தத்திற்குச் செவிகொடாதேபோவாயாகில், இப்பொழுது சொல்லப்படும் சாபங்களெல்லாம் உன்மேல் வந்து, உனக்குப் பலிக்கும். (உபா. 28:15)

இன்றைக்கு அநேக மக்கள் வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்று இரவு, பகலாக கடுமையாக உழைக்கிறார்கள். ஆனால் முடிவில் பார்க்கும்போது ஒன்றுமே

இல்லாத வெறுமை நிலைதான் காணப்படுகிறது. விதை, விதைக்கிறார்கள் விளைச்சல் அவர்களுக்கு இல்லை, கதிர் மாவைக் கொடுக்கமாட்டாது அந்நியர் அதை விழுங்கு கிறார்கள்; சிலர் நன்றாக சம்பாதித்தும் வட்டி கொடுத்துக் கொடுத்து ஒன்றும் இல்லாமல் இருக்கிறார்கள். சிலர் சம்பாதிக்கிறார்கள் மருத்துவ செலவுக்கே போய்விடுகிறது. மாதத்தின் முதல் நாள் பார்த்தால் அந்தப் பணம் எங்கு போனது என்று தெரியாது, சிலருடைய வாழ்க்கையில் வீண் செலவுகள் எதிர்பாராத செலவுகள் சூறைக்காற்றைத்தான் அறுக்கிறார்கள். காரணம் தேவன் செய்யச் சொன்ன விதமாக செய்யாமலும், வாழச் சொன்ன விதமாக வாழா மலும் சொந்த புத்தி சார்ந்து செயல்படுவதால் தேவனுடைய ஆசீர்வாதம் அங்கே தடைபடுகிறது. தேவ ஆலோசனைகள் சில நேரங்களில் நமக்கு, நம் நடைமுறைக்கு ஒவ்வாதது போல் தோன்றும். அவைகளால் உடனடியாக ஆசீர்வாதங் கள் கிடைக்காமல் இருக்கும். எனவே உலக ஆலோசனை களையும், மனிதர்களால் பின்பற்றப்படும் உலத்திற்கேற்ற நடைமுறைகளையும் பின்பற்றஆரம்பிப்போம். இங்குதான் நாம் தேவகரத்திலிருந்து வருகிற ஆசீர்வாதங்களை இழந்து விடுகிறோம். கர்த்தருக்குக் காத்திருந்து, அவருடைய கற்பனைகளைக் கைக்கொண்டு, கட்டளைகளின்படி நடந்து, அவருக்குப் பிரியமானபடி நடக்கின்றவர்களிடம் ஆசீர்வாதம் என்றும் தங்கியிருக்கும்.

சூறைக்காற்றை அறுக்காமல் இருக்க வழி என்ன?

இன்று நான் உன்கு விதிக்கிற உன் தேவனாகிய கர்த்ருடைய கட்டளைகளின்படியெல்லாம் செய்ய நீ

கவனமாயிருக்கும்படிக்கு, அவன் சத்தத்திற்கு உண்மையாய்ச் செவிகொடுப்பாயானால், உன் தேவனாகிய கர்த்தர் பூமியிலுள்ள சகல ஜாதிகளிலும் உன்னை மேன்மையாக வைப்பார். (உபா. 28:1)

அவர் வார்த்தைக்கு உண்மையாய் செவிகொடுத்த தால் கர்ப்பத்தின் கனியும், நிலத்தின் கனியும், மாடுகளின் பெருக்கமும், ஆடுகளின் மந்தைகளுமாகிய உன் மிருக ஜீவன்களின் பலனும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும். கூடையும், மாப்பிசைகிற உன் தொட்டியும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும். கர்த்தர் உன் களஞ்சியங்களிலும், நீ கையிடும் எல்லா வேலையிலும் உனக்கு ஆசீர்வாதம் கட்டளையிடுவார். உன் நிலத்தின் கனியில் பரிபூரண நன்மை உண்டாகக் கட்டளை யிடுவார். ஏற்ற காலத்தில் மழையை பெய்யச் செய்வார். நீ கையிட்டுச் செய்யும் வேலைகளையெல்லாம் ஆசீர்வதிக்க, கர்த்தர் உனக்கு தமது நல்ல பொக்கிஷ சாலையாகிய வானத்தைத் திறப்பார்.

ஆபிரகாமைப் பார்த்து ஆண்டவர் சொன்னார்: நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ. (ஆதி. 12:1) கர்த்தர் ஆபிரகாமுக்குச் சொன்னபடியே தேவவார்த்தைக்கு கீழ்படிந்து புறப்பட்டுப் போனான். (ஆதி. 12:4)

ஆபிரகாமின் வாழ்க்கையிலே தேவன் அவனுக்கு சில உச்சிதமான ஆசீர்வாதங்களை அளிக்கச் சித்தமானார். ஆனால் அவைகளை அடையும் பாதையில் சில தடைகள்

இருப்பதை தேவன் கண்டபோது, அவைகளை அகற்ற எவினார்; ஆனால் அவை அவ்வளவு எளிதான விஷயங்கள் அல்ல. உணர்வு பூர்வமாகவும், அறிவுப் பூர்வமாகவும் அவை மனவிசனம் தருகிறவை தான். தேவன் அவனுடைய சொந்த தேசத்தை விட்டுப்பிரிந்து வரச்சொன்னார். தன் மறுமனை யாட்டியாகிய ஆகாரை பிரிந்துவிடச் சொன்னார். தனக்குப் பிரியமான மகன் இஸ்மவேலையும் பிரித்துவிடச் சொன்னார். இவை யாவும் தேவனுடையப் பார்வையில் விலக்க வேண்டிய தடைகளாகத் தோன்றினாலும், ஆபிரகாமிற்கோ அந்தப் பிரிவுகள், மிகுந்த, மனவிசனத்திற்குரியவை. ஆயினும் அவன் தன் சுய உணர்வுகளுக்காக நிற்காமல், தேவனுக்காக நிற்க விரும்பினான். எனவே தேவன் அவனுக்கு மேன்மையான நிலைகளை கொடுப்பதற்கு எதுவும் தடையாயிருக்கவில்லை. தேவ ஆலோசனையை ஏற்பதால் நித்தியமான ஆசீர்வாதங்கள் உண்டு என்பதை அறிந்திருந்தான்.

ஆபிரகாமை தேவன் ஆசீர்வதிக்க முடிந்தது. ஏனென்றால் இலக்கு, கொள்கை, நோக்கம், விருப்பம், அணுகுமுறை, செயல்பாடு, பாதை ஆகிய எல்லா நிலை களிலும் அவனால் தேவனோடு இசைந்துபோக முடிந்தது. அவன் தன் மனதிற்கேற்ற ஒரு ஆன்மீகத்தை மையமாகக் கொள்ளாமல், தேவனுடைய விருப்பம்சார்ந்த ஒரு ஆன்மீகத்தையே தெரிந்துகொண்டான். எனவே தேவன் அவனை உயர்வான ஒரு நிலைக்கு கொண்டுசெல்ல முடிந்தது.

ஒருவிசை ஆபிரகாமின் மகன் ஈசாக்கைப் பலியிடு என்று சொன்னபோது, உடனே ஆண்டவரின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து தன் ஒரே குமாரன், என்னுடைய நேசக்குமாரன், ஏகசுதன் என்றும் பாராமல் பலியிட மோரியா மலைக்குக் கொண்டு போனான். எனவே தான் ஆண்டவர் அவனைப் பார்த்துச் சொன்னார். நீ என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தபடியினால் (ஆதி. 22:18) என்று சொல்லி உச்சிதமான பல ஆசீர்வாதங்களைக் கொடுத்தார்.

ஆபிரகாம் ஆண்டவரின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்தபடியினால் கிடைத்த ஆசீர்வாதங்கள் என்ன?

1. தன் மகனை இழந்து போகவில்லை
2. அவனை ஆசீர்வதித்து, அவன் பெயரைப் பெருமைப் படுத்தினார்.
3. விசுவாசிகளின் தகப்பனாய் மாற்றினார்.
4. ஆபிரகாமை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பார்.
5. பூமியிலுள்ள சகல வம்சங்களும் அவனுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும்.
6. அவனுடைய ஆஸ்தி பூமி தாங்கக் கூடாதிருந்தது
7. ஆபிரகாமை திரளாய் பெருகப்பண்ணி, அவனோடு கூட இருந்தார்.
8. அவன் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப் போலவும், கடற்கரை மணலைப்போலவும் பெருகப் பண்ணினார்.
9. அவன் சந்ததி சத்துருக்களின் வாசல்களை சுதந்தரித்துக்கொள்வார்கள்
10. அவன் கர்த்தரின் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தபடியால் அவன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜனங்களும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும்.

11. அவன் தேவனுடைய சிநேகிதன் என்னப்பட்டான்.
12. கிரியைகளினாலே நீதிமானாக்கப்பட்டான்.

நோவா தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்தான். அவனும், அவனோடிருந்த உயிர்களும் மாத்திரம் காக்கப்பட்டது.

எலியா தேவனுடைய வார்த்தைக்குக்குக் கீழ்ப்படிந்தான். ஆண்டவர் போகச்சொன்ன இடத்துக்குப் போனான். கர்த்தர் அவனைப் பாதுகாத்து, அவனைப் போஷித்து பராமரித்து வந்தார்.

எலிசா தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து தன் கலப்பை, ஏர்மாடுகளை விட்டு விட்டு வந்தான். இஸ்ரவேலிலே அவனை ஒரு பெரிய தீர்க்கதரிசியாய் மாற்றினார்.

பேதுரு தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து அவர் சொன்ன இடத்தில் வலையைப் போட்டான், வலை கிழியத்தக்கதாய் மீன் கிடைத்தது.

வேதத்திலே இன்னும் ஏராளமான மனிதர்களைக் கூறமுடியும். ஆண்டவரின் வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்து நடந்தவர்கள், ஆண்டவரின் ஆசீர்வாதங்களை முழுமையாகப் பெற்றுக்கொண்டார்கள்.

எருசலேம் தேவாலயத்தை பிரமாதமாகக் கட்டி முடித்தான் சாலொமோன் ராஜா. ஆலயத்தை பிரதிஷ்டை செய்த அன்று ஆயிரக்கணக்காக மாடுகளையும், லட்சத்திற்கு அதிகமான ஆடுகளையும் அவன் பலியிட்டான். அன்று இரவு தேவன் அவனுக்குத் தரிசனமானார்.

தரிசனத்தின்போது சாலொமோன் கட்டிய ஆலயத்திற்காகவே, அவன் பலியிட்ட திரளான ஆடு, மாடுகளுக்காகவோ தேவன் அவனை மிகுதியாக மெச்சிடவில்லை. அதன் அடிப்படையில் அவனுக்கு மிகுதியான நன்மைகளைத் தருவேன் என்று வாக்களித்து விடவும் இல்லை. தேவனோ அந்த வேளையிலும், அவனுடைய தகப்பனாகிய தாவீதைப்போல உத்தமமாக நடக்க வேண்டிய வழியையே அவனுக்கு நினைவுபடுத்தினார். தம்முடைய கட்டளைகளின்படியும், நியாயப்பிரமாணத்தின்படியும் செய்யக் கவனமாயிருந்தால் தான் அவன் தேவ ஆசீர்வாதங்களைப் பெற முடியும் என்பதையும் தெளிவுபடுத்தினார்.

ஆலயம் கட்டியதும், ஆயிரக்கணக்கில் ஆடு, மாடுகளை பலியிட்டதும், தேவனுக்குப் பிரியமானவைதான்; ஆனாலும் அவைகளே ஆசீர்வாதங்களைக் கொண்டு வந்துவிடாது. அவைகளைப்பார்த்து தேவன் பரவசமடைந்து ஆசீர்வாத வாக்குறுதிகளைக் கொடுத்து விடுவதுமில்லை. தம்முடைய வார்த்தையின்படியும், வசனத்தின்படியும் வாழ கவனமாயிருக்கின்றவர்கள் மட்டுமே தேவனுடைய ஆசீர்வாதங்களுக்குத் தகுதியாக முடியும். ஆனால் சிலருடைய சிந்தனை வித்தியாசமாயிருக்கின்றது. தாராளமாக காணிக்கை கொடுத்துவிட்டால், நன்றாக ஆராதித்துவிட்டால், ஊழியங்கள் செய்துவிட்டால், மிஷினரிகளைத் தாங்கிவிட்டால் தேவ ஆசீர்வாதங்கள் மழைபோல பொழிந்துவிடும், வானத்து பலகணிகளைக் கர்த்தர் திறந்து விடுவார் என எண்ணுகின்றனர். ஆனால் தேவனுடைய

வியாயமோ வித்தியாசமாக இருக்கின்றது. நம்முடைய காணிக்கைகளும், ஆராதனைகளும், துதி ஸ்தோத்திரங்களும், ஊழியங்களும், உற்சாக செயல்பாடுகளும் தேவனுக்குப் பிரியமானவைதான். ஆயினும் தேவனுக்குப் பிரியமாக வாழ்வதன் மூலமாக மட்டுமே, அவர் நம்முடைய வாழ்க்கையிலே செயல்படவும் நம்மை ஆசீர்வதிக்கவும் வழி ஏற்படும். "என் வசனத்துக்கு நடுங்குகிறவனையே நோக்கிப் பார்ப்பேன்" (ஏசா. 66:2).

இன்றைய சபைகளில் விசுவாசிகள் காணிக்கை கொடுக்கவும், ஆராதிக்கவும், ஊழியம் செய்யவும் உற்சாகப் படுத்தப்படும் அளவிற்கு, கர்த்தருக்குப் பிரியமான வழி களில் நடந்து அவருடைய ஆசீர்வாதங்களுக்கு தகுதி யாகிட உற்சாகப்படுத்தப்படவில்லை. எனவே விசுவாசிகள் தங்கள் ஆராதனை, ஈடுபாடுகளையும், காணிக்கைகளை யும், ஊழியங்களையும் தங்கள் ஆசீர்வதிக்கும் கருவிகளாக எண்ணி ஏமாந்துபோகின்றனர். "தேவன் விரும்புகிறபடி வாழ விரும்புகிறவர்கள் கொடுப்பது தான் காணிக்கை. பிறர் கொடுப்பது வெறும் பண உதவி. அது தேவனுக்குத் தேவை யில்லை".

"நான் உங்களிடத்தில் அனுப்பின என் பெரிய சேனை யாகிய வெட்டுக்கிளிகளும், பச்சைக்கிளிகளும், முசுக் கட்டைப் பூச்சிகளும், பச்சைப் புழுக்களும் பட்சித்த ... என்று பார்க்கிறோம்" (யோவேல் 2:25).

நான் உங்களிடத்தில் அனுப்பின, ஆண்டவருடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படியாமல் நாம் நம் மனம் போன

போக்கிலே வாழும்போது நம்முடைய விளைவின் பலன்களை அரித்துப் போடும்படியாக வெட்டுக்கிளிகள், பச்சைக் கிளிகள், முசுக்கட்டைப் பூச்சிகள், பச்சைப் புழுக்களை அனுப்புகிறார். அவைகள் நம் விளைவின் பலன்களை அரித்துப்போடுகிறது. இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்திலே அடிமைகளாக இருந்தபோது, கர்த்தர் மோசேயை, பார்வோனிடத்தில் அனுப்பி: "என் சமுகத்தில், எனக்கு ஆராதனை செய்ய, என் ஜனங்களை போகவிடு" என்று சொல்லச் சொன்னார். ஆனால் பார்வோன் ஜனங்களை அனுப்பவில்லை. அப்பொழுது கர்த்தர் எகிப்து தேசத்தின் மேல் கோலை நீட்டும்படி மோசேயிடம் சொன்னார். மோசே கர்த்தரின் சொற்படி செய்தான். கர்த்தர் கீழ்காற்றை தேசத்தின் மேல் வீசும்படி செய்தார். அந்த கீழ்காற்று வெட்டுக்கிளிகளைக் கொண்டுவந்தது. அந்த வெட்டுக் கிளிகள் நிலத்தின் பயிர்வகைகள் யாவையும், மரங்களின் கனிகள் யாவையும் பட்சித்துப் போட்டது. எகிப்துதேசம் எங்குமுள்ள மரங்களிலும், வயல்வெளியின் பயிர் வகைகளிலும், ஒரு பச்சிலையும் மீந்திருக்கவில்லை. எல்லாவற்றையும் அழித்துப்போட்டது.

தேவ வாக்குறுதிகளை விசுவாசித்து உரிமை பாராட்டுகிற பலருடைய வாழ்க்கையில் அவைகள் நிறைவேறுவதேயில்லை. ஏனென்றால் வாக்குறுதிகள் நிறைவேறுவதற்கேதுவாக, தேவன் நியமித்த வழியில் உண்மையான ஈடுபாடோடு, கர்த்தருக்குப் பிரியமான பாதையில் நடப்பதில்லை. தேனும், பாலும் ஓடுகின்ற செழிப்பான கானான் நாட்டைக்

குறித்த வாக்குறுதியை எகிப்தில் அடிமைகளாயிருந்த இஸ்ரவேலர்கள் விசுவாசித்தார்கள். அதனை சொந்த மாக்க புறப்பட்டார்கள். ஆனாலும் அவர்கள் அதை அடைய வில்லை. ஏனென்றால் வாக்குறுதி நிறைவேறுவதற்காக தேவன் நியமித்த வனாந்தர பாதையை அவர்கள் மனதார ஏற்றுக்கொண்டு கீழ்படிவுடன் நடக்கவில்லை.

உபாகமம் 28-ம் அதிகாரம் முழுவதும் படித்துப் பார்த்தால் இரண்டு விதமான காரியங்கள் குறிப்பிடப் பட்டிருக்கிறது. ஒன்று ஆசீர்வாதம், மற்றொன்று சாபம். இந்த இரண்டு காரியங்களும் இரண்டு நிபந்தனைகளும் நம்முடைய கரத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய ஆசீர்வாதம் நம்முடைய கரத்தில் தான் இருக்கிறது.

ஆசீர்வாதம் எப்படி வருகிறது?

> ***இன்று நான் உனக்கு விதிக்கிற உன் தேவனாகிய கர்த்தருடைய கட்டளைகளின்படியெல்லாம் செய்ய நீ கவனமாயிருக்கும்படிக்கு, அவர் சத்தத்திற்கு உண்மை யாய்ச் செவிகொடுப்பாயானால், உன் தேவனாகிய கர்த்தர் பூமியிலுள்ள சகல ஜாதிகளிலும் உன்னை மேன்மையாக வைப்பார். (உபா. 25:1)***

அதுமாத்திரமல்ல, அவரிடத்தில் அன்புகூர்ந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கு ஆயிரம் தலைமுறைமட்டும் இரக்கஞ்செய்கிற தேவன் என்று உபா. 5:10-ல் வாசிக்கிறோம்.

இன்று நான் உனக்கு கற்பிக்கிற எல்லாக் கற்பனை களின்படியும் நீ செய்யும் படி, உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தைக் கவனமாய்க் கேட்பாயானால், உன் தேவனாகியக் கர்த்தர் உனக்குச் சுதந்தரிக்கும்படி கொடுக்கும் தேசத்தில், உன்னை மேன்மேலும் ஆசீர்வதிப்பார் (உபா. 15:4,5).

நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தைக் கவனமாய்க் கேட்டு, அவர் பார்வைக்குச் செம்மையானவைகளைச் செய்து, அவர் கட்டளைகளுக்குச் செவிகொடுத்து, அவருடைய நியமங்கள் யாவையும் கைக்கொண்டால், நான் எகிப்தியருக்கு வரப்பண்ணின வியாதிகளில் ஒன்றையும் உனக்கு வரப்பண்ணேன்; நானே உன் பரிகாரியாகிய கர்த்தர் (யாத். 15:26).

துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும், கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப்போலிருப்பான். அவன் செய்வதெல்லாம் வாய்க்கும். (சங். 1:1,2,3).

வேதத்தை ஒட்டு மொத்தமாக அலசி, ஆராய்ந்து, படித்துப் பார்த்தால் கர்த்தருடைய பிள்ளைகளுக்கு ஆசீர்வாதம் எங்கிருந்து வருகிறது என்பது தெளிவாகிவிடும். கர்த்தருக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்

கொண்டு, சத்தியத்தின்படி நடக்கிற பிள்ளைகளுக்கு வானத்தின் பலகணிகளைத் திறந்து, ஆசீர்வதிக்கிறார். அப்படி கர்த்தருடைய வேதத்தை வாசிக்காதபடி, தியானிக்காத படி, வசனத்தின் படி நடவாமல், மனம் போன போக்கிலே போகிற துன்மார்க்கரை காற்று பறக்கடிக்கும் பதரைப் போல பறக்கடிக்கப்பட்டுப் போவார்கள். பதர் ஒன்றுக்கும் உதவாது; அதுபோல துன்மார்க்கரையும் ஒன்றுக்கும் உதவாமல் காற்று அடித்துக்கொண்டுபோய்விடும். கர்த்தருடைய வேதத்தின்படி நடக்கிறவர்கள் தண்ணீரண்டையிலே நாட்டப்பட்டதும், கால்வாய் ஓரமாய் தன் வேர்களை விடு கிறதும், உஷ்ணம் வருகிறதைக் காணாமல் இலை பச்சையாயிருக்கிறதும், மழைத்தாழ்ச்சியான வருஷத்திலும், வருத்தமின்றித் தப்பாமல் கனிகொடுக்கிறதுமான மரத்தைப் போலிருப்பார்கள். (எரே. 17:8).

இஸ்ரவேலை ஆசீர்வதிப்பதே கர்த்தருக்குப் பிரியம் (எண். 24:1). எல்லோரையும் ஆசீர்வதிக்க வேண்டும். எல்லோரும் வாழ்ந்து சுகித்திருக்க வேண்டும், சுபிட்சமாய் இருக்கவேண்டும், செழிப்பாய் இருக்கவேண்டும், சமாதானமாய் இருக்கவேண்டும், சந்தோஷமாய் இருக்க வேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார்.

யார் செழித்திருப்பார்கள்?

1. நீதிமான் செழிப்பான் (சங். 92:12).
2. கர்த்தருடைய ஆலயத்திலே நாட்டப்பட்டவர்கள் செழிப்பார்கள் (சங். 92:13).
3. கர்த்தரை நம்புகிறவன் செழிப்பான். (நீதி. 28:25)

4. உதாரகுணமுள்ள ஆத்துமா செழிக்கும். (நீதி. 11:25)
5. கர்த்தருடைய மகிமையினால் செழிப்போம் (யோபு 29:20)

6. கர்த்தருடைய அபிஷேகம் நம்மேல் ஊற்றப்படும்போது நாம் செழிப்போம். (ஏசா. 32:15).

கர்த்தரோடிருக்கின்றவர்கள், அவர் காட்டிய பாதையில் நடக்கின்றவர்கள் சந்திக்கும் ஒவ்வொரு நாளும் ஒரு புதிய துவக்கமே. அவரோடு நடக்கின்றவர்களுக்கு ஒவ்வொரு சந்தர்ப்பமும் ஒரு புதிய ஆரம்பமே. நேற்று வரை கசந்த ஒரு மாராவின் வாழ்வு, இன்று மதுரமாக மாறமுடியும். நேற்றுவரை கற்பாறையாக இருந்த ஒரு இதயம் இன்று அநேகரின் தாகந்தீர்க்கும் ஒரு ஆறாக மாறமுடியும். நேற்று வரை கரைபுரண்டோடிய யோர்தானில் இன்று ஒரு பாதை தோன்றலாம். நேற்று வரை தடையாக நின்ற ஒரு எரிகோ இன்று ஒரு வாசலாக மாறமுடியும். ஆம் தேவனோடிருந்தால் அநேக புதிய காரியங்கள் நடக்கும். நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப் படும் (யோவா. 15:7). நாம் அதிக கனிகளையும் கொடுப்போம்.

பல நேரங்களில் நம்மில் அநேகர் தேவன் செய்ய சொன்ன விதமாக செய்யாமலும், வாழச் சொன்ன விதமாக வாழாமலும் சொந்த புத்தி சார்ந்து செயல்படுவதால் தேவனுடைய ஆசீர்வாதத்தை நாம் இழந்து தவிக்கிறோம்.

பவுல் அப்போஸ்தலன் மிகவும் அழகாக, தெளிவாக கூறுகிறார். நான் எந்த நிலைமையிலிருந்தாலும், மனரம்மியமாக இருக்கக் கற்றுக்கொண்டேன். தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும், வாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும்; எவ்விடத் திலும், எல்லாவற்றிலும் திருப்தியாயிருக்கவும், பட்டினியா யிருக்கவும், பரிபூரணப்படவும், குறைவுபடவும் போதிக்கப் பட்டேன் (பிலிப். 4:11,12).

இதை வாசிக்கிற தேவபிள்ளையே, இன்றே ஒரு தீர்மானம் எடு. நீ எந்த நிலைமையிலிருந்தாலும் பரவா யில்லை. கர்த்தருக்கு பிரியமாய் வாழ உன் வாழ்க்கையை ஒப்புக்கொடு. மனம்போன போக்கிலேபோய் தேவ ஆசீர் வாதத்தை இழந்து சாபத்தை வருவித்துக் கொள்ளாதே. சாபம் உன்னை மாத்திரம் அல்ல, உன் சந்ததி, சந்ததியாய் தொடர்ந்து சமாதானத்தை கெடுத்துவிடும். கர்த்தர் கொடுக்கிற ஆசீர்வாதம் போதும். கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும்; அதனோடே அவர் வேதனையைக் கூட்டார் (நீதி. 10:22). கர்த்தருடைய வசனத்தைக் கேள். அவர் கற்பனைகளைக் கைக்கொள். அவருக்குப் பிரியமாக வாழுங்கள். கர்த்தர் தாமே ஆசீர்வதிப்பாராக.

14. வட காற்று

தெற்கேயிருந்து சூறாவளியும், வடகாற்றினால் குளிரும் வரும். ***(யோபு 37:9)***

இந்தக் காற்றின் பெயர் வடகாற்று. இந்தக் காற்று எப்போது வீசும் தெரியுமா? அதிகாலையில். இந்த காற்று அதிகாலையில் வீசும்போது குளிர் வரும்.

இந்த காற்று எதைக் குறிக்கிறது தெரியுமா?

அதிகாலையில் எழும்பி தேவனைத் தேடுகிறவர்களைக் குறிக்கிறது. அதிகாலையில் எழும்பி தேவ சமுகத்தில் உட்கார்ந்து தேவனைத் தேடும்போது குளிர்காற்றை நம்மீது வீசச்செய்வார். குளிர்காற்றாய் நம்மீது இறங்கி வருவார்.

ஆதாமும், ஏவாளும் ஏதேன் தோட்டத்தில் இருந்த போது, தேவன் பகலின் குளிர்ச்சியான வேளையிலே தோட்டத்தில் உலாவுகிற சத்தத்தை இருவரும் கேட்டார்கள். தேவன் அவர்களோடு உறவாடும்படியாக குளிர்ச்சியான நேரத்திலே இறங்கிவந்தார். ஆனால் தேவனோடு அவர்களால் உறவாட முடியவில்லை. காரணம்: பாவம் அவர்களை தடுத்தது, பாவம் அவர்களை விலகச் செய்தது, பாவம் அவர்களை ஒளிக்கச் செய்தது; அதன் மூலமாக தேவ மகிமையை இழந்தார்கள். பாவம் அவர்களை மேற்கொண்டது, சாபத்துக்குள்ளானார்கள்; ஆசீர்வாதத்தை இழந்து போனார்கள். ஆகவே தான் வசனம் சொல்லுகிறது:

அதிகாலையில் என்னைத் தேடுகிறவர்கள் என்னைக் கண்டடைவார்கள் (நீதி. 8:17B).

காஷ்மீரில் ஒரு குயவன் தன் மகனிடம் தினமும் களிமண் எடுத்து வரச்சொல்லுவான். மகனும் தினமும் தன் தகப்பனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து களிமண் எடுத்து வருவான். ஒருநாள் அவனுடைய மகன் கொண்டு வந்த களி மண்ணிலிருந்து மிகுந்த நறுமணம் வீசியது. குயவனுக்கு மிகவும் ஆச்சரியமாயிருந்தது. வாசனை வீசும் அந்த களிமண் எடுத்த இடத்தைக் காண்பிக்கும்படி தன் மகனி டம் கேட்டான். தகப்பன் அந்த இடத்துக்குப் போய்பார்த்த போது அவனது கேள்விக்குப் பதில் கிடைத்தது. அந்த களிமண் எடுத்தப் பகுதியில் ஏராளம் ரோஜாச்செடிகள் பூத்துக் குலுங்கியபடி நின்றது. அதிலிருந்து விழுந்த ரோஜா இதழ்களால் களிமண்ணும் வாசனையுடையதாக மாறி விட்டது.

நாமும் சாதாரணக் களிமண் தான். ஆனால் அதிகாலையில் எழும்பி, குளிர்ச்சியான காலை வேளையிலே தேவனைத் தேடும்போது சாரோனின் ரோஜாவாம் இயேசு கிறிஸ்து களிமண்ணான நமக்குள் வந்து வாசம்செய்வார். குளிர்காற்றை நம்மீது வீசச்செய்வார். நாம் அந்தக் காற்றோடு அந்த நாள் முழுவதும், நாம் செய்கிற காரியங் கள் போகிற இடங்களிலெல்லாம் வாசனை வீசும்படி செய் வார். இந்த உலகத்தில் மற்றவர்களுக்கு முன்பாக அதிசயக் களிமண்ணாக வாசனை வீச முடியும். நம்மைப் பார்க்கிறவர் கள், நம்மிடம் வித்தியாசமான உயர்ந்தரக

வாசனையைக் கண்டு அதிசயப்பட முடியும். அதுவே காலையில் தேவனைத் தேடுகிற, இறைவாழ்க்கையில் வெளிப்படும் மகிமையான வாசனைமிக்க சாரோனின் ரோஜாவாம் இயேசு கிறிஸ்து வோடு நம்முடைய வாழ்க்கை சம்மந்தப்படும்போது நம்மிலும் நறுமணம் வீசும்.

தேவ சமுகத்தில் காத்திருக்கும்போது, தேவ சமுகத்தில் தரித்திருக்கும்போது, நற்குணங்கள் என்னும் வாசனைவீசும். பிதாவோடு இணைந்து வாழ்ந்த இயேசு விடம் தேவனின் குணாதிசயங்கள் வெளிப்பட்டன. நாமும் இயேசுவோடு அனுதினமும், அதிகாலையில் உறவாடும் போது, நம்மிடம் ஆவிக்குரிய மேலான குணங்கள் காணப் படும்; அது ஒரு அதிசயமான வாசனை. கர்த்தருடைய ஐக்கியம் நமக்கு இருந்தால் அவரிடம் இருந்த அன்பு, தாழ்மை, தயவு, பொறுமை, உண்மை, சாந்தம் போன்ற உயர்குணங்கள் நம்மிடமும் வெளிப்படும்; அதுதான் ஆண்டவருடைய ஐக்கியத்தை அனுபவிப்பதற்கான அத்தாட்சிகள். மலையின்மேல் தேவனோடு சில நாட்கள் தங்கியிருந்த மோசேயின் முகம் பிரகாசித்தது என்று வேதத்தில் வாசிக்கிறோம்; தேவ ஐக்கியம் ஒரு மனிதனை பலருக்கு முன்னால் பிரகாசிக்கச் செய்கிறது.

நோவா வாழ்ந்தகாலம் துன்மார்க்கம் தலைவிரித் தாடியகாலம். தேவனுக்கு எதிரான பாவச்செயல்கள் வான ளாவ உயர்ந்தகாலம். ஆயினும் அந்த பாவப் பெருக்கத்தின் நடுவிலும், கொடியபாவிகளின் நடுவிலும் நோவா தன்னுடைய பரிசுத்தத்தைக் காத்துக்கொண்டான். நீதியும்

நியாயமும் முற்றிலும் அகன்றுபோன சமுதாயத்தின் நடுவிலும் தேவன் மெச்சத்தக்க ஒரு நீதிமானாக நின்று கொண்டிருக்க முடிந்தது. எப்படி அவன் தன்னுடைய பரிசுத்த நிலையை விடாது பற்றிக்கொண்டிருக்கமுடிந்தது? வேதாகமம் அதற்கு விடை தருகிறது. நோவா தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருந்தான் என்று (ஆதி. 6:9). அதாவது நோவா தேவனோடு தொடர்புகொண்டு, அவரோடு ஐக்கியம் கொண்டு வாழ்ந்தவன். அந்த தேவதொடர்பும், ஐக்கியமும் தான் பாவச்சூழலின் நடுவிலும், பரிசுத்த வானாக அவனை நிற்கவைத்தது. யோசேப்பு, தானியேல் போன்றோரின் பரிசுத்த வெற்றிகளின் ரகசியமும் இதுவே.

நோவாவின் காலத்தை விட ஆயிரம் மடங்கு பாவம் பெருகிவிட்ட தற்கால சமுதாயத்தின் நடுவில், தேவனோடு ஒரு நிச்சயமான தொடர்பும், ஐக்கியமும் நம்முடைய அனுபவ மாக இருந்தால் மட்டுமே நாம் பரிசுத்த பரீட்சையில் ஜெயம் பெறமுடியும். அதிகாலையில் எழும்பி, ஆண்டவரே இந்த நாள் முழுவதும் என்னை பரிசுத்தமாக காத்துக்கொள்ளும். உலக அசுத்தங்கள் என்னை மேற்கொள்ளாதபடி காத்துக் கொள்ளும் என்று காலையில் தேவனிடம் நம்மை அர்ப் பணித்துவிட்டு, உலக காரியங்களில் ஈடுபடும்போது கர்த்தர் நம்மை பரிசுத்தமாக காத்துக்கொள்ளுவார். தேவனுக்கு நம்மை முழுமையாக ஒப்புக்கொடுப்பதால் வரும் தேவஐக்கிய அனுபவம் அனுதினமும் அவசியம். ஒவ்வொரு நாளும் தேவனுடைய ஐக்கியத்தை உணருகின்ற நிலையும், அவருடைய தொடுதல்களையும், தூண்டுதல்களையும்

உள்ளத்தில் உணர்ந்து செயல்படுகிறவர்களாக மாற வேண்டும். முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடவேண்டும் (மத். 6:33). முதலாவது ஒவ்வொரு நாளும் காலை முதல் நேரத்தை ஆண்டவருடைய சமுகத்தில் செலவிடவேண்டும். முதல் நேரத்தை அவருக்கு கொடுக்கவேண்டும். பிந்தைய நேரத்தை ஆண்டவர் நமக்கு ஆசீர்வாதமாக மாற்றித் தருவார்.

முன் காலங்களைப் போல் இல்லாமல் இக்காலங்களில் பெரும்பாலான மக்கள் மிகவும் காலதாமதமாகவே காலையில் எழும்புகின்றனர். ஏனென்றால் தொலைக்காட்சி பெட்டிக்கு முன்னால் இரவு வெகுநேரம் அமர்ந்து விடுவதால் சீக்கிரம் படுக்கைக்குச் செல்லமுடிவதில்லை. அநேகருக்கு நன்றாக உண்ண நேரம் உண்டு, நன்றாக உடுத்த நேரம் உண்டு, கடுமையாக உழைக்க நேரமுண்டு, தொலைக்காட்சி பெட்டிக்கு முன் தாராளமாக அமர நேரம் உண்டு; ஆனால் கர்த்தருடைய சமுகத்தைத் தேடவோ நேரம் கிடைப்பதில்லை. சரீர நலன் தொடர்பான எல்லா காரியங்களையும் எப்படியாவது செய்து நிறைவேற்றிட தீவிரமாயுள்ள அநேகர் கர்த்தரைத் தேடுகின்ற விஷயத்தை மட்டும் பின்னர் பார்த்துக்கொள்ளலாம் என்று விட்டு விடுகிறார்கள்.

தொழிலை கவனிக்க வேண்டியது தேவைதான், உழைத்து பணம் சேர்ப்பது தேவை தான், குடும்ப காரியங் களைக் கவனிப்பது நல்லது தான், பிள்ளைகளுக்குரிய

கடமைகளைச் செய்யவேண்டியது தேவை தான்; ஆனால் இவைகளுக்கு முன்னால் தேவனைத் தேடுவது மிக மிகத் தேவை. தேவனைத் தேடும்போது தான் ஆசீர்வாதம் வரும். ஓடி ஓடி உழைத்து சேர்த்தாலும் தேவ ஆசீர்வாதமும், தேவ கிருபையும் இல்லையேல் அவைகளால் பெரிய நன்மைகள் இல்லை. அதிகாலையில் தேவ சமுகத்தைத்தேடி, தேவனுடைய கிருபைக்காக காத்து நிற்க வேண்டும். அவர் புதிய கிருபையினால் நம்மை நிரப்புவார். அவருடைய கிருபை காலைதோறும் புதியவைகள் (புலம். 3:23). முதலாவது அவரைத் தேடும்போது எல்லாவற்றின் மேலும் நன்மை கிருபை, சமாதானம் சந்தோஷம், ஆசீர்வாதம் கிடைக்கும்படிச் செய்வார்; அதுமட்டுமல்ல பரிபூரண ஆனந்தம் கிடைக்கும் (சங். 16:11).

தேவனே! உம்முடைய ஐக்கியமும், சமூகமுமே என்றும் எனக்கு மிகவும் அவசியமானத் தேவைகளாக உணரச் செய்யும். இவ்விதமாக ஒருபக்தன் அடிக்கடி தேவனை நோக்கி ஜெபிப்பாராம். ஆம், வாழ்க்கையில் நமக்கு பல முக்கியத் தேவைகள் உண்டு. நாம் பல காரியங்களை மிக முக்கியமான தேவைகளாக உணர்ந்து பிரயாசப்படவும், தேவனை நோக்கி மன்றாடவும் செய்யலாம், ஆயினும் ஒன்றை நான் உறுதியாகச் சொல்வேன்; இந்த உலக வாழ்க்கையில் நம்முடைய மிக முக்கியத் தேவை தேவ ஐக்கியமே.

இஸ்ரவேல் மக்களை கானானை நோக்கி வழிநடத்திய மோசே, அந்தக் கடுமையான வேலையை வெற்றியாகச்

செய்வதற்கு அவன் தேவனை நோக்கிக் கேட்டபோதெல்லாம்: உம்முடைய சமுகமே என்னோடே கூட செல்லாமற்போனால் எங்களை இவ்விடத்திலிருந்து கொண்டுபோகாதிரும் என்று அவன் தேவனிடம் கெஞ்சினான் (யாத். 33:15). தேவ ஐக்கியத்தையும், அவர் தன்னோடு வருகிறார் என்ற நிச்சயத்தையும் அருளும் தேவ சமுகம் இருந்தால் எல்லாச் சூழ்நிலைகளையும் சந்திக்க முடியும் என்று அவன் நம்பினான்.

தாவீது பலவிதமான நெருக்கடிகளைச் சந்தித்த காலங்களிலும், அவன் முக்கியமாகத் தேடினது தேவ சமுகத்தையே. பிரச்சனைகளின் பெருக்கத்தைக் கண்டு அவன் அதிகம் அஞ்சியதில்லை; ஆனால் கர்த்தர் தம் முகத்தை மறைத்துக்கொண்டாலோ, குழியில் இறங்குவதற்கு ஒப்பாகிவிடும் என்று அவன் பயந்தான். எனவே தான் எதுவரைக்கும் உம்முடைய முகத்தை எனக்கு மறைப்பீர் என்று அவன் கதறினான் (சங். 13:1).

தம்மை விட்டு எல்லோரும் பிரிந்துபோனாலும் தேவ ஐக்கியம் மட்டும் தம்மை விட்டுப்பிரியாது என்று இயேசு கிறிஸ்து தைரியமாயிருந்தார் (யோவா. 16:32). ஆம், நம்முடைய வாழ்க்கையிலே, நம்முடைய ஜெபத்திலே நாம் அதிக கருத்தோடு தேடி அடையவேண்டிய மிகப்பெரிய ஒன்று தேவ சமுகமே. அவர் நம்மோடிருக்கிறார் என்பதை உறுதிப்படுத்தும் ஆவியானவரின் கிரியையே நமக்கு வேறெதைக்காட்டிலும் மிக முக்கியமானதேவையாகும். ஆம், நாம் ஒழுங்காக ஆலயம் செல்கின்றோமா, ஆராதனை

செய்கின்றோமா, ஆவிக்குரிய உபதேசங்களைக் கேட்கின்றோமா, விசுவாசிகளோடு ஐக்கியம் கொண்டிருக்கின்றோமா என்ற எல்லா கேள்விகளைவிட தேவனுடைய ஐக்கியத்தை அனுதினவாழ்வில் நாம் அனுபவிக் கின்றோமா என்பதே மிக முக்கியமான கேள்வி. நம்முடைய இருதயம் உண்மையில் தேவனைத் தேடும்போது அவர் நம்மோடிருப்பதை உணர்வது எளிதான காரியமே.

இயேசு கிறிஸ்து கைகளிலும், கால்களிலும் ஆணி அடிக்கப்பட்ட வராய், உடலெங்கும் கடுமையாக காயப் படுத்தப்பட்டவராக, சிலுவையில் தொங்கிக் கொண்டிருந் தார். ஆனால் தாங்கொண்ணா வேதனையிலும் ஜெபித்துக் கொண்டே அவர் உயிரைவிட்டார். உடலெல்லாம் கற்களால் காயப்படுத்தப்பட்டு மரணத்தின்வாயிலை நெருங்கிக் கொண்டிருந்தான் ஸ்தேவான்; ஆனாலும் முழங்காற் படியிட்டு ஜெபித்துக் கொண்டே மரித்தான். கொர்ஜிக்கும் அநேகம் சிங்கங்களுக்கு நடுவில் விழுந்து சாகப் போகிறாயா? அல்லது உன்னுடைய ஜெப அனுபவத்தை விட்டுவிலகி சுகமாக வாழப்போகிறாயா? என்ற கேள்விகள் தானியேலுக்கு முன்பாக வந்தது; ஆனால் தானியேலோ சிங்கத்தின் கெபிக்குப் போக முடிவுசெய்தான். பயங்கர மான அந்த சூழ்நிலை கூட அவனுடைய ஜெபப்பழக்கத்தை அவனை விட்டு பிரிக்க இயலவில்லை; ஏனென்றால் அவனுக்குள் தேவனுடைய ஆவி இருந்தது, அவன் தேவனுக் குரியவன். சோதனைகள், சோர்வுகள், ஏமாற்றங்கள் பெருகும்போது ஜெப ஈடுபாடுகளின் மேல் உள்ள

ஆர்வங்கள் சற்று பலமிழக்கும் என்பது உண்மை தான்; ஆனால் அந்த சோர்வினை சார்ந்து நில்லாமல் விசுவாசத்தைச் சார்ந்து நின்று, ஜெபத்தில் நம்மை ஈடுபடுத்தும்போது விசேஷமான ஒரு தெய்வ வல்லமை நமக்குள் செயல்பட்டு நம்மை பலப்படுத்தும் என்பது உண்மை.

உண்மையான தேவனுடைய பிள்ளைகளுடைய ஓர் ஒப்பற்ற அடையாளம், அவர்களை விட்டுப் பிரிக்க முடியாத ஜெபஅனுபவம் தான். எத்தனை பாடுகள் அவர்களை சூழ்ந்துகொண்டாலும், எத்தனை சோதனைகள் அவர் களை நெருக்கினாலும் அவர்களைவிட்டு ஜெபிக்கிற அனுபவத்தை பிரிக்கவே முடியாது. காரணம் தேவ அன்பு அவர்களுக்குள் ஊற்றப்பட்டிருக்கிறது. அந்த தேவ அன்பை, எந்த சோதனையோ, கஷ்டங்களோ, பிரச்சனைகளோ பிரிக்கமுடியாது; ஏனென்றால் ஜெபம் தான் நம்மையும் தேவனையும் ஒன்றாக்குகிறது.

எனவே ஒரு விசுவாசி ஜெப அனுபவத்தை தக்க வைக்க அதிகமாக பிரயாசப்பட வேண்டும். அதிகாலையில் ஆண்டவரோடு இனிய ஐக்கியம் வைத்து, அவருடைய கிருபையை மகிமையை வழிநடத்துதலை பெறவேண்டும். நம்முடைய வாழ்க்கை குடும்பம் ஆசீர்வதிக்கப்படும். நம்முடைய குடும்பம் குட்டிப் பரலோகமாக மாறும்.

15. பலவித காற்று

நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப் போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல்

(எபேசி. 4:14)

இந்தக் காற்றின் பெயர் பலவித காற்று. இந்தக் காற்று ஒரு தந்திரமான காற்று.

இந்தக் காற்று எதைக் குறிக்கிறது?

மாய்மாலத்தைக் குறிக்கிறது. தந்திரமுமுள்ள போதகத்தைக் குறிக்கிறது. கள்ள உபதேசத்தைக் குறிக்கிறது. பாழாக்குகிற அருவருப்பைக் குறிக்கிறது. நானே கிறிஸ்து என்றுசொல்லி, வஞ்சிக்கிற மனிதர்களுடைய போதகத்தைக் குறிக்கிறது. இயேசு தம்முடைய ஊழியக் காலங்களில் கடுமையாகக் கண்டித்த பாவம் மாய்மாலமே. இன்றைய கிறிஸ்தவ மக்கள் மத்தியிலும் ஊழியர்கள் மத்தியிலும் மிகுந்துபோன ஒரு பாவம் இந்த மாய்மாலமே. அவர்கள் உள்ளே பாவவிடுதலை அற்றவர்களாக உள்ளனர்; ஆனால் வெளியே பாவத்திலிருந்து முற்றிலும் விடுதலையாக்கப்பட்டு, பரிசுத்தத்தால் மூடப்பட்டுள்ளதைப் போல் காண்பிக்கிறார்கள், வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளாக இருக்கிறார்கள். அவர்களின் உள்ளான நிலையில் நற்குண சிந்தைகள் இல்லை; ஆனால் வெளியில் பல நல்ல குணங்கள் உடையவர்களைப் போல காட்டிக் கொள்கிறார்கள்.

வசனம் சொல்லுகிறது : கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று சோதித்துப்பாருங்கள் (எபே. 5:10). இந்த கடைசி நாட்களிலே நாம் விழிப்புள்ளவர்களாயிருக்க வேண்டும். அதுமாத்திரமல்ல மதியற்றவர்களாயிராமல், கர்த்தருடைய சித்தம் எது? கர்த்தருக்குப் பிரியம் எது வென்று நாம் ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

ஒரு ஆலயத்திலே முன்பாக நின்று பாடல்களைப் பாடி, ஆராதனை நடத்துகிற ஒரு வாலிபன் பஸ்ஸில் நீண்ட தூரம் பயணம் செய்துகொண்டிருந்தான். அவன் அருகிலே எதிர் பாராத ஒரு அழகியபெண் வந்து அமர்ந்தாள். அவளிட மிருந்து வந்த வாசனை வீசக்கூடிய பரிமள தைலம், அவனு டைய நாசியையும், சிந்தனையையும், கூட கவர்ந்திழுத்தது. அவள் அவனிடம் ஏதோ ஒன்று கேட்க, அவனும் பதில் சொல்ல சம்பாஷணை உருவானது. அவள் பேச்சுக்கு அவன் மயங்கினான். திடீரென்று அவர்களுக்குள்ளாக ஒரு முடி வெடுத்து, பஸ்ஸிலிருந்து கீழே இருவரும் இறங்கினார்கள். அவள் அவனிடம் இன்று இரவை உன்னோடு உல்லாசமாக கழிக்க விரும்புகிறேன் என்று சொன்னாள். அடிக்கப்படுகிற ஆட்டைப்போல அவளுடைய பாச, நேச வார்த்தைகளுக்கு இணங்கி ஒரு விடுதிக்குச் சென்று உல்லாசமாக இரவைக் கழித்தார்கள்.

மறுநாள் காலமே அவன் எழும்பியபோது அவளைக் காணவில்லை. தேடினான் தேடினான் அறை முழுவதும் தேடினான், பக்கத்தில் தேடினான்; எங்கே போனாள் என்று

தெரியாது. அந்த அறையிலிருந்து ஒரு துண்டு கடிதம் கிடைத்தது. வாலிபனே, உனக்கு நான் நன்கொடையாக என்னிடமிருந்த எய்ட்ஸ் நோயை கொடுத்து செல்லுகிறேன். எனக்கு இந்த நோயைக்கொடுத்த ஆண்வர்க்கத்துக்கு விரோதமாக பழிவாங்கவே இந்த செயலை செய்தேன் என்று குறிப்பிட்டிருந்தாள். "ஐயோ கொஞ்சம் அசதியாயிருந்தபடியால் பாவகாரியத்திலே விழுந்து, சரீரத்தையும், ஆத்துமாவையும் நஷ்டப்படுத்திவிட்டேனே" என்று புலம்பி அழுதான்.

தேவபிள்ளைகளே, விழிப்புள்ள ஜீவியம் எவ்வளவு அவசியம்! நீங்கள் பாவம் செய்யாமல் நீதிக்கேற்க விழித்துக் கொண்டு, தெளிந்தவர்களாயிருங்கள் (1 கொரி. 15:34). எல்லாக்காவலோடும் உங்களுடைய இருதயத்தைக் காத்துக்கொள்ளவேண்டுமென்றால் "விழிப்புள்ள ஜீவியம்" உங்களுக்கு மிகவும் அவசியம். ஏனென்றால் யாரை விழுங்கலாமோவென்று பிசாசானவன் வகைதேடி சுற்றிக் கொண்டிருக்கிறான். அவன் எப்பொழுது வருவான்? எப்படி வருவான்? எந்த சதித்திட்டத்தை தந்திரமாக செயல் படுத்துவான்? என்பது நமக்குத் தெரியாது.

எனவே தான் ஆண்டவர் சொன்னார்: என் வழிகளைக் காத்து நடக்கிறவர்கள் பாக்கியவான்கள் (நீதி. 8:32). கர்த்தருடைய வழிகளை அறிந்து, அந்த வழிகளிலே உண்மையும், உத்தமுமாய் நடப்பீர்களானால், நீங்கள் பாக்கியவான்களாய் விளங்குவீர்கள். உங்கள் வழிகளைப் பார்க்கிலும், கர்த்தருடைய வழிகள் ஆயிரமாயிரமடங்கு

மேன்மையானவைகள். உங்களுக்கு கடந்த காலமும், நிகழ்காலமும் தான் தெரியும்; ஆனால் கர்த்தரோ வருங் காலத்தையும் அறிவார். உங்கள் வழிகளை அவரிடத்தில் ஒப்புக்கொடுக்கும்போது அவர் உங்களை நித்தியமான வழிகளிலே நேர்த்தியாய் நடத்துவார். கர்த்தர் தாமே கரம் பிடித்து நடத்தும்படி உங்கள் கரங்களை அவருடைய பெல னுள்ள கரங்களிலே ஒப்புவிப்பீர்களா? கர்த்தர் சொல்லு கிறார் : "நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன் படிக்கையைக் கைக்கொள்வீர்களானால், சகல ஜனங்களி லும் நீங்களே எனக்குச் சொந்தசம்பத்தாயிருப்பீர்கள்; பூமியெல்லாம் என்னுடையது (யாத். 19:5). இயேசு சொன்னார்: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக் கிறேன் (யோவா. 14:6).

சாயங்காலம் பள்ளிக்கூடத்திலிருந்து வந்து விளையாடச் சென்ற பையன் இன்னும் வீட்டுக்குள் வராமல் மண்ணில் விளையாடிக்கொண்டேயிருந்தான். தாய் கூப்பிட, கூப்பிட வரவே இல்லை. இறுதியாக அவனுடைய அம்மா கையில் பிரம்புடன் சென்று, ஒழுங்கா வீட்டிற்கு வரு கிறாயா? அல்லாவிட்டால் இரண்டு போடட்டுமா? என்று கடிந்துகொண்டாள். பையன் விசனத்துடனும் கோபத்துட னும் வெறுப்புடனும் வந்தான். மிகுந்த ஆவேசத்துடன் கை, கால்களைக் கழுவிவிட்டு பாடங்களைப் படிக்கச்சென் றான். இவள் ஏன் பையனை விசனப்படுத்தினாள்? பாருங் கள்; இது மிகவும் அவசியம், இல்லையென்றால் அவனுடைய எதிர்காலம் அவனுக்கு விசனமாக மாறிவிடும். நம்முடைய

தேவன் நம்மை நேசிக்கிறார், நம்முடைய வாழ்க்கையைக் குறித்து அக்கறை கொள்கிறார்; அப்படியானால் அவருடைய விருப்பங்களுக்கு மாறாக நாம் செயல்படும்போது, தவறுகளில் வாழும்போது நம்மை கடிந்துகொள்ள மாட்டாரா? அவர் கடிந்து கொள்ளவில்லையென்றால் நாம் எப்படி நன்மைகளைக் காணமுடியும்? அநேக ஊழியக்காரர்கள் ஆறுதல் வைத்தியம் மட்டுமே செய்வதையே விரும்புகிறார்கள். உண்மையை தவறுகளைச் சுட்டிக்காட்டி கண்டிக்க தவறிவிடுகிறார்கள்.

கடிந்து கொள்ளுதல் என்பது தேவன் தம்முடைய அன்பை வெளிப்படுத்துவதன் ஒரு பகுதிதான். கடிந்து கொள்ளுதலின் மூலமாக தேவன் நம்மேல் வைத்துள்ள கரிசனையையும், அக்கறையையும் வெளிப்படுத்துகின்றார். தகப்பன் சிட்சியாத புத்திரனுண்டோ? என்று வேதம் கேட்கிறது (எபி. 12:7). தகப்பனுடைய சிட்சை பிள்ளையின் எதிர்காலம் நன்றாயிருக்கவேண்டும் என்ற நல்நோக்கைச் சார்ந்ததே. அநேகர் கண்டிக்கப்படாததின் விளைவாகத்தான் தங்கள் தவறுகளைவிட்டுவிலகும் உணர்வை பெறாதவர்களாகவும், தங்கள் தவறை தவறு என பார்க்க முடியாதவர்களாகவும் போகிறார்கள். இன்றைய கிறிஸ்தவ உலகத்தில் கண்டிப்பின் சத்தம் குறைந்துபோன காரணத்தினால்தான், கிறிஸ்தவர்களின் வாழ்க்கையில் பரிசுத்தமும், குன்றிப்போயுள்ளது. சஞ்சலமும், தவிப்பும் ஓடிப்போம், கலங்காதே, திகையாதே கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார் என்று பல்லவி பாடும் பிரசங்கிமார்களை சுட்டிக்காட்டுகிற

வனை, குற்றங்களை உணர்த்துகிறவனை வெறுக்கிறார்கள். உங்கள் குற்றங்களை உணராமல், தவறுகளைத் திருத் தாமல் சஞ்சலம் எப்படி ஓடிப்போகும்? கலக்கம் எப்படி விலகும்? நல்ல மருத்துவர் நோயாளியின் நோயின் நிலை மையைக் கண்டுபிடித்து அதற்குரிய சிகிச்சை முறைகளை ஏற்க வற்புறுத்தவேண்டும். அதற்குப் பதிலாக தட்டிக் கொடுத்து ஆறுதல் வார்த்தைமட்டும் சொல்லி அனுப்பி னால், அந்த நோயாளி பின்னர் நோயினால் அழிவான்; அழிந்தே சாவது உறுதி. அதுபோல தான் கடிந்து கொள்ளும் போது அதை ஏற்கும் மனப்பக்குவம் நமக்கு வேண்டும்.

பலநேரங்களில் ஊழியம் என்றதும் நாம் இயேசுவைக் குறித்து அறிவிக்கின்ற காரியங்களிலேயே அதிக தீவிரம் காட்டுகிறோம். ஆனால் முதலில் இயேசுவின் வார்த்தை களின்படி நம்முடைய வாழ்க்கையை அமைக்க பிரயாசப் படுதல் தான் முக்கியமான ஊழியமாகும். அதன் மூலம் பிறருக்கு முன் சாட்சியாக வாழ்ந்திட அதிக ஆர்வம் காட்டா விடில் நம்முடைய பிற ஊழியங்கள் பயனற்றவை. நம் சாட்சியுள்ள வாழ்க்கை மூலம் தேவனை நாம் கனப் படுத்தாத நிலை யில் நம்முடைய பிற ஊழியங்கள் தேவனை கனப்படுத்துவதில்லை. மத்தேயு 7–ஆம் அதிகாரத்தில் இயேசு சிலரை "அக்கிரமச் செய்கைகாரரே" என்று அழைப்பதைக் காண்கின்றோம் (மத். 7:2–28). யார் அவர்கள்? இயேசுவின் பெயரில் தீர்க்கதரிசனம் உரைத்து, பிசாசுகளைத் துரத்தி, அற்புதங்களைச் செய்தவர்களே அவர்கள்; நல்லதைத் தானே செய்திருக்கின்றார்கள்,

பின்னர் ஏன் அவர்களை அக்கிரமச் செய்கைக்காரர்களே என அழைத்தார் ?

அவர்கள் தேவனுடைய வார்த்தையின்படி அவருடைய விருப்பத்தின்படியும் வாழாமலே ஊழியம் செய்தவர்கள். எனவே இயேசுவின் பார்வையில் அது அக்கிரமச் செய்கையாக இருந்தது, மாய்மாலமாக இருந்தது; ஆம், கர்த்தருடைய வார்த்தைகளுக்கிசைந்து வாழ்வதற்கு முதலிடம் கொடுக்காவிட்டால் நம்முடைய அனைத்து ஆன்மீக ஊழியங்களும் தேவனுடைய பார்வையில் அக்கிரமச் செயல்களே! மாய்மாலங்களே!!

கிறிஸ்தவ நற்செய்தி அல்லது கிறிஸ்தவ உபதேசம் என்பது பாவத்தினால் பழுதுபட்ட தெய்வீக அழகினை இழந்த மனிதர்களை பரிசுத்தர்களாக மாற்றுவதற்காக தரப்பட்டதாகும். மனிதனை சுத்திகரித்து, சீர்ப்படுத்தி, நற்குணங்களும், நற்கிரியைகளும் நிறைந்த மனிதராக மாற்றுவதே சுவிசேஷத்தின் முக்கிய நோக்கம். இதை தான் யோவான் ஸ்நானன் வனாந்தரத்தில் நின்று "மனந் திரும்புங்கள்" என்று பிரசங்கித்தார். யோவான் ஸ்நானனின் பிரசங்கத்தைக் கேட்ட எருசலேம் நகரத்தார், யூதேயா தேசத்தார் அனைவரும், யோர்தானுக்கு அடுத்த சுற்றுப் புறத்தார் யாவரும், தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, யோர்தான் நதியில் யோவானால் ஞானஸ்நானம் பெற்றார் கள். இந்த சுவிசேஷத்தின் வாயிலாக மக்கள் அற்புதங் களைக் காணவும், பலவித நன்மைகளை அடையவும்,

ஆறுதல், சந்தோஷம், சமாதானம் போன்றவைகளையும் பெற்றுக்கொண்டார்கள்.

ஆனால் இந்நாட்களில் சுவிசேஷத்தின் மூல நோக்கம் பேரளவில் மறக்கப்பட்டு விட்டது. பாவத்திலிருந்து விடுதலை அடைதல், பரிசுத்தமாக்குதல், நற்குணங்களாக மாறுதல், நித்திய வாழ்வில் பங்கடைதல் போன்ற முக்கிய நோக்கங்கள் மறைக்கப்பட்டு, வெறும் அற்புதங்களுக்காகவும், சரீரப்பிரகார நன்மைகளுக்காகவும், தற்காலிக ஆறுதல்களுக்காகவும், ஆராதனை பரவசங்களுக்காகவும் கிறிஸ்தவம் தேடப்படுகின்ற நிலை ஏற்பட்டுள்ளது. அடிப்படை தெய்வீக நோக்கங்களை அலட்சியப்படுத்தி, சரீர நன்மைகளுக்காகவே ஆவிக்குரிய வாழ்வையும், ஆண்டவரையும் தேடுவதால் அத்தகையோர் ஆன்மீக ஈடுபாடுகளால் மேலும் மேலும் நோயாளிகளாக மாறுகிறார்களேயன்றி, பாவநோய் நீங்கி பரிசுத்தர்களாக்கவில்லை.

ஆம். எந்த ஒன்றையும், அது எதற்காக தரப்பட்டதோ அதற்காக முதலாவது உபயோகிக்க வேண்டும். உண்மையான நோக்கத்தை மறந்து, நம் விருப்பப்படி உபயோகித்தால் அதனால் பயன்பாட்டைவிட கேடுகளை அதிகமாக கொண்டுவரும். இன்றைய பல தேவ ஊழியர்களும், சுவிசேஷத்தை மக்களை பரிசுத்தமாக்கும் ஒன்றாகக் காட்டாமல், பரவசமாக்கும் ஒன்றாகக் காட்டுவதால், அதனை ஏற்கின்ற அநேகர் தேவ சாயலாக மாறாமல் மேலும் மேலும் உலக சாயலாகவே மாறுகிறார்கள்.

பேதுரு இயேசுவைக் குறித்து பலமாய் சாட்சி கொடுத்தான். பேதுருவின் சுவிசேஷத்தைக் கேட்டவர்கள் இருதயத்தில் குத்தப்பட்டவர்களாய் மனந்திரும்பி, பாவத்திலிருந்து விடுதலை அடைந்து, ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்று, ஆவியின் வரத்தையும் பெற்றுக்கொண்டார்கள். அது மாத்திரமல்ல, அப்போஸ்தலர்கள் மூலமாக அநேக அற்புத அடையாளங்கள் நடந்தது. அதைப் பார்த்து ஜனங்கள் பயப்பட்டார்கள். அன்றையதினம் மாத்திரம் மூவாயிரம்பேர் தேவனை ஏற்றுக் கொண்டார்கள். பேதுருவின் வசனத்தைக் கேட்டு மக்கள் மூவாயிரம், ஐயாயிரம் என சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். ஒருமுறை பேதுரு மாயவித்தைக்காரனாயிருந்த சீமோனைப் பார்த்து எச்சரித்தார். நீ கசப்பான பிச்சிலும், பாவக்கட்டிலும் அகப்பட்டிருக் கிறாய். உன் துர்க்குணத்தைவிட்டு மனந்திரும்பு. தேவனை நோக்கி வேண்டிக்கொள். உன் பாவம் உனக்கு மன்னிக்கப்படலாம் என்று தைரியமாய் பாவத்தைக் கண்டித்து உணர்த்தினான். அதுபோல பவுலும் ஆவியில் வைராக்கியங்கொண்டு இயேசுவே கிறிஸ்து என்று யூதருக்குத் தெரியப்படுத்தினான். எதிர்ப்புகள் மத்தியிலும், பட்டணங்களிலும், வீதிகளிலும், ஜெப ஆலயங்களிலும், பிரசங்கித்தான். உபத்திரவங்களை வெகு மனத்தாழ்மையோடும், மிகுந்த கண்ணீரோடும் ஏற்றுக்கொண்டான் (அப். 20:19). உபத்திரவங்களைப்பார்த்து பின்வாங்கிப்போகாமல், சுவிசேஷத்தை பிரசங்கம் பண்ணும்படிக்கும், ஊழியத்தை

நிறைவேற்றுவதிலும் விருப்பமுள்ளவராயிருந்தார். கர்த்தராகிய இயேசுவின் நாமத்திற்காகக் கட்டப்படுவதற்கு மாத்திரமல்ல, மரிப்பதற்கும் ஆயத்தமாயிருக்கிறேன் என்றார் (அப். 21:13). உலகமெங்கும் சுற்றித்திரிந்து பல சபைகளை ஸ்தாபித்து பெரிய சாதனையாளராக விளங்கிய அப்போஸ்தலனாகிய பவுல் "நான் பெரிய ஊழிய சாதனைகளைச் செய்ததுபோல நீங்களும் செய்யுங்கள் என்று கூறாமல் நான் கிறிஸ்துவை பின்பற்றுவதுபோல நீங்களும் என்னைப் பின்பற்றுங்கள் என்று கூறினான். பவுல் ஒரு சாட்சி உள்ள வாழ்க்கை வாழ்ந்து காட்டின மனிதனாக விளங்கினான்.

இன்றைய கிறிஸ்தவ ஊழிய வட்டாரங்களில் கட்டுக்கதைகள் பெருகிப்போயுள்ளன. தன்னையும், தன் குடும்பங்களையும், தன் ஊழியங்களையும் மிகைப்படுத்திக் காட்டுகிறார்கள். கிறிஸ்துவின் சாயல் மறைக்கப்பட்டுப் போகிறது. அவரவருக்குத் தோன்றியபடி ஆவிக்குரிய அனுபவங்கள் என்ற பெயரில் விசித்திரமான புதிய புதிய காரியங்கள் வந்து கொண்டேயிருக்கின்றன. இன்றைய கிறிஸ்தவர்களில் அநேகர் எதையுமே வேத அடிப்படையில் சிந்திக்கும் பழக்கமின்றி, செவிகளுக்கு சற்று புதுமையாக தொனிக்கின்ற எதையும் கேள்வியின்றி ஏற்றுக்கொள்கின்றனர். பெரும்பாலும் இவ்வித விசித்திர அனுபவங்களைக் குறித்த உபதேசங்கள் ஜனங்களை சரியான சத்தியத்தின் பாதையை விட்டுவிலகிப்போக ஏதுவாகின்றன. எனவே வேத சத்தியங்களைக் குறித்த ஒரு தெளிவான அடிப்படை அறிவு

அவசியமாகிறது. அதன் மூலமாக மட்டுமே தந்திர மான போதனைகளினால் வரும் ஆபத்துகளிலிருந்து தப்பித்துக் கொள்ளமுடியும். அல்லாவிட்டால் போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்களாயிருப்போம்.

பரிசுத்த ஆவியானவர் உனக்குள் இருக்கிறா ரென்றால் அவர் உன்னை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்துவார். நீ வலது புறம் இடது புறம் சாய்வதில்லை, உன்னைச் செம்மையானவழியிலே போதித்து நடத்துவார். பிரயோஜனமாயிருக்கிறதை உனக்குப் போதித்து, நீ நடக்க வேண்டிய வழியிலே உன்னை நடத்துகிற உன் தேவனாகிய கர்த்தர் நானே (ஏசா. 48:17B). அவர் உன்னை நடத்துகிறவர். உனக்குப் போதிக்கிறவர், உனக்குக் கற்றுக்கொடுப்பவர். ஆகவே தான் தாவீது சொல்லுகிறான் : உமக்குப் பிரியமான தைச் செய்ய எனக்குப் போதித்தருளும், நீரே என் தேவன்; உம்முடைய நல்ல ஆவி என்னைச் செம்மையான வழியிலே நடத்துவாராக (சங். 143:10). கர்த்தருடைய வழி உத்தம மானது. இந்த கடைசி நாட்களிலே நாம் பலவித காற்றுகள் போன்ற போதனைகளினாலே அலசலடிப்பட்டு இங்கும், அங்கும் அலையாதபடி வேதத்தைப் படித்து இரவும் பகலும் அவருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, மரியாளைப்போல அவருடைய பாதத்திலே உட்கார்ந்து, ஜெபத்திலே உறுதி யாய்த் தரித்திருந்து, கர்த்தருடைய வருகைக்காய் ஆயத்த மாவோம். அணிவகுத்து நிற்கும் வாழ்க்கைப் பிரச்சனை களையும், உலகத்துக் காரியங்களையும் சிந்தித்துக்

கொண்டிராமல், ஒரு புதிய தீர்மானத்துடன் கர்த்தரோடு வலிமை யான உறவுகொள்ள நம்மை ஆயத்தமாக்குவோம். தேவன் தாமே இதை வாசிக்கிற நம் ஒவ்வொருவரையும் சீயோனிலிருந்து ஆசீர்வதிப்பாராக! ஆமென். கர்த்தராகிய இயேசுவே வாரும்.

ஒவ்வொருவரின் அனுதின வாழ்விலும் எத்தனையோ விதமான கொடிய காற்றுகள் வீசுகின்றன. சிலர், "ஐயா, இதுதான் என் கடைசி கடிதம்! உங்கள் பதில் வருமுன் நான் தற்கொலை செய்துகொள்வேன்" என்று எனக்கு எழுதுவர். இன்னும் சிலர், ஐயா "கேன்சர் / எஸ்ட்ஸ் போன்ற கொடிய நோயினால் நான் செத்துக் கொண்டிருக்கிறேன்" என்பர். இன்னும் புதுப்புது கொடிய காற்றுகளால் மக்கள் படும் வேதனை கொஞ்ச நஞ்சமல்ல!

இப்படிப்பட்டவர்களின் நொறுங்குண்ட இதயத்தை ஆற்றவும் அவர்களை கிறிஸ்துவுக்குள் எழுப்பிக் கட்டவும் **"வாழ்க்கையில் வீசும் காற்றுகள்"** என்ற இந்தப் புத்தகத்தை ஆவியானவர் அருமை சகோதரி. கீதா ஜெயசேகரன் மூலம் உருவாக்கியுள்ளார். சகோதரி அவர்கள் குடும்பமாக **"மகிமையின் நம்பிக்கை"** ஊழியத்திலே முத்துக்களாக ஜொலிப்பவர்கள்! இவ்வூழியத்தின் வாயிலாக இவர்கள் பெற்ற ஆவிக்குரிய ஆழமான அனுபவங்களின் பிரதிபலிப்பே இப்புத்தகம் ஆகும்!

"அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம் போல வானத்திலிருந்து சடுதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று". (அப் 2:2) என்ற வேத வசனத்தின்படி பரிசுத்த ஆவியானவரின் சின்னங்களில் ஒன்று "காற்று" ஆகும்! ஆவியானவர் காற்று அல்ல! ஆனால் காற்றுக்கு அடையாளமானவர்! வேதத்தில் பலவகையான காற்றுகள் சொல்லப்பட்டுள்ளன. மனிதரின் வாழ்விலும் பல்வேறுவிதமான காற்றுகள் வீசுகின்றன! எனினும் ஆவியானவருக்கு அடையாளமாய் சொல்லப்பட்டுள்ள காற்று எந்தவொருவரின் வாழ்வில் வீசுகிறதோ, அவர்கள் வாழ்வு எல்லாவிதத்திலும் செழிக்கும்! அவர்கள் சந்திக்கிற எல்லாத் தீய காற்றுகளையும், சாதனைக்காற்றுகளாக மாற்றுவார்கள் என்பதை உறுதிப்படுத்தி, மிக மிகத் தெளிவாக, ஆழமாக, வேதத்தை மிகவும் ஆராய்ந்து, கர்த்தரின் தரிசனத்தோடு இப்புத்தகம் உருவாக்கப்பட்டுள்ளதைக் காணலாம்! குறிப்பாக ஏராளமான வேத வசன ஆதாரங்களும், உவமைகளும் இன்னும் இப்புத்தகத்தை மெருகேற்றி இருக்கிறது! இப்புத்தகம் எண்ணற்றோரின் துயரைத் துடைத்து, அவர்களை ஆவியானவரின் அருள்மாரி நிரப்பிட வித்திடும் என்பதில் சந்தேகமில்லை. தொடர்ந்து சகோதரி அவர்களைக் கர்த்தர் ஒரு எழுதுகோலாய்ப் பயன்படுத்துவாராக!

Rev. Dr. K. கலைமணி

ஸ்தாபகர் / தலைமைப் போதகர், மகிமையின் நம்பிக்கை ஊழியங்கள்